# இப்படிக்கு ஈசன்

## 1

''ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே!
ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே
இரவானால் பகல் ஒன்று வந்திடுமே!
நம்பிக்கை என்பது வேண்டும்... நம் வாழ்வில்!
லட்சியம் நிச்சயம் வெல்லும்... ஓர் நாளில்!''

''வணக்கம்.''

உங்களுக்கு இந்தப் பாட்டுப் பிடிக்குமா? எனக்கு சினிமா அவ்வளவா பிடிக்காது என்றாலும் இந்தப் பாட்டு ரொம்பவே பிடிக்கும். துவண்டிருக்கிற ஒவ்வொரு மனுஷனும் கேட்க வேண்டிய பாட்டுங்க இது!

சரி... சரி.. யாருடா இவன்... சம்பந்தமில்லாம நம்மளோட பேசுறான்னு பார்க்கிறீங்களா?

நான் பரணி! பேரைச் சொன்னதும் தெரிய நீ என்ன 'மகிந்திரா சிங் தோனி'யான்னு கேட்கக்கூடாது! நான் தான் இந்தக் கதையோட கதாநாயகன், வில்லன், கதாசிரியர், இயக்குனர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர் எல்லாமே!

ஆமாங்க, இந்தக் கதையை என் வாய்மொழியாகதான் நீங்க கேட்கப் போறீங்க!

இந்தக் கதை என்னோட உணர்வுகளின் பதிப்பு! எனது வார்த்தைகளின் அச்சு!

சொல்லப் போனா, இது என்னோட வாழ்வின் பதிவு. அதனால் நானே உங்ககிட்ட சொல்லப் போறேன்.

ஒரொரு விஷயமும் என்னோட கோணத்திலதான் உங்களுக்கு வைக்கப்படும். நான் அந்த விஷயத்தை எப்படி எடுத்துக்கிறேன், எப்படி உணர்கிறேன், அதை எப்படி மற்றவர்களிடம் பகிர்கிறேன், அவங்க என்ன சொன்னாங்க - இது போல் எனது வாழ்வின் முக்கிய அங்கங்கள் உங்கள் முன்னே வைக்கப்படும்.

அது சரி, ''ஈசன்'' யாருன்னு கேட்கிறீங்களா? ''ஈசன்'' - என்னோட புனைப்பெயர்!

இந்த முகவுரை போதும்ன்னு நினைக்கிறேன். கதைக்குள்ள... ம்ஹ்ம்ம் என்னோட வாழ்க்கைக்குள்ள போகலாமா?

செஞ்சு வைச்ச சாப்பாடை சமையலறையிலிருந்து எடுத்திட்டு வரவங்க தான் என்னோட அம்மா. பெயர் - உண்ணாமலை.



''சீக்கிரம் எடுத்து வைம்மா. பிள்ளை... அப்பவே பசிக்குதுன்னு சொன்னான்'' என்று சொல்லிட்டே, அவங்களுக்கு உதவி பண்றாரே அவர் தான் என்னோட அப்பா. பெயர் - அண்ணாமலை.

திருவண்ணாமலையை ஆட்சி செய்யும் அந்த அம்மை - அப்பனின் பெயரிலிருக்கும் இந்த அன்பு நெஞ்சங்களும் தெய்வத்திற்கு ஈடானவர்கள் தான்.

இவங்க ரெண்டு பேருக்குள்ள சண்டைன்னு வந்து... ஏன் வாக்கு வாதம்ன்னு கூட எதுவும் வந்து நான் பார்த்ததில்லை.

நான் பிறக்கிறதுக்கு முன்னாடி எப்படி இருந்தாங்களோ தெரியாது... யாருக்குமே தெரியாதுடா முட்டாள்ன்னு சொல்லாதீங்க... எனக்கு விவரம் தெரிஞ்சு இவங்க ரெண்டு பேரும் செல்லமா கூட சண்டை போட்டதில்லை.

அவ்வளவு புரிதலா என்று கேட்டா... ஹ்ம்ம் இருக்கலாம். என்னைக் கேட்டா அப்பாவுக்கு அளவுக்கு அதிகமான பொறுமை என்று தான் சொல்வேன். அம்மாவுக்கு - அளவுக்கு அதிகமான வெகுளித்தனம் / வெள்ளை மனம்.

எங்கப்பாவோட பொறுமையைப் பார்த்து நான் சில சமயம் பொறாமை கூடப் பட்டிருக்கேன். ஆனா, என்னால தான் இந்தப் பொறுமை எங்கப்பாவுக்கு வந்துன்னு அம்மா அடிக்கடி சொல்லும்போது, கொஞ்சம் பெருமையா கூட இருந்திருக்கு!

எல்லா வீட்டிலேயும் ஆண் பிள்ளை அம்மாவோட செல்லமா, அப்பாகிட்ட எந்த விஷயம் சொல்லணும் என்றாலும் அம்மாகிட்ட தூது அனுப்பிட்டு, அம்

மாவையே சுத்தி வருவாங்க இல்லையா... எங்க வீட்டில அப்படியே எதிர்மறை தான்!

ஆமா, நான் அப்பாவோட பிள்ளை! செல்லம்! இருபத்தெட்டு வயசாகியும் சில சமயம் எனக்கு உணவு அள்ளிக் கொடுக்கிற அளவுக்கு எனக்கும் அவருக்கும் ஒரு பந்தமிருக்கு.

இது ஒரு விவரிக்க முடியாத புரிதல்! என்னோட முகத்தைப் பார்த்தே... சொல்லப் போனா என்னோட கண்ணைப் பார்த்தே என்னோட உணர்வுகளைப் புரிந்து கொள்கிற வித்தை - இந்த உலகத்திலேயே எங்கப்பா வுக்கு மட்டும் தான் உண்டு.

என்னோடதுன்னு இல்லை... எல்லாரையும் கனகட்சிதமா புரிஞ்சு வச்சிருப்பார் எங்கப்பா.

ஒரே வரியில - ''அப்பா என்னோட ஹீரோ!'' வாழ்ந்தால் அவரைப் போல தான் வாழணும்ன்னு நினைக்கிற அளவுக்கு நான் அவரோட குணங்களின் ரசிகன். அதுக்காக, அம்மாவைப் பிடிக்காதா என்று கேட்காதீங்க. வீடே உலகம்ன்னு வாழற அவங்களுக்கு எங்களோட சந்தோசம் தான் முக்கியம்.

ரொம்பவே அப்பாவியான அம்மாவை எனக்கு ரொம்பவே பிடிக்கும்.

பிடித்ததுக்கும் ரசிப்பிற்கும் ஒரு சின்ன வித்தியாசம் இருக்கில்லையா? அதுதான் அம்மாவும் - அப்பாவும்!

ஹ்ம்ம், அவங்களைப் பத்திப் பேசச் சொன்னா நான் ஒரு நாள் முழுக்கப் பேசிட்டே இருப்பேன்... ஆனா உங்களுக்குத் தான் அலுத்துப் போய்டும். சோ, சாப்பாடை எடுத்து வைச்சிட்டுக் காத்திருக்க அம்மாகிட்ட போகலாம்.



''அப்பவே பசிக்குதுன்னு சொன்னியே! வா... வா... உட்காரு'' என்று வாஞ்சையாய் என் கைப்பிடித்து உட்கார வைக்கிற அம்மாவுக்கு எனக்கு ஊட்டி விடுறதுன்னா அவ்வளவு இஷ்டம்!

அவங்களைச் சந்தோஷப்படுத்திப் பார்க்கத் தோண ''ஊட்டி விடுறியா அம்மா'' என்றேன். அவங்களோட கண்ணைப் பார்க்கணும்... ஒரு இன்பப் பரபரப்பு. ''இதோ ராஜா...''ன்னுட்டு, தட்டில சாதத்தைப் போட்டு, நெய் விட்டு, நாட்டுக் கோழிக் குழம்பு ஊற்றி, தொட்டுக் கொள்ள அவித்த முட்டை வைத்து, அவங்க கொடுத்த முதல் வாய் உணவு அமிர்தம் தான்!!

அந்த நேரம் அப்பாவும் சாப்பிட வர, மகனுக்கு ஊட்டும் பரபரப்பில் கணவனை மறந்து விடாத அம்மா, அவருக்குத் தட்டு வைத்துப் பரிமாறத் துவங்கினார்.

''நான் எடுத்துப் போட்டு சாப்பிட்டுக்கிறேன், உண்ணா!'' என்ற அப்பாவின் முகத்தில் சிறு எரிச்சல் கோடு கூட இல்லை. மாறாக, அம்மாவும் நானும் வார்த்தைகளின்றி உணவின் மூலமாக நடத்திக் கொண்டிருந்த பாசப் பரிமாறலை அவரது நெஞ்சம் ரசித்துக் கொண்டிருப்பது எனக்குப் புரிந்தது.

ஆனால், அவர் காட்டாத எரிச்சலை மொத்த குத்தகைக்கு எடுத்தவள் போல் அங்கே வந்து சேர்ந்தாள் என் அருமை தங்கச்சி - கார்த்திகா!

ஹய்யையோ, இவளைப் பத்தி முன்னமே உங்ககிட்டச் சொல்லலைன்னு அதுக்கு வேற சண்டை பிடிக்கப் போகுது சின்னக் கழுதை!

நிஜமாகவே சின்னக் கழுதை தாங்க... என்னை விட எட்டு வயசு கம்மி... இப்போ தான் பி.காம். இரண்டாவது

வருஷம் படிக்கிறா. அதுக்குள்ளே, இவ பண்ற அலும்பிருக்கே... அய்யய்யோ! உங்க வீட்டு அலும்பு... எங்க வீட்டு அலும்பு கிடையாது... இந்தக் கோயம்புத்தூர் மாவட்டத்துக்கே உண்டான அதிகப்படி குசும்புங்க அது! அதான் நீங்களே பார்க்கப் போறீங்களே!

''ஏழு கழுதை வயசு கூட இல்லை... பத்து ம்ஹூம் இருபது கழுதை வயசாகுது... அவனுக்கு இன்னும் சோறு ஊட்டிக் கொஞ்சுங்க...''

''என் பல்லைத் தட்டித் தொட்டில்ல போட்டு ஆட்டுறது தானே?''

''இந்த வீட்டில யாரு சின்னப் பிள்ளை... யாரு மூத்த எருமை மாடுன்னே தெரியாம போச்சு...''

''ஒரு சின்னப் பொண்ணு... படிக்கிற பொண்ணு... வளர வேண்டிய பொண்ணு... அவளுக்கு ஊட்டாம... தடிமாடு மாதிரி வளர்ந்திருக்கான்... அவனையே தாங்குங்க...''

இப்ப பேசினது பத்தாதுன்னு இன்னமும் பேசியிருப்பா. அதுக்குள்ள அவளை இழுத்து என் பக்கத்தில உட்கார வைச்சு, ஒரு வாய் சோறை வாயில அடச்சுட்டேன்.

இப்போ தான் கொஞ்சமா அடங்கியிருக்கா! ஹப்பப்பா...!

சாப்பிடற நேரமும், தூங்குற நேரமும் தவிர இந்த வாய் ஓய்வெடுத்து நான் பார்த்ததே இல்லை... எப்போ பார்த்தாலும் பேச்சுத்தான்!

ஆனா, இந்தப் பேச்சில்லைன்னா எங்க வீடு மியூசியம் மாதிரி இருந்திருக்கும். எங்க வீட்டுக்கு ஒரு அழகு சேர்க்கிறதே இவ தான்! என் செல்லத் தங்கச்சி - கார்த்திகா!



இவ்வளவு சண்டை போடறாளே... ஒருவேளை இவளுக்கு என்னைப் பிடிக்காதோ என்று நினைக்காதீங்க. அண்ணன் - தங்கை என்ற உறவைத் தாண்டி நாங்க ரெண்டு பேரும் நெருங்கிய நண்பர்கள்.

இவ்வளவு விளையாட்டுத் தனமா இருக்க என் தங்கச்சிக்கிட்ட கேட்டுத் தான் நான் நிறைய முடிவுகள் எடுப்பேன்னு சொன்னா நீங்க நம்புவீங்களா? சில சமயம் மொக்கையா ஏதாவது ஐடியா கொடுத்தாலும் அவளோட பல யோசனைகளை எனக்கு வெற்றியைத் தான் தேடிக் கொடுத்திருக்கு!

அவளுக்கே அவளோட பெருமையைப் பேசுறது பிடிக்கலை போல, திரும்பப் பேச ஆரம்பிச்சுட்டா. அதான் வாயில இருந்த சாப்பாடு அரைப்பட்டு... வயித்துக்குள்ள போய்டுச்சே... அப்புறம் பேசுறதுக்கு என்ன?

''உன்னா மேடம்... எனக்கு மூட்டை-ல இருக்க மஞ்சள் வேண்டாம்... அது சாப்பிட்டா வெயிட் போடும்....''ன்னு பேசுறவளை, ஒரு வேளைக்குச் சப்பாத்தி சாப்பிடச் சொல்லுங்க... அழுது ஊரையே கூட்டிடுவா.

''சப்பாத்தி சாப்பிடுறேன்... ஆனா, அப்புறமா இரண்டு இட்லி வைக்கணும். இல்லன்னா ஒரு கரண்டி சாதமும், தயிரும் வேணும்''ன்னு முகாரி பாடுற இவ... இடையைக் குறைக்கிறது பத்திப் பேசுறா. காலக் கொடுமை!!

''உன்னா மேடம், குழம்பு சாதம் போதும்... தயிர் போட்டு பிசைங்க'' என்ற ஏவலுக்குப் பதிலா.

''அண்ணா, இன்னும் சாப்பிட்டு முடிக்கலை பாப்பா. அவனுக்கு இன்னும் கொஞ்சம் குழம்பு சாதம் ஊட்டிட்டு... தயிர் போடறேன்''ன்னு எங்கம்மா சொன்னது தான் தாமதம்,

''அதென்ன, அவன் என்ன சாப்பிடறானோ... அதைத் தான் நானும் சாப்பிடணுமா? இதெல்லாம் அநியாயம்... அராஜகம்... அட்டூழியம்...'' - இப்படிக் கத்திக்கிட்டே என்னை ஒரு அடி வைத்தவளை,

''ஷ், அது அவனுக்குன்னு போட்ட சாப்பாடு. உனக்கு வேணும்ன்னா இன்னொரு தட்டு எடுத்து வைச்சு சாப்பிடு''ன்னு அடக்கிட்டாங்க அப்பா.

அப்பாவோட பேச்சில் முகத்தை அஷ்டக்கோணலா சுளித்து, அவருக்குப் பழிப்பு காட்டிட்டே ''எல்லா வீட்டிலையும்... பொண்ணுங்க எல்லாரும் அப்பா செல்லமா இருப்பாங்க... இங்க என்னடான்னா... ஹுக்கும்''ன்னு சொல்லிக் கழுத்தை நொடித்தவளோட கன்னத்தில் மெல்ல தட்டி,

''குழம்பு போதும்மா... ரெண்டு பேருக்கும் ஒண்ணா தயிர் சாதமே பிசைங்க'' என்றேன் நான்.

அவளோட கன்னத்தில் இருந்த என் கையைப் பிடித்து ஒரு முத்தம் வச்சிட்டு ''ஸ்வீட் அண்ணா'' என்று கொஞ்சும் இந்தச் சின்னக் குட்டிக்கு என்னை ரொம்பப் பிடிக்கும்.

என்ன தான் என்னோட வார்த்தைக்கு வார்த்தை மல்லுக்கட்டினாலும், வெளியாள் யார்கிட்டயும் என்னை விட்டுக் கொடுத்ததே கிடையாது! புதுசா யாராவது மாட்டினா போதும், என்னோட புராணம் தான் பாடு வாங்க மேடம்!



அதுக்காக, நான் தான் அவளோட ஹீரோ-வா என்று கேட்டா... அது தான் இல்லை. அவங்களோட ஹீரோ வேறொரு ஆள்!

முதல்ல எங்க குடும்பத்தோட அறிமுகம் முடியட்டும்... அப்புறம் அந்த ஹீரோவைப் பத்திப் பேசலாம்.

ஹய்யையோ... அவனை எங்க குடும்பத்து ஆளா பார்க்காம வேறாளா பார்த்தது தெரிஞ்சது, அவன் அடிக்கிறானோ இல்லையோ கார்த்திகா மொத்தி எடுத்திடுவா. அதனால், இங்க - அதாவது கோயம்புத்தூர்-ல இருக்க எங்க வீட்டில இருக்கிறவங்களோட அறிமுகம் முடியட்டும்... அப்புறம் அந்த சாரை அறிமுகப்படுத்துறேன்.

அவனுக்கு ஆயுசு நூறுன்னு நினைக்கிறேன்... இதோ போன் பண்ணிட்டானே! ஆனா, சாப்பாட்டு நேரத்தில இடியே விழுந்தாலும் அசையாம இருக்கிற நம்ம கார்த்திகா பொண்ணு... இப்பவும் என் நம்பிக்கையை வீண் பண்ணலை.

''முதல்ல, இந்த செல்போனைக் கண்டு பிடிச்சவனைக் கூட்டிட்டு வந்து... மலிங்கா மல்லேஸ்வரிகிட்ட மாத்ஸ் கிளாஸ் போக விடணும்... நிம்மதியா ஒரு வாய் சாப்பாடு சாப்பிட முடியுதா?'' - முகத்தை எடுத்து தோளில் இடித்தவள், போனை அணைத்துப் போட்டாள்.

முதல்ல ஒரு முக்கியமான விஷயம் - மலிங்கா மல்லேஸ்வரிங்கிறது அவளோட கணக்கு டீச்சர்.

அடுத்த முக்கியமான விஷயம், இப்போ இவ பேசின டயலாக்-கை, பெங்களூர்-ல இருக்க ஒரு பாவப்பட்ட ஜென்மம் ஒரு தடவைக்கு நூறு தடவை சொல்லியிருக்கணும்... ஏன்னா எங்க வீட்டு சின்ன மேடம் தான்

அவனை வேலை பார்க்க விடாம போன் பண்ணியிருப்பாங்களே!

அவ்வளவையும் பண்ணிட்டு, இப்ப இது பேசற பேச்சைப் பாருங்க!

எனக்கு என் தங்கையைப் பிடிக்கிற அளவுக்கு, என்னோட நண்பனான அவனோட ஹீரோவைப் பிடிக்கும். உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாதவன்!

அந்த குணத்தினால் கோபக்காரன்-ன்னு சில பேர் கிட்டப் பேர் வாங்கியிருந்தாலும், அவனோட குணம் தெரிஞ்சவங்களுக்கு அவன் ஒரு நல்ல நண்பன்! அளந்து பேசினாலும்... அவனோட ஒரொரு வார்த்தைக்கும் ஒரு அர்த்தமிருக்கும்.

இரண்டு பேரும் (கார்த்திகாவும் என் நண்பனும் தாங்க) - எதிரும் புதிரும் தான். சுவாரஸ்யமான வாழ்க்கைக்கு அழகான அடித்தளம் இல்லையா இது!

ஹ்ம்ம்... எல்லோரைப் பத்தியும் சொல்லியாச்சு. பயங்கர ஐடியல் குடும்பம் மாதிரி இருக்கா? அப்படியெல்லாம் இல்லை... எங்க குடும்பத்திலையும் சில பிரச்சனைகள் இருக்கு... ஆனா, நாங்க அதைப் பெருசா எடுத்துக்காம... அந்தப் பிரச்சனைகளைத் தூர நிறுத்திப் பார்க்கக் கத்துக்கிட்டோம் - அதுக்குக் காரணம் எங்கப்பா!!

ஹ்ம்ம்... இந்தப் பிரச்சனைகள் பத்தி நாம இப்போ கவலைப்பட வேண்டாம். நாங்களே அவற்றைக் கடந்து வந்துட்டதால் தேவையில்லாம எதுக்கு மனவருத்தம் அடையணும்? அதனால், இடையிடையே தலை நீட்டும் பிரச்சனைகளினூடே, சுவாரஸ்யமாய் கழியும் எங்கள் வாழ்வின் நிகழ்வுகளின் மீது மெல்ல பயணம் செய்யலாம்!



# 2

உணவு முடிந்து, அப்பாவும் அம்மாவும் உறங்கச் சென்றபின், எனது மடிகணினியில் நான் ஆழ்ந்திருந்த நேரம், கதவு வேகமாய் தட்டப்பட்டது.

கதவு தட்டப்படும் ஒலியின் அளவை வைத்தே வந்திருப்பது என் அருமை தங்கையார் என்பதை ஊகித்த என் மூளையின் செயல்திறனை வீணாக்காமல், அடுத்த நிமிடம் அறையினுள் பிரவேசித்திருந்தாள் அவள்.

நான் என்னவென்று கேட்பதற்கு முன்னர்,

''அண்ணா... அண்ணா...'' என்று குழையடித்துக் கொண்டு என்னருகே வந்து அமர்ந்தவள், என்ன கேட்கப் போகிறாள் என்பதை என் மூளை மீண்டும் ஊகித்து விட்டது.

இந்த முறை, என் ஊகத்தை நான் வெளியிடும் முன்னர் ''ப்ளீஸ் அண்ணா... ஒரே ஒரு தடவை... ஜஸ்ட் ஒரு தடவை... இந்த முறை மட்டும் தான்... அப்புறம் கேட்கவே மாட்டேன்... சத்தியம்... ஹ்ம்ம் யாரு மேல சத்தியம்... ஹ்ம்ம் எங்க மாத்ஸ் டீச்சர் இருக்காங்க இல்ல... அவங்க மேல சத்தியம்... இனிமேல் கேட்கவே மாட்டேன்'' என ஏக பீடிகையுடன் ஆரம்பித்தவள்,

''உன் போன்ல இருந்து உன்னோட பிரண்ட்டுக்கு ஒரு கால் போட்டுத் தரியா? நா பண்ணினா... எடுக்கவே மாட்டேங்கிறாங்க'' என அந்தோ பரிதாப தொனியில் முடிக்கவும் எனக்கு செம சிரிப்பு!

அவன் போன் பண்ணும் போது, ''உணவே என் குறிக்கோள்! அதை உண்ணுவதே என் வாழ்நாள் கடமை!'' என்பதுபோல் இருந்துவிட்டு, இப்ப வந்து என்ன மஸ்கா... சரியான கழுதை!

''நாம எதுக்கு இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறோம்... நல்லா சாப்பிடத்தானே? அதை செய்யக் கூடாதுன்னா எப்படி?'' என்று வியாக்கியானம் பேசும் இவனுக்கும்,

''மனுஷனா பிறந்தவன் எதாவது சாதிக்கணும், எல்லோரும் மதிக்கிற மாதிரி பெரிய அளவுக்கு உயரணும், அதை விட்டுட்டு... கூட்டைச் சாப்பிட்டியா? குழம்பு நல்லா இருந்துச்சான்னா எப்படி?'' என்று தத்துவம் பேசும் அவனுக்கும்... ஹப்பப்பா ஆயிரம் பொருத்தம் தான்! அதுவும் இவங்க ரெண்டு பேருக்கும் நடுவுல கிடந்து அல்லாடுற... என்னோட நிலைமை இருக்கே... பரிதாபத்திலும் பரிதாபம் தான்!

''அண்ணாணாணாணா...'' என்று கூவிய கார்த்திகாவின் குரல், எப்ப வேணும்னாலும் ''டேய் பரணி''க்கு மாறலாம் என்பது உறைக்க, என் விரல்கள் பிரதீப்பின் எண்களை அழுத்தியது.

பிரதீப் - இவன் தான் என்னோட நண்பன், எங்க வீட்டு மாப்பிள்ளை, என் தங்கையோட காதலன், எங்கப்பா சொல்ற மாதிரி ''ரொம்ப பொறுப்பானவன்!''

அவனது அன்னை - தந்தைக்கு ஒரே மகனாய் பிறந்தவனுக்கு ஒரு தமக்கை மட்டுமே.



வெகு காலத்திற்கு முன்பே, பிரதீப்பின் தந்தை இறந்துவிட அவனது குடும்பம் எங்கள் வீட்டு மாடியில் தான் குடியிருந்தது.

பிரதீப்பைப் போலவே, நித்யவேணி அத்தைக்கும் ப்ரீத்தி அக்காவிற்கும் எங்கள் குடும்பத்தின் மீது பிரியம் அதிகமாய் தான் இருந்தது!

அந்தப் பிரியத்தின் விளைவாகவே, ''ப்ரீத்திக்கு நல்ல இடத்தில மாப்பிள்ளை பார்த்து... குடும்பமும் குழந்தையுமா அவ அமெரிக்கா-ல சுகபோகமா வாழறதை கண்குளிர பார்த்துட்டேன் பிரதீப்பை நினைச்சா தான் கவலையா இருக்கு... அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணிப் பார்த்துட்டா போதும் அண்ணா அவனுக்கு... கார்த்திக்குட்டியை கல்யாணம் செய்து கொடுப்பீங்களா?'' என்ற தன் வேண்டுகோளை அத்தையால் சிறிதும் தயக்கமின்றி வைக்க முடிந்தது.

படித்துக் கொண்டிருக்கும் பெண்ணிற்கு திருமணம் செய்யுமளவு என்ன பிரச்சனை என்கிறீர்களா? பிரதீப் மற்றும் ப்ரீத்தியின் படிப்பிற்காக காட்டன் மில்லில் வேலை பார்த்ததில், அத்தைக்கு நுரையீரல் புற்றுநோய் வந்து, அவரது வாழ்நாளின் கடைசியில் தான் அவர் அந்தக் கோரிக்கையை வைத்ததே!

அவரது உடல்நிலையை அருகிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த அம்மா உடனே ஒத்துக் கொண்டுவிட, பிரதீபனோ ''படிக்கிற பெண்ணைக் கல்யாணம் செய்துக்க முடியாது'' என்று நித்சலமாய் மறுத்து விட்டான்.

மகனின் பிடிவாதத்திற்கும், தாயின் நோய்க்கும் நடுவே கிடந்து அல்லாடி ஒருவழியாக திருமண நிச்சயம் என்றளவில் கொண்டு வந்து விட்டது நான் தான்!

அதே சந்தோஷத்தில், நித்யவேணி அத்தையின் உயிர் ஒரு வாரம் கூட இருக்கவில்லை! அவரது இறுதி நாட்களில் அவருடனே இருந்த என்னிடம், அவர் கூறிய கடைசி நிமிட வார்த்தைகள் - எவ்வளவு உயர்வானவை! அன்பில் தோய்ந்த அந்த வார்த்தைகளை நான் மறக்கவே மாட்டேன்!

''இறைவா, மனதினால் உயர்ந்த மனிதர்களின் நடுவே என்னைப் படைத்ததற்கு என் மனமார்ந்த நன்றிகள்'' என என்னைப் படைத்த பிரம்மனிடம் கூவிய நிமிடங்கள் அவை!

சரி... அந்த சந்தோஷ நிமிடங்களில் நான் அனுபவித்த சோகங்களும் கலந்திருப்பதால் அதைப் பற்றி மேலும் பேச வேண்டாம். நிகழ்காலத்திற்கு வருவோம்!

எனது கைப்பேசி எண்ணைப் பார்த்ததும் அழைப்பை உடனே எடுத்தவன்,

''என்னடா... இந்த நேரத்தில? சாட்-க்கு வரட்டுமா?'' என்றான், முதல் வார்த்தையாக.

அதற்கு நான் பதில் சொல்லும் முன்னர், கைப்பேசியைப் பறித்துக் கொண்டு வெளியே ஓடிவிட்டாள் என் தங்கை!

அவனிடம் அவள் வாங்கப் போகும் திட்டுக்களை எண்ணி அவளுக்கு சிறிதும் கலக்கம் இருந்தது போல் எனக்குத் தெரியவில்லை... மாறாக, என் மனது தான் ''பிரதீப்பின் வார்த்தைகளில் சூடு கம்மியாக இருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டது!

என் வேண்டுதல் பலித்ததன் விளைவாகவோ... இல்லை அவர்கள் இருவரையும் பிணைத்திருந்த காதலின் வல்லமையாலோ... இரண்டு மணி நேரம் கழிந்த பின்னர், விரிந்த சிரிப்புடன் கைப்பேசியை என்னிடம் கொடுக்க வந்தாள் கார்த்திகா.



அப்போதும் கணினியில் தலையை நுழைத்திருந்த என் தலையில் ஓர் தட்டுத் தட்டியது பத்தாது என்று.

''டேய் அண்ணா! இந்தா உன்னோட போன்... நாளைக்கு முதல் வேலையா இந்த சோப்பு டப்பாவை மாத்து... காதுல வச்சுப் பேச முடியல... செம வெயிட்-டா இருக்கு'' என்று எனக்கு அறிவுரை வேறு!

நக்கலாய் சிரித்துவிட்டு ''சரிங்க மேடம்'' என நான் கூறியதைக் கவனியாதவள் போல்,

''அப்புறம்... ரொம்ப முக்கியமான விஷயம்... பன்னிரண்டு மணி வரைக்கும் போன் பேசிட்டு இருந்தேன்னு அப்பா - அம்மா கிட்டப் போட்டுக் கொடுத்துடாதே... சரியா? பத்தரைக்கே தூங்கிட்டேன்னு சொல்லணும்... ஓகே? பி அ குட் பாய்!'' என அடுத்த ஆணையைப் பறக்க விட்டாள், எனக்கு எட்டு வயது சிறியவள்.

மெல்லியதாய் சிரித்துவிட்டு, நான் தலையாட்டவும் ''குட் அண்ணா! ரொம்ப நேரம் கண் முழிக்காதே... சீக்கிரம் படு!'' என்றதோடு என் மடியிலிருந்த கணினியை மூடி வைத்துவிட்டுத் தான் அறையை விட்டு வெளியேறினாள்.

அவள் மட்டும் என் கையிலிருந்து கணினியைப் பறிக்கவில்லை என்றால், நேரம் போவதே தெரியாமல் அதில் மூழ்கியிருப்பேன் நான்!

எதிரிகளை அழிப்பதில் அவ்வளவு ஆர்வம்!

எதிரிகளா? அவர்களை அழிக்கப் போகிறானா? எதற்கு இந்த கொலைவெறி? எதிரிகளை அழிப்பதற்கு எதற்கு கணினி? அந்நியன் மாதிரி இவன் ஒரு லூசா? - இந்தக் கேள்வி தானே உங்க மனதில் ஓடுது!

பொறுமை... பொறுமை... எதிரிகள் என நான் சொன்னது கணினியின் எதிரிகள் - அதாவது வைரஸ்கள்!

நானும் என் நண்பன் பிரதீப்பும் இணைந்து நடத்தும் 'Be Protective' நிறுவனம் - கணினியைக் கொல்லும் நச்சுக்கிருமிகளிடமிருந்து (வைரஸ்களிடமிருந்து), கணினியைப் பாதுகாக்கும் மென்பொருளைத் தயாரிக்கும் பணியைச் செய்கிறது!

''Be Protective!'' என்ற பெயரிலிருக்கும் ''B''க்கு உரிய நான் - எங்கள் மென்பொருளின் படைப்பாளன். அதாவது, அதன் செயல்பாட்டின் பின்னே இயங்கும் மூளைகளுக்குத் தலைவன்!

''P'' என்ற எழுத்துக்குரிய பிரதீப்பின் முக்கிய வேலை - எங்களது படைப்பின் விற்பனையை அதிகரிப்பது!

அந்தப் பணிக்காக தான் - பிரதீபன் பெங்களூர் சென்றிருக்கிறான். குறிப்பாக சொல்லப் போனால் - அங்கிருந்து ஓர் சிறிய மென்பொருள் நிறுவனத்தில் எங்களது தயாரிப்பை விளம்பரப்படுத்தி, அவர்களது வாடிக்கையைப் பெறுவதற்காக!

இலவசமாக இணையத் தளத்தில் உலாவிக் கொண்டிருந்த எனது உழைப்பை மதித்த முதல் மனிதனான அவனே - அதன் வெற்றிக்கும் பாடுபடுகிறான்!



''இது உன்னோட உழைப்புடா! அதுக்கான அங்கீகாரம் உனக்குக் கிடைக்கணும். நீ இப்படி... ப்ரீயா சாப்ட்வேரை உலாவ விடுறது பல பேருக்குப் பயனுள்ளதா இருந்தாலும், சில பேர் அதைத் திருடி அவங்களோட பொருளா விளம்பரம் செய்துக்கிறாங்க... அதுவுமில்லாமல், அதுல காசு வேற பார்க்கிறாங்க! உரிமையே இல்லாத ஒருத்தன் உன்னோட உழைப்பின் பலனை அனுபவிக்கும்போது, உரிமைக்காரனான நீ... ஏன் அனுபவிக்கக்கூடாது!'' என்று அவன் வாதாடியது எனக்கு இன்னும் கண்ணில் நிக்குதுங்க...

''Anti-virus ப்ரோக்ராம் எழுதுறது... சும்மா ஒரு பொழுதுப் போக்குக்காக!'' என்று சொல்லிக்கிட்டு இருந்த என்னை ''இவ்வளவு தூரம் சொல்றானே? நாம் தயாரிக்கும் மென்பொருளுக்கு ஓர் விலை நிர்ணயித்து விற்கலாம்'' என்ற எண்ணத்திற்குக் கொண்டு வந்தது அவனோட துடிப்பு தான்.

அதன்படி, எனது இணைய தளத்தில் 'இலவசமாக' உலாவிக் கொண்டிருந்த மென்பொருளின் முதல் உரிமைக்கு ஓர் விலை, சிறு இடைவேளைகளில் மென்பொருளில் மேம்படுத்திக் கொள்வதற்கு ஓர் விலை, ஓர் வலையமைவின் கீழ் இருப்பவர்களுக்கு ஓர் விலை என அதற்கான விலைகள் நிர்ணயிக்கப்பட்டன.

முதல் சில மாதங்கள் - எந்தவொரு விற்பனையுமில்லாமலிருந்த நிலை மாறி, சிறிது சிறிதாக பல்கிப் பெருகிய விற்பனை, நடுத்தர மென்பொருள் நிறுவனங்களுக்கு விற்கும் நிலைக்கு வந்திருக்கிறது என்றால் அதில் பிரதீப்பின் பங்கு முக்கியமானது!

''ஆள் பாதி ஆடை பாதி'' என்ற பழமொழிக்கு ஏற்ப, என்னதான் நான் தயாரித்த மென்பொருள் நன்றாக வேலை செய்தாலும், அதை உரிய முறையில் வெளியுலகிற்கு எடுத்துச் செல்லும் திறமை, பிரதீப்பிடம் மட்டுமே இருந்தது / இருக்கிறது / இனியும் இருக்கும்!

அந்தத் திறமையாலும், அவன் சொல்வது போல் ''நீ உருவாக்குற சாப்ட்வேர்-ல தப்பிருந்தா, நா கோபுரத்தில இருந்து கூவினாலும் யாரும் வாங்க மாட்டாங்க!'' என்ற வாக்கியத்திற்கு ஏற்பவும், எங்களது வளர்ச்சி மிகுந்தே இருந்தது.

ஒரே ஆளாய் நான் தீயாரித்த மென்பொருளைப் பாதுகாக்கவும், அதை மேம்படுத்தவும் எனக்குக் கீழே பத்து பேர் வேலை செய்யும் அளவிற்கு உயர்ந்து, கணினி பயன்பாட்டாளர்கள் நடுவே நல்ல பெயரையும் வாங்கிக் கொடுத்திருக்கிறது!

இதைப் பத்தி பேச ஆரம்பிச்சா நான் நிறுத்தவே மாட்டேங்க... ஒரு படைப்பாளியின் பெருமை... ஒரு ஆர்வக் கோளாறு-ல மடமடன்னு எல்லாத்தையும் சொல்லிட்டேன்... உங்களுக்குத் தான் கொஞ்சம் போர் அடிச்சிருக்கும்! சாரி!

ஆனா, இது தான் - அதாவது நாங்க நடத்தும் இந்த மென்பொருள் நிறுவனமும் என் வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதால் சொல்ல வேண்டியதா போச்சு!

இதே மாதிரி... என்னோட வாழ்க்கையின் மற்ற முக்கிய பங்குகளை வாங்கியிருக்கும் பங்குதாரர்கள் - வணிகம் மற்றும் எழுத்து!



மென்பொருள் - வணிகம் - எழுத்து - இது மூணுக்கும் என்னய்யா சம்பந்தம்!?ன்னு யோசிக்கிறீங்க தானே? இருக்குங்க, மூணுக்கும் இல்லைனாலும் கடைசி இரண்டுக்கும் தொடர்பிருக்கு!

வைரஸ்களை எதிர்த்து மென்பொருள் தயாரிப்பது என்பது என்னோட பொழுதுபோக்கு மட்டும்தான்!

என்னோட முழு நேர வேலை என்ன தெரியுமா? வணிகம்! பங்குச் சந்தையில் பங்குகள் வாங்கி விற்பது! எனக்கு மட்டுமில்லாமல், ஓர் பன்னாட்டு வங்கிக்கு வணிக ஆய்வாளனாகப் பணிபுரிகிறேன். அதற்காக, அலுவலகம் எல்லாம் போக மாட்டேங்க!

ஏன்டா குழப்பி எடுக்கிறன்னு பல்லைக் கடிக்கிறீங்க தானே? Mutual fund பத்திக் கேள்விப் பட்டிருக்கீங்க இல்லையா?

நீங்க ஒரு மியூச்சுவல் ஃபண்டுல முதலீடு செய்றீங்கன்னு வைங்க, அவங்க அதை சில முக்கிய பங்குகளில் முதலீடு பண்ணி, உங்களுக்கு அதிகபட்ச லாபம் இல்லைனாலும் குறைந்த பட்ச நஷ்டம் வரமாதிரி பார்த்துப்பாங்க. இதில், முதலீடு பண்ணி - அப்படின்னு ஒரு வார்த்தை சொன்னேன் இல்லையா... அதான் என்னோட வேலை!

அதை நான், அலுவலகம் போய் தான் பண்ணணும்ன்னு இல்லை. வீட்டில இருந்தே செய்துடலாம்.

குறிப்பா சொல்லணும்ன்னா, எனக்கு இந்த வேலைக்கான உத்தரவு வந்தப்போ, என்னோட ஒரே நிபந்தனை ''என் பணியை நான் வீட்டிலிருந்து தான் செய்வேன்'' என்பதாக தான் இருந்தது!

சரி, சரி, வணிகத்திற்கும் எழுத்துக்குமான தொடர்புக்கு வந்துடுறேன்! பங்குச் சந்தையின் பல அரிய

நுணுக்கங்களை மக்களுக்குப் பரப்பும் விதமாக, பிரபல நாளிதழ் ஒன்றில் ''வணிகத்தில் வெல்லலாம்'' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதுகிறேன்! இது தான் வணிகத்திற்கும் எழுத்திற்குமான தொடர்பு!

இதற்குமே பிரதீப் தான் காரணம்! கூடவே கார்த்தி காவும்!

முதலில், எங்கள் குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக மட்டுமே வணிகத்தில் ஈடுபட்டிருந்த என்னை - மெல்ல மெல்ல நண்பர்கள், சொந்தங்கள், தெரிந்தவர்கள், அவர்களுக்குத் தெரிந்தவர்கள் எனப் பிறருக்காகவும் செய்யத் தூண்டினான்.

ஹ்ம்ம் வெறும் தூண்டுதலோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், பிரதீப்பும் கார்த்திகாவும் அவர்களது வாய் ஜாலங்களால் எனது வாடிக்கையாளர்களைப் பெருக்கினர்!

ஓர் நிலையில், அவனது பத்திரிகையாளர் நண்பர் ஒருவரின் மூலமாக எனக்கு இந்த வாய்ப்பை வாங்கிக் கொடுத்ததும் அவன் தான்!

எழுத்தா? நமக்கு வருமா? என நான் யோசித்த வேளைகளில் ''உன்னால் முடியும்'' என எப்போதும் போல் ஊக்கம் கொடுத்து, என்னை நிமிர வைத்தார் அப்பா!

இப்போது நிமிர்ந்து நிற்பதைப் பார்த்துப் பூரித்தும் போகிறார்!

ஆமாம், நான் இருந்த நிலைமைக்கு... இப்போதிருக்கும் நிலை... சாலப் பெரிது!


பிறரது தூண்டுகோலால் உயர்ந்திருந்த போதும், அவற்றை திணிக்கப்பட்டவைகளாக எடுத்துக் கொள்ளாமல், நான் செய்யும் அனைத்துச் செயல்களையும் நான் ரசிக்கவே செய்கிறேன்!



அந்த ரசிப்பின் காரணமாய் தான் - தன் எழுத்துப் பணியை வணிகத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் - சிறுகதை, கவிதை, சிறு துணுக்குகள், நகைச்சுவை எனப் பலவற்றையும் 'ஈசன்' என்ற புனைப்பெயர் கொண்டு எழுதவும் செய்கிறேன்!

''அதென்னப்பா ஈசன்?'' என்பது தானே உங்க கேள்வி? துஷ்டர்களை அழிக்கும் கடவுள் ஈசன் என்ற சிவபெருமான்! நான்தான் கணினியின் எதிரிகளை அழிக்கிறேனே? அதான் கலியுக ஈசன்!

இப்போ புரிஞ்சுடுச்சா? ''இப்படிக்கு ஈசன்'' எப்படி வந்ததுன்னு!



# 3

அடுத்த நாள் காலை நான் கண் விழித்தபோது,

''கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க''

எனக் கந்தர்சஷ்டி கவசத்தின் மத்தியில் பயணித்துக் கொண்டிருந்தார் அம்மா.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்த என்னைப் பார்த்து ஓர் புன்னகை செய்துவிட்டு அம்மா நகர்ந்துவிட, நானும் அதே புன்னகையுடன் வீட்டின் பின்புறம் சென்றேன்.

அங்கே, நான் எதிர்பார்த்தது போலவே கார்த்திகாவிற்குப் பிடித்த அடுக்கு மல்லியை செடிக்கும் வலிக்காமல், மலருக்கும் வலிக்காமல் பறித்துக் கொண்டிருந்தார் அப்பா.

அவரிடம் ஓர் ''காலை வணக்கத்தை'' உதிர்த்து விட்டு, நான் தோட்டத்தைச் சுற்றி ஓட ஆரம்பிக்கும் போதே, வண்ண மலர்களும் சத்துள்ள காய்களும் கனிந்த பழங்களும் அரிய மூலிகைகளும் அடங்கிய அந்த தோட்டத்தின் கலவையான நறுமணம் என் மனதை மயக்கத் தொடங்கி விட்டது.

மல்லிகையின் மயக்கும் மணத்துடன் மாம்பழத்தின் கனிந்த வாடை சேர, அத்துடன் பவளமல்லியின் பக்தி நறுமணம் ஒன்றாய் கலக்க, அவற்றை மேலும் கூட்டுவது போல் கொடி முல்லையின் மகரந்தம் அதில் பரவி விரவ - அங்கே ஓடுவது சொர்க்க போக அனுபவம் தெரியுமா?!

மனதையும் லேசாக்கி, உடலுக்கும் புது ரத்தத்தைப் பாய்ச்சும்! முயன்று பாருங்கள்! முக்கால் மணி நேரத்திற்கும் மேலாய் நான் ஓடி முடித்திருந்தபோது, அன்றைக்குரிய காய்கறிகளையும் கார்த்திகாவுக்கு வேண்டிய பூக்களையும் எடுத்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்த அப்பாவை வழிமறித்து,

அவரிடமிருந்து பூக்கூடையை மட்டும் வாங்கிக் கொண்டு ''தோட்ட வேலை முடிஞ்சதும், அடுக்கு மல்லியை நான் கோர்த்து வைக்கிறேன்!'' என்றேன்.

கல்லூரிக்குக் கிளம்பும் பரபரப்பில்... ம்ஹூம் அவளாகவே உண்டாக்கிக் கொள்ளும் அவசர கதியில்



அம்மாவை ''அம்மா... குண்டு மல்லியை உருண்டையா பந்து மாதிரி கோர்த்துக் கொடுமா. இன்னைக்குப் போடற வைட் டிரஸ்-க்கு, ஜடையைச் சுத்தி அதை வச்சா அழகா இருக்கும்'' என நச்சரிக்கும் தங்கையின் வார்த்தைகளில் தாய் அவசரமாய் தொடுக்கும் பூச்சாரமும், அதை அவள் ''இந்த இடத்தில் மூணு பூ தூக்கினாப்புல இருக்கு... ப்ச்... என்னம்மா?'' என அவள் சலித்துக் கொள்வதும் எனக்கு நினைவு வந்தது போல், அவருக்கும் நினைவு வந்தது போலும்.

''சரி கண்ணா'' என்றதோடு உள்ளே சென்று விட்டார்.

எப்போதும் போல் ஓட்டப்பயிற்சி முடிந்து நான் தோட்ட வேலை ஆரம்பித்து அரை மணி நேரமானதும், கையில் சத்து மாவு கஞ்சியுடன் அம்மா வந்து விட்டார்.

என் வயிற்றில் பசிக்கான மணி அடிப்பது அம்மாவுக்கு எப்படி தான் கேட்குமோ?

''தேங்க்ஸ் மா'' என்ற என்னிடம் பதில் சொல்லாமல், கடவுளுக்குத் துதி பாடிக் கொண்டே உள்ளே சென்ற அம்மாவின் பக்தியை,

''அம்மாமாமாமா, என்னோட வைட் சுடியைக் காணோம். சீக்கிரம் வந்து எடுத்துக் கொடுங்க...'' என்ற கத்தல் கண்டிப்பாக கலைத்திருக்கும்! பாவம்!! பக்திக்கும் பெண்ணிற்கு இடையே தினம் தினம் நடக்கும் அல்லாட்டம் தானே!!

காத்து ரட்சிக்கும் உண்ணாமுலை அம்மன் கூட பக்தியின் ஏற்படும் இடைவெளியை மன்னிப்பாராய் இருக்கும்!

எங்களை சோர்வுறாமல் காக்கும் எங்கள் வீட்டு படை வீட்டம்மன், தன் பணியில் ஏற்படும் இடைவெளிக்கு ருத்ர தாண்டவம் என்ன? பிரேக் டான்ஸ்... போக் டான்ஸ் ரேஞ்சிற்கு ஆடி விடுவாளே?

அதனால், எப்போதும் போல் பெண்ணின் பணியே தாயின் தலையாய கடமையானது!

நான் அம்மாவிற்காக பாவப்பட, என் அருமை தங்கை யாரோ அடுத்த அரை மணி நேரத்தில் என்னைப் பார்த்து பிறர் பாவப்படும்படி ஆக்கி விட்டிருந்தாள்!

"காலேஜ் லேட் ஆச்சு. இனிமே பஸ் பிடிச்சு போனா... மல்லேஸ்-கிட்ட ராடு தான் கிடைக்கும். என்னை கார்-ல கொண்டு வந்து விடுண்ணா" என நான் கோர்த்து வைத்திருந்த மல்லிகையைச் சூடிக்கொண்டே அவள் கேட்க,

"காரா? நானா?" எனப் பேந்த பேந்த முழிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டேன் நான்!

"ஏன் இப்படி பிரெஞ்சு கிளாஸ்-ல உட்கார்ந்திருக்க ஊர்நாட்டான் மாதிரி லுக்கு விடுறே? எந்திரி... காரை எடு!" என்றவள், என் கையைப் பிடித்து இழுக்கவும் செய்தாள்.

"இல்லைடா... கார்... நான்... எப்படி..." என நான் தந்தியடிக்க,

"உனக்கு கார் ஓட்டத் தெரியும் தானே? பிரதீப் சொல்லிக் கொடுத்தாரே? அப்புறம் என்ன? வா வா எடு..." என்றவளுக்கு என் தயக்கத்திற்கான காரணம் புரிந்த பாடாய் இல்லை.



"அண்ணன்... எப்படிம்மா? நான் வேணும்னா வண்டி-ல கொண்டு வந்து விடுறேன்" என என்னைக் காக்கும் ரட்சகனாய் எப்போதும் போல் ஆஜர் ஆனார் என் தந்தை.

"உங்களோடவா? வண்டிலேயா? எனக்கு காலையில ஒன்பது மணிக்கு காலேஜ்பா... நைட் ஒன்பது மணிக்கு இல்லை" என அவள் படு தீவிரமாய் பதில் சொன்னதில் பட்டென சிரித்து விட்டேன்!

சாலையில் தன் வண்டியைத் தவிர அடுத்ததாய் ஓர் இரண்டு சக்கர வாகனம் சென்றாலும்... அது சைக்கிளே ஆனாலும், அப்பாவின் வண்டி தான் செல்லும் பதினைந்து கிலோ மீட்டர் வேகத்திலிருந்து பத்துக்குக் குறைந்து, அதுவே ஓர் நான்கு சக்கர வாகனத்தைக் கண்டு விட்டால்... (அது மாட்டு வண்டியே ஆனாலும்) ஐந்துக்கு வந்துவிடும்!

அப்படியிருக்கையில், கார்த்திகா சொல்வது போல் ராச்சனாரி அருகிலிருக்கும் அவளது கல்லூரிக்கு இரவு தான் செல்ல முடியும்!

அவளது பேச்சில் நான் சிரித்துக் கொண்டிருக்க, அத்துடன் சேர்த்து அம்மாவின் கமுக்கமான சிரிப்பும் சேர்ந்ததில் அப்பாவுக்கு அசடு வழிய ஆரம்பித்து விட்டது!

"என்ன ஆளாளுக்கு ராஜ பார்வை பார்த்திட்டு இருக்கீங்க? வண்டியை எடுண்ணா!" என்றவளின் கோபம், நான் யோசித்துக் கொண்டிருந்த ஐந்தே நிமிடத்தில்,

"டேய் பரணி! வண்டியை எடு... காலேஜ்க்குப் போகணும்... மல்லேஸ் வையும்!" என்ற சப்பானியின் ராகத்திற்கு வந்து சேர்ந்திருந்தது.

''அண்ணனை... பேர் சொல்லிக் கூப்பிடாதே!'' எனத்
தன் அறிவுரையை ஐம்பதாயிரத்து நூற்றி எட்டாவது
முறையாக அம்மா சொல்லிக் கொண்டிருக்கும் போதே,
கார்த்திகா பற்கள் கடிபடுவது எனக்கு அச்சர சுத்தமாய்
கேட்கத் துவங்கியது!

காலையில் தாய் வேண்டிய தெய்வங்களை எல்லாம்
வேண்டிக் கொண்டு, காரை எடுத்த எனக்கு உள்ளுக்குள்
பயங்கர உதறல்!

முதன் முதலாக, பிரதீப் இல்லாமல் வண்டியை நான்
மட்டுமே ஓட்டிச் செல்லப் போகிறேன்!

இருபத்தியெட்டு வயதாகிறது! அதுவும் மீசை முளைச்ச
ஆண் பிள்ளை! கார் ஓட்ட இந்த பயமான்னு தானே
கேட்கிறீங்க?

உங்களுக்கு என்னங்க தெரியும்? ஒவ்வொரு மனுஷ
னுக்கும் ஒவ்வொரு ஃபீலிங்க்ஸ்? நமக்கு கார் ஓட்டற
துன்னா தனி ஃபீலிங்க்ஸ்... நீங்க வேற!

பல நாட்களுக்குப் பின்னர் காரை எடுப்பதில் எனக்
கிருந்த பயத்தைவிட, இந்தக் கத்துக்குட்டியா கார் ஓட்
டப் போகிறது என்ற பயணத்தில் கார் சற்றே திணறியது
போல் எனக்குத் தோன்றியது!

எங்கள் வீட்டில் கார் இருக்கிறது என்று பெயர் மட்
டுமே! அதுவும், அவசர மருத்துவ ஆலோசனைகளுக்
காகவும், எங்கள் வீட்டு மாடியில் இயங்கும் ''Be Protec-
tive'' நிறுவனத்தின் அவசரப் பயன்பாட்டிற்காகவும் என்று
பிரதீப் வாங்கி வைத்தது.

மேற்கூறிய தருணங்களில், பெரும்பாலும் பிரதீப்
தான் கார் ஓட்டுவான். நான் வெளியே செல்லும்



தருணங்கள் மிக மிக சொற்பமாய் இருக்கவே, அத்
தருணங்களிலும் பிரதீபனே எனது சாரதி!

இரு வருடங்கள் முன்னர் தான் - ''நீயும் கார் ஓட்டக்
கத்துக்கோ, பரணி! நம்ம கம்பெனியோட மார்க்கெட்
டிங்-காக... நான் அடிக்கடி வெளியூர் போக வேண்டிய
சமயங்களில் ஏதாவது ஒரு எமர்ஜென்சின்னா, நாம வேற
யாரையும் எதிர்பார்த்திட்டு நிற்கக்கூடாது!'' எனக் கூறி,
எனக்கு கார் ஓட்டப் பழக்கி விட்டான்.

நேற்றிரவு தான், ''பிரதீப்பின் முன்னெச்சரிக்கை நட
வடிக்கைகளில் நிறைவேறாமல் போன ஒன்றே ஒன்று
இது மட்டுமே! அவன் எண்ணியது போல், நான் தான்
கார் ஓட்ட வேண்டிய தருணங்களே வரவில்லையே!''
என நான் எண்ணியதற்கு இன்று என் தங்கை பெரிய
ஆப்பாய் வைத்து விட்டாள்!

இப்போதும், அவன் கூறிய இக்கட்டான சூழ்நிலை
வரவில்லை - இலகுவான சூழ்நிலையைத் தன் பிடி
வாதத்தினாலும், தூங்கு மூஞ்சித் தனத்தினாலும் இக்கட்
டாய் மாற்றி விட்டிருந்த கெட்டிக்காரி, காரின் பின் இருக்
கையில் அமர்ந்து அவசர அவசரமாய் ஏதோ எழுதுவது
என் கண்ணில் பட்டது!

''அசைன்மெண்ட் மாதிரி இருக்கிறதே'' என எண்ணிக்
கொண்டே நான் கேட்க, அம்மையார் அதை மறுக்காது
ஆமோதித்தார்.

''சரியான தத்தி அண்ணா... நீ! இப்போ தான்... இது
அசைன்மெண்ட்டுன்னு தெரிஞ்சுதாக்கும்...'' என நோட்டி
லிருந்து கண்ணை எடுக்காமலேயே அவள் கேட்க,
எனக்கு எதுவுமே புரியவில்லை.

''காரில் ஏறியதும் தானே எழுத ஆரம்பித்தாள்? அதுவும் ஐந்து நிமிடங்களாகத் தானே? ஐந்து நிமிடத்தில் நான் தத்தி ஆகிவிடுவேனா?'' என நான் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே மூளைக்குள் மின்னல் வெட்டியது.

''அடிப்பாவி! இந்த அசைன்மென்ட்-டை எழுதுறதுக்காக தான் கார்-ல காலேஜ் போகணும்ன்னு அந்த ஆட்டம் ஆடினியா? நான்... கூட நிஜமாகவே உனக்கு காலேஜ்-க்கு லேட் ஆச்சுன்னு நினைச்சேனே!'' எனது மனதின் குரலை நான் வெளிப்படுத்திவிட,

''நார்மல் காலேஜ் டைம்-க்கு லேட் ஆச்சு தான்! ஆனா, இன்னைக்கு எங்களுக்கு ஃபஸ்ட் கிளாஸ் கிடையாது. மல்லேஸ்-க்கு ஏதோ கல்ச்சுரல் மீட்டிங் இருக்காம்...'' என நிம்மதி விரவிய குரலில் ஆரம்பித்தாள் என் தங்கை.

அவள் முழுதாய் பேசும் வரை எனக்குப் பொறுமை இருக்கவில்லை - ''அப்புறம் என்ன? பஸ்-ல போயிருக்க வேண்டியது தானே?'' என இடைப்புகுந்தேன்.

''ஹான்... நான் தான் ராக்கம்மா கொடுத்த அசைன்மென்ட்-டை முடிக்கலையே? ரெண்டாவது பீரியட் அது வந்து நிக்குமே... அதுக்கு... கிளாஸ்-ல பசங்க இருக்கிறதைவிட கிளாஸ்-க்கு வெளிய இருக்கிறது தான் பிடிக்கும் போல... ''கெட் அவுட்''ங்கிறது ஏதோ தெய்வீக மந்திரம் மாதிரி எல்லாத்துக்கும் அதையே சொல்லும்...''

''சரி விட்டது சனின்னு வெளிய போனா, நம்ம டீர் ஹோர் மேஜர் இருக்காரே அவர் வந்து... ''Why are you standing outside'' / ''எதுக்காக வெளியே நிற்கிறே?''ன்னு மேஜர் சுந்தர்ராஜன் மாதிரி எல்லாத்தையும் ரெண்டு தடவை பேசிக் கழுத்தறுக்கும்!''

''இது நமக்கு தேவையா? இல்லை தேவையான்னு கேட்கிறேன்... அதான் அசைன்மென்ட்-டை எழுதியே முடிச்சிடலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்.''

''ஆனா, முடிவு மட்டும் தான் என்னால் பண்ண முடிஞ்சது! அதை நிறைவேத்த வழி தெரியாம திண்டாடி திணறிப் போயிட்டேன்... தெரியுமா?'' - மிக நீளமாய் பேசிவிட்டு, மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கே ''ஹப்பாடா'' என்றிருந்தது போலும்.

மீண்டும் அவளே, ''என்னண்ணா நீ? இந்த இடத்தில... ''ச்சு... ச்சு''ன்னு என்னைப் பார்த்து பரிதாபப்படணும்! உன் பிரண்ட் மாதிரியே கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக்கியே'' எனத் தொடங்கினாள்.

''பஸ்-ல போனா... எப்படி அசைன்மென்ட் எழுதுறது? கல்யாணமே ஆகலையாம் அதுக்குள்ளே பையனுக்கு எல்.கே.ஜி. சீட்டுக்கு ஸ்கூல் லைன்-ல நின்னானாம் ஒருலூசு அந்தக் கதையா... நிக்கவே இடம் கிடைக்காதாம் அப்புறம் எங்கிருந்து அசைன்மென்ட் எழுதுறது? அதான் உன்னைக் கூட்டிட்டு வந்தேன்'' எனப் பெரிய விளக்கத்தில் முடித்தாள் பாட்டியம்மாள்.

''இவளை என்ன தான் செய்வது?'' என்ற கேள்விக்குப் பதில் தேடிக் கொண்டிருக்கும்போதே, கல்லூரி வந்து விட,

''உன்னால இதைவிட மெதுவா ஓட்ட முடியாதாக்கும்! கொஞ்ச நாளில் அப்பாவை மிஞ்சிடப் போற''

என்று அலுப்புடன் இறங்கியவள், சற்று தூரம் நடந்து விட்டு மீண்டும் ஓடி வந்தாள்.

வண்டியைத் திருப்பிக் கொண்டிருந்த என்னிடம் ''அண்ணா... அண்ணா... அங்க இருக்க டீ கடையில எனக்கு ஒரு டீ வாங்கித்தாண்ணா! என்னவோ... அந்தக் கடை எங்க காலேஜ் பசங்களுக்கு மட்டுமே குத்தகைக்கு விடப்பட்ட கடை மாதிரி... இந்தப் பொண்ணுங்க அங்க வரவே மாட்டேங்கிறாங்க. ஆனா, எனக்கு அங்க என்ன இருக்குன்னு தெரிஞ்சே ஆகணும்... ப்ளீஸ் அண்ணா. என்னோட வா...'' என ''டேய் பரணி''யை விட்டு ''அண்ணா''விற்குப் பயணித்திருந்தது அவளது குரல்.

''வண்டி ஓட்டுவதற்கு யோசித்த என்னை... டீ கடைக்கு வேறா? ப்ச் வரவர ரொம்பவும் படுத்துகிறாள்!'' என மனதில் தோன்றிய சலிப்பை மறையாது காட்டி,

''எனக்கு மார்க்கெட் ஓபன் ஆகிடும், கார்த்தி! இன்னொரு நாள் பார்க்கலாம்!'' என முகத்தைப் பாராமல் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டேன்.

கல்லூரி வாயிலைத் தாண்டி சிறுசிறு தூரம் பயணித்த பின்னர் தான், கார்த்திகாவிடம் கடுமையாக நடந்து கொண்டு விட்டோமோ என்ற உறுத்தலுடன், நான் திரும்பிப் பார்க்க எனது வண்டியையே திரும்பித் திரும்பிப் பார்த்தபடி கல்லூரியினுள் நுழைந்து கொண்டிருந்தாள், கார்த்திகா.

ப்ச். இன்றும் முழு நாளையும் - அண்ணன் கோபம் கொள்ளும் அளவிற்கு நடந்து கொண்டு விட்டோமே என்ற உறுத்தலுடன் கழிப்பாளே! என என்னைப் பார்த்தே எனக்கு எரிச்சல் வந்தது.



கார்த்தி எப்போதுமே இப்படித் தாங்க - என்னதான் முயாமல் பேசினாலும் அவளால் ஓர் சுடு சொல்லை... ஏன் ஒரு சிறு முகச்சுளிப்பைக் கூட தாங்க முடியாது! பேச்சும் நின்று முகமும் வாடிவிடும்!

அவள் குணம் தெரிந்தும், என் எண்ணத்திலேயே நின்று அவளை வருந்த வைத்து விட்டேனே என்ற வாட்டத்திலேயே மனம் உழல, மெதுவாய் சென்று கொண்டிருந்த எனது வாகனத்தை நோக்கி தறிகெட்ட வேகத்தில் வந்த மாருதி 800 வண்டியை நான் கவனிக்கவில்லை!

# 4

மின்னல் வேகத்தில் வந்த வாகனத்தின் ''ஹாரன்'' ஒலியில் நான் கலைந்த போதும், எனக்கும் அந்த வாகனத்திற்குமான இடைவெளி - ஐந்தே அடிகள்!

''அண்ணாமலையாரே!'' என்ற பிரார்த்தனை மனதினுள் புக, வண்டியை இடது புறமாக ஒடித்தேன்.

மிதமான வேகம் தான் என்றாலும் சட்டென வேகத்தைக் குறைத்து, இடது புறமாக திருப்புவது என்பது காலம் காலமாய் வண்டி ஓட்டும் வித்தகர்களுக்கே பிரம்ம பிரயத்தனம் எனும்போது, பல காலங்கள் கழித்து கார் ஓட்டும் எனக்கு மிகவும் சிரமமாய் இருந்தது.

பேய் வேகத்தில் வந்த வண்டி, என் வண்டியை அடித்து அப்பளமாய் ஆக்கி விடக் கூடாது என்ற எண்ணத்தில் நான் திருப்ப, என் வண்டியோ சாலையின்

நடுவே இருந்த சாலை தடுப்பின் மீது பெருத்த சத்தத்துடன் மோதி நின்றது.

சீட் பெல்ட் போட்டிருந்ததால், பெருத்த சேதங்கள் ஏதுமில்லை என நான் எண்ணிக் கொண்டிருக்கும் போதே, அந்த மாருதி 800 வலது புறமிருந்த பின் கதவின் மீது மோதி நின்று என் எண்ணத்தைத் தகர்த்தது, அன்பர்களே!

அதில் பின் கதவு ஐந்தடிக்கும் மேலாய் உள்ளே நகர்ந்து, அதன் தாக்கத்தினால் ஓட்டுனர் இருக்கை முன்னே தள்ளப்பட, சைக்கிள் ரியாக்ஷனாக என் தோள் பட்டையில் ஓர் அடி விழுந்தது!

அது கொடுத்த உயிர் போகும் வலியினால் ''அம்மா மாமாமாமா'' என்று அலறத் தோன்றிய மனத்தைக் கட்டுப்படுத்தினேன்.

அதே சமயம் மயக்கம் வருவது போல் கண்ணை இருட்டிக் கொண்டு வரவே, கண்ணை அகல விரித்து, பற்களை அழுந்த கடித்து, கைகளை இறுக மூடித் திறந்து, உடலின் ரத்தம் முழுவதையும் மூளைக்குச் செலுத்த முயன்று ஓரளவு வெற்றியும் கண்டேன்.

''சீக்கிரம் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும்!'' என்ற அபாய மணியை மூளை அடிக்கும்போதே,

அடுத்த வண்டியிலிருந்து ஓடி வந்த பெண் ''சாரி சார்! ரொம்ப ரொம்ப சாரி சார்! எங்க மேல தான்... தப்பு! வாங்க சார்... ஹாஸ்பிடலுக்குப் போகலாம். ப்ளீஸ் சார்... வாங்க சார்'' என்றாள், என் வண்டியின் கதவை இழுத்த வாறே!

அதுவும் தன் கையில் பட்டிருந்த காயத்தையும் பொருட்படுத்தாமல்!



''ஹய்யோ... நான் வீட்டிற்குப் போக வேண்டும்!'' என்ற பதட்டம் மட்டுமே மனதினில் நிற்க, அவள் இழுத்துக் கொண்டிருந்த கதவை நானும் மறு பக்கமாய் இழுத்துப் பூட்ட முயன்றேன்.

என் நடவடிக்கைகள் - கார்த்திகாவை விடவும் சிறு பிள்ளைத்தனமாய் உள்ளதோ!?

இது அசட்டுப் பிடிவாதமில்லை - ஒரு வகை தன் மானம்! தற்காப்பு முயற்சி!

''ப்ளீஸ் சார். தோள் பட்டையில ரத்தம் கொட்டுது சார். வாங்க... பக்கத்தில இருக்க ஹாஸ்பிடலுக்குப் போய்டலாம். எங்க வண்டிலேயே போய்டலாம்... ப்ளீஸ்'' என அந்தப் பெண் கெஞ்சியபோது தான், எனக்கு அவளது முகம் பார்க்க வேண்டும் போல் தோன்றியது.

ஏற்கனவே, இவள் ஓட்டி வந்த அழகில் தான் வண்டியும் நானும் நைந்த தகரங்களாக உருமாறி இருக்கிறோம்! இதில், இவள் காரிலா?! இவளுக்கு என்ன பைத்தியமா?

சட்டென நிமிர்ந்து நான் பார்த்த பார்வையிலேயே எனது எண்ண ஓட்டத்தைப் படித்து விட்டாள் என்பது தொடர்ந்து அவள் கூறிய விளக்கத்தில் எனக்கு விளங்கியது.

கூடவே, கூர் வாளாய் இருந்த எனது பார்வையை பட்டைத் தீட்டிய வைரமாய் அவள் எதிர்கொண்டதில் அவளது முகத்திலிருந்த ஏதோ ஒன்றும் என் மனதில் விளங்கா ஓவியமாய் பதிந்து போனது!

அது இடது காதிற்கும், தாடைக்கும் பயணித்த குட்டுத் தழும்போ?!

ம்ஹூம்... அது இப்போது முக்கியமில்லை, இங்கிருந்து கிளம்புவது தான் முக்கியம்!

''சாரிங்க... நீங்க கேட்க நினைக்கிறது புரியுது. இன்னைக்கு நான் கார் ஓட்டலை. என்னோட ஸ்டுடென்ட் தான் ஓட்டினா... பதினஞ்சு நாள் டிரைவிங் படிச்சிருந்தும் டிரைவிங் ஸ்கூல் வண்டியை விட்டு அவங்க வீட்டுக் காரை எடுத்ததும் அவளுக்குக் கொஞ்சம் தடுமாறிடுச்சு. ஹாண்ட் பிரேக் வேற இல்லையா... என்னால சமாளிக்கவே முடியல...'' என அவள் கொடுத்த விளக்கத்தின் முடிவில்.

''ஜோதி அக்கா! அவருக்குப் பலமான அடியா? ஹய்யோ... அப்பா திட்டப் போறாங்க அக்கா... கார் வேற முன் பக்கம் நொறுங்கிப் போச்சே... என்னக்கா பண்றது? என்னை போலீஸ்ல - பிடிச்சிட்டுப் போய்டுவாங்களா?'' எனப் பதறிய குரலின் சொந்தக்காரி இந்த ''ஜோதி அக்கா''வின் மாணவி என்பது வெளிச்சமானது.

ஆனால், நின்றிருந்த இரு பெண்களை விடவும் கழன்று விடுவது போல் வலித்த தோள்பட்டையும், மயங்கி விடுவேனடா மனோஹரா என்று எச்சரித்த மூளையும் அச்சுறுத்த, அதிர்ச்சியில் நின்று போயிருந்த வண்டியை ஸ்டார்ட் பண்ணினேன் நான்.

''சார்... சார்.. ரத்தம் கொட்டுது சார். இதோட வண்டி ஓட்ட முடியாது சார்... ப்ளீஸ் சார்... என்னோட வாங்க...'' என அந்த ''ஜோதி அக்கா''வின் குரல் கெஞ்சிற்று.

ஏனோ அந்தக் குரலின் கெஞ்சலுக்கும், முகத்திலிந்த தவிப்பிற்கும் நின்று பதில் சொல்ல வேண்டும் போல் மனம் பரபரக்க, வண்டியின் இயக்கத்தில் சிறு தொய்வைக் கொண்டு வந்தன என் கைகள்.



ஆனால், அந்த சிறு சுணக்கத்தை எங்களை நோக்கி வந்த கூட்டம் துரிதப்படுத்திவிடவே, அவசரமாய் அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன் நான்.

''சார்... சார்...'' என்ற அவளது அழைப்பும்.

''ஹய்யோ அக்கா, அவரை ஏன் கூப்பிடுறீங்க? திரும்பி வந்து... நம்ம ரெண்டு பேரையும் போலீஸ்-ல பிடிச்சுக் கொடுத்திடப் போறார்'' என்ற மற்றொருத்தியின் கெஞ்சலும், காதில் விழுந்து மறைய, அடிபட்ட வேகத்தில் தடுமாறிக் கொண்டிருந்த வண்டியை மிகுந்த சிரமத்துடன் வீட்டிற்கு ஓட்டிச் சென்றேன் நான்.

ஐந்தே நிமிடத்திலிருந்த வீட்டை அடைவதற்குள் கைகள் அந்து விடுவது போல் வலித்தன!

''பின்னே, வலிக்காமல் இதமான அனுபவமாகவா இருக்கும்?'' என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது! கூடவே, உன் மேல் தப்பென்று எதுவுமில்லாத போது எதற்காக அவர்களிடம் நியாயம் கேட்கவில்லை... பார்த்த முதல் பார்வையில் காதல்... மோதலில் ஆரம்பித்துக் காதல்... இப்படி ஏதுமா? என நீங்கள் கேள்வி எழுப்புவதும்!

ஹ்ம்ம்... கண்ட பின்னர் காதல் என்பதே சாத்தியமில்லாத இந்நிலையில்... கண்டதும் காதலா? கண்டிப்பாக இல்லை... பயப்பட வேண்டாம்!

காதல் என்ற மாய வலையில் மறந்தும் விழமாட்டான், இந்த ஈசன்!

நான் அந்த இடத்தை விட்டு அகன்றதற்கு பல காரணங்கள்! முதல் காரணமாய், எனது வேதனையை

பிறருக்குக் காட்டப் பிடிக்காத சண்டித்தனம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!

ஆம், எப்போதுமே என்னைப் பார்த்து... நான் படும் வேதனையைப் பார்த்து யாரும் உருகுவதில் எனக்குத் துளியும் இஷ்டமிருப்பதில்லை.

அதனாலேயே, தோளில் பலமாய் வலித்தபோதும் அவர்களிடம் வாக்குவாதம் செய்யாமல் வீட்டிற்கே விரைந்தேன்.

வீட்டை நெருங்கும்போதே, பெரிய கதவின் அருகே அப்பா நிற்பது தெரிந்துவிட, எனக்கு நெஞ்சுக்குள் ஓர் நிம்மதி உணர்வு பரவியது.

வெளித்தோற்றத்திலேயே ''நான் உடைந்திருக் கிறேன்'' என்று பறைசாற்றிய வண்டியைக் கண்டதும்,

''பரணி! என்னாச்சுப்பா...'' என்ற கூவலுடன் வண் டியை நோக்கி ஓடி வந்தார், அப்பா.

''ஒண்ணுமில்லைப்பா. உள்ள போங்க...'' என்ற நான், வண்டியை வீட்டினுள் நிறுத்தியது வரையிலும் தான் எனக்கு நினைவில் இருக்கிறது.

அடுத்ததாய் நான் கண் விழித்தபோது, கண் மலர் களில் நீர் திவலைகள் நடுநாயகமாய் வீற்றிருக்க, அம்மா வின் மெல்லிய வருடலின் இடையே சிக்கியிருந்தன என் தலைமுடி.

எனக்கு விழிப்பு தட்டியது தெரிந்ததுமே ''வலிக்குதா ராஜா?'' என ஒட்டுமொத்த பாசத்தையும் அவர் வார்த் தையில் தோய்க்க,

''ம்ம்'' என்ற எனக்கு, அவர் பேசியதில் பாதி மட்டி லுமே காதில் விழுந்தது போலிருந்தது.



அதற்குள் அப்பா வந்துவிட, ''மணி வந்தானா?'' என என் மருத்துவ நண்பன் ''மணி''யை விசாரித்தேன்.

''ம்ம். ஆமா! நீ... இருந்த நிலைமையைப் பார்த்ததும் எனக்கு உடம்பே ஆடிப்போச்சு. உடனே மணிக்கு போன் பண்ணினேன். அவன் தான், கார் எடுத்திட்டு வந்து உன்னை அவனோட கிளினிக் அழைச்சிட்டுப் போனான்.''

''காயம் தான் பெருசா தெரியுதே ஒழிய... பிராக்ஷர் எதுவுமில்லைன்னு சொல்லிட்டான். அப்புறம் தான், மனசுக்கு நிம்மதியா இருந்தது தெரியுமா?'' - என அப்பா விவரம் கூற,

''என்ன ராஜா இது? இப்படியா... கை வலியோட வண்டியை ஓட்டிட்டு வரது?'' - என மறுகினார் அம்மா.

''பிராக்ஷர் இல்லை... அதனால பரவாயில்லை. பெரிய அடியா இருந்தா... நானும் அம்மாவும் எப்படி தாங்குவோம்?'' - இது அப்பா.

''பக்கத்திலிருக்க ஏதாவது ஒரு ஹாஸ்பிட்டலுக்குப் போயிருக்கலாம் இல்ல! ஏன் ராஜா... இவ்வளவு பிடிவாதம்?'' - அடுத்ததாய் அம்மா!

இருவரையும் மாறி மாறிப் பார்த்த நான், மெல்ல புன்னகைத்தேன்.

''எனக்கு என் வலியோட அளவு தெரிஞ்சதும்மா. பெரிய பிரச்னை எதுவுமில்லைன்னு தெரிஞ்சதும் தான்... வண்டியை வீட்டுக்கு விட்டேன். தெரியாத ஹாஸ்பிட லுக்குப் போய், கண்டகண்ட கேள்விக்கும் ஆளாவதை விட வீட்டுக்கு வந்திடலாம்ன்னு தோணுச்சு... அதான்'' என்ற எனது சமாதானம், இருவரது முகத்திலும் ஓர் இறுக்கத்தைக் கொண்டு வந்தது.

அவர்களது இறுக்கமே பரவாயில்லை என்ற நிலைக்கு என்னைக் கொண்டு செல்வது போல், முன் மாலை மூன்று மணிக்கு வீடு வந்து சேர்ந்தான் பிரதீபன்.

என் அறையினுள் நுழைந்ததும் அவன் கேட்ட முதல் கேள்வி ''நீ... எதுக்கு வண்டியை எடுத்தே? அப்படி யென்ன அவசரம்?'' என்பது தான்.

இவனிடம் கார்த்தியின் பெயரைக் கூறலாமா?

நான்கு நாட்களுக்கு சோறு தண்ணி இல்லாமல், எங்கள் வீட்டுப் பெண்ணின் முகத்தை வாட வைத்து விடுவானே என்று எனக்கு பயமாக இருந்தது! நான் சொல்றது சரிதானே?

ஹ்ம்ம்... நீங்க தான் அவனோட பேச்சைக் கேட்கவே இல்லையோ? அதனால், அபிப்பிராயம் சொல்வது என்பது கடினம் இல்லையா?

ஆனாலும், அவனது வார்த்தைகள் எப்போதுமே ''வெட்டு ஒன்று துண்டு ரெண்டு'' ரகம் தான்!

எதிரில் இருப்போரை மனதில் வைத்துப் பேசும் பழக்கம் சிறிதுமில்லை!

அப்படிப்பட்டவன், எப்படி மார்க்கெட்டிங் செய்ய முடியும் என்ற கேள்வி எனக்குமே உண்டு! ஆனாலும், ஜெயிக்கிறானே! முக ராசியோ என்னவோ! நான் எனது யோசனையில் மூழ்கியிருக்க, என் மௌனமே அவ னுக்கு விடை கொடுத்து விட்டது தான் பரிதாபத்திலும் பரிதாபம்.

''கார்த்திகாவா? அவளைக் கொண்டு போய்... காலேஜ்-ல ட்ராப் பண்ணியிருக்கே? அப்படித்தானே? உனக்கும் அறிவில்லை... உன்னைக் கார் ஓட்டச் சொன்ன



அவளுக்கும் அறிவில்லை. இன்னைக்கு வீட்டுக்கு வரட்டும்... பேசிக்கிறேன்'' என ஆதியைப் பிடித்தவனின் கைகளைப் பிடித்தேன் நான்.

''ப்ளீஸ் பிரதீப்! கார்த்தி மேல தப்பொண்ணும் இல்லை... நான்தான் பாதையில கவனமில்லாம... இன்னைக்கு வாங்க வேண்டிய ஷேர்ஸ் பத்தியே நினைச்சிட்டு வந் துட்டேன்'' என்ற எனது சமாதானத்தில் அவன் அமைதி அடைவதாய் இல்லை.

கார்த்திகாவின் மீது மட்டும் இல்லாமல், அவனின் கோபம் வேறொருவர் மேலும் இருந்தது!

''எந்த வண்டி இடிச்சது? நம்பர் நோட் பண்ணி னியா? துடியலூர் போலீஸ் ஸ்டேஷன்-ல போய் ஒரு கம்ப்ளைன்ட் பண்ணிட்டு வரேன்'' என அவன் கேட்ட போது,

எனக்கு அந்த ''ஜோதி அக்கா''வை விட, ''என்னை போலீஸ்-ல பிடிச்சிட்டுப் போய்டுவாங்களா?'' எனப் பயந்து மருகிய பெண்ணின் குரலே நினைவில் வந்தது.

''பெயர் - ஜோதி. டிரைவிங் ஸ்கூல் வைத்திருக்கும் பெண்'' என்ற ஒற்றை வரி விவரம் மட்டிலுமே போதும், பிரதீப்பால் அவளைக் கண்டு கொள்ள முடியும் என்பது என் கணிப்பு!

கோயம்புத்தூரிலிருக்கும் ஓட்டுனர் பயிற்சி பள்ளி களின் விவரம் சேகரித்து, அதில் ''ஜோதி'' என்ற பெயர் கொண்டவள் நடத்தும் பள்ளியை அடையாளம் காண்பது என்பது யாருக்குமே எளிதான காரியம் தான். அதிலும், எனக்குப் பட்டிருக்கும் காயங்களைக் கண்டு பதறிய அவனுக்கும், அப்பாவுக்கும் கண்டிப்பாக மிக எளிதான

காரியம் தான்! அப்படியிருக்கையில், என்னால் அந்த ''ஜோதி''யின் பெயரை வெளியிட முடியவில்லை.

''இல்லைடா... இருந்த பதட்டத்தில் சரியா கவனிக்கலை'' என்ற என்னை நித்சலமாய் முறைத்தவனை முந்திக்கொண்டு,

''அவனுக்குத் தெரியும், பிரதீப்! எதுக்காகவோ... அந்த விவரத்தை மறைக்கிறான்! ரொம்ப போர்ஸ் பண்ணாதே!'' எனப் பதில் சொன்னவர் அப்பா.

நான் சொல்லவில்லை - என் கண்ணைப் பார்த்தே என் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் வித்தகர் என்று!

''அதெல்லாம் ஒண்ணுமில்லை, நானே, எப்படா அந்த இடத்தை விட்டு வருவோம்ன்னு இருந்தேன். அஞ்சே நிமிஷத்தில... அங்க கூட்டம் வேற சேர்ந்திடுச்சு. அவங்களை விலக்கி, வண்டியை எடுக்கிறதே பெரிய பாடா இருந்தப்போ... எங்க இருந்து இடிச்சவங்களைப் பார்க்கிறது? ஒருவேளை... அவங்களுக்கும் அடிபட்டிருக்கலாம்'' என்ற என்னை இரு ஜோடி கண்களும் ஐந்து நிமிடத்திற்கும் மேலாய் ஆராய்ந்து விட்டே, வெளியேறின.

''ஷ் அப்பா... முடியல...'' என நான் நிம்மதிப் பெருமூச்சு விடும்போதே, தூக்க மருந்தும் அதன் மூச்சைவிட, ஆழ்ந்த நித்திரைக்குச் சென்றேன் நான்.

நித்திரையிலும், அந்த ''ஜோதி அக்கா''வின் கைகளில் வழிந்த ரத்தம் முன்னே வந்து மனம் வருந்தச் செய்தது!

கனவில எல்லாம்... எங்க கூடப் பேசுறியா? உன் தொல்லை தாங்கலையேன்னு தலையில அடிச்சுக்



கிறீங்க போல! என்ன செய்றது... இன்செப்சன் பார்த்த எப்பெக்ட்!!

# 5

அந்த நாளில் மூன்றாவது முறையாக நான் கண் மலர்ந்தபோது, ''சாரி அண்ணா'' என்ற சொல்லோடு என் அருகில் அமர்ந்திருந்தாள் தங்கை.

''ரொம்ப திட்டிட்டானா?'' எனத் தொடங்கி வைத்தேன் நான்.

''ஹ்ம்ம். செம ராடு... நான் பண்ணினதும் தப்பு தானே?''

''ரொம்ப வலிக்குதா அண்ணா? ப்ச்... வெளியில எங்கேயும் போகாம வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடைக்கிறியேன்னு உன்னைக் கூப்பிட்டேன். அது இவ்வளவு பெரிய தப்பா போச்சு'' என்று வருத்தம் கொண்டாள் இளையவள்.

''ஷ். பரவாயில்லை! அசைன்மென்ட் சப்மிட் பண்ணிட்டியா?''

''ஹ்ம்ம். ஆனா, எனக்கு காலேஜ்-ல வேலையே ஓடல... நீ கோபமா போனதே மனசில நின்னிட்டு இருந்தது.''

எனக்கென்று உலகிலிருக்கும் நான்கு ஜீவன்களில் ஒருத்தியான இவள் வாட - நானே காரணமாய் இருக்கலாமா? ம்ஹூம் கூடவே கூடாது!

அந்த எண்ணம் வந்ததும் ''ரொம்ப நேரமா நின னுட்டே இருந்ததோ? சும்மா... ஒரு ஓரமா உட்காரச் சொல்லியிருக்கலாமே, கார்த்தி! அதுக்கும் கால் வலி எடுத்திருக்காது... அதை தாங்கின உனக்கும் இவ்வளவு சோம்பல் வந்திருக்காது!'' என்றேன் நான், தீவிரமான முகத்துடன்.

''ச்சு... போ அண்ணா!'' - கார்த்தியின் முகத்தில் மெல்லியதாய் சிரிப்பு முளைத்து விட்டது.

அதன் பின்னர், அவளது கல்லூரியில் நடந்த விஷ யங்கள் அனைத்தும் படமாய் விவரிக்கப்பட இருவருமே இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம்.

அந்த நேரத்தில், ஏற்கனவே அடைத்தது போலிருந்த எனது காதில் அலைகள் எழுந்து அடங்குவது போன்ற பேரிரைச்சல் எழவும் ஓர் நிமிடம் மிரண்டு போனேன் நான்!

''என்னாச்சுண்ணா?''

''இல்லடா... காதில ஏதோ கேட்குது?! பாரேன்...''

''காதில ஏதாவது கேட்டாத்தான்... அது காது! இல் லைன்னா செவுடு!'' என அவள் டைமிங்-காய் பதில் சொல்ல, சட்டென அங்கே சிரிப்பின் முகவரி!

இருவரது சிரிப்பையும் கிழிப்பது போல் ''கார்த்திகா! எழுந்து வெளிய போ!'' என்ற அதட்டல் வந்தது, அப் போது உள்ளே நுழைந்து கொண்டிருந்த அப்பாவிட மிருந்து.

''இல்லைப்பா... அண்ணாவோட காதுல...''

''என்ன பேசுறோம்ன்னு யோசிச்சுப் பேசப்பழகு! முதல்ல வெளிய போ!''



''அப்பா.''

''வெளிய போ, கார்த்திகா!''

''என்னப்பா இது? எதுக்கு இவ்வளவு கோபம்? அவ... சும்மா விளையாட்டுக்கு...''

''அவளுக்கு எல்லாமே விளையாட்டுத்தான். மனுஷங் களோட உணர்வுகளையும் சேர்த்து!'' என்றபோது அப்பா வின் குரலில் அப்பட்டமான கோபம்.

அப்பாவின் கோபம் வெகு அபூர்வம் என்பதால், எனக்குமே அவரிடம் வாதிடப் பயமாக இருந்தது!

கூடவே, நான் எதுவும் கூறப்போக, அது மீண்டும் கார்த்தியின் மீது கோபமாக வெடித்து விடுமோ என்ற அபாயம் வேறு!

ஆதலால் மௌனித்து படுத்திருந்தேன்!

நான் கொண்ட மௌனத்தை விடே கொண்டிருக்க, அந்த வாரம் முழுவதும் வீடே நிலைகொள்ளா அமைதி யில் தத்தளித்துக் கொண்டிருந்தது!

நான் சொல்லவில்லை - கார்த்தியால் சிறு முகச் சுளிப்பைக் கூடத் தாங்க முடியாதென்று! அதிலும், இந்த முறை அப்பாவின் கோபத்திற்கு வேறு ஆளாகியிருக் கிறாள்!?

முகத்தை எட்டு ஊருக்கு நீட்டிக் கொண்டு, கேட்கும் கேள்வி அனைத்திற்கும் ''ம்ம்'', ''ம்ஹூம்'' என மௌன பாஷை பேசிக்கொண்டு, அப்பா - அம்மா சொல்வதை யெல்லாம் அச்சரம் பிசகாமல் செய்து கொண்டு, அடி பட்ட மானாய் வீட்டை வலம் வருவாள்!

இப்போது, கூடுதலாக எனது அடிபட்ட கையைப் பார்த்துப் பார்த்து ஓர் வருத்தப் பெருமூச்சு வேறு!

பல சமயங்களில் பாவமாய் இருந்தாலும், சில சம யங்களில் எனக்கே அவளைப் பார்த்து சிரிப்பாய் வந்தது!

நானே இப்படி என்றால் - பிரதீப்பைப் பற்றி கேட்கவே வேண்டாம். அவள் பேசும் போதெல்லாம் அமைதியாய் ''உம்'' போடும் மகராசன், இப்போது அவள் அமைதியாய் இருக்கையில் அவளைக் கேலி செய்தே ஓய்ந்தான்.

''ஏன் பரணி? உன் தங்கச்சி... பசி பொறுக்காம போஸ்டர் ஒட்டுற கோந்து எதையும் சாப்பிட்டாளா? வாயே திறக்க மாட்டேங்கிறா?''

''அவ வாய் பத்தாதுன்னு உன் வாயையும் என் வாயையும் கடன் வாங்கிப் பேசிட்டு இருந்தாளே? கடன் கட்ட முடியாம போச்சா என்ன?''

''ஒரு வாரமா... 'உம்' கொட்டுற வேலை கூட இல் லாம என் வாய் வலிக்குதுடா? அவளுக்கு வலிக் கலையா?''

''ஜில்லு தண்ணி ஊத்தினதும் அடங்குற பால் மாதிரி... இவ என்னடா ஒரு முறைப்பு பட்டதும் புஸ் ஸுன்னு போய்ட்டா? இவ்வளவு தான் இவளோட வீர தீரமா?'' - அநியாயத்திற்கு அவளைச் சீண்டிக் கொண்டே இருந்தான்.

''மகனே! அவ நார்மல் மோட்டுக்கு வந்ததும் உனக் கிருக்குடா ஸ்பெஷல் ஆப்பு! ரொம்பத் துள்ளிட்டுத் திரியாதே!'' என மனதிற்குள் மட்டுமல்லாது வெளியே யும் சொல்லி அவனை அடக்கப் பார்த்தும் முடிய வில்லை.

தோளைக் குலுக்கிவிட்டு நான் காத்திருந்ததற்கு அடுத்த நாளே முடிவும் வந்தது.



இரவு உணவிற்கு முன்னே, நானும் பிரதீப்பும் எங்கள் நிறுவனப் பங்குகளுடன் அமர்ந்திருக்க, அப்பாவும் அம்மாவும் தொலைக்காட்சியில் மூழ்கியிருந்தனர்.

அப்போது, நடு கூடத்தில் நின்று கொண்டு, கார்த் திகா அம்மையார் லேசாய் கனைத்தார்.

அனைவரும் தலையை நிமிர்த்திப் பார்த்ததும் ''நான் கார் ஓட்டக் கத்துக்கப் போறேன்!'' என்ற அறிவிப்பு பறந்து வந்தது கார்த்திகாவிடமிருந்து.

தொடர்ந்து, ''கார் ஓட்டக் கத்துக்கிட்டு... அதுவும்... இந்த கத்துக்குட்டி பிரதீப்கிட்ட கத்துக்காம... நல்லா கார் ஓட்டத் தெரிஞ்ச ஒருத்தர் கிட்டக் கத்துக்கிட்டு...'' - இங்க ஓர் வினாடி இடைவெளி (ஓர் உச்சுக் கொட்ட லுடன் குனிந்து கொண்ட பிரதீப்பை நிமிர வைப்ப தற்காக மேலும்)

''இந்த பரணியை'' என்னை கார்-ல அழைச்சிட்டுப் போன்னு கெஞ்ச வச்சு...''

''கார்-ல போகும்போது... அவனை மாதிரி உம்மணா மூஞ்சியா வராம, நல்லா சிரிச்சுப் பேசிட்டே வந்து...''

''அவனை இறக்கி விட்டதும்... அவன் கேட்டாலும் கேட்காட்டாலும் ஒரு டீ-யை வாங்கிக் கொடுத்து...''

''அவன் திருப்திப் படறானோ இல்லையோ... நான் திருப்திப் பட்டு...''

''அதே நிறைஞ்ச மனசோட... வண்டியைப் பார்த்து... பதமா... நிதானமா...''

''வழியில இருக்க கள்ளுக் கடையில நிறுத்தி புதுசா இறக்கின கள்ளை உள்ள தள்ளாம...'' - இங்கே அளவிற்கு அதிகமான இடைவெளி விட்டாள் வம்பின் அரசி.

''நேத்து நைட் பார்த்தப் படத்தில் வந்த ஹீரோயினை.. சே சே ஹீரோவை நினைச்சுக்கிட்டே வண்டி ஓட்டாம...'' - மீண்டும் ஓர் பலத்த இடைவெளி.

''வண்டி ஓட்டினா... பொறுமையின் சிகரம் / கோபத்திற்கு ஸ்பெல்லிங் கூடத் தெரியாத அண்ணா மலையின் மகள் கார்த்திகாவைப் போல் வண்டி ஓட்ட வேண்டும் என்ற பெயரை என் தந்தைக்குப் பெற்று தருவேனாக்கும்!'' என அவள் முடித்தபோது, எங்கள் வீட்டின் பழைய கலகலப்பு திரும்பி விட்டிருந்தது.

மனம் நிறைந்து சிரித்த அப்பா - ''இந்த வாய் மட்டுமில்லைன்னா பிரதீப் கல்யாணத்திற்கு ''சரி''ன்னு சொல்லியே இருக்க மாட்டான்! கழுதை!'' என்றார் சிரிப்புடன்.

அவரின் கணிப்பு படி, தனது எதிர் துருவமாய் கார்த் திகா இருந்தது தான் பிரதீப்பின் காதலுக்கு மூலதனம்!

ஆனால், கார்த்திகாவோ ''இருந்தாலும் நீங்க இவ் வளவு அப்பாவியா இருக்கக் கூடாது மிஸ்டர் அப்பா! நான் மட்டும் எட்டூருக்குப் பேசாம, அவரை மாதிரி அவருக்குள்ளேயே பேசிட்டு இருந்தேன்னு வச்சுக் கோங்க, என்னைக்கோ என்னைக் கல்யாணமே பண் ணிட்டு இருந்திருப்பார். இதுநாள் வரை, இந்தக் கல் யாணம் இழுத்திருக்கவே இழுத்திருக்காது!'' என அபி நயம் பிடிக்க, பிரதீப்பின் முகத்திலும் சிரிப்பு - அடக்கப் பட்ட சிரிப்பு.

''இது ஒரு வெட்டிப் பீஸுடா! சும்மா... உன் தங்கச்சி வாயாலேயே வடை சுடுவா. இதாவது கார் கத்துக்கிற தாவது? நம்ம ரெண்டு பேர் உயிரையும் வாங்காம... விட மாட்டா!'' எனப் பிரதீப் அனாசயமாய் மறுத்ததற்கு



''அம்மா, நாளைக்கு காலையில ஏழு மணிக்கு எனக்கு டிரைவிங் கிளாஸ் இருக்கு... என்னை சீக்கிரமாய் ஒரு ஆறே முக்காலுக்கு எழுப்பி விடுங்க'' என அடுத்த நாள் பதிலடியுடன் காத்திருந்தாள் என் தங்கை.

அப்போதும், ''சும்மாடா, நாளைக்குக் காலையில, யாராவது பிரண்ட் வீட்டில போய், இன்னொரு ரவுண்டு தூங்கிட்டு வருவா? இவளைப் பத்தி எனக்குத் தெரி யாது!'' என்று கர்வமாய் வந்தன பிரதீப்பின் வார்த்தைகள்.

''நான் எல்லாம் எங்க தலைவர் ஜாதி - சொல்றதை தான் செய்வோம்! செய்றதை தான் சொல்வோம்!'' - இது கார்த்திகாவின் பதிலடி.

''பார்த்து... அவர் வழியில ஆஸ்பத்திரி-ல படுக்கிற மாதிரி ஆகிடப் போகுது'' - சகட்டு மேனிக்கு வம்பு செய் தான் பிரதீப்பும்.

அவனது வம்பைப் பார்க்கையில், அவனுக்கு ஏதோ தெரியும் என என் மனம் கூவியது.

என் உள்ளுணர்வு இன்னொன்றையும் கூடவே பறைசாற்றியது தான் வினோதம். நூற்றில் ஒரு பங்காய் அந்த ''ஜோதி அக்கா''வின் ஓட்டுனர் பயிற்சிப் பள்ளியி லேயே கார்த்திகா சேர்ந்திருந்தால் என்ற எண்ணம் தான் அந்த வினோதம்!!

அவளது கையில் பட்டிருந்த காயம் குணமாகியிருக்க வேண்டும் என்று நெஞ்சம் நடத்திய வேண்டுதலை - காயம் பட்ட ஓர் உயிரின் மீது தோன்றிய மனிதாபி மானம் என்றதோடு ஒதுக்கினேன் நான்!

அவளைப் பற்றி அளவிற்கு அதிகமாய் யோசிக்கி றேனோ?

ஏன்? ஏன்? ஏன்?

என்னால் சொல்ல முடியவில்லை. ஒருவேளை - அவளது மோவாயில் தொடங்கி காது வரை பயணித்த தழும்பா?

ஹ்ம்ம்... தழும்பு! இதனால்... வாழ்வில் எவ்வளவு பெரிய அடி வாங்கியிருந்தும், சின்னதாய் ஓர் சூட்டுத் தழும்பைப் பார்க்கும் போதெல்லாம் என் மனம் அலைபாய்கிறதே?

என்னால் இதிலிருந்து மீளவே முடியாது போய் விடுமோ?

இல்லை, முடியும்! ஒரு தரம் மீளவில்லை!

இந்த எண்ணங்கள் பாதியும், கலியுக ஈசனின் வேலை மீதியும் (அதாங்க anti-virus software எழுதுறது) என் இரவு கழிய, காலையில் எனது ஓட்டப் பயிற்சி நடந்து கொண்டிருக்கையில்,

''கார்த்தி! எழுந்திருமா... டிரைவிங் போகணும்ன்னு சொன்னியே?'' - அம்மாவின் குரல் கார்த்தியின் அறை யிலிருந்து கேட்டது.

மணியைப் பார்த்தால் - சரியாக ஆறே முக்கால்!

மேலும் பத்து நிமிடங்கள் இதே குரல் மாறி மாறி ஒரே சாரத்தைப் பறை சாற்ற, முடிவாய் ஆறு ஐம்பத்தியைந் துக்கு விழித்தெழுந்தாள் எங்கள் வீட்டுப் பெண்ணரசி.

''என்னம்மா இது? ஆறே முக்கால்ன்னா ஆறே முக் கால்க்கே கரெக்ட்டா எழுப்புறதா? கொஞ்சம் முன்னாடி எழுப்பக் கூடாது... நான் பல் விளக்கி, முகம் கழுவி, தலை ஒதுக்கி, டிரஸ் மாத்தி, காபி குடிச்சு... எல்லாம்



பண்ண வேண்டாம்'' என நீட்டி முழக்கியதில் மேலும் இரண்டு நிமிடங்கள் கழிய, அடுத்து வந்த நிமிடங்கள் யாவும் பெரும் பரபரப்புடன் கழிந்தன.

ஒரு வழியாக, ''ஹய்யோ, டிரைவிங் ஸ்கூல்-ல இருந்து வந்துட்டாங்க. நான் போறேன்,'' என்ற அவளது குரலைத் தொடர்ந்து, என் கால்களும் வாசலுக்கு ஓடத் துடித்தன.

திடுக்கிடலுடன் நின்ற நான், முகத்திலும் மனதிலும் வேண்டிய நினைவுகளைக் கொண்டு வந்து, ஓடத் துவங் கினேன் - வாசலை நோக்கி அல்ல, எனக்குப் பிடித்த மான வெள்ளைச் செம்பருத்தி மலரை நோக்கி!

## 6

அதன் பின்னர், மனதை ஒருநிலைப்படுத்தி எனது ஓட்டப் பயிற்சியை முடித்த போது, அப்பாவின் பூஜை ஆரம்பமாகியிருந்தது.

''மணி எட்டாகி இருக்குமே!'' என நான் எண்ணிய தற்கு ஏற்ப, பிரதீப்பும் கீழே வந்துவிட்டிருந்தான்.

அப்பா பூஜையிலும், அம்மா சமையற்கட்டிலும், பிரதீப் அலுவலக அறையிலும், நான் எனது கணினி யோடும் மூழ்கியிருக்க, வேர்க்க விறுவிறுக்க வீடு திரும்பிய கார்த்திகா, அன்றைய தினம் அதிகம் ஆட்டம் காட்டாமல் கல்லூரி கிளம்பிச் சென்றாள்.

''லேட் ஆகிடுச்சே, கார்த்தி! பிரதீப்பை வேணும்னா கார்-ல கொண்டு விடச் சொல்றேன்!'' என அப்பா

கேட்டதற்கு. ஒரு பெரிய கும்பிடும், ''ஏற்கனவே உங்களோட செகண்ட் ஹான்ட் மாருதி ஒரு லொட லொட தகர டப்பா. இதில, பரணி சார் வேற, அதை பேரீச்சம் பழத்திற்குக் கூட வாங்காத மாதிரி ஆக்கி வச்சிருக்கார். வேணாம்... பா! வேணாம்! நான் வேற... பிரதீப்புக்கு ஒரே வருங்காலப் பெண்டாட்டி! ஸேஃப்பா பஸ்-லேயே போய்க்கிறேன்'' என்ற நீளமான பேச்சுமாய் அவள் வெளியேறி விட்டாள்.

''காரை வேணும்னா மாத்திடுவோமா, பிரதீப்?'' - அப்பாவின் கேள்வி மருமகனை நோக்கிப் பாய்ந்தது.

''அவ சொல்றான்னு... அடப் போங்கப்பா! மெக்கானிக் ஷெட்-ல விட்டிருக்கேன்... சும்மா பென்ஸ் மாதிரி கொண்டு வந்துடுவான், பாருங்க!'' என மருமகனின் பதிலும் பாய்ந்ததில், அறைக்குள்ளிருந்த என்னுள் சிரிப்பு உதயமானது.

பென்ஸ்!!! இவனுக்கே... இது கொஞ்சம் ஓவராகத் தெரியவில்லை!

இதையே, பென்ஸ் ரேஞ்சுக்கு மாற்றுவதென்றால்... என்னை வந்து மோதிய அந்தப் புத்தம் புதிய மாருதியை BMW ரேஞ்சுக்கா மாத்த முடியும்?

பாவமில்லையா... அந்தச் சின்னப் பெண்! அவள் அப்பாவிடம் நன்றாகத் திட்டு வாங்கியிருப்பாள்!

அவளை மட்டுமல்லாது... அந்த ''ஜோதி'' அக்காவையும் சேர்த்து...

ஹய்யோ! அங்க சுத்தி... இங்க சுத்தி... அவளிடம் வந்துட்டேன் பார்த்தீங்களா...



இது சரிப்பட்டு வராது! வணிகத்தினுள் தலையை நுழைத்தால் தான் என் எண்ணங்கள் அடங்கும்...

ஒரு வாரத்திற்கும் மேலாய் வேலையும் கெட்டு... எண்ணமும் கெட்டு... மிகவும் கெட்டுப் போயிட்டேன் இல்லையா?

ஈமெயில் ஓபன் பண்ணி... வேலையைப் பார்க்கலாம்.

அடடா... ஏகப்பட்ட வேலை முடிக்காமல் இருக்கே! இன்னைக்கு மதியம் வரையிலும் போகும் போல...

என் கவனம் முழுதும் அதில் இருந்தால் ஒழிய, இன்றைக்குள் முடிக்க முடியாத காரியமா இருக்கும் போல! சோ, நான் கொஞ்சம் மனசை ஒருநிலைப் படுத்துறேன். பிறகு பார்ப்போம்.

* * *

பிறகு பார்ப்போம் என்று சொல்லி கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் ஓடி விட்டதோ!? ரொம்ப சாரிங்க!

வணிகம் செய்வது என்பது கத்தி மேல் நடக்கும் செயல் போல, அதுவும் பிறருக்காக செய்யும்போது மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். அதனால், தான் என்னால் இப்புறம் அப்புறம் நகர முடியவில்லை.

இத்தொழிலை எனது பிரதானப் பணம் ஈட்டும் தொழிலாய் நான் எடுத்ததற்கு முக்கியக் காரணமே இதுதான் - சோர்ந்திருக்கும் மனம் சாத்தானின் உலைக்களம் என்ற அடைமொழிக்கு ஏற்ப, வேலையின்றி விட்டத்தை வெறித்துக் கொண்டு, தற்கொலை முயற்சி செய்யும் அளவிற்குச் சென்ற என்னை மீட்டெடுத்த பெருமை என் வீட்டினருடன் சேர்ந்து வணிகத்திற்கும் சாரும்.

வணிகம் - என் மூளையினுள்ளும் மனதினுள்ளும் ஏற்படுத்திய மாற்றங்களின் விளைவால் தான் 'ஆன்ட்டி - வைரஸ்' சாப்ட்வேர் எழுதும் அளவிற்கு என் மனது பதனிடப்பட்டது.

''தற்கொலை முயற்சியா? கண்டிப்பாக இவன் ஒரு அரைப் பைத்தியம் தான்...'' - இப்படித் தானே உங்களின் எண்ணம் போகிறது?

ஆம், கோழைபோல் தற்கொலைக்கு முயன்றவன் தான் நான்! சாவின் விளிம்பு வரை சென்று வந்தவன் என்பதால் - எனக்கு உயிரின் மதிப்பு தெரியும்! அதே சமயம் - காதலின் அவமதிப்பும் தெரியும்!

''குட்டுத் தழும்பிற்கும்'' - ''தற்கொலைக்கும்'' - ''காதலின் அவமதிப்பிற்கும்'' - உங்களின் மனம் ஓர் பாலம் அமைத்து, அதில் ரோடு போட்டிருக்குமே?

கில்லாடிங்க நீங்க!

ஆமாம்! நீங்க எண்ணுவது போல், இவை மூன்றிருக்கும் மிக மிக நெருக்கமான பந்தமுண்டு!

ஆறு வருடங்களுக்கு முன்னர், ''அம்மாமாமாமாமா'' என்ற உயிர் போகும் வாதனையுடன் எங்கள் வீட்டினுள் விரைந்து வந்தாள் ஒரு பெண்.

அந்த நாளை - சில காலங்கள் ''பொன் நாளாக'' பாவித்து வந்தேன் நான்!

வந்தவள் யாரென்று சொல்லவில்லையே? எங்கள் எதிர் வீட்டுக்கு சமீபமாய் குடிவந்திருந்த பெண் ''மதுமிதா!''

அவளது அப்பா, அம்மா, தம்பி, தங்கை என்று பெரிய குடும்பமாய் வந்திருந்தவர்களை நாங்கள் ''அந்த நாள்'' வரை அதிகம் பார்த்தது கூடக் கிடையாது.



அவளது அம்மா மட்டும் என் அம்மாவுடன் சில சமயங்களில் பேசுவதைக் கண்டிருக்கிறேன்.

அப்படியிருக்கையில், ''அம்மாமாமாமா'' என்ற வீறிடலும், ''சித்திதிதி... வேணாம் சித்தி! வலிக்குது!'' என்ற வீறிடலும் மாறி மாறி கேட்க, அவர்கள் வீட்டிலிருந்து வெளியே ஓடி வந்தவள், நேராக எங்கள் வீட்டிற்குள் நுழைந்து விட்டாள்.

அந்த நேரம் - நானும் அம்மாவும் மட்டுமே வீட்டிலிருக்க, அவளைச் சமாதானப்படுத்துவது அம்மாவின் முக்கிய வேலையாகிற்று.

ஒரு வழியாக, அவள் அழுகையை நிறுத்தியதும் விவரம் கேட்ட அம்மாவிடம் அவள் தேம்பிக் கொண்டே சொன்ன விவரம் என் நெஞ்சில் இன்னமும் பசுமரத்து ஆணியாய் பதிந்து போயிருக்கிறது.

''எங்க சித்திக்கு என்னைப் பிடிக்கவே பிடிக்காது ஆன்ட்டி! அதான்... நான் வீட்டு வேலை செய்யலை என்றதும் சூடு வச்சுட்டாங்க'' - இதில் அம்மா உருகியது ஒரு புறம் என்றால் என் மனம் பாகாய் உருகி, குலாப் ஜாமூனாய் இரக்கத்தில் ஊறி விட்டிருந்தது.

அது தான் ஆரம்பம் - அதன் பின்னர், மதுவின்... மன்னிக்கவும் மதுமிதாவின் வருகை எங்கள் வீட்டிற்கு அடிக்கடி நிகழ்ந்தது.

''தாயற்ற பெண்'' என அம்மாவும் பாசத்தைப் பொழிய,

எனக்கோ அவளது பால் மேனியிலும், அதைவிடவும் மேன்மையான மனதிலும் இத்தனை காயங்களா என நெஞ்சம் உருகியது.

கார்த்திக்குப் பிடிக்கும் என அம்மா செய்யும் உணவுகளைத் தவிர்த்து, அவளுக்குப் பிடித்த உணவு களை வீட்டில் செய்ய வைக்கும் அளவிற்கு எனக்குப் பித்தம் முத்தி விட்டிருந்தது.

பள்ளியிலிருந்து வரும் கார்த்திகாவின் முகத்தில், மதுமிதாவைக் கண்டதும் வெடிக்கும் எள்ளையும் கொள் ளையும் கண்டு கார்த்தியின் மீது கூட கோபம் கொண் டிருக்கிறேன்.

இதற்கெல்லாம் காரணம் - அவளது வெளித்தோற்றத் திலோ, அவள் படும் வேதனையிலோ வந்த அனுதாபம் மட்டுமல்ல.

அவள் என்மேல் காட்டிய பிரியம்!

ஆம், என் வீட்டினர் தவிர்த்து வெளியாட்கள் பலரால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த என்னை ''பரணி சார்'' என்று மரியாதையாய் அழைத்து, ''உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்று சொல்லும் அளவிற்கு, அவள் என்னிடம் காட்டிய நெருக்கம் தான்!

''எதிர் வீட்டில இருக்க... வள்ளியைப் பார்த்தா இந்தப் பெண்ணை கொடுமை செய்றவ மாதிரி தெரியல. அவ பசங்களையே, தப்பு பண்ணினா அடிக்கிற ரகமா தான் இருக்கா... இன்னைக்கு அவ பையனைக் கூட கம்பால அடிச்சிட்டு இருந்ததை நானே பார்த்தேன். இந்த மதுப் பொண்ணு தான்... அவளை வேற மாதிரி புரிஞ்சிட்டு இருக்கு'' என்று அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்த நித்யவேணி அத்தையின் மீது கூட எரிச்சல் வந்திருக் கிறது.

''மதுவின் உடம்பில் வைத்த சூடும்... அவள் தம்பி யின் முதுகில் விழுந்த அடியும் ஒண்ணா?''



''இவங்களுக்கெல்லாம் அறிவே இல்லை! இதுவே, அவங்க பையன் கையில அந்தம்மா சூடு வைக்குமா என்ன?'' என உள்ளம் கேட்ட கேள்விகளை... நல்ல வேளையாக நான் அத்தையிடம் கேட்கவில்லை.

ஓர் நல்ல மனுஷியின் அனுபவப்பூர்வமான கணிப்பை அலட்சியப்படுத்தி விட்டேனே என்ற குற்ற உணர்வு வேற... இவ்வளவு வருஷமும் என்னை வருத்தியிருக் கும்! அதை வேற, கொஞ்சம் கொஞ்சமா வெளியிட்டு... உங்களை வேற குழப்பியிருப்பேன்!

சரி விடுங்க... விஷயத்திற்கு வரலாம்!

மதுமிதாவின் வருகையில் நான் திளைக்கத் தொடங்கி மூன்று மாதங்கள் கடந்த நிலையில், அவளிடம் காதல் கடிதம் ஒன்றை நீட்டும் அளவிற்கு என் மனது அவள் பால் சாய்ந்து விட்டிருந்தது!

''அடப்பாவி'' என்று வியக்கிறீர்களா?

உங்களைப் போலவே தான், மதுமிதாவும் வியந்தாள்! அந்த வியப்பின் பெரும் பகுதியை கோபமே ஆட் கொண்டிருந்தது!

''என்னிடம் நன்றாகப் பேசிய முதல் பெண்ணான அவள்... என் வாழ்வில் நுழையும் முதல் பெண்ணாக வும் கடைசி பெண்ணாகவும் இருக்க வேண்டும்!'' என்ற எண்ணத்தில் இருந்த எனக்கு அவளது கோபம் பெரிதாய் படவில்லை.

அவளது வீட்டில் இடி சோறு உண்டு கொண்டு, அவளது சித்தியின் கூர் நாக்கில் ஆயிரம் முறைக்கும் மேலாக விழுந்து கொண்டு, எப்போது சூடு விழுமோ என்று பயந்து கொண்டு, வீட்டை விட்டு ஓர் அடி

எடுத்து வைப்பதற்கும் பிறாது அனுமதி வாங்கிக் கொண்டு... ஓர் அடிமை வாழ்க்கை வாழ்வதற்கு என்னுடன், என் வீட்டில், சுதந்திரப் பறவையாய் வாழ்வது என்பது அவளுக்குக் கொடுக்கப்படும் வரம் என்றே நினைத்த எனக்கு, எனது நிலைமை உறைக்கவே இல்லை.

அதை ஓங்கி உணர்த்துவது போல், ''லவ்-வா? நானா? போயும் போயும்... உன்னையா? பேரழகி இல்லைனாலும்... நான் ஓரளவு அழகான பொண்ணு தான். அப்படியிருக்கும் போது... ச்சீ...! ச்சை... உனக்கே இது கொஞ்சம் ஓவரா இல்லை.''

''லேசா சிரிச்சுப் பேசினா... உடனே பல்லைக் காட்டிட்டுப் பின்னாடியே வந்திடுவீங்களே?''

''ஹய்யோ... இப்படி இருக்கானேன்னு பரிதாபப்பட்டு உன்கிட்ட பேசினா... உன் புத்தியைக் காட்டிட்டியே!'' - என ஆணித்தரமாய் ஓங்கி ஒலித்த அவளது குரல், இன்னும் என் காதில் ஒலிக்கிறது.

யாருக்கும் தெரியாமல் நான் கொடுத்த காதல் கடிதத்தை என்னிடமே கிழித்துக் கொடுத்ததோடு அவள் விட்டிருக்கலாம்!

ஆனால், அவளோ... அவள் வீட்டில் சொல்லி, அதைப் பெரிய பிரச்னை ஆக்கிவிட, அவளது தந்தையார் அப்பாவிடம் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூர்வாள்கள்.

அவளது பேச்சின் சாராம்சமாய் ''தகுதிக்கு மீறி ஆசைப்படக்கூடாது'' என்ற போதனையில், அப்பாவின் தலை குனிந்து விட, என் மனமோ அவமானம் எனும் கிணற்றில் அதல பாதாளத்திற்குச் சென்றது.



இதையெல்லாம் தூக்கிச் சாப்பிடுவது போல், நான் கொடுத்த காதல் கடிதம் கை - கால் முளைத்து, பெரும் பூதமாய் தெருவெங்கும் வீதி உலா வர, வீட்டினர் அனைவரும் பெரும் அவமானத்திற்குள்ளாகினர்.

அது எங்கள் வீட்டுக் கடைக்குட்டி கார்த்திகாவையும் விட்டு வைக்காமல் பதம் பார்த்ததுதான் அதன் எல்லை!

''ஏன் அண்ணா!? உனக்கு அறிவில்லையா? அவ என்ன பெரிய ரதியா? அவளைப் போய் எதுக்கு... லவ் பண்ண?''

''அவளும்... அவ மூஞ்சியும்!''

''உங்கண்ணா என்ன பெரிய மன்மதனா? அவனுக்கு அவனோட குறையே தெரியாதா? தெரிஞ்சிருந்தும்... மதுமிதாகிட்ட லவ் லெட்டர் கொடுத்தானா? உங்கண்ணனுக்கு புத்தி சொல்லுன்னு... தெருவோட பேசுறாங்க.''

''உன்னால... எங்க எல்லாருக்கும் அவமானம்!''

''ச்சை... முன்னாடி ஸ்கூல்-ல தான் கிண்டல் பண்ணுவாங்க. இப்போ இங்கயும்...''

''எல்லாரும்... என்னை எப்படிக் கேலி பண்றாங்க தெரியுமா?''

''ச்சே போண்ணா! உன்னை எனக்குப் பிடிக்கவே இல்லை!''

''அப்பாவுக்கும் பிடிக்காது... அம்மாவுக்கும் பிடிக்காது...''

''நீ வேணாம்... எங்க வீட்டில இருந்து போ!''

இவை தான் தற்கொலைக்கு முன்னர் நான் கேட்ட கடைசி வார்த்தைகள். ஒன்பதாம் வகுப்பு படித்துக்

கொண்டிருந்த கார்த்திகாவின் வார்த்தைகள் நெஞ்சை அறுக்க, செடிகளுக்கு வாங்கி வைத்திருந்த பூச்சிக் கொல்லி மருந்தைப் பருகி விட்டேன் நான்.

அதன் பின்னர், என் உயிரை மீட்டெடுத்தது கார்த் திகா மட்டிலுமே! தீயாய் என்னைச் சாடியவள், பூவாய் என்னை மீண்டும் மலர வைத்தாள்!

கூடவே, பிரதீப்பும்!

உயிரை அவள் மீட்டெடுக்க, என் உணர்வை மீண் டும் உயிர்த்தெழச் செய்து, நல்லெண்ணங்களை என் மனதினில் பதித்து, என் வாழ்வின் போக்கை தீர் மானித்து, அதில் என்னை நல்வழிப்படுத்திய பெருமை அப்பாவையே சாரும்!

''உன்னால் முடியும் பரணி.''

''உனக்குச் சளைத்தவன் இந்த உலகில் யாருமில்லை.''

''நீ செய்யவில்லை என்றால்... யாரால் இக்காரியத்தைச் செய்ய முடியும்!''

''முயற்சி செய்தால் முடியாதது எதுவுமில்லை.''

''தோல்வியே வெற்றியின் வாசல்படி'' - என எனது முயற்சிகள் விழும் போதெல்லாம், நல்லுரமாய் பதிந்த அவரது வார்த்தைகள்!

வெறும் வார்த்தைகளோடு நிறுத்திக் கொள்ளாது, என் விருப்பம் அறிந்து, என் தொழிலுக்குத் தேவையான அனைத்தையும் தன் கஷ்டத்தைப் பாராமல் செய்து கொடுத்தார்.

இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்து விட்டு, மீண்டும் காதல் என்பதில் என்னால் விழ முடியுமா?



முடியாது தானே? நீங்களே சொல்லுங்கள்!

சரி... சரி... பதிலை மெல்ல யோசித்துக் கொண்டிருங்கள். நான் எங்கள் சாப்ட்வேர் நிறுவனத்திற்குள் பிரவேசித்துவிட்டு வருகிறேன்!

# 7

மாடியில் இயங்கிக் கொண்டிருந்த மென்பொருள் நிறுவனத்திற்குள் நான் காலடி எடுத்து வைத்தபோதே, அங்கே ஓர் அமைதியில்லாத் தன்மை நிலவியதை என்னால் உணர முடிந்தது.

அலுவலகத்திலிருந்த இருபது பேரும் அவரவர் இடத்தில் இல்லாமல், ஆங்காங்கே நின்று வருத்தம் படிந்த முகத்துடன் பேசிக் கொண்டிருக்க, பிரதீப்பின் முகத்தில் தீவிரக் கோடுகள்.

நான் உள்ளே வருவதைப் பார்த்ததும், பலரின் முகத்தில் ஓர் நிம்மதி பரவியதைக் கண்டு, புருவம் சுருக்கிய வாறே பிரதீப்பிடம் விவரம் கேட்டேன்.

எங்களது ஆன்ட்டி வைரஸ் சாப்ட்வேரில், நாங்கள் புதிதாக அறிமுகப்படுத்திய ஓர் முக்கிய அம்சத்தில் பெரிதாய் ஓர் பழுது, மென்பொருளின் மேன்மை குறைகிறது என்ற ரீதியில் ஓர் மின்னஞ்சல் வந்ததினால் ஏற்பட்ட குழப்பம் தான் இது என்பது தெரிய, எனக்கு மிகுந்த வருத்தமாய் இருந்தது.

இந்திய அளவில், எங்களது மென்பொருளில்தான் இந்த பயன்பாடு இருக்கிறது என்று மார் தட்டி

அல்லவா... இப்புதிய அம்சத்தை விற்றோம்? அதில்
பழுதா?

மேலும் மேலும், நடந்ததையே யோசித்துக் கொண்டு
நிற்க முடியாமல், பழுதைக் கண்டு மின்னஞ்சல்
அனுப்பியிருந்த நிறுவனத்திலிருந்து அழைப்புகள் வந்
வண்ணம் இருந்தது.

காலையிலிருந்து வணிகம் கழுத்தை ஒடிக்க, எனது
மீத நேரத்தை இந்தப் பிரச்னை சூழ்ந்து கொண்டது.

ஓர் மென்பொறியாளரின் கணினியில் அமர்ந்து
அவர்கள் கூறிய தேர்வாய்வு (பழுது தோன்றிய நிலை
நிலையை நானும் இங்கே செயல்படுத்திப் பார்த்தேன்

என் ஆச்சரியத்திற்கு - அவர்களது குற்றச்சாட்
மெய்ப்பிக்கும் வண்ணம், எங்களது மென்பொருளி
பிழை இருக்கவே செய்தது.

மிகவும், சாதாரணமான ஓர் தேர்வாய்வு நிலை!

''நீங்கள் செய்திருக்கும் நிலை - மிகவும் உச்சநிலை
இந்த நிலையை எங்கள் மென்பொருள் சந்திக்கும் என்
நாங்கள் சிந்திக்கவில்லை'' என்று சொல்லக்கூட மு
யாமல், மிக எளிதாய் செல்லக்கூடிய தேர்வாய்வு நிலை
யில் தேர்வாகாமல் போயிருந்தது, எங்கள் மென்பொரு

எங்கள் நிறுவனத்திலிருக்கும் ''தேர்வாய்வர்கள்
(டெஸ்ட்டர்கள் - மென்பொருளைப் பரிசோதிக்கு
குழுவினர்) எட்டு பேரையும் கூப்பிட்டு வைத்
கேள்வி கேட்கலாம் தான்!

ஆனால், கேட்டு என்ன புண்ணியம்?



நடந்த தவறை சரி செய்துவிட்டு, அவர்களிடம் விசாரணை நடத்தலாம் என்ற முடிவுடன் பிரதீப்பிடம் சென்றேன் நான்.

பத்து நிமிடம் நடந்தேறிய உரையாடலுக்குப் பின்னர், மென்பொருளில் நேர்ந்திருக்கும் பழுதை இன்னும் ஒரு வாரக் கெடுவிற்குள் சரி செய்து தருவதாக, அந்த நிறுவனத்திற்கு ஓர் மின்னஞ்சல் அனுப்பினோம்.

நானும், எங்கள் நிறுவனத்தின் மூத்த மென்பொறியாளர்கள் சிலரும் மாலை ஐந்து மணிக்குத் தொடங்கிய வேலையில் சிறு தொய்வு கூட இல்லாமல் சென்றதில், எங்களால் நள்ளிரவு ஒரு மணிக்குத் தான் என்ன பிரச்சனை என்றே கண்டு பிடிக்க முடிந்தது.

அதன் நடுவே, அம்மாவின் கவனிப்பு மட்டும் இல்லையென்றால் பசி என்று ஒன்று இருப்பதே யாருக்கும் தெரிந்திருக்காது.

வீட்டிலிருக்கும் மனைவி / மக்கள் / பெற்றோர் ஆகியோரை மறந்து எங்களுக்காக அமர்ந்திருந்த மென்பொறியாளர்களின் வயிற்றையும் அவர் நிரப்ப, சோர்வின்றி வேலை நடந்தது.

எங்கள் நிறுவனத்தின் மீது விழுந்த பழியை போக்குவது பிரதீப் மற்றும் எனது பொறுப்பு என்றில்லாமல், அவர்களது பொறுப்பாகவும் கருதி சிரத்தையுடன் வேலை செய்தது எனக்குப் பிடித்தது.

''நீ தானே... இதன் காரணகர்த்தா! அடிப்படையில... தப்பிருக்கும் பட்சத்தில் அது உன் பாடு!'' என்றில்லாமல், முழு கவனத்தையும் கொடுத்து, எனக்கு உதவினர் அனைவரும்.

இந்தப் பிரச்சனையின் தீவிரத்தால், நானும் பிரதீப்ப
படுக்கைக்குச் செல்வதே இரண்டு மணி... மூன்று மண
என்றிருக்க, சூரியன் சிரிப்பதும் நிலவு மிளிர்வது
எங்களுக்கு ஒரு வாரத்திற்குத் தெரியாமல் போனது.

ஒரு வழியாக, அனைத்து வேலைகளையும் முடித்
விட்டு மூச்சு விட்டபோது, வாரம் ஒன்றாகியிருந்தது.

பழுதைக் குறிப்பிட்டு எழுதியிருந்த நிறுவனத்திற்கு
மன்னிப்புடன் கூடிய புதிய மென்பொருளின் உத்
களை மின்னஞ்சலில் அனுப்பிவிட்டு, மாடிப்படி இற
கும்போதே, வீட்டிலீ அளவிற்கு அதிகமான பேச்சு
சத்தம் கேட்டது!

கார்த்திக் குட்டியுடன் சரியாக பேசியே ஒரு வா
மாகிறதே... இந்த ஒரு வாரத்தில் என்னென்ன புதிதா
கண்டு பிடித்தாளோ... ஆயிரத்திற்கு மேற்பட்ட வி
யங்களுடன் காத்திருப்பாளே! என்ற ஆவலுடன் நடை
எட்டிப் போட்டேன்.

உங்களிடமும் நிறைய பேச எண்ணியிருந்தேன்.
''மதுமிதாவின்'' தொடர்ச்சியாக ஆயிரம் விஷயங்க
நெஞ்சில் இருந்தன... ஆனால், இந்த மென்பொரு
பழுது நொடியில் வந்து நேரத்தை நொண்டியாக்
விட்டது!

எங்கே போகப் போகிறேன்? மெதுவாக... மிக மி
பதமாக... என் பிரச்சனையை உங்களிடம் சொல்கிறேன்

அதுவரை, எங்கள் வீட்டில் கேட்கும் அதிகப்ப
சத்தத்தை ஆராயலாம்!

கார்த்திகாவின் கல்லூரித் தோழிகள் யாரும் வந்திரு
பார்களோ?



இல்லையே, கார்த்தி அவளது தோழிகளை வீட்டிற்கு அழைத்து வர மாட்டாளே?

அப்பாவிற்குப் பிடிக்காது என்பது ஒரு காரணம் என்றாலும்... எனது சங்கடத்தை முன்னிறுத்தியே வெளி ஆட்கள் எங்கள் வீட்டினுள் பிரவேசிப்பதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள்!

''என்னடா இது கூத்தா இருக்கு? உன்னோட மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் எல்லாம்... உன்னோட கூடப் பிறந்தவர்களா? லூசா நீ?'' - அடுத்த ''லூசாப்பா நீ'' கேள்வி உங்களுக்கு எழுகிறதா?

ம்ம்ம்... ஆமாம்! அவர்கள் வேற்று ஆட்கள் தான்! ஆனால், வேலைக்குச் சேரும் முன்னரே... என்னைப் பற்றி அறிந்து கொண்டவர்கள். என்னைப் பற்றிய விவரம் தெரிந்த பட்சத்தில் தான், அவர்களுக்கு வேலையே கொடுக்கப்பட்டது என்றால் நம்புவீர்களா?

சரி... சரி... வீடு வந்தாச்சு! கார்த்திகாவும் மலர்ந்த முகத்தோட ''அண்ணா'' என்ற அழைப்போட வாசலுக்கு ஓடி வந்தாச்சு! நம்ம வாக்குவாதத்தை அப்புறம் வச்சுக்கலாம்!

''ஹே! அண்ணா! வா... வா... பூச்சி மருந்து அடிச்சு முடிச்சிட்டியா (Software bug-ஐ சொல்கிறாள்)?''

''யாரு வந்திருக்கா தெரியுமா? என்னோட பெஸ்ட் பிரண்ட்.''

''எங்க கண்டுபிடி பார்க்கலாம்?''

''உன்னால முடியவே முடியாது!''

''சரி... சரி... ஒரு க்ளூ தரேன். இவங்களை எனக்கு ஒரு வாரமா தான் தெரியும். ஆனா, உனக்கு அப்புறம்...

எனக்கு அவங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு'' - பெருமை
யிலும், ஆனந்தத்திலும், சவாலிலும் சிக்கித் தவித்தது
கார்த்தியின் குரல்.

அவளது ''உயிர்த் தோழியைக்'' கண்டு பிடிக்க முடி
யாமல், நான் கூடத்திற்குள் தலையை விட அங்கேயும்
யாருமில்லை.

ஏதோ ஒன்று தோன்ற... ''ஹே கார்த்தி! ரொம்ப
நாளா... குட்டிப் பப்பி ஒண்ணு வாங்கணும்னு சொல்
லிட்டு இருந்தியே? ஏதாவது குட்டி டாக்-கா?'' என்று
கேட்டு விட்டேன்.

அதில் விழுந்து விழுந்து சிரித்தவள், ''அய்யயோ!
தீபா... உன்னை எங்க அண்ணன் டாக் சொல்லிட்டான்!''
என்றவாறே சமையல் கட்டிற்குள் ஓடினாள்.

என் தவறை உணர்ந்து தலையில் தட்டிக் கொண்
டிருக்கும்போதே, ''இதெல்லாம் டூ மச், பரணி!'' என்றது
ஓர் புதிய குரல்!

ஹே... இது புதிய குரல் அல்ல...

நான் ஏற்கனவே கேட்டிருக்கிறேன்...

எங்கே? எங்கே? ஹோ மை காட்! அந்த ''ஜோதி''
யின் குரல் தானே?

எப்படிடா இவ்வளவு துல்லியமாக என்று கேட்கிறீர்
களா? அதாங்க, என்னோட தனித்தன்மையே!

எனக்கு நானே மார் தட்டிக் கொள்வது போல், அவளே
அங்கே வந்து நிற்க, நான் அடைந்த ஆச்சரியத்தை
இப்போது அவள் அடைந்தாள்.

''ஹே... நீங்க... அந்த தகர டப்பா மாருதி 800-ஐ
ஓட்டிட்டு வந்தவர் தானே?''



''ரத்தம் கொட்டக் கொட்ட... என்னை ரத்தக் காட்டேரி
ரேஞ்சுக்கு ஆக்கிட்டு... நீங்க பாட்டுக்கு அப்பீட் ஆகிட்
டீங்க?''

''இப்போ உடம்பு எப்படியிருக்கு? கை வலி பரவா
யில்லையா? நான் ரொம்பவும் பயந்துட்டேன்!''

''உங்க நிலைமையையும்... வண்டியோட நிலை
மையையும் பார்த்திட்டு... கண்டிப்பா ரெண்டு டயர்,
ஒரு லைட், அட்லீஸ்ட் ஒரு பக்கக் கதவு... ஏதாவது கீழே
விழும்னு பார்த்தா... செம தில்லு சார் உங்களுக்கு!''

''அந்தக் கை வலியோட எப்படி சார்... வண்டியை
ஓட்டினீங்க? நீங்க ஒழுங்கா வீடு போய் சேரணும்னு
நான் வேண்டாத தெய்வமில்லை. கும்பிடாத சாமியில்லை.
ஹேய... தெய்வமும் சாமியும் ஒண்ணு தானோ? சரி...
விடுங்க... ஏதோ ரைமிங்-ல வந்திடுச்சு!''

''சௌம்யா வேற... போலீஸ்க்குத் தான் போயிருக்
கார்னு பயமுறுத்தி... ஹய்யோ... உங்களால ரெண்டு
நாள் நான் சரியாவே தூங்கலை...''

''அடுத்த ரெண்டு நாளுக்கு... எங்க ஏரியா-ல வீடு
வீடா போய் அந்தத் தகர டப்பா நிக்குதான்னு பார்த்
தேன்.''

''அப்புறமா... மண்டையில பல்பு எரிஞ்சு... வேகமா
ரெண்டு மூணு ஈயம் பித்தளைக்குப் பேரீச்சம் பழம்
கொடுக்கிற கடையில கூடத் தேடினேன்!''

''தீபா'' என்ற தாரகை பேசிக் கொண்டே போக, இவள்
பெயர் ''தீபா''வா? ''ஜோதி'' இல்லையா? என்ற அதி
முக்கியக் கேள்வி என் மண்டைக்குள் ஓடிக் கொண்
டிருந்தது.

முடிவில், அவளை உலுக்கி ''ஹோ... நீங்க சொன்ன 'கண்ணகன்'' இவர் தானா? அச்சோ... பாவம் எங்க அண்ணா'' என்றாள் கார்த்திகா.

இவர்களது பேச்சில் விழித்தது நானும், என் செல்ல அம்மாவும் மட்டும் தான்!

# 8

நான் ''கண்ணகன்'' என்பதில் திகைத்துக் கொண் டிருக்க, அம்மாவோ அவளது பேச்சில் திகைத்துக் கொண்டிருந்தார் போலும்.

அது எனக்கு அடுத்த வாக்கியத்தில் தான் புலப் பட்டது.

''நீ தான்... எங்க பரணியை இடிச்சியா? பாவம்... பிள்ளை! ஒரு வாரம்... கை வலியால என்ன கஷ்டப் பட்டுட்டான் தெரியுமா?''

''சாப்பாடு கூட நான் தான் அள்ளிக் கொடுத்தேன்!''

''வேலை எதுவும் பார்க்க முடியாம... பிள்ளை ரூம் குள்ளேயே அடைஞ்சு கிடந்தது!'' - தாயின் ஆதங்க வார்த்தைகளால் வெளியேறியதில் அங்கே பலத்த அமைதி.

நான் அம்மாவின் தோளைச் சுற்றி கை போட்டு லேசாய் இறுக்க, நான் கூறிய அர்த்தம் புரிந்தவராய்,

''படுக்கையில படுக்கும்போது... இந்தப் பக்கம், அந்தப் பக்கம் திரும்ப முடியாம நீ பட்டக் கஷ்டம்,



எனக்கும் அப்பாக்கும் தான் தெரியும்!'' என என்னைப் பார்த்து பதில் கூறியவர்,

உடனேயே ''இனிமேல் வண்டி ஓட்டும்போது பார்த்து ஓட்டும்மா!'' என்றார் தீபாவிடம்.

சட்டென, ''சாரி ஆன்ட்டி! நான் அந்த வண்டியை ஓட்டலைன்னாலும்... என்னோட தப்பு தான்!'' என்றாள் தன்மையாக.

''பதினைஞ்சு டிரைவிங் கிளாஸ்-க்கு அப்புறம்... நல்லா ஓட்டுவான்னு நினைச்சேன்...''

''சௌம்யா - அவ தான் வண்டியை ஓட்டிட்டு வந்தா. அது அவளோட காரும் கூட!''

''டிரைவிங் ஸ்கூல் வண்டியை நல்லாத்தான் ஓட்டினா...''

''ப்ச்... அன்னைக்கு அவங்கப்பா தான்... வீட்டு வண்டியையும் உன் கண் பார்வையிலேயே ஓட்டிப் பழகிட்டா அவளுக்கு நல்லதுன்னு சொன்னாரு.''

''அதான்... நம்மளோட இன்ஸ்ட்ரக்ஷன் இல்லாமலே நல்லா ஓட்டுறாளே, ஒரு நாள் கூட இருந்து பழக்கி விட்டுட்டுப் போகலாம்ன்னு அவ வண்டி-ல ஏறினேன்.''

''முதல் அரை மணி நேரம்... பிக் டிராபிக்-ல கூட சூப்பரா ஓட்டினா, ஆன்ட்டி. அப்புறம், கொஞ்சம் ஆள் நடமாட்டமில்லாத ஏரியா-ல ஓட்டிட்டு... மெயின் ரோடு-ல வந்து ஜாயின் பண்ணும்போது, பயங்கரமா தடுமாறிட்டா.''

''நானும்... கொஞ்சம் அசால்ட்டா இருந்துட்டேன். சுதாரிச்சு... வண்டியை நிறுத்தறதுக்குள்ள... எல்லாம் நடந்து முடிஞ்சிடுச்சு.''

''சாரி ஆன்ட்டி! ரொம்ப சாரி ஆன்ட்டி!''

''நான் கொஞ்சம்... துடுக்குத் தனமா பேசினதால, அந்த சம்பவத்திற்கு வருத்தப்படலைன்னு நினைக்கா தீங்க.''

''எப்பவுமே, ஒரு கஷ்டம்ன்னு வரும்போது... அதோட இலகுவான சைடை எடுத்துக்கணும்ன்னு சொல் லியே வளர்க்கப்பட்டதால... உங்களுக்கு ஒரு மாதிரி நெருடலா இருந்திருக்கும். சாரி ஆன்ட்டி!'' - அவள் தன்னிலை விளக்கமாய் பேசிக் கொண்டே செல்ல, எனக்கே ''போதும்'' என்ற மனநிலை வந்துவிட்டது எனும்போது அம்மாவைப் பற்றி கேட்கவா வேண்டும்.

பற்றியிருந்த அம்மாவின் கைகளில் நான் ஓர் அழுத்தம் கொடுக்க, ''அடப் பரவாயில்லைம்மா. எவ் வளவு சாரி சொல்லிட்டே... இனிமே கவனமா இருப்பே இல்லையா... அதுவே போதும்!'' என்றார் என் தாய்.

அதன் பின், ஓர் முகமனாய் புன்னகை செய்துவிட்டு நான் உள்ளே நகர, கார்த்திகாவும் தீபாவும் பேசத் துவங் குவது என் கண்ணில் பட்டது.

கதவை ஒருக்களித்து வைத்துவிட்டு, சோபாவில் அமர்ந்த என் கைகள் ஏதோ ஓர் பத்திரிகையைப் புரட் டியபோதும், கவனம் வெளியவே இருந்தது.

என் காதுகளுக்கு ''அதிகப்படியாய் கூர்ந்து கவனிக் கும்'' வேலையைக் கொடுக்காமல், இருவரும் தங்கள் ஆனந்தக் குரல் வீதி முழுக்க கேட்கும் வண்ணம் தான் பேசிக் கொண்டிருந்தனர்.

''எங்க அண்ணாவை இடிச்சது... நீ தான்னு தெரிஞ் சிருந்தா... உன்கிட்ட நான் பேசியிருக்கவே மாட்டேன்'' - கார்த்திகாவின் குரல் அல்லாது வேறேது.



''ஆனாலும்... அந்த கண்ணகன்... சை... எங்க அண் ணனையே கிண்டல் பண்ணியிருக்கியே? டூ மச்! நானும் அதைக் கேட்டு ''கேக்க பிக்கேன்னு'' சிரிச்சிருக் கேன்'' மீண்டும் கார்த்திகாவேதான்!

''ஹேஹ... நிஜமா கார்த்தி! கண்ணகி... மதுரையை எரிக்கும்போது... கண்ணில ஒரு கனல் தெரியும் பார்த் திருக்கியா? நேர்ல பார்க்கிறதுக்கு... நான் என்ன கண் ணகி காலத்திலேயே வாழ்ந்தேன்னு மொக்கையா கேள்வி கேட்கக் கூடாது! இந்த சினிமா-ல காட்டுவாங்க இல்லை... அப்படி சொல்றேன். அப்படியொரு கனல்... உங்க அண்ணன் கண்ணிலேயும். அதான் கண்ணகிக்கு ஆண் பால் கண்ணகன்-ன்னு சொன்னேன்'' -விம் போட்டு ''கண்ணகன்'' என்ற பெயருக்கு விளக்கம் சொல்லி, என்று ''அடிப்பாவிகளா'' என்ற வியப்பை வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

''ப்ச். நானாவது விலாவரியா சொல்லியிருக்கலாம். முதல்லயே... நான் பண்ணின விபத்தைப் பத்தி சொன்னா... எங்க ஓடிப்போயிடுவியோன்னு பயந்துட் டேன்... இருந்தாலும் நான் ஒரு வியாபாரி பாரு...'' என்றவளின் குரல் வருத்தத்தில் ஆரம்பித்து, போலியான கர்வத்தில் முடிந்தது.

''இருந்தாலும்... பரணிக்கு எப்படி வலிச்சது தெரி யுமா? அந்த நேரம் பிரதீப் கையில மாட்டியிருந்த... மூணு வருஷம் களி திங்க விட்டிருப்பார்'' - மேலும் கோபம் கொண்டாள், என் தங்கை.

பாசத்தைக் காட்ட இவளுக்கு வேறு வழியே தெரிய வில்லை போலும்! அவளை மேலும் மேலும் பேச வைத்து... ஹ்ம்ம்...

''ஹே சாரி, கார்த்தி! உங்க குடும்பத்தைப் பத்தி எவ்வளவு விஷயம் சொன்னே... நீயாவது உங்கண்ணா வுக்கு அடிபட்டிருக்குன்னு சொல்லியிருக்கலாம். இந்த போலீஸ் நாயெல்லாம்... ஒரு சின்ன ஸ்மெல்லை வச்சே... குற்றவாளியைக் கண்டு பிடிக்குதே... அது மாதிரி நானும் அந்தச் சின்ன க்ளூவை வச்சே... உங் கண்ணாவை இனம் கண்டிருப்பேன்!'' - அழகாய் சமாளித்தாள் தீபா.

''ஹே... பரணி ''நாய்''ன்னு சொன்னதை நிஜம்ன்னு நிரூபிக்கிற பாத்தியா?'' - என அவளிடம் வம்பு செய்து விட்டு,

''ஹான்... பரணிக்கு அடிபட்டதை நான் எப்படிச் சொல்றது? அதுக்கு ஆதி மூலக் காரணமே நான் தானே?'' என்றாள் தங்கை. இப்போது அவளது மூக்குச் சுருங்கியிருக்கும் என்பது என் கற்பனை!

''ஹே சொல்லு... சொல்லு... நீ சொல்ற கதை சுவாரஸ்யமா இருந்ததுன்னா... உனக்கு ''ஆதி மூலம்'' பட்டம் கொடுக்கப்படும்!'' - சிரிப்பிலேயே விஷயம் வாங்க முற்பட்டாள் மற்றவள்.

எங்கள் வீட்டுச் சின்ன பேக்-கும், முதலில் லேசாய் சிலிர்த்து மறுத்தது என்றாலும், அதன் பின்னர் குரலில் அபிநயத்துடன் தன் வண்டவாளத்தை தண்டவாளத்தில் ஏற்றியது.

''சூப்பர்! காலேஜ் லைப் - இவ்வளவு கலாட் டாவா இருக்குமா?'' - இப்போது தீபாவின் குரலில் சந்தோஷமும், கூடவே சிறு துளியாய் ஏக்கமும் கலந் திருந்தது.



''அட... ஃபீல் பண்ணாதே தீபா! கொஞ்சம் கலாட்டா... கொஞ்சம் படிப்பு... கொஞ்சம் ஊர் சுத்தல்... கொஞ்சம் அசைன்மென்ட்... எல்லாமே இருக்கும்! காலேஜ் போகாமலே... நீ எங்களவு ஜாலி-யா தானே இருக்கே? அப்புறம் என்ன ஃபீலிங்க்ஸ்?!''

''ஹ்ம்ம். அதுவும் சரிதான்'' - என்றபோது குரலில் சந் தோசம் இருந்தது தான். ஆனால், முயன்று வருவித்தது போலிருந்தது எனக்கு!

அப்போது வீட்டினுள் அப்பா வந்தார் போலும்.

''அப்பா!'' என கார்த்தி அழைப்பதும்,

''வணக்கம் அங்கிள்'' என தீபா பேசுவதும் (இங்கே அவள் கை கூப்பியிருக்க வேண்டும் என மனம் ஏனோ அடித்துக் கொண்டது).

''வணக்கம் அம்மா!'' என்ற அப்பாவின் குரலில் ஓர் கேள்வி தொக்கி நின்றதை நான் உணர்ந்தபோதே, அவரது முகத்திலும் அதே கேள்வி இருந்திருக்கும் போலும், கார்த்திகா பதில் கூற ஆரம்பித்திருந்தாள்.

''இவ பேரு... தீபா.. தீபஜோதி! குரு டிரைவிங் ஸ்கூல் வச்சிருக்காங்க.''

ஹோ முழு பெயர் தீபஜோதியா? ஹ்ம்ம்... நன்றாக தான் இருக்கிறது!

இப்போது சிறு இடைவெளியும், லேசாய் ஓர் தட்டும் (அதாவது அடி விழுந்த சத்தமும்) புலப்பட்டது.

அந்த அடி... தீபாவிடமிருந்து என் அன்புத் தங்கை யின் மேனியில் விழுந்திருக்கிறது என்பதை உணர்த் துவது போல், ''குரு டிரைவிங் ஸ்கூல் இவளோடது இல்லை. இவங்க மாமாவோடது... அதில இவ

லேடீஸ்க்கு கார் ஓட்டக் கத்துக் கொடுக்கிற ட்ரைனரா [illegible]
இருக்கா'' - ஒருவாறாய் முடித்தாள் கார்த்திகா.

''ஹோ! ரொம்ப நல்லதும்மா! காபி சாப்பிட்டியா?'' [illegible] - நலம் விசாரிப்பது அப்பாவின் முறையானது போலும். [illegible]

''காபி... டிபன்... எல்லாம் ஆச்சு, அங்கிள்! [illegible] உங்களுக்கு... எடுத்திட்டு வரட்டுமா?'' - தீபாவின் பிரதி [illegible] உபசாரணையில் அப்பாவின் உதடுகளில் மெல்லிய [illegible] நகை ஒன்று வந்ததை என் காதுகள் துல்லியமாய் இனம் [illegible] கண்டன.

''பரவாயில்லைமா. கை - கால் கழுவிட்டு... நானே [illegible] உள்ள போய் எடுத்துக்கிறேன். நீங்க பேசிட்டு இருங்க...'' [illegible] என்ற அப்பா, என் அறை நோக்கி வரும் அரவம் [illegible] கேட்டது.

உள்ளே வந்தவர், என் முகத்தை அளவிற்கு அதிகமாய் [illegible] ஆராய்ந்தது போல் தோன்றவும், ''என்னப்பா?'' என் [illegible] றேன் நான்.

''ஒண்ணுமில்லை ராஜா! நீ... காபி சாப்பிட்டியா?'' [illegible] என்றார் அதுதான் விஷயம் என்பது போல்.

''கம்பெனி-லேயே சாப்பிட்டேன்'' - என்றேன் [illegible] நானும் அவரது கேள்விக்கு மட்டும் பதிலாய்.

''அந்த வேலை முடிஞ்சதா? ரிலீஸ் அனுப்பிட்டீங் [illegible] களா?'' - எங்கள் சம்பாஷணையை சாதாரணமாக்கு [illegible] கிறாராம்!

நானும்... ''ஹ்ம்ம் ஆச்சுப்பா! அந்த கம்பெனிக்கு [illegible] எமெயில் அனுப்பிட்டுத் தான் கீழே வந்தேன். ஒ[illegible] வாரம்... ரொம்ப ஸ்ட்ரெஸ் பண்ணி வேலை செஞ் [illegible]



[illegible]தால, எல்லாரையும் சீக்கிரமே கிளம்பச் சொல்லியாச்சு. [illegible]பிரதீப்பும் வந்திடுவான்'' என்றேன் அதை ஒட்டியே.

''சரி. இன்னைக்குத்தான் ரெண்டு பேரும்.. நிதானமா வீட்டில சாப்பிடப் போறீங்க. நான் அம்மாக்கு சமையல்ல ஹெல்ப் பண்றேன்'' என்ற அன்பு பரிமாறலுடன் அவர் [illegible], எனக்கு உள்ளுக்குள் பெருமையாய் இருந்தது.

அவர் கேட்க வந்தது வேறேதோ!

ஆனால், என் வயிற்றை ஆராய்வது போல் மனதை ஆராய்ந்து விட்டுச் சென்று விட்டார்!

அவர் வெளியே சென்றதும், என் காதுகளும் வெளியே [illegible]க்குச் சென்றது!

என் காதின் நல்லகாலமோ அல்ல கெட்டக்காலமோ, தீபாவும் கார்த்தியும் வரவேற்பறையில் இருக்கும் அர[illegible] [illegible]மே இல்லை.

''ச்சு'' என்ற உச்சுக்கொட்டலுடன் திரும்பிய எனக்கு, [illegible] சீரியலில் மொக்கையாக விடப்பட்ட இடை [illegible]யின் தன்மை தோன்றியது.

அதற்குள் ''பரணி, உனக்கொரு லெட்டர் வந்திருக்கு [illegible]'' என ஓர் கடித உறையை என்னிடம் நீட்டிய [illegible] வந்த அம்மாவின் மறுகையில் பலகாரங்கள்.

''தேங்க்ஸ் மா! இந்த தேங்க்ஸ்... லெட்டருக்கு... [illegible]க்கு இல்லை. எனக்கு வயிறு உப்பிசமா இருக்கு.. [illegible] இப்போ சாப்பிட்டா நைட் சரியா சாப்பிட [illegible]'' என்று உணவை மறுத்துவிட்டு, கடிதத்தில் [illegible] மூழ்கினேன்.

[illegible] எங்கிருந்து வந்திருக்கிறது தெரியுமா? நான் [illegible] வெல்லலாம்'' என்று ஓர் கட்டுரை

எழுதுகிறேன் அல்லவா? அதற்குக் குவிந்திருக்கு[illegible]
பதில்கள் / பாராட்டுகள் / சந்தேகங்கள் / குறைகள் எ[illegible]
எல்லா கடிதங்களையும் ஓர் உறையில் இட்டு, எனக்[illegible]
அனுப்பியிருந்தனர் நாளிதழ் அலுவலகத்தார்.

இது எனக்கு மிக மிகப் பிடித்தமான வேலை! எ[illegible] போதுமே, நமது கலையின் அங்கீகாரமாய் கிடைக்கு[illegible] பின்னூட்டங்கள் போற்றுதலுக்கு உரியவை அல்லவ[illegible]

பல்வேறு மனிதர்கள் - ஒவ்வொருவருக்கும் ஒ[illegible]வோர் சிந்தனை!

ஒருவருக்கு "வணிகம் வனப்பைத் தரும்" என்[illegible] எண்ணம் இருப்பின், மற்றொருவருக்கோ "வணி[illegible] ஆபத்தான விஷயம்" என்ற எண்ணமிருக்கும்.

சிலருக்கு "இருக்கும் பணம் விரையமாகாமல் இரு[illegible] வேண்டும்" என்ற பதைப்பிருப்பின், பலருக்கு "இ[illegible]கும் சொற்ப பணத்தை கோடியாக்கிவிட வேண்டு[illegible] என்ற ஆசையிருக்கும்.

பலரோ "பங்குகளின் விலை சற்றே ஏறினா[illegible] விற்றுவிட வேண்டும்" என்ற குறுகிய கால இலக்கு[illegible] இருக்க, சிலருக்கு "நீண்ட கால பங்குகள் அதிக லா[illegible] கொடுக்கும்" என்ற தொலைநோக்குப் பார்வையி[illegible]கும்.

ஒரு சிலருக்கு "பங்கு வாங்கும் நிறுவனத்[illegible] தொடர்ந்த வளர்ச்சியும், அடுத்ததாய் அவர்கள் எட்[illegible] போகும் லாபங்களும்" முன்னிலை வகித்தால், சே[illegible] சிலருக்கு "என் நண்பன் அந்த நிறுவனத்தில் வா[illegible]யிருக்கிறான். அதனால், நானும் முதலீடு செய்வே[illegible]" என்ற போட்டி உணர்வு முன்னிலை வகிக்கும்.



மாதம் தோறும் வரும் இந்தக் கடிதங்களைப் படிப்பதில் எனக்கு மிகுந்த சந்தோசம்!

"கற்றது கல்லளவு. கல்லாதது கடலளவு" என்ற பழமொழிக்கு ஏற்ப, எனக்குப் பலவகை பயன்களையும் அள்ளித் தரும் பின்னூட்டங்கள் எப்போதுமே பொக்கிஷங்கள் தான்!

"எனது பதிப்புகளே வணிகத்தில் சிறந்தவை" என்ற எண்ணத்தை என்னுள் விதைக்காமல், "இப்படியும் அணுகலாம்" என்ற புதிய சிந்தனைகளை என்னுள் விதைத்தன, பல கடிதங்கள்.

கடைசி கடிதத்தைப் பிரித்த எனக்கு ஓர் இனிய ஆச்சரியம்!

எப்போதும், "இந்த நிறுவனப் பங்கை வாங்கலாமா?" "நான் இந்த நிறுவனத்தில் பத்து பங்குகள் வைத்துள்ளேன். விலை ஏறும் வாய்ப்புகள் உண்டா?" "நீங்கள் சொன்னதால் ஓர் குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்குகள் வாங்கி, விலை சரிந்து கொண்டே செல்கிறதே? இது தான் உங்கள் வணிக யுக்தியா?" போன்ற கேள்விகளையே பெரும்பாலும் சந்தித்திருந்த எனக்கு, அதி[illegible] கவிதை ஆச்சரியமே!

அதுவும், அதன் வரிகள்! இதோ... படிக்கிறேன் கேளுங்கள்!

"நம் உழைப்பால் நாம் அடைந்த வெற்றி
சாதனை!
நம் உழைப்பால் சமூகம் அடைந்த வெற்றி
சரித்திரம்!!

சாதனை படைத்தது போதும் சரித்திரம் எழுத வா!"
என்றிருந்தன வரிகள்.

சட்டென, அனுப்புனர் முகவரியைப் பார்த்தா[illegible]
"அகல்யா" என்றிருந்தது.

யாரது? இந்தப் பெயரில் முன்னாளில் பின்னு[illegible]
டங்கள் ஏதும் வந்ததில்லையே? புது வாசகியோ!?

கடிதங்களில் மூழ்கி, காரிகைகள் இருவரையும் நா[illegible]
மறந்திருக்க, "நான் வரேன்... பரணி" என்ற குரல் மி[illegible]
அருகில் கேட்டது.

# 9

நான் சுதாரித்து பதில் பேசும் முன்னர், "எனக்[illegible]
ரொம்ப லேட் ஆகிடுச்சு! நாளைக்குப் பார்க்கலாம்[illegible]
பை!" எனப் பறந்து விட்டிருந்தாள் அவள்.

அனைவரிடமும் அவள் விடைபெறுவது கேட்[illegible]
போதும், என்னால் அந்த கவிதையை விட்டுக் கண்ண[illegible]
எடுக்கவே முடியவில்லை.

அந்த வரிகளில் எனக்கு ஏதோ செய்தி இருப்ப[illegible]
போல் தோன்ற, அதை மீண்டும் மீண்டும் படித்[illegible]
கொண்டிருந்தேன் நான்.

அதிலிருந்த எனது கவனத்தை மீண்டும் கலை[illegible]
வென, பிரதீபன் என் அருகே வந்தமர்ந்தான்.

"என்ன எழுத்தாளர் சார்! இந்த வாரம்... கடிதங்[illegible]
அதிகம் போலிருக்கே? ஒரே வாசகியர் பட்டாளமா?"
குதூகலமாய் வந்து விழுந்தது கேள்வி.



"என்னடா இவ்வளவு சந்தோஷம்? நாம அனுப்பின
ஈமெயில்-லுக்கு அவங்ககிட்ட இருந்து ரிப்ளை எதுவும்
வந்திருக்கா?" - அவனது கேள்வியை அந்தரத்தில் விட்டு,
அதற்கு மாறாய் எனது கேள்வி ஒன்றை, வார்த்தைப்
பதிலில் பரிமாறினேன்.

"ஆமா! சொன்ன நேரத்திற்குள்ள நாம வேலையை
செய்து கொடுத்ததில் அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம்.
அதுவும், இந்தத் தப்பால் அவங்களுக்கு நேர்ந்த நஷ்
டத்தை ஈடு செய்ற மாதிரி, நாமளே செலவை ஏத்துக்
கிட்டோம் இல்லையா... அதில கூடுதல் சந்தோஷம்"
என்றவனின் முகமும் அதே சந்தோஷத்தை எடுத்துக்
காட்டியது.

"ஒரு வாரமா... எனக்கு ரொம்ப டென்ஷனா இருந்த
துடா! இந்த ஒரு கெட்டப் பெயர்... அவங்களோட நாம
வச்சிருக்க பார்ட்னர்ஷிப்பை முறிக்கிற அளவுக்குப்
போயிடுமோன்னு பயந்து போயிட்டேன். ஷ்... அப்பா...
பரணி!!" என்றான் நண்பன் வெளிப்படையான நிம்மதி
யுடன்.

"சாரிடா! நான் முதல் தடவையே... கொஞ்சம்
கவனமா இருந்திருக்கணும். நம்ம செய்றது... தப்பாக
வாய்ப்பே இல்லை என்ற மெத்தனம் மனசில வந்திடுச்சு
போல" - இப்போது வெளிப்படையாக மன்னிப்பு
கோரினேன், நான்.

"நாமெல்லாம் மனுஷங்க பரணி. எல்லா நேரமும்...
ஒரே மாதிரி இருக்க நாம என்ன மெஷினா? ஏதோ ஒரு
[illegible]-ல தவறுவது இயல்பு! விடுடா... இனிமேல்

கூடுதல் கவனத்தோட இருப்போம் இல்லையா? ஒரு பாடமா எடுத்துக்கலாம்'' - அவன் சொல்வதும் சரி யென்று பட்டப்போதும், என் மென்பொருள் ஆய்வு களைப் படித்து கருத்துக் கூறுவதற்கு ஓர் அனுபவ சாலியை நிர்ணயிக்கலாம் என்ற என் யோசனையை அவனும் ஆமோதித்தான்.

அதன்படி, அதற்கான விளம்பரத்தை எங்கள் இணையத தளத்தின் 'Want to be a warrior - come work with us!' என்ற பகுதியில் (வேலைக்கு ஆள் சேர்க்கும் பகுதியில்) பிரசுரிக்கலாம் என முடிவு செய்தோம்.

அதன் வாசகங்களை இருவருமாய் முடிவு செய்து முடித்தபோது, அப்பா இருவரையும் சாப்பிட அழைக்க வந்து விட்டிருந்தார்.

''ஹையா... எனக்குப் பிடிச்ச மீன் குழம்பு!'' என்ற கூவலைக் கேட்டுக் கொண்டே, நாங்கள் இருவரும் கூட்டத்திற்குள் நுழைய, தரையில் உணவுப் பதார்த் தங்கள் நடுநாயகமாய் வீற்றிருக்க, என் தங்கை அவை ஒட்டி அமர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாள்.

உணவு வகைகளைச் சுற்றி நாங்கள் வட்டமாக அமர்ந்ததும், பொரித்த அப்பளங்களை அகலத் தட்டில் இட்டு எடுத்து வந்த அம்மா, ''கார்த்தி, எழுந்து எல் லாருக்கும் பரிமாறுமா'' என்றாரே பார்க்கலாம்.

''ஹான்! எனக்குப் பசிக்குதும்மா...'' - இழுவையில் பசியைக் காட்ட முற்பட்டாள் போலும்.

''இந்த வேலை கூடப் பழகிக்காம இருக்கக் கூடாது கார்த்திமா! கொஞ்சம்... கொஞ்சமா செஞ்சு பழகு'' என அம்மாவும் விடாது பேசினார்.



''ம்ம்ம்ம்...'' என்ற முணுமுணுப்பில் மீண்டும் பசியை எடுத்துக் காட்ட முயன்றாள் கார்த்திகா.

கார்த்திகாவின் மறுப்பும், அம்மாவின் கெஞ்சலும் மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருக்கையில், ''அம்மா சொல்றதைக் கேளு, கார்த்திகா!'' என்ற அதட்டலின் சொந்தக்காரன் என் நண்பன்.

''இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்பட மாட் டேன்... ஆமா சொல்லிட்டேன்! இன்னும் தாலியே கட்டலை... அதுக்குள்ளே அதிகாரமா? பெண்ணின் சுதந்திரத்தைப் பறிக்கும் கணவன் வர்க்கம் ஒழிக!'' என எதிர் கூச்சலிட்ட கார்த்திகாவின் தோளில் லேசான அடியும் ''கார்த்தி!'' என்ற அதட்டலும் ஒருங்கே அப்பா விடமிருந்து வந்தது.

''போதும், மிஸ்டர் அப்பா! நீங்க உடனே... ரெண்டு வார்த்தையில பேசி... எனக்குக் கோபம்... எனக்குக் கோபம்னு டமாரம் அடிக்க வேண்டாம். இந்த மாங்காய் மூஞ்சி... மாவடு மூஞ்சி மாதிரி சுருங்கும் போதே... உங்களுக்கு வந்திருக்கிறது கோபம்னு எங்களுக்குப் புரிஞ்சு போச்சு. சோ... நோ மோர் வன்முறை... சொல் லிட்டேன்!'' என நீளமாய் பேசியவள், ஒரு வழியாகப் பரிமாறத் துவங்கினாள்.

''நாமளே எடுத்து வச்சுக்கலாம்...'' என்று தொடங்கிய என் தொடையில் வலிக்காத மாதிரி ஓர் அடி வைத்த [illegible], ''பரணிக்கு இன்னொரு வறுத்த மீன் வை'' என்றான் கார்த்தியிடம்.

எல்லாருக்கும் ஒரோர் துண்டு மீனை வைத்துவிட்டு, [illegible] இருந்த சட்டியில் கை வைத்திருந்த கார்த்திகா

பாய்ந்து விட்டாள்! அய்யோ... ஆக்ஷன்ல இல்லைங்க... வார்த்தையால!

''அய்யே! இவரு... அவருக்கு பிரண்டாமாம்... என்கிட்டையே காட்டுறார்! ஹுக்கும்! 'அவன் இவன்... படத்தில வர ஒன்ற கண்ணன் கணக்கா... எதுக்கு முழி... கிறீங்க? இதோ... உங்க பிபிபிபிரண்டுக்கு வச்சாச்சு...''

''இவருக்கு மட்டும் தான் பிரண்ட் இருப்பாங்களா... எனக்கும் தான் இருக்காங்க...''

''யாரு அது... புதுசா? எப்படினாலும் ரெண்டு நாளில... ஓடிடப் போறாங்க! எதுக்கு வீணா...'' - அவனே கேள்வி... கேட்டு, அவனே பதிலும் சொல்லிக் கொள்ள, அவ... தட்டிலிருந்த இரண்டு கரண்டி சாதத்திற்கு ஐந்து கரண்... குழம்பை ஊற்றிப் பழி தீர்த்துக் கொண்டாள் கார்த்திகா...

''ஷ்... என்ன கார்த்தி! மீன் குழம்பை... பிரட்டினாப்ல... சாப்பிட்டா தான் நல்லா இருக்கும். இப்படி பண்ணு... றியே?'' என மகளைக் கடிந்து கொண்ட அம்மா,

''பிரதீப்... தட்டை இப்படிக் கொடு. கொஞ்ச... சாதத்தை நான் எடுத்துக்கிறேன்'' என மருமகனா... இரண்டாவது மகனிடம் வாங்கிக் கொண்டார்.

கூடவே ''பிரதீப்புக்கு இன்னும் கொஞ்சம் சாத... போடு! வம்பு பண்ணாம... ஒழுங்கா போடு!'' என்ற... கட்டளை போல.

''அவரு ஒழுங்கா இருந்தா... நானும் ஒழுங்கா இரு... பேன்'' - இப்போதும் ஓர் ''இக்கன்னா''வுடன் தான் சாத... வைத்தாள் என் தங்கை.

அவனிடமிருந்து என்னிடம் தாவியவள், ''டேய் பரண்... கையை எடு... முட்டைக்கோஸ் வைக்கிறேன்'' என்றா...



''இருக்கட்டும். நான் வச்சுக்கிறேன். ஆமா... இன்... எனக்கு வீட்டுக்கு வந்தாங்களே... உன் பிரண்ட்...'' - ...நான் முடிக்கவே இல்லை.

''வீட்டுக்கு வர அளவுக்கா?'' என நடுவே புகுந்தது பிரதீப்பின் வியந்த குரல்.

''ஆமா... அவ்வளவு க்ளோஸ்! மீனும் குழம்பும் ...சாதிரி'' என்றாள் கார்த்திகா. என்ன ஒரு உதாரணம்! ...பழம்பெரும் கவிஞர்கள் தோற்றார்கள் போங்க!''

''அப்படியா? எங்க வயித்துக்குள்ள போனதும்... மீனே ...இருக்காது... குழம்பை அது எப்படி கண்டு பிடிக்கும்?'' ...பிரதீப்புக்கு என்று கேள்வி எழும் போல. அதுவும் ...கார்த்தியைப் பார்த்தால் மட்டுமே!

''ஹ்ம்ம். கூகிள் சர்ச்-ல தேடும். என் வாயைப் பிடுங் ...காம சாப்பிடுங்க'' எனப் பல்லைக் கடித்தாள் அவனது ...வருங்கால மனைவி.

''நாங்க வேணும்னா பிரத்யேகமா ஓர் சாப்ட்வேர் ...செய்து தரட்டுமா? காசெல்லாம் வேணாம்... அதுக்குப் ...பதிலா ஒரே ஒரு பிரதி உபகாரம் தான், என்ன சொல்றே?'' ...பிரதீப்பின் மார்க்கெட்டிங் புத்தி அமலுக்கு வந்தது.

அதற்குப் பதிலாக ''நீங்க என்ன கேட்பீங்கன்னு ...எனக்குத் தெரியும்! சோ... தேவையில்லை'' - கார்த்திகா ...வின் மனதை அறியும் திறன் அமலுக்கு வந்தது.

அவர்களது பேச்சைப் பொறுக்க முடியாமல் எனக்கு ...வெறுத்து விட்டது. ''ஷ். உங்க சண்டை... தாங்க முடியல. ...போதும்!'' என உள்ளே புகுந்து,

''ஒரு வாரம் தான் பழக்கம்ன்னு சொல்றே? அப்புறம் ...எப்படி கார்த்தி... இவ்வளவு க்ளோஸ்?'' என்ற

கேள்வியை நான் கேட்கவும் மடமடவென பதில்கள் வந்து விழுந்தன.

''அவ ரொம்ப ஸ்வீட் அண்ணா! எதையுமே, ரொம்ப ஜோவியல்-லா எடுத்துப்பா...''

''சும்மா அவ பேசறதை வச்சு சொல்றேன்னு நினைக் காதீங்க. அவ வீட்டு நிலைமைக்கு அவ இப்படி இருக் கிறது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா?''

''எனக்கு அவளைப் பூர்த்து பிரமிப்பா இருந்தது!''

''அவ பத்தாவது படிச்சிட்டு இருக்கும்போது... அவங்க அம்மா கோயம்புத்தூர்ல நடந்த குண்டு வெடிப்பில இறந்துட்டாங்க.''

''அதுக்கு அப்புறம்... அவளும் அவங்க அப்பாவும் அவங்க அத்தை வீட்டுக்கு வந்துட்டாங்க போல.''

''அதுக்கு... அப்புறம் அவளோட வாழ்க்கை... ப்ச்... ரொம்பப் பாவம்மா! கேட்ட எனக்கே... ரொம்பக் கஷ் டமா இருந்தது.''

''ஆனா... சொன்ன அவளோட முகத்தில மருந்துக்கும் கண்ணீர் இல்லை. சின்னதா ஒரு வருத்தம். அவ்வள தான்! அப்போ கூட... நிறைய கஷ்டமான சம்பவங்களை அவங்க ஜாலியா விவரிச்ச விதம்... சிம்ப்ளி கிரேட்!''

''முதல் ரெண்டு நாள்... சும்மா ஜெனரல்லா தான் பேசிட்டு இருந்தோம். அப்புறம்... எனக்கே அவளோட பேசிட்டு இருந்தா... புதுசா ஒரு புத்துணர்ச்சி வர மாதிரி இருந்தது...''

''அப்படியே பேசப் போக... வீட்டுக்கு வர அளவுக் கு விட்டேன்!''



''எனக்கு அவளை ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என முடித்தாள் கார்த்திகா.

அப்போது ''உனக்குப் பிடிச்சிருக்கு, சரி! அவளை வீட் டுக்குக் கூட்டி வரதில... வீட்டில இருக்க மத்தவங் களுக்கு ஏதாவது சங்கடம் இருக்கான்னு கேட்டியா?'' என்றான் பிரதீப்.

என்னை மனதில் வைத்தே அவனது இந்தக் கேள்வி கேட்கப்பட்டது என்பது புரியாத அளவிற்கு நானும் அவனும் வேறல்ல!

இதே கேள்வியைத் தான், மாலையில் என் அறைக் குள் வந்து என்னை ஆராய்ந்த அப்பாவின் முகமும் தாங்கியிருந்தது என்பதை அறிவேன் நான்!

''யாருக்கு சங்கடம்? ஹோ... பரணிக்கா?'' - என்ற கார்த்திகா,

''என்ன சங்கடம் வரப் போகுது... பரணி பத்தி எல் லாமே அவளுக்குத் தெரியும்'' எனவும், எல்லாருமே அதிர்ந்து நோக்கினோம்!

''சொல்லப் போனா... அவ பரணியைப் பத்தித் தெரிஞ் சதும் எவ்வளவு பிரமிச்சுப் போனா தெரியுமா?'' - கார்த்திகாவின் குரலில் எங்களது அதிர்ச்சியைத் தகர்க் கும் பெருமிதம்!

அப்பா ஏதோ பேசத் துவங்கும் முன்னர், பிரதீப்பிடம் அவ்வளவு தெரியவே அவனிடம் நான் திரும்பும் முன்னர், அவனது வார்த்தைகள் கார்த்தியிடம் திரும்பியிருந்தன.

''லூசா கார்த்திகா... நீ? ஒரு வாரம் முன்னாடி வரைக் கும்... அந்தப் பொண்ணை யாருன்னே தெரியாது.

அவங்ககிட்ட போய்... நம்ம குடும்ப விஷயம் எல்லாத் தையும் சொல்லியிருக்கியே?'' - கோபத்தில் பிரதீப்பின் குரல் நடுங்குவது வெளியே தெரிந்தது.

அதில் கார்த்திகா ஆத்திரமடைந்தது வெளிப்படை யாகத் தெரிந்தது.

''அவ என்னோட பிரண்ட்!'' - பற்களைக் கார்த்திகா கடிக்க,

''பெரிய பிரண்ட்! ஒரு வாரப் பழக்கத்தில் வந்திருக் கும் பிரண்ட்ஷிப் எபீபடியிருக்கும்?''

''உனக்கு உலகமே புரியல, கார்த்திகா! சமீபத்தில, சென்னை-யில ஒரு பொம்பளை... பிரண்ட் மாதிரி பேசி, வீட்டில இருக்க நகையெல்லாம் எடுத்திட்டுப் போயி ருக்கா.. உலகம் அப்படியிருக்கும் போது... நீ பாட்டுக்கு முன்னே பின்னே... தெரியாத பொண்ணுகிட்ட எல்லா விஷயத்தையும் சொல்லியிருக்கே? அதுவுமில்லாம வீட்டுக்கு வேற கூட்டிட்டு வந்திருக்கே? எங்க யா கிட்டையாவது கேட்டியா? சரி... என்கிட்டே கேட் வேணாம்... அப்பாகிட்ட கேட்டிருக்கலாம் இல்லையா? ஒண்ணு... தானா தெரியணும்... இல்லை மத்தவங் சொல் பேச்சுக் கேட்கணும்'' - பொரிந்து கொட்டி விட் டான், பிரதீப்.

அவனது சுடு சொற்களை விட, கார்த்தியின் கண் களில் ''வந்து விடுவேன்'' என்ற பயமுறுத்தலுடன் நின்று கொண்டிருந்த கண்ணீர் உறுத்த, ''விடு பிரதீப் அதான்... எந்தப் பிரச்சனையும் இல்லையே?'' என நா சொல்லும் போதே.

தான் உண்டு கொண்டிருந்த தட்டை, பிரதீப்பின் புற அசுர வேகத்தில் தள்ளி விட்டிருந்தாள் கார்த்திகா. அ



தட்டின் வேகத்தில், அருகிலிருந்த ரசம் நிரம்பிய பாத்திரம் ஆட்டம் கண்டு, பிரதீப்பின் தட்டில் சூடான ரசம் கொட்டியதோடு மட்டுமல்லாமல் அவனது கால் மற்றும் கையிலும் சூடான ரசம் அள்ளித் தெளிக்கப்பட்டிருந்தது.

மற்றவர்களின் தட்டிலும், சில பல உணவுப் பொருட் கள் சிதறி இருந்தாலும், கார்த்தியின் குறி பிரதீப் என்ப தால், அவனுக்குத் தான் அதிகத் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

இதையெல்லாம் செய்துவிட்டு!

# 10

''என்ன கார்த்திகா இது?'' என்ற அப்பாவிடம் ஏதும் பேசாமல், விடுவிடுவென தனது அறைக்குள் நுழைந் தவள், கதவை அடைக்கையில் ஓர் பெரிய விசும்பல் சத்தம் எங்கள் காதுகளை எட்டியது!

அப்பாவைப் போல், கோபத்திலிருக்கும் கார்த்தி யிடம் கவனத்தைச் செலுத்தாமல், அவளது கோபத்திற்கு ஆளாகியிருக்கும் பிரதீப்பே என் கவனத்திற்கு ஆட்பட் டான்.

''எழுந்திரு பிரதீப்! கை, கால் கழுவிட்டு வா... அப்புறம் பேசிக்கலாம்!'' என நான் கூறும் போதே,

''வருஷம் போகப் போக... இவளுக்கு வயசு குறையு துன்னு நினைப்பு போல. கட்டிக்கப் போற மாப்பிள்ளை கிட்ட... எப்படி நடந்துக்கணும்ன்னு ஒரு வரைமுறை

வேணாம்... ப்ச்... இந்தப் பிள்ளைங்கிறதால பொறுத்துப் போகுது... ஹ்ம்ம்... இரு பிரதீப், துண்டு எடுத்திட்டு வரேன்...'' எனத் தன் போக்கில் புலம்பிக் கொண்டே, உள்ளறைக்குச் சென்றார் அம்மா.

கூடத்திலிருந்த குளியலறையில் தன்னை சுத்தம் பண்ணிக் கொண்டு வந்த பிரதீப், வெளியே செல்ல முற்பட்டான்.

''சாப்பிட்டு... அப்புறம் மேல போகலாம்டா... கார்த்தி மேல இருக்க கோபத்தைச் சாப்பாடு மேல காட்ட தேடா... ப்ளீஸ்'' - என்றேன் நான் அவனது குணமறிந்து அவனது தற்போதைய முகமும் அவனது கோபத்தையே சொல்லியது.

''எனக்கு உங்க மேல கோபமில்லை'' என்றதோடு மாடியிலிருக்கும் அவனது அறைக்குள் சென்று விட்டான், நண்பன்.

நண்பனின் கோபத்தை உணர்ந்ததும், எனக்கு கார்த்தியின் மீது கோபம் வந்தது.

அவன் வாயால் தானே பேசினான்? இவளும் பதிலுக்குப் பதில் பேச வேண்டியது தானே? அதை விட்டு விட்டு... இதென்ன பழக்கம்! அறிவு கெட்டவள்!

நான் எண்ணிக் கொண்டிருந்ததை வார்த்தையால் வெளியிட்டுக் கொண்டிருந்தார் அப்பா.

மூடியிருந்த கதவின் முன்னிருந்து அவர் பேசிய போதும், உள்ளிருக்கும் கார்த்தியின் காதுகளில் கண டிப்பாக இது விழுந்திருக்கும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே.



ஆனால், கார்த்திகாவிடமிருந்து எந்த பதிலும் இல்லை.

பிரதீப் வேறு உடை மாற்றி வரும் வரையிலும் கூட, அப்பாவின் திட்டோ, கார்த்தியின் மௌனமோ நிற் காமல் நீடித்தது.

எப்போதும் போல், கார்த்தியைக் கடிந்து கொள்ளும் அப்பாவை அடக்கி உட்கார வைக்காமல், அவர் பேசட் டும் என்றிருந்தேன் நான். இந்த முறை அவள் செய்த தற்கு, வேண்டிய வகையில் தான் திட்டு விழுகிறது! விடட்டும்!

அதற்காக - ஆயிரம் கடுஞ்சொற்களை என் தந்தை பிரயோகித்தார் என்று சொல்லிவிட முடியாது.

நறுக்கென்று... அவளது தப்பை அவளுக்கு எடுத் துரைக்கும் வண்ணம் வந்து விழுந்தன வார்த்தைகள்.

சாப்பிட்ட இடத்தை சுத்தம் செய்துவிட்டு, புதிதாக தட்டு வைத்து, பரிமாறியிருந்த அம்மா ''சாப்பிட வாங்க'' என்றார்.

''போதும் விடுங்கப்பா. நீங்க... எதுக்கு தேவையில் லாம டென்ஷன் ஆகுறீங்க? ரிலாக்ஸ்! நான் பார்த் துக்கிறேன். நீங்க... வந்து சாப்பிடுங்க'' என என் தந்தையை உணவுண்ண அழைத்த பிரதீப், மின்னல் வேகத்தில் உணவை முடித்துக் கொண்டு, மேலே விரைந்தான்.

எப்போதும், அவன் மேலே சென்றதும் என் கணினி யில் மூழ்கி விடும் நான்... இப்போது அவனைப் பின் தொடர்ந்து மேலே சென்றேன்.

''என்னடா?''

''கார்த்தி மேல கோபமா... பிரதீப்?''

''........''

''கண்டிப்பா கோபமா தான் இருப்பே! ஆனா, யோசிச்சுப் பாரேன்... என்னைப் பத்தி யாராவது தப்பா பேசினா... நீ ஒத்துப்பியா? அவங்களோட சண்டைக்குப் போவே தானே? அது மாதிரி... கார்த்தியும்!''

''நீயும்... ஒரு வாரமே பழகின அந்தப் பொண்ணும் ஒண்ணாடா?''

''பிடித்ததில என்னடா வருஷக்கணக்கு? வாரக் கணக்கு? காதலுக்கு மட்டும் தான்... ஒரு நொடி... ஒரு பார்வை... ஒரு தீண்டல்... எல்லாமா? நட்புக்கும் உண்டு... பிரதீப்!

''சிலரை... ஒரு முறை பார்த்தாலே மனசுக்குப் பிடிச் சிடும், பிரதீப்! அந்தப் பொண்ணு... தீபாவும் அப்படித் தானோ என்னவோ!''

''நீ அவளைப் பத்தி... சொன்னது சட்டுன்னு கோபப் பட்டுட்டா! சின்னப் பொண்ணு தானே, பிரதீப்!''

''ப்ளீஸ்டா... எனக்காக!''

''கோபம் ஒண்ணுமில்லைடா... ஆனா... அவ பண் ணினது தப்புன்னு அவ உணரணும். அது வரைக்கும் நான் பேசமாட்டேன்'' என்றதோடு பிரதீப் முடித்துக் கொண்டான்.

இதற்கு மேல் அவனிடம் வாதிட்டு ஒரு புண்ணிய மும் இல்லை என்று தோன்றிவிட, என் அறைக்குள் பிரவேசித்தேன்.

எல்லா நாட்களையும் போல், என் கால்கள் கணினி யிடம் செல்லாமல் கடிதத்திடம் சென்றது.



தனியாக எடுத்து வைத்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்து, மீண்டும் ''அகல்யா'' அனுப்பியிருந்த கடிதத் தைப் படிக்கத் துவங்கினேன்.

இருக்கும் ஐந்து வரிகளை எத்தனை முறையடா படிப்பாய்? என்று தானே கேட்கிறீர்கள்?

ப்ச்... அதிலிருக்கும் ஏதோ ஒன்று... என்னை நெருடுது!

என்னைப் பற்றி முழு விவரமும் தெரிந்த ஒருவர் தான் இந்தக் கடிதத்தை அனுப்பியிருக்க வேண்டும் என்று மனம் அடித்துச் சொன்னது!

பிரதீப் - ம்ஹ்ஹூம் - அசைன்மெண்ட் மாதிரி கார்த்திகா அவளை லவ் லெட்டர் எழுத வைத்தபோதே, கன்றாவி யாக எதையோ கிறுக்கியிருந்தான். அதில் ஆயிரத் தெட்டு ஸ்பெல்லிங் மிஸ்டேக்ஸ் வேற... அதைத் திருத்துவதற்குள் என் தாவு தீர்ந்தது எனக்குத் தான் தெரியும்!

கார்த்திகா - வாய்ப்பே இல்லை! ''ல'', ''ள'', ''ழ'' - என்ன... ''ந'', ''ன'', ''ண'' கூட அவளுக்குத் தகிகினத் தோம் தான்.

பின்னே... வேறு யார்! அப்பா - ம்ஹூம்... நான் எழுதும் பத்திரிகையின் பேர் கூட அவருக்குச் சரியாகத் தெரியுமோ என்னமோ? அம்மா - ஹஹஹா!

சரி... ஐந்து நாட்கள் கண் விழித்தது எனக்கு கண்ணைச் சுழற்றுகிறது! நான் படுக்கப் போகிறேன்!

அந்த ''அகல்யா'' யாராக இருப்பினும், ''அற்புதமான கவிதை'' என்ற பாராட்டைப் பதிலாக அனுப்பிவிட

வேண்டும் - என்ற எண்ணத்துடன் கண்ணயர்ந்தே[illegible]
நான்.

மறுநாள் காலையில் நான் கண் விழித்து, வெளிே[illegible]
வரும்போது பிரதீப்பும் காத்திருந்தான்.

''ஒரு நாள்... உன்னோட ஜாக்கிங் போகலாம்ன்[illegible]
பார்த்தேன். ஜிம் போர் அடிக்குது...'' - என்றவா[illegible]
என்னுடன் ஓடத் துவங்கியவன்,

''என்னடா நீ... ஸ்லோ சைக்கிள் ரேஸா நடக்குது[illegible]
ஆற... அமர ஓடறதுக்கு?'' என்றான் கால் மணி நேர[illegible]
லேயே.

''பூ...மரம்... அம்மாவோட சமையல் மணம்... தூ[illegible]
துல கேட்கிற பெருமாள் கோவில் மணிச் சத்தம்[illegible]
இதெல்லாத்தையும் கேட்டுட்டே ஓடு, பிரதீப்! ரம்ய[illegible]
இருக்கும்! கூடவே... மனசும் ரிலாக்ஸ் ஆகும்!'' எ[illegible]
என் வாதத்தை,

''உன்னோட ஓடினா... எனக்கு அறுபது வயசான [illegible]
ஃபீலிங் வருது! நீ... மெதுவாவே ஓடு... நான் வேக[illegible]
போறேன்'' என்று விட்டு வேகமெடுத்தான்.

இதே போல், பலவற்றிலும் எங்கள் இருவருக்[illegible]
பல்வேறு கருத்து இருந்த போதும், எங்கள் நட்பு மி[illegible]
கிறது என்றால்... அதற்குக் காரணம்... ஹ்ம்ம்... கார[illegible]
சொல்லி வந்தால் நட்பல்லவே! ஆதலால் வே[illegible]
டாம்!

இருவருமாய் எங்களது காலை உடற்பயிற்சி[illegible]
முடித்துக் கொண்டு வரும்போது, ''நான் டிரை[illegible]
கிளாஸ் போறேன். அப்படியே, காலேஜ்க்கும் போ[illegible]



[illegible]வேன்'' என கூடத்திலிருக்கும் தொலைக்காட்சியைப்
பார்த்துப் பேசிவிட்டு, வெளியே சென்றாள் கார்த்திகா.

''ஹோ... இந்த டி.வி. பொட்டி... உங்களுக்கு
உறவாடா... பரணி? சித்தப்பாவா? இல்லை பெரியப்
பாவா? ஒருவேளை... அத்தையோ!'' - செருப்பு மாட்டிக்
கொண்டிருந்த கார்த்திகாவின் காதில் விழும்படி,
முணுமுணுத்த பிரதீப்பும் அவளை முந்திக் கொண்டு
மாடிக்குச் சென்று விட்டான்.

அதன் பின்னர், குளியல், காலை உணவு, ஸ்டாக்
மார்க்கெட் என்று எனது காலை வேளை முழுதும்
பரபரப்பாகச் செல்ல, மதிய உணவின்போது ''பரணி...
ANALYST-கான விளம்பரம்... நம்ம சைட்ல போட்டாச்சு.
ஆன்லைன் அப்ளிகேஷன்ஸ் வருதா பார்க்கலாம்.
அப்படியில்லைன்னா... அடுத்த வாரத்தில் கன்சல்டன்
சிக்கு கொடுப்போம். கன்சல்டன்சின்னா வரவங்களுக்கும்
சிரமம், எடுக்கிற நமக்கும் சிரமம்... பார்ப்போம்'' என்று
தயக்கமும், இழுப்புமாய் விவரம் கூறினான், என் நண்பன்.

எனக்குமே, ஆன்லைன் அப்ளிகேஷன்ஸ் வருமள
வில் எங்களது இணையதளம் ஆராயப்பட வேண்டுமே?
கன்சல்டன்சி மூலமாக வருவதை விட... எங்கள் நிறு
வனத்தின் தகுதியைப் பார்த்துவிட்டு வேலை தேடு
பவர்கள் தானாகவே விண்ணப்பிக்க வேண்டும் என்ற
ஆசை இருந்தது.

அதுவும், இது ஒரு முக்கியமான பதவி! எனது
வேலைகளை அலசி ஆராய்ந்து, குறைகளை எடுத்துக்
[illegible] வேண்டிய வேலை... அதனால், பிரதீப் இதில்
[illegible] கவனமாய் இருப்பான் என்பது என் கணிப்பு!

என் நிலையிலுமே, என்னைவிட மேலானவர் வரும் நிலையில் தான் அவருக்குரிய மதிப்பு இருக்கும் என்ற வாதம் இருந்தது.

நண்பர்களான எங்கள் இருவரது மனதையும் குளிர விக்கும் வண்ணம் - ''பரணி! ANALYST வேலைக்கான விண்ணப்பத்தோட ஒருத்தங்க நேரிலேயே வந்திருக் காங்க. நீ... கொஞ்சம் மேல வாமுடியுமா? ரெண்டு பேருமா Resume பார்க்கலாம்!'' என்றான் தொலை பேசியில் அழைத்த என் நண்பன்.

அவன் குரலில் சந்தோசம் இருப்பதை என்னால் உணர முடிந்தது!

பின்னே, காலையில் கொடுத்த விளம்பரத்திற்கு மதியமே விண்ணப்பம் வந்தால்... அதுவும் நேரில்!

நிரம்பிய புன்னகையுடன் பிரதீப்பின் அறை நோக்கி சென்ற நான், நடை பாதையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த தீபாவைக் கண்டது குழம்பிப் போனேன்!

இவள் எங்கே இங்கே?

டிரைவிங் ஸ்கூல் வைத்திருப்பவளுக்கு இங்கே என்ன வேலை?

நேற்று இரவு நடந்தது எதுவும் இவளுக்குத் தெரியுமோ?

கார்த்திகா... எதுவும் உளறி இருப்பாளோ?

என்னை எப்படி... ''திருடி'' என்று சொல்லலாம் என்று பிரதீப்பின் சட்டையைப் பிடிக்க வந்திருப்பாளோ?

பல கேள்விகளுடன் நான் உள்ளே செல்ல, பிரதீப் அலுவலகப் பணியாளருக்கு ''விண்ணப்பதாரரை உள்ளே அழைத்து வருமாறு உத்தரவிட்டான்.



''என்னடா ஒரு மாதிரி இருக்கே? லேடியா இருக்காங் களேன்னு பார்க்கிறியா?''

''வேலை... சுத்தமா இருந்தா... ஜென்ட்ஸ் என்ன லேடீஸ் என்ன? அவங்க Resume பார்க்கலாம்...'' என்ற வன் ''உள்ளே வரலாம்'' என்ற அனுமதி கொடுத்தும், உள்ளே வந்தவள் தீபஜோதியே தான்.

''உங்க ரெசியூம் கொடுங்க. நாங்க பார்த்திட்டு... எங்க ரெக்யூரிமென்ட்ஸுக்கு ஒத்து வந்தா... இன்டர்வியூ ஷெட்யூல் பண்றோம். எங்களால உடனே சொல்ல முடியாது!'' என பிரதீப் அவளிடம் பேசும்போதே, எனக்கு இங்கே கைகால்கள் பரபரப்பிற்கு உள்ளாகி விட் டிருந்தன.

இவள் கண்டிப்பாக ''ANALYST'' வேலைக்கு வந் திருக்க மாட்டாள் என்று மனம் அடித்துச் சொன்னது!

கார்த்திகாவின் வயதை ஒட்டிய இவள்... இன்னும் காலேஜையே முடித்திருக்க முடியாதே?

அப்படியிருக்கையில் இவள் எப்படி? வாய்ப்பே இல் லையே?

என் எண்ணத்தை வார்த்தையால் வெளியிட்டாள் அந்தவள்!

# 11

''வணக்கம், மிஸ்டர். பிரதீப்! வணக்கம், மிஸ்டர். பரணி!''

''என் பேரு ''தீபஜோதி'' பரணி சாருக்கு என்னை ஏற்கனவே தெரியும். உங்களுக்குத் தான் தெரியாது.''

''பரணிக்குத் தெரியுமா?'' - வியந்தான் நண்பன் என்னிடம் அவனுக்குத் தெரியாத ஒன்றா என்ற வியப்பு

''உங்களுக்குத் தெரியும், மிஸ்டர். பிரதீப்!''

''இல்லையே... உங்களைப் பார்த்த மாதிரியே இல்லையே மிஸ். தீபஜோதி! ஹ்ம்ம்... மிஸ் தானே?''

''ஆமா, மிஸ் தான்! நேரில் பார்ப்பவர்கள் எல்லா உங்களுக்குத் தெரிந்தவர்களா? ரோட்டில ஆயிரம் பே நடந்து போறாங்க... அவங்களைக் கூடத் தா பார்க்கிறீங்க? அப்போ... அவங்கெல்லாம் உங்களுக்கு தெரிந்தவர்களா?''

''அப்படியில்லை. உங்களைப் பத்தி கேள்விப்பட்ட மாதிரி கூட இல்லையே?''

''கேள்விப்பட்ட மாதிரி இல்லையோ? என்ன சார் இப்படிச் சொல்லிட்டீங்க? நேத்து நடந்த ரசா அ ஷேகத்தின் சூத்திரதாரியே நான்தான்... அப்படியிருக்கு போது!''

''ஹோ... நீங்க! ஆனா... நீங்க டிரைவிங் ஸ்கூ வச்சிருக்கிறதா தானே... கார்த்தி சொன்னா? இ எப்படி? நாங்க கேட்டது அனுபவமுள்ள ஒரு கணி பொறியாளர்! உங்களுக்கு அனுபவம் என்ன... கணி என்றாலே காத தூரம் இருக்கும் போலவே? எதுக்கு தேவையில்லாம... எங்க நேரத்தை வீணடிக்கிறீங்க இதுல பொய்... வேற! சை! ப்ளீஸ் வெளிய போங் மேடம்!'' - பிரதீப்பின் குரல் எல்லையைக் கடக்க போகிறது என்பதன் அறிகுறி எனக்குத் தெரிந்தது.



''கண்டிப்பா சார். ஆனா... எனக்கு உங்ககிட்டக் கொஞ்சம் பேசணும். உங்களோட வெப்சைட்-ல இந்த விளம்பரத்தைப் பார்த்தேன்... பிடிச்சது... அதையும் பாராட்டிட்டு... கொஞ்சம் பேசிட்டும் போகலாமே என்று தான். ப்ளீஸ் சார். ஜஸ்ட் அஞ்சு நிமிஷம் ப்ளீஸ்...''

பிரதீப்பிடம் பதிலே இல்லை! மௌனம் சம்மதம் என்று எடுத்துக் கொண்டவள் போல்... தீபா பேசினாள்.

''என்னால உங்க வீட்டில நேத்து பெரிய பிரச்னை உருவாகி இருக்கிறதா... கார்த்தி சொன்னா!''

''எப்பவும்... ரெண்டு வார்த்தையில திட்டிட்டு விடுற அங்கிள் கூட... அதிகமா திட்டிட்டாங்கன்னு சொன்னா!''

''அவங்க அண்ணன் பேசவே இல்லையாம்!''

இந்த இடத்தில், பிரதீப்பின் கடிபட்ட பற்கள் எதையோ சொல்லத் துடித்ததை சமயத்தில் உணர்ந்த நான், அவனை அழுத்திப் பேசாதிருக்குமாறு கூறினேன்.

எங்களது மௌனப் பரிமாறலைக் கவனிக்காதவள் போல், தீபா சிறு இடைவேளையின் பிறகு பேசத் துவங்கினாள்.

''அவ முகத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கலை. என்னாலே தானே இந்தப் பிரச்சனை... என்னைப் பத்தின விவரங்களை உங்ககிட்ட சொன்னா... உங்களுக்கு என் மேல ஒரு நம்பிக்கை வரலாம் இல்லையா? அதான் வந்தேன்!''

''உங்க ஆபீஸ் பையன்கிட்ட சொன்ன மாதிரி... நான் கம்ப்யூட்டர்-ல மேதை கிடையாது! சொல்லப்போனா... நான் ஒரு டிகிரி கூட முடிக்கலை. + 2 தான் முடிச்சிருக்கேன்.''

''ஹ்ம்ம். அது முக்கியமில்லை. எங்க குடும்பத்தை பத்தி சொல்லிடுறேன். அதான் முக்கியம்.''

''குடும்பம் - ஹ்ம்ம் குடும்பம் மாதிரின்னு வச்சு கோங்களேன்.''

''எங்கம்மா நான் பத்தாவது படிக்கும் போதே இறந் போய்ட்டாங்க. அதுக்கு அப்புறம், அப்பாவும் நானு அத்தை வீட்டுக்கு வந்துட்டோம்.''

''அத்தை வீடு - துடியலூர்-ல இருக்கு. அட்ர வேணும்னாலும் சொல்றேன் நோட் பண்ணிக்கோங்க...

''அத்தை பேர் - பரிமளம். மாமா பேர் - மாரிச்சாமி அவங்களுக்கு ஒரு பையன். ஒரு பொண்ணு. பொண் ணுக்குக் கல்யாணம் ஆகிடுச்சு. பையன்... சென்னையி இருக்க ஒரு பெரிய கம்ப்யூட்டர் கம்பெனி-ல வேலை குப் போறான்.''

''ஹான்... மறந்துட்டேன். எங்கப்பா பேர் - சோ நாதன்! ஸ்டேட் கவர்மென்ட்-ல லேபர் டிபார் மென்ட்-ல வேலை செய்றார்.''

''நான் அதிகம் படிக்காததால... எங்க மாமா வச்சிரு டிரைவிங் ஸ்கூலேயே லேடி டிரைவரா இருக்கேன்.''

''எனக்கு அதிகமான நட்பு வட்டமில்லை. இப்போ கொஞ்ச நாளா தான்... கார்த்திகா பழக்கம்!''

''கார்த்தியை எனக்குப் பிடிச்சிருக்கு சார்... இத்தனை வருஷத்தில நான் மனசு விட்டுப் பேசின ஒரே ஆ அவ தான் சார்!''

''எப்பவுமே, என் கஷ்ட நஷ்டங்களை... நான் ய கிட்டவும் பகிர்ந்துகிட்டது இல்லை. இது வெறும் வா வார்த்தையில்லை. அப்பட்டமான நிஜம்!



''ஆனா, ஒரு வாரமே பழகின கார்த்திகிட்ட சொல்லி யிருக்கேன்னா... அவ ஸ்பெஷல் தானே?''

''என்னோட கஷ்டங்களைப் பார்த்துப் பரிதாபப் படாம... என்னை மாதிரியே அதை சாதாரணமா எடுத் துக்கிற அவளோட மனப்பான்மை... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு! ப்ளீஸ் சார்... என்னைப் பத்தின இந்த விவரம் உங்களுக்குப் போதுமா? அவளோட நான் பழ குறதுக்கு... அனுமதி கொடுங்க சார்! ப்ளீஸ்!'' என அவள் முடித்தபோது, குரல் கெஞ்சிற்று.

''இந்தாங்க... எங்க அத்தை வீட்டு அட்ரஸ். நீங்க வேணும்னா... அங்க விசாரிங்க... டிரைவிங் ஸ்கூல் பக்கத்தியும் விசாரிங்க...''

''நீங்க நினைக்கிற மாதிரி... ரொம்ப மோசமான ஆள் இல்லை சார்.''

''கொஞ்சம் வாய் ஜாஸ்தி... அவ்வளவு தான்!''

''இந்த வாயை அடக்க... எங்க அத்தை என்னென் னவோ செய்து பார்த்தாங்க... சூடு கூட வச்சாங்க. ரைட்டுக்கான சிக்னல் வந்ததும் - லெப்ட்-ல கை போட்டு, ரைட்-ல இன்டிகேட்டர் போட்டு... நான் ஒரு மாதிரி திரும்பினதில தான், சூடு வாயில படாம... அப்படியே கொஞ்சம் இடமாறி கன்னத்தில பட்டுடுச்சு!''

''அது தவிர என்கிட்ட எந்தவிதமான கெட்டப் பழக்கமும் கிடையாது! தண்ணி... தம்மு கூட கிடையா தன்னா பார்த்துக்கோங்களேன்!''

''ஒரு புது மனுசியான என் மேல... உங்களுக்கு வந்த சந்தேகத்தை நான் தப்பு சொல்லலை. அது கரெக்ட்

தான்! அதை நிவர்த்திப் பண்றது என் கடமைன்னு தோணுச்சு... அதைவிட கார்த்தியோட அழுது வீங்கின முகம்... பார்க்கவே சகிக்கலை... அதான் வந்தேன்'' என்றவள், மெல்ல எழுந்தாள்.

''உங்க நேரத்தை வீணாக்கினதற்கு... சாரி!''

''என்னோட பேச்சைப் பொறுமையா கேட்டதற்கு... தேங்க்ஸ்!'' என்றதோடு அவள் வாயிலுக்கு நகர,

''ஒரு நிமிஷம், நில்லுங்க! மிஸ். தீபஜோதி!'' என் றான் பிரதீப்.

ஹய்யோ... என்னடா சொல்லப் போகிறாய் என்று நான் திகிலுடன் காத்திருக்க,

''கார்த்தியோட அழுது வீங்கின முகத்தைப் பார்க்க சகிக்கலைன்னு சொன்னீங்களே? அவளோட சாதாரண முகத்தைப் பார்க்க முடியுதா?'' என்றான் முதலிலிருந்த தீவிரக் குரலிலே!

''ஹே!'' என்ற கூவலுடன் திரும்பியவளின் முகத்தில் மின்னல் கீற்று. எனக்கும் ஆனந்தமாகவே இருந்தது!

''ஆஹா! ரச அபிஷேகம் குளிர்ச்சியா இருந்ததா... அடுத்து குழம்பு அபிஷேகத்திற்கு அடி போடற மாதிரி இருக்கே?'' என அவள் சிரிக்கவும், அங்கே இறுக்கம் தளர்ந்தது.

பிரதீப் ஓர் புன்னகையையே பதிலாய் கொடுக்க ''தேங்க்ஸ்! சாயங்காலம்... கார்த்தியைப் பார்க்க வீட்டுக்கு வரேன்'' என்றதோடு வெளியே சென்றவள் சட்டென தலையை உள்ளே நீட்டி எட்டிப் பார்த்தாள்.

''மிஸ்டர். பரணி! உங்களை... நான் எந்த விதத்திலும் குறைவா நினைக்கலை. சொல்லப் போனா... ரொம்ப



ரொம்ப ரொம்ப உயர்ந்த இடத்தில வச்சிருக்கேன். அதனால், என்னையும் உங்க பிரண்ட் மாதிரி நினைச்சுக்கோங்க. உங்களுக்கு சங்கடம் வர மாதிரி... நான் நடந்துக்கவே மாட்டேன்! ஓகேவா!'' என்றாள் புன்னகையுடன்.

நான் ''சரி'' என்ற வார்த்தையை முடிப்பதற்குள்,

''உங்க கம்பெனி-ல எனக்கு வேலை தர மாட்டேன்னு துரத்திட்டீங்க தானே? இருங்க... இருங்க... இதை விடப் பெரிய கம்பெனி-ல வேலைக்குச் சேர்ந்து... உங்களையெல்லாம் என் முன்னாடி கைகட்டி நிற்க வைக்கிறேன்'' என்ற சவாலுடன் பறந்து விட்டாள் அந்தவள்.

அவள் சென்றதும்... ''ஒரு விசித்திர ''ஜந்து'' வந்திட்டுப் போன மாதிரி... இல்ல'' என்றான் பிரதீப்.

ஆனால், எனக்கோ ''என்னோட கஷ்டங்களைப் பார்த்துப் பரிதாபப்படாம'' என்ற அவளது வார்த்தையிலேயே மனம் சுழன்று கொண்டிருந்தது.

அதிலும் அவளது குட்டுத் தழும்பிற்கு அவள் கொடுத்த விளக்கத்திலேயே நின்று, சண்டித்தனம் செய்தது மனம்.

அவளது கூற்றிற்கும் ஆறு வருடங்களுக்கு முன்னர் கேட்ட அலறலுக்குமான வித்தியாசத்தை வேறு மனம் ஆராயத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால், அதிலேயே உழன்று கொண்டிருக்கும் நிலையிலா - என் வேலைகள் இருக்கின்றன? என்னை 'ஈசன்' ஆக்கிய எழுத்து உலகத்திலிருந்து அழைப்பு வந்துவிட...

இந்த வாரத்திற்கான 'வணிகத்தில் வெல்லலாம்' கட்டுரையை எழுத ஆயத்தமானேன், நான்.

என் மனதையும் மூளையையும் சோம்பி இருக்கச் செய்தால், அவை கண்டதையும் யோசித்துத் தேவை யற்ற மன வருத்தத்திற்கும், தெய்வ நிந்திப்பிற்கும் என்னை ஆளாக்குகின்றன என்ற எண்ணத்தில் வேலை களின் வலையில் என்னைப் பிணைத்துக் கொண்டது பல சமயங்களில் உதவியாய் இருந்தாலும்.... இது போன்ற சிற்சில சமயங்களில் "வேலை இருக்கிறதே!" என வருந்த வைக்கிறது!

வேலையில் சலிப்புத் தட்டிவிட்டால் - அதுவும் எழுத்துப் பணியில் சலிப்பு என்ற பேச்சு வரின், எழுதும் கட்டுரையில் ஓர் தாக்கம் இருக்காது என்பது என் அனுபவம்! அதுவும், பலதரப்பட்ட மக்கள் வாசிக்கும் பத்திரிகையில் போடும் கட்டுரையை மிகுந்த கவனத் துடன் எழுத வேண்டுமல்லவா? என் வணிகத் துணுக் களை வைத்து, பலர் வியாபாரம் செய்கின்றனர் எனும் போது கூடுதல் கவனமும், முழு ஈடுபாடும் தேவையல் லவா? ஆதலால், மனதை ஒரு நிலைப்படுத்த எண்ணி னேன்!

இந்த உலகத்தில் - ஓர் மனிதனின் மனசை லேசாக்கி அவனை நன்றாக உணர வைக்கும் முதல் ஆள் - அ னையல்லவா?

தன் ராஜ்ஜியமான சமையற்கட்டில் நின்றிருந் அம்மாவிடம் போய் நின்ற என்னை விநோதமாய் பா தார் அம்மா.

"பசிக்குதா பரணி?" - எப்போதும் போல் என் வயி அவரது பிரதான குறியாயிற்று!



"இல்லைம்மா... சும்மா பேசிட்டு இருக்கலாம்ன்னு."

"வேலை எதுவும் இல்லையாப்பா?"

"இருக்கே! ஆனா... அதுக்கு முன்னாடி... சும்மா ரிலாக்சேஷனுக்கு."

"அப்படியா? சமையல் கட்டில... என்ன ரிலாக் சேஷனோ? சரி... சரி.... ஏதாவது சாப்பிட்டுட்டே பேசேன்."

"ஒண்ணும் வேண்டாம்! சாயங்கால டிபனுக்கு ரெடி பண்றீங்களா? என்ன டிபன்?"

"கொத்து பரோட்டா போடலாம்ன்னு பார்த்தேன். உனக்கும்... பிரதீப்புக்கும்... அந்த ரோட்டுக் கடை பரோட்டான்னா அப்படியொரு மோகமா இருக்கில்ல... அதான் டி.வி.ல பார்த்து செய்யலாம்ன்னு."

"ஹ்ம்ம் சூப்பர்! நானும் ஹெல்ப் பண்றேன்! நான் செய்ற ஹெல்ப்புக்கு பரிசா... எனக்கு நிறைய கொத்து பரோட்டா தரணும்... என்ன ஓகேவா?"

"நீ... ஹெல்ப் பண்ணலைன்னாலும் தருவேன்டா, ராஜா! நீ... ஒண்ணும் பண்ண வேண்டாம். சும்மா... இந்த அடுப்பு மேடை மேல உட்கார்ந்து... அம்மாகிட்டப் பேசிட்டு இரு. அது போதும்!"

"அட... என்னம்மா!? கார்த்தி... வேலை செய்ய லைன்னா மட்டும்... அவளை என்ன திட்டுத் திட்டு றீங்க? என்னை மட்டும் செய்ய வேண்டாம்ன்னு சொல் றீங்க? நான் மட்டும் என்ன ஸ்பெஷல்?! நானும் செய் றேன்!"

"அடடா... உன் தங்கச்சியைத் திட்டிட்டு... நான் இந்த வீட்டுல இருக்க முடியுமா?"

''உங்களைத் திட்டாதீங்கன்னு யாரு சொன்னா? நானோ... அப்பாவோ... ஏன் பிரதீப்போ கூட சொன்னதில் லையே?''

''நீங்க யாரும் சொல்ல வேண்டாம்... அவ ஒருத்தியே போதும்! ஒரு வேலை... செய்யச் சொன்னா... நமக்குப் பத்து வேலை வச்சிடுவா... நேத்துப் பார்த்தியா... பிரதீப் மேல பரிமாறுன்னு ஒரு வேலை சொன்னதற்கு, பிரதீப் மேல தட்டைத் தள்ளி... ரசத்தைக் கொட்டி... ப்ச்... பொம் பளைப் புள்ளைக்கு இவ்வளவு கோபம் ஆகாது. பரணி பிரதீப்புங்கிறதால பொறுத்துப் போறான்... இதுவே... வெளியிடத்தில கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தா... நாலே நாளில் பொட்டியைக் கட்டிட்டு நம்ம வீட்டுக்கு வந்திருப்பா!'' - ஒரே மூச்சில் புலம்பி முடித்தார் அம்மா.

''ஹ்ம்ம். உன் குணம்... அவளுக்கு இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும்! துளியும் பொறுமையில்லாம, சட்டு சட்டுன்னு கோபம் வந்துடு!'' - மேலும் தொடர்ந்த புலம்பல்.

''அடடா! அவளுக்கு இருபது வயசு தான்மா ஆகுது... அதுக்குள்ளே... எதுக்கு இப்படி அலுத்துக்கிறீங்க?''

''இருபதுனாலும்... அடுத்த வருஷம் கல்யாணம் பண்ணணுமே?''

''இன்னும் ஒரு வருஷம் இருக்கேமா... அதுக்கு ஏன் இப்பவே கவலைப்படுறீங்க? அதுவும்... பிரதீப் மாதிரி ஒரு மாப்பிள்ளை இருக்கும் போது கவலைப்படலாமா?''

''ஹ்ம்ம்... அதுவும் சரிதான்! ஆனா... பிரதீப் சொல் தில இருக்க நல்லதைப் புரிஞ்சுக்காம... சண்டைக்கு நிக்குறாளேடா...''



''அவ புரிஞ்சுக்கலைன்னா என்ன? அவ பிரண்ட் புரிஞ்சுகிட்டாளே!''

''என்னடா சொல்றே?''

''ஆமாம்மா! அந்தப் பொண்ணு... ''தீபஜோதி'' இன் னைக்கு ஆபீஸ் வந்திருந்தா...'' எனத் தொடங்கி முழு விவரமும் சொல்லி முடித்தேன்.

''பரவாயில்லை... நல்ல பெண்ணா தான் தெரியுறா? என்னை எப்படி சந்தேகப்படலாம்ன்னு சண்டைக்கு வராம... சில பேரு கார்த்தியோட பேசாம கூட இருந்திருப் பாங்க... அதெல்லாம் இல்லாம, அவளே வந்து எல்லா விவரமும் கொடுத்திருக்காளே? நல்ல பொண்ணு தான் இல்லையா... கண்ணா!''

''ஹ்ம்ம்... ஆமாம்மா! சரி....சரி... இப்படியே பேசிட்டே இருக்கப் போறீங்களா? பரோட்டா போடலையா?''

''ஐய்யோ.... ஆமா, இரு நோட்-ல செய்முறை குறிச்சு வச்சிருக்கேன். எடுத்திட்டு வரேன்'' என கூடத்திற்கு ஓடி யவர், அடுத்த நிமிடம் கையில் ஓர் நோட்டுடன் வந் தார்.

''வரிசையா படிச்சுக் காட்டிறியா? அம்மா செய்றேன்...'' என் கையில் நோட்டைக் கொடுத்துவிட்டு, அடுப்பு மேடையை சுத்தம் செய்யத் துவங்கினார்.

அவர் வேலை முடிக்கும் வரை காத்திருந்தேன் நான் அம்மாவின் கையெழுத்தை ஆராய்ந்தபடியே!

குண்டு குண்டாய் சாம்பார் வெங்காயம் மாதிரி இருந்தது! நூறு பக்கமிருந்த நோட்டில்... பக்கத்திற்குப் பஞ்சம் ஏற்பட்டது போல், அந்த குண்டு எழுத்துக்கள்

ஒன்றோடு ஒன்று சண்டையிட்டவாறே, நெருங்கி அமர்ந்ததில், ஒரே பக்கத்தில் குறிப்பு முடிந்திருந்தது.

அம்மாவின் தோள் தொட்டு, "நீங்க எழுதினது... ஒண்ணுமே புரியல. நீங்களே படிங்க" என்றேன், நான்.

"போடா... சும்மா கிண்டல் பண்றே... தானே? சமையல் கட்டு வாசலில் நின்னு பார்த்தா கூட... உங்க குண்டு எழுத்து என் சின்னக் கண்ணுக்குத் தெரி யுதுன்னு கார்த்தி கேலி பண்ணுவா... நீ என்னடான்னா?" வெள்ளையாய் சிரித்தாலும், அம்மாவே படிக்கத் தொடங்கினார்.

அவர் சொல்லச் சொல்ல, ஒவ்வொன்றாய் நான் செய்ததில் அரை மணி நேரத்தில் பரோட்டாவுக்கான மாவு தயாராகி விட்டிருந்தது.

"மாவு - ரெண்டு மணி நேரம் ஊறணுமாம். அதுக் குள்ளே... குருமா செய்துடலாம்" என்ற முடிவுடன், நானும் அம்மாவும் கோழியை ஒரு கை பார்க்கத் தயா ரானோம்.

நடுவில் "வேலை இருந்தா... நீ போ பரணி! அம்மா பார்த்துக்கிறேன்" என அம்மா என்னை அனுப்ப முற்பட

"ம்ஹூம். இப்போ எனக்கு கட்டுரையை விட கோழி மேல தான் ஈடுபாடு அதிகமா இருக்கு... முடிச்சிட்டே போறேன்" என்று வேலையில் ஆழ்ந்தேன் நான்.

இடைப்பட்ட நேரத்தில்... நானும் அம்மாவும் என்ன பேசினோம் என்று கேட்டால் - கார்த்திகா / பிரதீப் அப்பா என்று தொடங்கி, தெருவில் வசிப்பவர் வீட்டு விசேஷங்கள் என்று பயணித்து, புதிதாய் ஆரம்பித் திருக்கும் "பிரிவோம் - சிந்திப்போம்" என்ற தொலைக்



காட்சி தொடரைப் பற்றி பேசி, வராத நல்ல தண்ணி, ரேஷனில் கொடுக்கும் பருப்பு வகைகளின் குறைந்த விலை மற்றும் நிறைந்த தரம், அரசியல் என்று பல்வேறு துறையிலும் பயணித்து வந்தது.

வீட்டிற்குள் இருப்பவர் தானே? பல விஷயங்கள் தெரியாது என்று யாரும் எண்ணிவிட முடியாத அள விற்கு, அம்மாவின் உலக அறிவு நான் மெச்சும் படியே இருந்தது.

அம்மாவின் பேச்சுக்களை ரசித்துக் கொண்டே இருந்த என்னுள், இதுபோல் வாரத்திற்கு ஒருமுறை அம்மாவும் நானுமாக நேரம் செலவழிக்க வேண்டுமென எண்ணிக் கொண்டேன்.

ஒருவழியாக குருமா செய்து முடித்துவிட்டு, பரோட்டாக் களை லாவகமாக இட்டு நான் கொடுக்க, அம்மா கல்லில் போட்டு எடுத்து முடித்திருந்தார்.

"இந்தக் கடையில எல்லாம்... பரோட்டா போட்டதும் மொத்தமா வச்சு... ரெண்டு கையால தட்டுவாங்க இல்ல. அது மாதிரி தட்டு பரணி" என அம்மா சொல்லிக் கொண்டிருக்கும் போது, கார்த்தியின் "உண்ணா மேடம்! அன்னம் உண்ணாமல் என் வயிறு உண்ணாவிரதத்தில் இருக்கிறது. அன்னமிட்டு... அதை உண்ண வையுங் கள்" என்ற குரல் வீட்டு வாசலில் கேட்டது.

"கார்த்தியா இது? நேத்து... உங்கப்பா திட்டின திட் டுக்கு... இன்னும் ஒரு மாசத்துக்கு மூஞ்சியைத் தூக்கி வச்சிட்டு இருப்பான்னு நினைச்சேனே? என்னடா இது?" - அம்மா வாய்விட்டுச் சொல்லிவிட்டார். நான் சொல்லவில்லை அவ்வளவுதான்!

இருவருக்குமே ஆச்சரியம் தான்!

# 12

எங்கள் ஆச்சரியத்தை மேலும் கூட்டும் வண்ணம்
''எங்க ஆத்துக்காரர் செம பசியோட இருக்கார் போல
மாப்பு கேட்கப் போன என்னைப் பிராண்டிட்டார் உ
மாப்பு! அதனால... சீக்கிரமா அவருக்கும் ஏதாவ
சாப்பாட்டைக் கொடுங்க!'' என்ற வாக்கியம் வே
கார்த்தியிடமிருந்து வந்தது.

அதற்குள், சமையற்கட்டினுள் நுழைந்திருந்த கா
திகா - ''என்னதிது? கோழி குழம்பு வாசனை ஊ
தூக்குது? என்ன நடக்குது இங்க...? எழுத்தாளர் சா
உங்களுக்கு எலும்பும் குழம்பும் மிதக்கிற இடத்
என்ன வேலை?'' என்றாள் என் மேல் வந்து சாய்
கொண்டு.

''என்ன அழகா... ரைமிங்-கா டைமிங்-ல பேசுறே
உன் அளவுக்கு இல்லைன்னாலும்... நல்லாத்தா
பேசினேன்? ஒரு வார்த்தை... ஒரு வரி... ஒரு பத்
ஒரு பக்கம்... ப்ச் பாராட்டே கிடையாதா!'' சரிய
கஞ்சனப்பா நீ... கொஞ்ச நாளைக்கு உன் ப்ரண்டே
சேராம இரு... திருந்திடுவே'' என எனக்கு அறிவு
வேறு!

''என்னாச்சு... கார்த்தி? நல்லாத் தானே இருக்கே
என அம்மா அவள் நெற்றியில் கை வைத்துப் பார்க்க
பக்கென சிரித்துவிட்டேன் நான்.



''எதுக்கு... இப்போ சிரிக்கிறே? என்னடா இவ... ஒரு
மாசத்துக்கு மூஞ்சியை நீட்டிட்டு இருப்பான்னு பார்த்தா...
ஒரு நாள் கூட ஆகலையே? இப்படி... ஜாலியா சுத்தி
வாராளேன்னு தானே? ஹ்ஹஹா! அதெல்லாம், என்
...ப்பு செய்த மாயம்!'' - கார்த்தியின் குரல் சிரித்தது.

''தீபா... ரொம்ப ஸ்வீட் மா! நான் பண்ணினது தப்பு...
பிரதீப்பும் அப்பாவும் பேசினது எவ்வளவு சரி... ஒரு
...ணாம் மனுஷியை அவங்க சந்தேகப்பட்டதில் என்ன
...ப்பிருக்கு? உன் மேலையும்... உன் அண்ணா மேலை
...ம் இருக்க அக்கறையில் அவங்க கேட்டதுக்கு... நீ
...ழுங்கா பதில் சொல்லியிருக்கணும். அப்படியில்லாம,
...ப்படி செய்துட்டு வந்தது தப்புன்னு... செம அட்
...வைஸ். நீ சொல்லாததை... நானே உங்க வீட்டில
...க்கியமா பிரதீப்கிட்ட சொல்லிடுறேன்னு சொன்னா!
...து மாதிரி... இங்க வந்து பேசியிருப்பான்னு நினைக்
...றேன். எனக்குமே... அவ சொல்றது சரின்னு பட்டதா...
...தான் அப்பா கிட்டயும் பிரதீப்கிட்டயும் சாரி கேட்
...டேன்!'' என நீளமாய் பேசி முடித்ததோடு அந்தப் பிரச்
...னை முடிந்தது.

''...சமத்து!'' என அம்மா அவளது கன்னம் வலித்துக்
...ஞ்ச, அங்கே அமைதி நிலவியது.

ஆனால், ஐந்து நிமிடங்கள் தான்!

''என்ன சாப்பாடு? முட்டை பரோட்டாவா? சூப்பர்!
...ட்டாச்சா? இதென்னா... பரோட்டா தனியா... முட்டை
தனியா... குருமா தனியா இருக்கு... எல்லாம் சேர்ந்தா
தான் முட்டை பரோட்டா வரும்... அடடா... இதைக்கூட
...ன் தான் சொல்லணுமா'' - பெரும் அலும்பலுடன்
...மானது அடுத்தக் கட்ட வேலை.

பரோட்டாவை பிய்த்துப் போட்டு... நான் கொத்தி
கொண்டு இருக்கும் போது, வெளியே அரவம் கேட்டது

''கார்த்தி'' என்ற தீபாவின் குரலைத் தொடர்ந்து
கார்த்திகா செய்து கொண்டிருந்த வேலையை விட்டு
விட்டு வெளியே ஓடிவிட்டாள்.

சில நிமிடம் பலத்த சலசலப்பிற்குப் பின்னர் (தோழி
களிடையே தான்) ''அம்மா... நான் என்னோட ரூம்க்கு
போறேன்'' என்ற நான் சத்தமின்றி என் அறைக்குள்
நுழைந்து கொண்டேன்.

கணினி ஒரு புறமும், காகிதம் ஒரு புறமுமாக நா
எழுத ஆயத்தமான போது, ''ஹலோ, பரோட்டா
மாஸ்டர்! நீங்க போட்ட பரோட்டாவை நீங்களே சா
பிடாம வந்தா... எப்படி? எங்களுக்கெல்லாம் ஒ
உத்திரவாதம் வேண்டாம்? இந்தாங்க சாப்பிடுங்க'' எ
ஓர் தட்டை நீட்டியது, என் தங்கையல்ல! தீபா!

நான் விழித்துக் கொண்டிருக்கும் போதே, ''நா
என்ன... அவ்வளவு பயங்கரமாவா இருக்கேன்? என்னை
பார்த்து... ஏன் பயப்படுறீங்க? நான் வந்ததும்... ரூம்
போய் அடைஞ்சுட்டீங்க? என்னை பிரண்ட் மா
நினைங்கன்னு சொன்னேன் தானே?'' என அடுத்தது
விழுந்தது அதட்டல்.

''ம்ம்'' என நான் மண்டையை உருட்டும் போதே
''ஒரு மார்க்கமா தான் இருக்கீங்க!'' எனக் கன்ன
உருட்டிவிட்டு, வெளியே ஓடினாள் அவள்.

நேற்று தானே... வீட்டிற்கு வந்தாள்? அதற்கு
அதிக உரிமை எடுப்பது போலிருக்கிறதே? என ம
முரண்டு செய்ய,



அதே சமயம் - நேற்று அவளைப் பற்றி பேசியது தெரிந்தும், அந்த சங்கடமின்றி பழகும் அவள் தன்மை நன்றாக தானே இருக்கிறது என்றும் மனம் எண்ணியது.

அவளைப் பற்றிய ஆராய்ச்சியிலிருந்த மூளை... எப்போது கட்டுரையின் புறம் திரும்பியது என்று தெரியவில்லை. ஆனால், திரும்பிவிட்டிருந்தது.

ஒன்றரை பக்கக் கட்டுரைக்கான துணுக்குகள் யாவற்றையும் எடுத்து முடித்திருந்தபோது, தீபாவும் விடைபெற வந்திருந்தாள்.

அதன் பின்னர், தீபாவின் வருகை அதிகமானது. வாரத்தில் இரண்டு முறையாவது தீபா எங்கள் வீட்டிற்கு வருவது என்பது நடைமுறையாகியிருக்க, பிரதீப் உட்பட அனைவருமே அவளிடம் நன்றாக பேசிப் பழகினோம்.

இப்படியாக மாதங்கள் பல உருண்டோட, ஒரு நாள் மாலையில் ''வணிகத்தில் வெல்லலாம்''க்கு வந்திருந்த கடித உறையுடன் சமையற்கட்டிற்குள் நுழைந்தேன்.

சமையற்கட்டிற்கு எதற்கு என்று தானே நினைக்கிறீர்கள்... பசிக்குதுங்க... கொறிக்க ஏதாவது எடுத்துக் கொண்டு அறைக்குள் போக எண்ணி, உள்ளே நுழைந்தேன்.

சமையலறை வாயிலை நான் எட்டியபோது, சமையலறையிலிருந்து வெளித் தோட்டத்திற்குச் செல்லும் கதவின் அந்தப் பக்கம்... அம்மாவுடன் பெண்கள் இருவரும் அமர்ந்திருப்பது தெரிந்தது.

ஹோ... இன்று தீபா வந்திருக்கிறாளா? அவளைப் பார்க்கவே இல்லையே!

முதற்படியில் அமர்ந்திருந்த அம்மாவின் முதுகு... கீழே அமர்ந்திருந்த கார்த்திகாவையும் தீபாவையும் மறைத்திருந்த போதும், அவர்களின் குரல் கேட்டது. முக்கியமாக தீபாவின் குரல்.

அதுவும் ''எங்கம்மா மாதிரியே கேட்கிறீங்க... அம்மா! அம்மாக்கு அப்புறம்... என் வயிற்றைப் பத்தி... சொல் லப்போனா என்னைப் பத்தியே... யாரும் கவலைப்பட்ட தில்லை!'' என்ற வாக்கியம் தான் முதலில் கேட்டது.

''ஏன்மா... உங்கப்பா கேட்கமாட்டாரா?''

''ஹ்ம்ம்... அப்பா... அம்மா இருக்கிற வரைக்கும் எனக்கு அவரை எப்படித் தெரியுமா தெரியும்? ராத்திரி பத்து மணிக்கு வந்திட்டு... காலையில எட்டு மணிக்கு வீட்டை விட்டுப் போற ஒரு ஆளா தான்.''

''அவருக்கு... அவருக்குன்னு ஒரு தனி உலகம் ம... அதுக்காக... குடிச்சிட்டு வந்து அம்மாவை அடிப்பாரு... ரேஸுக்குப் போவாரு... வேற பெண்ணோட தொட... பிருக்கு... இப்படி எதுவுமே... எதுவுமே கிடையாது... ஆனா, அவரு ஒரு தனிப்பட்ட மனுஷன். அவரு சம்... பாதிக்கிற காசு... அவருக்கு மட்டும் தான்! குடும்பங்கி... அமைப்பில இருக்க பெண்டாட்டி... பொண்ணு... யாருக்கும் அவரோட சம்பளத்தை அவர் தரமாட்டார்... சம்பளத்தை விடுங்க... சோகம்... சந்தோசம்... எதையு... பகிர்ந்துக்கமாட்டார். அவர் ஒரு தெய்வப் பிறவிம்மா... எனக்கு ரொம்ப நாளா... இவரைப் பெத்தாங்களா... இல்லை... செஞ்சாங்களான்னு செம டவுட்'' - ஓர் பெரி... இழப்பைப் பற்றி சொல்லிவிட்டு, முடிவில் அவ... சிரிக்கவே செய்தாள்.



''அம்மா... இறந்தப்போ... அவங்களுக்காக ரெண்டு சொட்டு கண்ணீர்கூட அவர் விடலைன்னா பார்த்துக் கோங்க! என்ன ஒரு வாழ்க்கை... ப்ச்!''

''உங்க அத்தை? இந்தச் சூடு கூட... அவங்க வச்சதா தான்... தம்பி சொன்னான்!'' - அம்மாவின் குரல் லேசாய் தடுமாறி இருந்தது. பிறரது சொந்த விஷயத்தில் தலை யிடக் கூடாது என்ற அப்பாவின் அறிவுரை - அம்மாவின் மூளைக்குள் நுழைந்து, தயக்கத்திற்கு வழிவகுத்திருக்கும் என்று தோன்றியது.

''சூட்டுத் தழும்பு - அது ஒரு காமெடிமா... அதை அப்புறம் சொல்றேன். நான் செஞ்ச... துடுக்குத்தனத் திற்கு என்னை வீட்டை விட்டு விரட்டாம விட்டதே பெருசாக்கும்...''

''நீங்க நினைக்கிற மாதிரி... அத்தை ரொம்பக் கொடு மைக்காரி எல்லாமில்லை... சீரியல் வில்லி ரேஞ்சுக்கு நினைக்காதீங்க!''

''ஒரு சாதாரணக் குடும்பத் தலைவி! தன் குடும்பம்... தன் கணவர்... தன் குழந்தைகள்... என்ற எண்ணம் கொண்ட ஒரு சாதாரண மனுஷி!''

''அவங்களுக்கு இருந்த குறைஞ்ச வருமானத்தில்... ரெண்டு பிள்ளைங்களைப் படிக்க வைக்கிறதே பெரிய விஷயம்... இதில் தம்பி பொண்ணு வேறன்னா... யாருக் குமே கணக்கமா தானே இருக்கும். இதில் ஒரு தனி ப்பாசாலிடியா... எங்கப்பாவுக்கே என் மேல அக்கறை இல்லை...''

''அம்மாவுக்குப் பெத்த கடமை... புருஷன் காசு தரலைன்னாலும் நாலு இடத்தில வீட்டு வேலைப் பார்த்து... என்னை வளர்த்தாங்க...''

''எங்க அத்தைக்கு என்ன சொல்லுங்க?''

''முதல் ரெண்டு வருஷம்... எங்கம்மாகிட்ட பண்ற மாதிரியே... அத்தைக்கும் எந்த காசும் கொடுக்கலை... அவர் வெளிய சாப்பிட்டு விடுவார்... தூங்க மட்டும் தான் வீட்டுக்கு வருவார்... அவர் இருக்கும் நேரத்தில எங்க அத்தையும் மாமாவும் டிசைன் டிசைன்னா திட்டு வாங்க. ஆனாலும்... மனுஷன் செம ஸ்டடி! எல்லாத் தையும்... முகத்தில் ஒரு ரீயாக்ஷன் கூட காட்டாம கேட்டுப்பார். ஆனா நான்!?''

''அத்தை... ஒரொரு வேலை சாப்பாடு வைக்கும் போதும்... திட்டிட்டே இருப்பாங்க. ஆனா, ரோஷத்தை பாத்தா... பசியை என்ன பண்றது?''

''உங்க பையனும் மருமகனும்... எப்படி இணை பிரியா இருக்காங்க... அதுமாதிரி என் வயிறும் பசியும் செம திக்பிரண்ட்ஸ் வேற!''

''அத்தை...'' இன்னும் கொஞ்சம் சாப்பாடு கொடுங் அத்தை... உங்களுக்குத் துணி துவைச்சுத் தரேன்னு அந்த வயசிலேயே டீலிங் எல்லாம் போட்டிருக்கேன்.''

''ப்ச்... சாப்பாடு எப்படியோ கிடைச்சது... ஆனா படிப்பு?''

''கவர்ன்மெண்ட் ஸ்கூல் தான்... ஆனாலும் மூனு மாசத்துக்கு முன்னூறு ரூபா கட்டணுமே?''

''அத்தைகிட்டக் கேட்க செம பயம்... சரியா பேசா அப்பாகிட்ட போய் அழுதுட்டே கேட்டேன்...''

''ஃபீஸ்ஸா? அது வேறவா?'ன்னு கேட்டாரு பாருங்க சரியான காமெடி சார் நீங்க... சும்மாவா படிக்க மு யும்ன்னு பறந்து பறந்து கேள்வி கேட்கணும் போல இருந்தது.''



''ஆனா... பறக்கத்தான் முடியல...''

''ச்சு... திரும்ப காமெடி பண்ணிட்டேனா?''

''எப்படியோ +2 படிச்சேன்... நிர்மலா காலேஜ்-ல எங்க அத்தை பையன் புண்ணியத்தில application வாங்கினா... எங்கப்பா ''ஆயிரம்... ரெண்டாயிரம்... மூவா யிரம்... பத்தாயிரம்... பிம்ப்ளிக்கா பாப்படி...'' இப்படி ஒரு ஜோக் வருமே... அந்த ரேஞ்சுக்கு என்னை அலைக் கழிச்சுட்டார்!''

''ப்ச்... நாமளும் Scholarship வாங்கிப் படிக்கிற அளவுக்கெல்லாம் படிப்புல புலியில்லையே... சோ படிப்பு ஒரு கனவாவே போச்சு...''

''நாள் போகப் போக... எல்லாருக்கும் பாரமா இருக்க மாதிரி ஒரு ஃபீலிங் வந்திடுச்சு!''

''சும்மா பீலிங்கை வச்சு... குப்பை கூட அள்ள முடி யாதே! அதனால... மாமாகிட்ட கொஞ்சம் காசு கடன் வாங்கி... டிரைவிங் கத்துக்கிட்டேன்...'' மூச்சு விடாமல், நடுவே புகுந்த அம்மாவைப் பேச விடாமல், ''உச்'' கொட்டிய கார்த்திகாவை லட்சியம் செய்யாமல் பேசி முடித்தாள்.

''உன் அத்தை... பசங்க... அவங்களும் இப்படியா?'' சில நிமிட மௌனத்திற்குப் பின்னர் மெதுவாய் வந்தது அம்மாவின் கேள்வி.

''ம்ஹூம். மல்லிகா அக்காக்கு - நான் வந்து ஒரு வரு ஷத்திலேயே கல்யாணம் ஆகிடுச்சு. மனோஜ் - அவன் தான் அத்தை பையன் - அவ்வளவா பேச மாட்டான். அதுவும் நான் வந்ததிலிருந்து ஹாஸ்டல்-லேயே இருந்தான். பஞ்சும்... நெருப்பும் கான்செப்ட் போல....

ப்ச்... நான் என்ன செக்ஸி டான்ஸ் ஆடற சில்க் ஸ்மிதா மாதிரியா இருக்கேன்? ஹ்ம்ம்... எங்க அத்தை கண்ணுக்கு... அப்படி தெரிஞ்சேன் போல..."

யாரோடையும் அவ்வளவா ஒட்டுதல் கிடையாது!

"நானும்... கம்...ஃபெவிகால்... ஃபெவிகுவிக்... இது மாதிரி என்ன எல்லாமோ ட்ரை பண்ணிப் பார்த்துட் டேன்... ம்ஹூம்... முடியலையே!"

"ஆனா, ஒண்ணை ஒத்துக்கணும். நான் கார் டிரைவிங் கத்துக்கிட்டு... என் செலவுக்குன்னு என் சம்பளத்தில் முக்கால் வாசியை என் அத்தைகிட்டக் கொடுக்கிற தால... பெருசா பிரச்சனை எதுவுமில்லை."

"சம்பளம்? அதாவது ஒழுங்கா தருவாங்களா... தீபா?"

கார்த்தியின் குரலில் வருத்தம்! எனக்குமே!

"ஹே... நான் தான் சொன்னேனே? அத்தை ரொம்ப கொடுமைக்காரி இல்லைன்னு... ஏற்கனவே இருந்த லேடி டிரைவருக்கு என்ன சம்பளம் கொடுத்தாங்களோ... அதை தருவாங்க! நான் கொடுக்கிற பணத்திலும்... ஏதாவது மீதம் இருந்தா உடனே என் பேர்ல கணக்கு-ல போட்டுடுவாங்க..."

"அவங்க பணத்தை தான் செலவு செய்யமாட்டாங் களே ஒழிய... என்னோட பணத்தைத் தேவையில்லாம தொடமாட்டாங்க... அதுவும் அம்மாவும் இறந்து போய், அப்பாவும் இல்லாத நேரத்தில் என்னோட கல்யாணத் திற்கு நான் தானே பணம் சேர்க்கணும்? ஓரளவு பண சேர்ந்தா... தானே... அவங்களால ஒரு மாப்பிள்ளை பார்க்க முடியும்!"



# 13

"அப்பாவும் இல்லாத நேரத்தில' - இந்த வார்த்தை என்னைப் பலமாய் தாக்கிய அதே சமயம் அம்மாவும் தன் அதிர்ச்சியை வெளியிட்டார்.

"என்னமா சொல்றே? அப்பா... எங்க போய்ட்டார்?" ...ருந்த அதிர்ச்சிக்கு ஆளாகியிருந்த அம்மா கரகரத்தார்.

"ஹோ.. அதை சொல்லலை இல்லையா? கிட்டத் ... ஒரு வருஷமா அவரைக் காணோம்... ஆபீஸ்ல ...போய் விசாரிச்சா அங்கயும் வரலைன்னு சொல்லிட் ...ங்க. அதுக்கு அப்புறம்... எனக்கும் அக்கறை இருக்கல... அத்தைக்கும் அக்கறை இருக்கல."

"அடக்கடவுளே!"

"எனக்கு என்னமோ... எங்க அத்தை என் கல்யாணத் ...தப் பத்திப் பேசப் போகத் தான்... அவர் இப்படி ஓடிப் போயிட்டாருன்னு தோணும்" - இதை சொல்லிவிட்டு, ...ம் விட்டு சிரித்தாள் அவள்!

இவளால் எப்படி முடிகிறது?

கடவுளே! என்ன விதமான கொடுமை இது?

"எதையும் தாங்கிக் கொள்ளலாம்! புரிந்து கொள்ளும் ...றவுகள் இருக்கும் பட்சத்தில்!" என்ற அடைமொழிக்கு ...தாரணமாய் நான் இருக்க, இவளுக்கோ... அந்த ...றவுகளே எதிரியாகிப் போயிருக்கின்றனவே!

''பஞ்சத்தில் பெரும் பஞ்சம் பாசத்தின் பஞ்சம்!'' என

நான் எண்ணிக் கொண்டிருக்கும் போதே.

''ஏன் தீபா... நீ இன்னும் அங்க இருக்கே? ஏதாவது ஹாஸ்டலுக்கு வந்திடலாம் இல்லையா? நான் எப்போவிலிருந்து சொல்றேன்!'' என்றது கார்த்திகா தான். சிறுபிள்ளை என்று நிரூபிக்கிறாள் என்றிருந்தது எனக்கு.

''ஹே... எங்க அத்தை வீட்டில் கிடைக்கிற பாது காப்பு... எனக்கு எங்கேயுமே கிடைக்காது, கார்த்தி! எனக்குமே... குடும்பமில்லாத குடும்பத்தில் இருக்கப் பிடித்திருக்கிறது!''

''ஏழு மணிக்குள்ள நான் வீட்டுக்குப் போகலைன்னா ''காணோமே''ன்னு தேட, அத்தையாவது இருக்காங் களே!''

அவள் சொல்வதிலிருக்கும் உண்மை எனக்கு உறைத்தது!

ஊனம் என்பது உடலில் இருப்பது மட்டுமல்ல... மனதிலும் வரலாம்... ஏன் உறவிலும் வரலாம் என்பது ஆணித்தரமாய் பதிய, எடுக்க வந்த நொறுக்குத் தீனியை எடுக்காமலே வெளியேறினேன் நான்.

அவர்களும் உள்ளே வந்து கொண்டிருந்தது வேறு எனது வெளியேற்றத்திற்கு காரணம்!

கனத்த மனதுடன் உள்ளே வந்த நான்... கையிலிருந்த கடிதங்களை வீசி எறிந்தேன்.

சுவற்றில் ஓரத்தில் சென்று மோதிய கடித உறை இரண்டாய் பிரிந்ததில் அதிலிருந்த கடிதங்கள் வெளி பட்டன.



அந்த நாளின் அடுத்த தாக்கமாய்.... ''அகல்யா''வின் கடிதம் என் காலடியில் வந்து விழுந்தது.

அதைக் கண்டதும் என்னுள் சன்னமாய் எரிச்சல்!

ஹோ... உங்களிடம் சொல்லவில்லை அல்லவா! முதல் முறையாக வந்த ''அகல்யா''வின் கவிதைக்குப் பின்னர், கிட்டத்தட்ட பத்து கடிதங்களுக்கு மேல் வந்து விட்டன.

அனைத்திலும் ஓர் கவிதை! குறிப்பாக சொல்லப் போனால் - என்னைத் தூண்டிவிடும் ஓர் கவிதை! நான் அணிந்திருக்கும் முகத்திரையைக் கிழித்து வெளியே வரச் சொல்லி... தூண்டுதல்கள்!

கண்டிப்பாக.... இவை என்னை அறிந்த ஒருவரே அனுப்பியிருக்க வேண்டும் என்பது நூறு சதவீதமாய் உறுதியான போதிலும், என்னால் யாரென்று சரியாக இனம் காண முடியவில்லை.

அதற்குள், என் கைகள் ''அகல்யா''வின் கடிதத்தைப் பிரித்திருந்தன!

அதன் வரிகள் -

''நிலம் தன்னில் புதைந்த விதை போல...

துணிந்து எழுந்திடு தோாக!''

இதைப் படிக்கையில் உங்களுக்கு என்ன தோன்று கிறது? இன்னும் என்னை வளரச் சொல்வது போலத் தானே?

'வளர' என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல்... என்னை வெளியுலகிற்கு வரச் சொல்லி வந்திருக்கும் அவளது சில வரிகள் இதோ! முந்தைய கடிதங்களில் என்னை அசைத்துப் பார்த்த சிலவற்றை சொல்கிறேன்!

''மொட்டு பூவாக மலர்ந்தால் அழகு...

நீயோ பலருக்கு வெளிபட்டால் அழகு''

''ஒளி கொண்ட நிலவினை கார் மேகம் மறைப்பது போல்...

குணம் கொண்ட உன் மனம் தன்னை மறைப்பது ஏனோ...''

''மேகங்களில் ஒளிந்திருக்கும் மழையை போல...

நீயோ முகம் தன்னை மறைந்து இருப்பது ஏனோ...''

''பிறரின் வாழ்வை வண்ணமாக்க

வந்திடு தன்னம்பிக்கையின் ஓவியனே!''

அனைத்து வரிகளுமே... என்னை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டச் சொல்லி வந்தவையே! ஒரு எழுத் தாளன் - எழுத்துக்களால் அன்றி வேறெப்படி வெளி யுலகிற்கு வரமுடியும்! என்னை ஒரு ''எழுத்தாளனாய்'' மட்டுமே அறிந்தவர்கள் யாரும் இதை எழுதியிருக்க முடியாது என்பது புரிந்தது!

ஆனால், யாரென்று தான் புரியவில்லை.

மனதிலிருந்த கனத்திற்கு, ''அகல்யா''வின் கவிதை வரிகள் எரிச்சல் ஊட்ட, சற்று நேரம் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தேன்.

தீபாவின் பேச்சோடு இந்த குழப்பமும் சேர்ந்து கொள்ள டதில், என் மனதினுள் ஓர் இறுக்கம் பரவியது!

அதுவும் எப்படிப்பட்ட வெளிவருதல் என்று எந்தவித குறிப்புமில்லாமல், கவிதை வடிவில் வரும் தொடர் வற்புறுத்தலுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடிவு செய்து அந்த 'அகல்யா'விற்குப் பதில் கவிதை வடித்தேன்!



என்

விழிக்கு ஒளி உண்டு

செவிக்கு இசை உண்டு

ஏனோ

என் மொழிக்கு ஒலி இல்லை

அது என் பிழை இல்லை

கனினிகளின் காவலனாய்

கறைகளை களையும் காலனாய்

என் உலகில்

நானே ஈசனாய் என்றும்!

அப்படியே என்றென்றும்!''

## 14

எனது அடையாளத்தை ''அகல்யா''விடம் வெளிப் படுத்தியதும் தான், உள்ளிருந்த எரிச்சல் சற்றே மட்டுப் பட்டது போலிருந்தது எனக்கு!

தூரத்திலிருந்து பார்க்கும் இவளுக்கு என்ன தெரியும் என் வேதனை?

ஒன்றா இரண்டா ஆண்டுகள்? கிட்டத்தட்ட இருபத்தி ரெண்டு வருடங்கள்! நான் இந்த கூட்டினுள் இருக் கிறேன்!

சிறு வயதில், அம்மா - அப்பா பேசும் போது அவர்கள் வாயிலிருந்து வரும் ஒலியை வினோதமாய் பார்ப்பதும்,

ஏன் என்னிடம் ஒலியில்லை என்று கண்ணாடி முன்னே நின்று... என் வாயை ஆராய்ந்ததும் என்றும் பசுமையாய் நினைவில் நிற்கின்றனவே!

குரலெடுத்து கத்திவிட்டு, அதில் வரும் வினோத ஒலியை எண்ணி மனம் சமாதானம் அடைந்ததும், ஆனால் அந்த ஒலி தாய் - தந்தையனது போல் இல்லை என்று உணர்ந்ததும்... அதன் பின்னர் அழுததும்...ப்ச... இவளுக்கு என்ன தெரியும்?

எப்போதும் கண்ணீருடன் வளைய வரும் அம்மா!

முகத்தில் இறுக்கத்துடன் இருக்கும் அப்பா!

அவர்கள் இட்டுச் சென்ற மருத்துவமனைகள்!

என் வாயினுள் இட்ட குழாய்கள்!

உண்ட மருந்துகள்!

சென்ற கோவில்கள்!

அம்மா உண்ட மண் சோறு!

அப்பா எடுத்த தீச்சட்டி!

பள்ளிப் பருவத்தில் 'டேய் ஊமையா...''

என என்னை விளித்த கிண்டல் குரல்கள்!

என்னால் பதில் சொல்ல முடியாது என்று தெரிந்தே என்னிடம் கேள்வி கேட்ட என் வகுப்புத் தோழர்கள்!

என் இயலாமையைக் கைகாட்டி, என்னை விளையாட்டில் கூட சேர்த்துக் கொள்ளாத தெருவாசிகள்!

''பாவம், உங்க பையனுக்கு வாய் பேச முடியாதாமே... பேசாம... அதுக்கான ஸ்பெஷல் ஸ்கூல்ல சேர்த்து விட்டுடுங்க!'' என்று அறிவுறுத்திய நட்பு வட்டம்!



''அதான் வாய் வராதுன்னு சொல்றாங்க... இல்ல! எதுக்கு இருக்க ஒண்ணு ரெண்டு சொத்தையும் வித்து... இவனுக்கு வைத்தியம் பார்க்கிறே? பேசாம, எங்காவது ஆதரவற்றோர் விடுதியில் விட வேண்டியது தானே'' எனப் பேசிய உறவுகள்!

என் மனதில் எண்ணியதை வெளிப்படுத்த முடியாமல், நான் பட்ட வேதனை!

உள்ளிருந்த குமுறல் அனைத்தும், கோபமாய் வெளிப்பட்டு, பொருட்களை உடைத்தெறிந்த என் இயலாமை!

அதன் பின்னர், என் மனதில் உள்ளதை நான் வெளிப்படுத்த வேண்டிய தேவையில்லாமல், அப்பாவும் அம்மாவும் என் கண் பார்த்து நடந்து கொண்ட பாங்கு!

''காதலையே... உன்னால் வாய் விட்டுச் சொல்ல முடியவில்லை. லெட்டர் எழுதி இருக்கிறாய்? அப்படி இருக்கும் உனக்கு... நானா?'' என்று இளக்காரமாய் பேசிய மதுமிதா! - எதையுமே நான் மறக்கவில்லையே! அதற்கு காரணமான என் மௌனத்தையும்!

ஞானி போல் பேசும் இவளுக்கு என் குறையின் தாக்கத்தைப் பற்றி என்ன தெரியும்?

என் ஒரே குறை - சாதாரண மனிதர்களாக உலாவிக் கொண்டிருந்த என் குடும்பத்தினரை அதிக நிறை உடையவர்களாய் மாற்றி இருக்கிறது எனும் போது, அந்தக் குறை என்னை மட்டுமல்லாது என் குடும்பத்தையும் எத்தனை தூரம் பாதித்திருக்கிறது என்பதை இவள் எங்ஙனம் அறிவாள்?

நடுத்தர வர்க்கத்தின் சாதாரண குடும்பத் தலைவராய் இருந்த என் தந்தை, குறைவில்லா நிறை

செப்பமாய் மாறியிருப்பதற்கு என் இயலாமையே காரணம் என்பதை யார் தான் உணர்வார்கள்?

சிறு வயதில் என் மனதில் உள்ளதை வெளிப்படுத்தும் வகை தெரியாமல் நான் அழுத போதும், என் நிலையின் தாக்கம் தாங்காமல் கையில் கிடைத்தவைகளை எடுத்து உடைத்தப் போதும், என்னை அடிக்காமல், அரவணைத்து வளர்த்தவூருக்கு, ''என்னால் பொறுமையின் சிகரம்'' என்ற பட்டம் கிடைத்தது என்பதை இவ அறிவாளா?

அழுது கரையும் அம்மாவைப் பார்த்து, ''எனது குறை பெரியது போலும்'' என்று எண்ணிக் கலங்கிய என்னை சமாதானப்படுத்துவதற்காக, அம்மாவிடம் ''நீ... அழவே கூடாது! அதுவும் பரணி முன்னிலையில், கண்டிப்பா கண்ணில் கண்ணீர் நிற்கக் கூடாது! அவனுக்கு இரு கும் குறையை உன் கண்ணீர் பூதாகரமாய் காட்ட காட்ட, அவன் உடைகிறான்'' என்று எடுத்துக்கூறி அவரது கண்ணீரை முற்றிலுமாய் துடைத்த அவர மேன்மையின் விளைவும் என் குறையல்லவா?

என் முன்னே காட்ட முடியாத வேதனையை, கட விடம் காட்டும் எண்ணத்தில் பூஜை புனஸ்காரங்களி மூழ்கிப் போன அம்மாவின் பக்திக்கும் என் குறைபே காரணமின்றி வேறேது? என் தேவைகளை... என எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்த முடியாமல் நா தவித்தபோது, ''நீ வெளிப்படுத்த வேண்டாம்! உ முகம் பார்த்து... கண் பார்த்து... உன் தேவைகளை நா நிறைவு செய்கிறேன்'' என்று உறுதி எடுத்தவர் போ என் முகம் பார்த்து என் தேவைகளைக் கண்டறி



அப்பாவின் அதீத அக்கறைக்கு வித்திட்டது ஒலியில்லா என் மொழியல்லவா?

என் மன ஓட்டங்களுக்கு வடிவம் கொடுக்க ஒலி தேவையில்லை என்று என்னை உணர வைக்கும் வண்ணம், 'Sign Language'' வகுப்பில் சேர்த்துவிட்ட நிலையிலும், பிறரை விட்டு நான் வேறுபட்டிருக்கிறேன் என்ற எனது எண்ணத்திற்கு இவளால் என்ன பதில் கூறிவிட முடியும்?

எங்கள் வீட்டு மாடியில் குடியிருந்த பிரதீப்பின் குடும்பத்திடம் கூட ஒட்டாமல் ஒதுங்கியிருந்த என்னை, வலுக்கட்டாயமாக அவர்கள் வீட்டினுள் பிணைத்துக் கொண்ட நித்யவேணி அம்மாவின் புரிதல் இவளுக்கு இருப்பின் இங்ஙனம் பேசியிருப்பாளா?

''ஸ்கூல்ல பரணியைப் பார்த்துக்கோ, பிரதீப்!'' என்று கூறி அனுப்பிய அப்பாவின் ஒற்றை அறிவுரைக்காகவும், அவனது தாய் என்னிடம் காட்டாத வேற்றுமையின் காரணமாகவும், எனக்கு அரண் போல் செயல்பட்ட பிரதீப்பின் தோழமை இல்லையெனில், நான் இன்னமும் முடங்கி போயிருப்பேனே?

''பரணியை... யாராவது ஏதாவது சொன்னீங்க? அடிச்சிடுவேன்!''

''சும்மா... சும்மா அவனை ஊமை... ஊமைன்னு சொன்னீங்க? உங்களை ஊமை ஆக்கிடுவேன் ஜாக்கிரதை!''

''அவனோட குறையையே சொல்லிக் காட்டுறீங்களே? உங்ககிட்ட குறையே இல்லையா? இன்னைக்கு சார் கொடுத்த சம்-மை எல்லாரும் தப்பு தப்பா

போட்டிருந்தீங்களே? அப்போ உங்களுக்கு மூளையே
இல்லைன்னு தானே அர்த்தம்! மூளை பெருசா? வாய்
பெருசா? மூளை தானே எல்லாருக்கும் வேணும்? மூளை
இல்லாம வாய் மட்டுமிருந்து என்ன செய்ய முடியும்?
போங்கடா! இனி... ஒரு தடவை... பரணியை கிண்டல்
பண்ணீங்க? ஹெட்மிஸ்கிட்ட சொல்லிக் கொடுத்திரு
வேன்'' என்று சிறு வயதில் எனக்காக வாதிட்ட அவனது
தோழமை, இன்று விருட்சமாய் வளர்ந்து நிற்பதற்கு என்
குறையும் ஒரு காரணம் என்றே எனக்குத் தோன்றும்!

பிறரது வார்த்தைகளில் காயப்பட்டு, மூலையில்
முடங்கிப் போகும் என்னை வெளியே கொண்டு வந்த
அவனது ஊக்கம் மிகுந்த வார்த்தைகள் அன்றி வேறேது

எதிரில் இருப்பவரிடம் மட்டுமே பேச முடிந்த
அதுவும் கைகளால் மட்டுமே பேசிக் கொண்டிருந்த
நான், கைப்பேசி வைத்திருப்பவர்களைப் பார்த்து லேசா
விட்ட ஏக்கப் பெருமூச்சை நிறுத்தவென, ஓர் கைப்
பேசியைக் கொடுத்து 'நான் வெளியூர் போயிருக்கு
போது, உனக்கு என்னோட பேசணும்னோ இல்லை
எனக்கு உன்னோட உதவி தேவைப்படும்போதோ
என்னடா செய்றது? அதுக்குத்தான் இது!நீ கூப்பிட்ட
தும்... நான் உடனே சாட்டுக்கு வந்திடுறேனே... இல்
லைன்னா மெசேஜ் பண்றேன் சரியா?'' - என்னவோ
அவன் தேவைக்காக, எனக்கு கைப்பேசி வாங்கி
கொடுத்தது போல் கதை ஜோடித்த, நண்பனின் புரித
திறனை வளர்த்ததும் என் குறையே அல்லவா?

''நீ... உன் திறமைகளை வளர்த்துக் கொள்! நீ... பார்
வேண்டிய வேலைகளை என் பொறுப்பில் விட்
விடு!'' என்று வார்த்தையால் கூறாமல், நான் செ



வேண்டிய பல விஷயங்களை அவனே முன்னே நின்று
நடத்திய அவனது கூடுதல் பொறுப்பின் மூலதனம்
ஒலியற்ற என் ஒலி தானே?

மதுமிதாவின் நிராகரிப்பில் மனமுடைந்து நான்
துவண்டிருந்தபோது, கார்த்திகாவின் சில கோப வார்த்
தைகள் என் தற்கொலைக்கு வித்தாகிவிட, அன்றி
லிருந்து இன்று வரை என்னை சுற்றி சந்தோஷமும்
கலகலப்புமாய் வளைய வரும் என் தங்கையின் மேம்
பட்ட விளையாட்டுத் தனத்திற்கும் என் தாழ்வு மனப்
பான்மையே காரணமாகிப் போயிற்றே!

அப்பா... அம்மா... பிரதீப்... கார்த்தி... என் நித்ய
வேணி அத்தையின் மேம்பட்டக் குணத்திற்கும் என்
மௌனமே காரணமாய் இருக்கும் போது, அதை மறந்து
எப்படி வெளியே வருவது?

ஆம், நித்யவேணி அத்தை இறக்கும் போது ''கண்
தானம், இதய தானம், சிறுநீரகத் தானம் என்று எத்
தனையோ இருக்கிறது... ஆனால், குரல் தானம் என்று
ஏன் கண்டுபிடிக்காமல் போய்விட்டார்கள்? அப்படி
இருந்தால்... என் குரலை உனக்குக் கொடுத்திருப்
பேனே... கண்ணப்பா! முடியவில்லையே!'' என்று என்
கையைப் பிடித்துக் கொண்டு சொன்ன, ''தெய்வ
குணத்திற்கு'' என் குரலின்மை தானே வித்து?

அப்பாவின் அதீத அக்கறை, பிரதீப்பின் அதீத
பொறுப்புச் சுமை, அம்மாவின் அதீத பக்தி, கார்த்தியின்
அதீத விளையாட்டுத் தனம் - இவை அனைத்திற்கும்
என் மௌனமே அடிப்படைக் காரணம் என்ற எண்
ணத்தில் இருக்கும் என்னால், அந்தக் குறையை மறக்க
முடியவில்லை!

ஆனாலும், மறக்க முடிகிற குறையா?

என்னைச் சுற்றியிருக்கும் எந்தவொரு நல்ல உ... எந்தைப் பார்க்கும் போதும், என்னால் தானே இவர்க... இப்படி இருக்கிறார்கள் என்று எண்ணும் அளவிற்கு... என்னைப் புரட்டிப் போட்டிருக்கும் இயலாமை!

''உன் பெயர் என்ன?'' என்ற அடிப்படைக் கே... விக்குக்கூட பதில் சொல்ல முடியாத வேதனை!

''ஹோ... ஊமையா?'' என்று பரிதாபப்படும் சக மனு... களிடம் சண்டைக்கு செல்ல முடியாத கோபம்!

ஆனாலும், இதையெல்லாம் மீறி நான் உலகமறிய... ஓர் மனிதனாய் வரவில்லை? என்ன... ஓர் திரையி... பின்னே நிற்கிறேன்!

அந்தத் திரையை விலக்கினால், என் மேலிருக்கு... ''பிரமிப்பு'' விலகி ''பரிதாபம்'' வந்துவிடுமோ என்... பயத்திலேயே திரையின் பின்னே நிற்கிறேன்!

திரையைக் கிழித்துக் கொண்டு வெளியே வா... வெளியே வா என்கிறாளே, அதன் பின்னரும் வரு... மரண அடிகளை எதிர்த்து நிற்க இவள் வருவாளா? நா... தானே தாங்க வேண்டும்?

இருப்பதை விட்டுவிட்டு பறப்பதற்கு ஆசைப்ப... வது போல்... வெளியே வா... வெளியே வா என்று ரா... பாடுகிறாள்! ஹ்ம்ம்... தேவையற்ற சோக கீதம்! போ... தொலையட்டும்!

உள்ளத்து வேதனையாவும் மனக் குமுறல்கள... மட்டுமல்லாது, எழுத்து வடிவம் பெற்று மடலின் ... வாகவும் மாறியிருந்தது, எனக்கே வியப்பை அளித்...



நெஞ்சத்தில் எண்ணியதை அனைத்தையும் சொல் மாறாமல், எழுதியிருந்தன என் கரங்கள்! என் நினைவே இல்லாமல்!

''வணிகம்'' தொடர்பான கட்டுரை எழுதுவதென்றால் அரை மணி நேரத்தில் அரை பக்கம் கூட எழுத முடியாமல் திணறும் என் திறமை, மின்னல் வேகத்தில் செயல்பட்டிருந்தது!

இந்த வேகத்தைக் கொடுத்தது உள்ளிருந்த ஆவேசத்தின் வேகமல்லவா?

அதையும், அவளிடம் காட்டிவிட வேண்டும் என்று மனம் சொல்லிவிட, ''அகல்யா''விற்கு வடித்து வைத்திருந்த கவிதையுடன் இதையும் இணைத்து, ஓர் உறையில் போட்டு, தபாலில் போட வேண்டிய கடிதங்களுடன் சேர்த்து வைத்ததும் தான் மனம் நிம்மதி அடைந்தது.

நான் அடைந்த நிம்மதியைப் பொறுக்க முடியாதவளாய் ''நான் வரேன்... மிஸ்டர் பரோட்டா மாஸ்டர்!'' என்று வேலை மெனக்கெட்டு என் அறைக் கதவைத் தட்டிவிட்டு, விடை பெற்று சென்றாள் தீபஜோதி.

அவளைக் கண்டதும், ''என்'' இழப்பிலிருந்து ''அவளது'' இழப்பிற்கு ஒரு இழுப்பில் போய்விட்டிருந்தது என் நெஞ்சத்தின் அலைகள்!

எப்பேர்ப்பட்ட இழப்பு! இருந்த ஓர் அன்பு நெஞ்சத்தையும் இழந்துவிட்டு, அந்தச் சிறு வயதில் என்னமாய் தனிமையெனும் வேதனையில் உழன்று தவித்திருப்பாள்!

சுற்றி ஆயிரம் பேர் இருந்தாலும் அன்பு கொண்ட ஓ[illegible] நெஞ்சத்தின் ''நான் இருக்கிறேன்'' என்ற பார்வை[illegible] போதுமே, மனம் திடமுற!

எனக்காவது, பிறந்தது முதல் குரல் இருக்கவில்லை, ஆனால், பிறந்தது முதல் அனுபவித்த பாசத்தை நடுவி[illegible] லேயே பிடுங்கிக் கொண்டது போல் அல்லவா... அவளது வாழ்க்கை!

''இல்லவே இல்லாமல்'' இருக்கும் வலியை விட ''இருந்துவிட்டு... இல்லாமல்'' போகும் வலி பெரிதா[illegible] பட, என்னையும் தீபஜோதியையும் ஒப்பிட்டுப் பார்க்க[illegible] துவங்கினேன், நான்.

அதன்படி, தராசின் இரண்டு பக்கங்களாய் இருந்[illegible] நானும் அவளும் நேராகிக் கொண்டே வருவது போல்[illegible] எனக்கு ஓர் பிரம்மை!

ஒவ்வொரு காரணமாய் அடுக்கி, இருவரையும் சம[illegible] செய்து கொண்டு வந்த நான், முடிவில் ''நான் அவளது[illegible] வேதனையைப் புரிந்து கொண்டது போல் அவளுக்கு[illegible] என் இழப்பும், அதனால் உண்டான தாழ்வு மனப்பா[illegible] மையும் புரியும்'' என்ற எண்ணத்தில், எங்கள் இருவரி[illegible] பக்கத்தையும் ஈடு செய்து, தராசை ஒரே நிலையில் நிற்[illegible] வைத்தேன்.

இவளைப் போல்... அதாவது தீபஜோதியைப் போ[illegible] அல்லாது, எதற்காக இந்த ''அகல்யா'' என்னைப் படுத்[illegible] எடுக்கிறாள் என்று ''அகல்யா''வின் கவிதைகளைச் சா[illegible] யது என் எண்ணலைகள்!

ஆஹா, அங்கே சுற்றி... இங்கே சுற்றி... முடிவி[illegible] ''அகல்யா''விடம் வந்துவிட்டேன்! குறிப்பாய் சொல்ல[illegible] போனால்... அவளது கவிதைகளிடம்!



ஹ்ம்ம்... அவளது கவிதைகளின் வரிகள் என் நெஞ்சில் கல்வெட்டாய் பதிந்ததன் விளைவா?

இல்லை... அவள் கூறுவதில் எனக்கு உடன்பாடில் லாமல் போனதினால் உண்டான கோபமா?

ஏதோ ஒன்று, அவளது ''கவிதைகள்'' என சிந்தனை களை முடக்குகின்றன என்பது மட்டும் புரிந்தது.

ஸ்பீட் பிரேக்கர் போட்டு வேறு எண்ணங்களின் வேகத் தைக் குறைக்காமல், டிராபிக் இன்ஸ்பெக்டர் போல் முற்றிலுமாய் நிறுத்தியே விடுகின்றனவே...

ஹஹஹா... ஸ்பீட் பிரேக்கர்... டிராபிக் இன்ஸ் பெக்டர்... தீபஜோதியிடம் வந்துவிட்டேன்.

## 15

''எங்கும் நிறைந்தவளாய்'' இரு பெண்ணிடமும் எண்ணத்தை வியாபித்துக் கொண்டிருந்த என்னை, ''பரணி'' என்ற பிரதீப்பின் அழைப்பு செவ்வனே கலைத்தது.

''என்னடா பிரதீப்?'' என்று வினவிய என் கண்களில் தெரிந்த சிறு மாற்றத்தை, மறக்காது கவனித்துவிட்ட நண்பன், ''ஹே... என்னாச்சு டா? ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்று பறந்து விட்டான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைடா! அடுத்த issues என்ன கொடுக்கலாம்ன்னு யோசிச்சிட்டு இருந்தேன். என்ன விஷயம் சொல்லு?'' என்று நான் வினவ,

''இதில் ஒரு கையெழுத்துப் போடு'' என்று ஒரு காகிதத்தை நீட்டினான் அவன்.

என்னவென்று கேளாமல், கேட்கத் தோணாமல், அவன் நீட்டிய இடத்தில் கையெழுத்திட்ட என்னிடம், விவரம் சொல்லும் அளவு அவனுக்கு இப்போது அவ காசமில்லை என்பது அவனது அவசரப் பாவனையில் வெளிப்பட்டது!

என் கையெழுத்தின் நிறைவு எழுந்தான் 'I'ஐ நான் இட்ட வினாடி, அதை எடுத்துக் கொண்டு வேகமாய் ஓடினான், நண்பன்.

ஆம், அவன் ஓடியதில் தடதடத்த மாடிப்படியிலும் ''சும்மா அதிருதில்ல'' என்ற கார்த்தியின் கிண்டலிலும் எனக்கு அது புலப்பட்டது!

அதன் பின்னர், என்னை மளிகைக் கடைக்காரன் வேலை (அதாங்க தராசு கொண்ட எடை போட்டு வேலை பார்க்க விடாமல் தடுத்த புண் கொண்டிருந்தேனே!) பார்க்க விடாமல் தடுத்த புண் ணியம் கார்த்தியை சாரும்.

''டேய் பரணி!'' என்று அவள் அலறியதில், தோட்டத் திலிருந்த அப்பாவே ''மெதுவா... கார்த்தி! சத்தத்தை குறை!'' என்றார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

''அன்பு'' திரம்பி வழிந்த அழைப்புடன் அவள் வந்த தற்கான காரணம் - வேறென்னவாக இருக்கமுடியும் என்னால் ஆகக் கூடிய ஒரு சகாயத்திற்குத் தான்!

யாரந்த ''சகாயம்?'' புதிது புதிதாய் ஆட்களை கொண்டு வராதேடா... ப்ளீஸ்! இருக்கும் நபர்களின் பெயர்களே எங்களுக்கு குழம்பும் வண்ணம் ''தீப தைச்'' சுற்றியே வருகிறது! இது வேறா? என்



பல்லைக் கடிக்காதீர்கள். இனிமேல், புதிதாய் யாரும் வரமாட்டார்கள்!

இப்போது, நான் சொன்னது ''என்னால் கார்த்திக்கு ஆகக் கூடிய ஓர் வேலை!''

''பரணி... நாளைக்கு எனக்கு NSS கேம்ப் இருக்கு. பெண்களின் வலிமை பற்றி... அவங்களோட பலத்தை அவங்களுக்கு உணர்த்துற விதமா... எனக்கு ஒரு சார்ட் வேணும். இப்பவே முடிக்கணும்னு இல்லை... நாளைக்கு காலையில அஞ்சு மணிக்கு முடிச்சிடு. அப்போ தான்... நான் ஆறு மணிக்குப் போறதுக்கு முன்னாடி... ஒரு ஃபைனல் டச் கொடுத்து, எடுத்திட்டுப் போக முடியும். என்ன சரியா?'' என்ற ஏவல் மட்டுமில்லாமல்,

''நாளைக்குக் காலையில... நானே வந்து ரூம்-ல எடுத்துக்கிறேன்... நீ அலைய வேண்டாம்'' என்ற பெருந்தன்மை வேறு!

என்னவோ... ஆர்டர் கொடுத்தவள் போல்... இவள் பேச்சைப் பாருங்களேன்?

இருப்பினும், என்னால் மறுக்க முடியவில்லை. ''பெண் முன்னேற்றம்'' பற்றி வலைத்தளத்தில் தேடத் துவங்கினேன்.

அரை மணி நேரம் தேடிய பின்னரும், ''செக்ஸ்'' என்ற அர்த்தத்திலேயே, பெண்களை நிலைநிறுத்தி இருந்தன பல வாசகங்கள்.

''செக்ஸ்'' என்ற நிலையில் பெண்கள் பலவித கொடுமைக்கு ஆளாகின்றனர் தான், ஓர் பெண்ணிடமிருக்கும் சக்திகளில் 'செக்ஸ்' மட்டுமா முதன்மை வகிக்கிறது?

அவளது மனவலிமை யாருக்கு வரும்?

''இரும்பு மனிதன்'' என்று ஆணுக்குப் பட்டம் வேண்டுமென்றால் சூட்டலாம்! ஆனால், ஒரொரு தாயும் இரும்பு மனம் கொண்டவள் அல்லவா?

'Man endures pain as an undeserved punishment; woman accepts it as a natural heritage.' என்ற மேற்கோள் வசனத்தின்படி, ஒரு ஆண் - தனக்கு ஏற்படும் வலியை தனக்கு இழைக்கப்பட்ட அநியாய வலியாக ஏற்கும் போது, பெண்ணோ அந்த வலியை இயற்கையின் வரப்பிரசாதமாகவே ஏற்பது அவளது வலிமையை காட்டுகிறதே!

ஒரே வயிற்றில் பிறந்தாலும், பெண் குழந்தைக்கு ஊட்டப்படும் தாய்ப்பாலில் மட்டும் துளி வலிமை கலந்தது போல், வைரம் பாய்ந்த நெஞ்சமாய் அல்லவா திகழ்கிறாள் ஓர் பெண்!

தாயாகும் போது அவள் காட்டும் மன உறுதியை, மற்ற செயல்களிலும் காட்டினால், அவளை விடவும் உயர்ந்த சக்தி உலகில் உண்டோ?

ஏன்... ஜோதி இல்லை? தனக்கு ஏற்பட்ட துன்ப சம்பவங்களைக் களைத்தெறிந்து, தன் வாழ்வின் குறை களுக்காக பிறரை கை காட்டாமல், வலியையும் எளிமை யான புன்னகையால் அவள் கையாளவில்லை!

அவளது இந்தக் குணம் மேம்பட்டதும்.... என் முந்தைய தராசில் தீபஜோதி உயர்ந்து நின்றாள் - மன வலிமை என்ற குணத்தில்!

எனக்கு அந்த மனவலிமை இல்லாது போனதால் தானே, எனக்கென்று ஓர் வட்டமமைத்து அதிலேயே வாழ்கிறேன்!



அவளானால் - தனக்கு ஏற்பட்டது இழப்பே இல்லை என்பது போலிருக்கிறாள்!

நானோ - எனக்கு ஏற்பட்ட இழப்பிலேயே சுற்றி வருகிறேன்.

அவளானால் - தான் பட்ட கஷ்டங்களிலும் சந்தோசம் காண்கிறாள்.

நானோ - கானல் நீருக்கு ஏங்கி, கையிலிருக்கும் மற்றை மதிக்காமல் இருக்கிறேன்.

அடடே, எனக்கும்... தீபஜோதிக்கும் தான் எத்தனை வித்தியாசம்?

உயிருக்கு உயிரான உறவுகளின் கதகதப்பில் வாழ்ந்த நான் தற்கொலைக்கு முயன்றிருக்கேன்!

செத்தாலும் கவலைப்பட ஆளில்லாத அவளோ மறந்துகூட வேறு முடிவு நாடிச் செல்லவில்லை!

இந்த எண்ணம் வந்ததும், அவள் தராசில் தாழ்ந்து, வாழ்வில் உயர்ந்து நின்றாள்!

அங்கிருந்து, வேறெந்த தூண்டுதலும் இல்லாமல் ''அகல்யா''விடம் பயணித்திருந்தன என் எண்ணங்கள்.

''அகல்யா''வின் பேச்சைக் கேட்டால், தராசில் நானும் தாழ்வேனோ? என்று தோன்றியபோது, எனக்கே என் எண்ணங்களின் மீது வியப்பு ஏற்பட்டது.

இரண்டு மணி நேரத்திற்கு முன்னர்... அவளைச் சாடியது என்ன? இப்போது, நானே அவள் புறம் சாய்வது என்ன?

கொஞ்ச நேரம் போனால் - ''அகல்யா''விடமும், ''தீபஜோதி''யிடமும் தாவித்தாவி, நான் குரங்காகி விடுவேன் போல!

நீங்களும் அதையே தான் நினைக்கிறீர்களா?

சரி...சரி... கார்த்தி கொடுத்த வேலையைப் பார்க்கப் போகலாம்.

மனதை ஒரு நிலைப்படுத்தி யோசித்தபோதும், இரவு உணவு நேரம் வரை எனக்கு எதுவுமே தோணவில்லை.

இருபது வெள்ளைத்தாள்கள் என் கிறுக்கல்களைத் தாங்கியவாறே கசங்கியது தான் மிச்சம்!

மூளையின் தேடலினால் களைப்படைந்த வயிறு, சத்தம் போடத் துவங்கவே, யாரும் அழைக்கும் முன்னரே சாப்பிடச் சென்றுவிட்டேன் நான்.

அம்மாவும் நானுமாக இரவு உணவை எடுத்து வைத்துக் கொண்டிருக்கும் போது, "என்ன பரணி... நான் கொடுத்த வேலை என்னாச்சு? ஒரு ஐம்பது பெர்செண்ட்-ட்டாவது செய்து முடிச்சியா? என்ற கேள்வியுடன் வந்து சேர்ந் தார்கள் என் தங்கையார்.

"ம்ஹூம்" என உதடு பிதுக்க,

"உனக்கெல்லாம்... கொஞ்சம் கூட சுறுசுறுப்பே பத்தாது! இதுவே, எங்க ஆத்துக்காரரா இருந்தா..." என அவள் ராகம் இழுக்கும் போதே, எதிரே வந்து நின்றான் பிரதீப்.

அப்போது கார்த்தியின் முகத்தைப் பார்க்க வேண் டுமே?

இஞ்சி தின்ற குரங்கு கூட கொஞ்சம் அழகாக இருக் கும்! அப்படியொரு நிலையில் இருந்தாள் பிரதீப்பின் மனைவி!

பின்னே, அவளது வாக்கியத்தை முடிக்கவும் முடி யாது. அப்படியே முடித்தாலும், அவள் என்னிடம்



கொடுத்திருக்கும் வேலையை வெளியே சொல்லவும் முடியாதே!

அவளுக்குக் கொடுக்கப்பட்ட ஓர் வேலையை வாங்கிய எனக்கே திட்டு விழும் எனும்போது, கொடுத்த அவளை வாட்டி எடுத்துவிட மாட்டான்?

"கொஞ்சம் கூட... பொறுப்பே இல்லை!" "உன் வேலையை நீயே தான் செய்ய வேண்டும்!" என்றெல் லாம் அறிவுரையில் அறுக்காமல்.

"பரணி... அடுத்த வாரம் "வணிகத்தில் வெல்லலாம்" பகுதியை கார்த்திகிட்ட கொடுத்திடு!" என்றோ

"இந்த ரிலீஸ்-ல ஒரு defect உன்னோட சப்போர்ட் வேணும். அந்த வேலையை கார்த்தி பார்க்கட்டுமே!" என்றோ கூறிவிடுவான்.

"வணிகம்" என்றால் கார்த்திக்கு "வேப்பங்காய்" என்பது ஒரு புறமிருக்க, "வைரஸ்" என்பது அவளுக்கு "வேப்பமரம்" அளவிற்கு மிகுந்த வெறுப்பு!

அப்படியிருக்கையில், மேடம் எங்கிருந்து வாயைத் திறப்பது?

அவனறியாமல், என்னிடம் கண்ணாலேயே கெஞ்சத் தான் செய்தார்கள்!

சன்னமாய் சிரித்துவிட்டு நான் காத்திருக்க, அனை வரும் உணவு உண்ண அமர்ந்தோம். சாப்பாட்டின் போது, ஜோதி பற்றிய பேச்சை கார்த்தியோ அம்மாவோ ஆரம்பிப்பார்கள் என்று நான் எண்ணியிருக்க, பிரதீப் புதிதாய் கொடுக்கப் போகும் ப்ரோபோசல்-லைப் பற்றி பேசத் துவங்கினான்.

சென்னையைத் தலைமையிடமாய் கொண்ட ஓர் பன்னாட்டு மென்பொருள் நிறுவனத்தில் எங்களது 'anti-virus'ஐ விற்பதற்கான எடுத்துரையை இன்று அனுப்பியிருக்கிறான்!

அதற்குத் தான், அந்த அவசரக் கையெழுத்து!

அவர்கள் எங்கள் 'எடுத்துரை'யை ஏற்கும் பட்சத்தில், கோவையிலிருக்கும் அவர்களது அலுவலகத்தில் சான்று விளக்கம் அளிக்க வேண்டுமாம்!

கிடைத்தால் நன்றாக இருக்கும் என்கிறான்.

எங்கள் நிறுவனத்திற்கு ஓர் முக்கிய மைல்கல்!

இந்த மைல்கல்லை விளம்பரப் பலகையாய் உப... யோகித்து, பல தடைக்கற்களைத் தாண்டி, மேலும் மைல்கற்களை நட என் நண்பன் வித்திட்டிருக்கிறான்!

என்னாலான உதவியாய், அவன் செய்யப் போகும் ''சான்று விளக்கத்திற்கு'' மேம்பட்ட எடுத்துக்காட்டு... களை சேகரித்துக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிய... வாறே உறங்க வந்தேன்!

டேய்... கார்த்தியோட சார்ட்... இன்னும் வரையா... இருக்கியேன்னு தானே கேட்கிறீங்க? என் மனம் தா... 'anti-virus' இடம் சென்றுவிட்டிருந்ததே!

சான்று விளக்கத்திற்குத் தேவையான பறையே... றதை... எப்படி வித்தியாசமாக தயாரிக்கலாம் என்ற... எண்ணத்தினுள் வியாபித்திருந்தேன் நான். மூளைக்கு... வைரஸ்களின் படை போர் புரிந்து கொண்டிருக்க, அ... னுடன் சந்தோஷமாய் போரிட்டிருந்தன என் எண்ண... களும்.



ஓர் கட்டத்தில், என்னை அறியாமல் கண்ணயர்ந்தேன்!

திடீரென ஓர் முழிப்பு! விழித்துப் பார்த்தால்... மணி மூன்று! மண்டைக்குள் ஓர் மின்னல்!

சட்டென, கார்த்திகா கொடுத்த சார்ட்டை எடுத்து, அறுபத்தியாறு கட்டங்களை வரைந்தேன் நான். சாதாரண பேப்பரில் வரைந்துவிட்டு, சார்ட்டில் வரைவோம் என்ற எண்ணம் எட்டிப் பார்த்தாலும், இது சரியாக வரும் என்றே மனம் அடித்துச் சொன்னது.

ஒன்று விட்டு ஒன்றாய் கட்டங்களை கறுப்பாக்கினேன் - ஆம், செஸ் போர்டு தான்!

அதிலிருந்த கறுப்புக் கட்டத்தில் - ஓர் பெண் நிற்பது போல் வரைந்தேன் - ராணியின் கம்பீரத்துடன் இருந்தாள் அந்தப் பெண்ணரசி!

அடுத்ததாய் இருந்த வெள்ளைக் கட்டத்தில் - ஓர் ஆண் உருவத்தைத் தீட்டினேன் - ஆடவன் ராஜ வேடம் பூண்டிருந்தான்.

ராணியின் உருவம் பேசுவது போல், அவளிடமிருந்து ஓர் சிறு வாக்குமேகத்தை வரைந்தவன், அதில் ''நான் இல்லாது போனால்... நீ ஒன்றுமில்லாமல் போவாய்!'' என்று எழுதினேன்.

உண்மை தானே? சாதாரணமான செஸ் விளையாட்டிலேயே, ராணியை இழந்துவிட்ட ராஜா ஒன்றுமில்லாமல் போய்விடுகிறான் எனும்போது இல்லற வாழ்வில் ராணியற்ற ராஜா சிப்பாய்க்குக்கூட ஈடானவன் இல்லையே? எதிரியின் செருப்பாய் அல்லவா மாறிவிடுகிறான்?

இதை விடவும் மேலாய், பெண்ணின் மேன்மையை அவளுக்கு எடுத்துக் காட்ட முடியுமா? என்ற கர்வத்துடன் மேலும் சில மாற்றங்களைச் செய்துவிட்டு, உறங்கிப் போனேன் நான்.

அடுத்த அரை மணி நேரத்தில் மீண்டும் விழிப்பு!

முன்னர் நான் கொண்ட கர்வத்தை இப்போது என் எண்ணமே கேள்வி கேட்டது!

NSS கேம்ப் என்றால் கண்டிப்பாக ஒரு கிராமத்திற்கு தான் செல்வார்கள்... அப்படியிருக்கையில், செஸ் போர்டு என்பதை அங்கிருக்கும் பெண்கள் பார்த்திருப்பதே அரிதாக இருக்குமல்லவா? அப்படி ஒரு சூழலில், 'செஸ் விளையாட்டில் ராணி இல்லாவிட்டால்' என்று ஆரம்பித்தால், அது மீண்டும் ஓர் அறிவுரை படலமாய் தானே இருக்கும்?

ஓர் செயல்முறை விளக்கமாய்... அவர்கள் அறிந்த ஒன்றை மேற்கோள் காட்டி சொல்லும் ஒன்றாய் இருக்காதே என்று தோன்றியது.

அரும் பெரும் சாதனை என்று நான் எண்ணியது சுக்கு நூறாகிவிட, என்னிடமிருந்த ஓர் சார்ட்-டை எடுத்து மீண்டும் வரைந்தேன்.

இன்னமும் அரை மணி நேரம் தானே இருக்கிறது. மேடம் வந்து விடுவார்களே என்ற பயம் வேறு! நேற்று மாலை முழுவதும், என் மனதினில் தோன்றி மறைந்து கொண்டிருந்த தராசையே வரைந்தவள், ஓர் பக்கம் உயர்வாகவும், ஒரு பக்கம் தாழ்வாகவும் இருக்குமாறு உறுதி செய்து கொண்டேன்.



உயர்ந்திருந்த பகுதியில் ஓர் புலியை வரைந்தேன்... சொல்லப் போனால் அதன் உடலில் ''வரதட்சணை'' ''பாலியல் தொல்லைகள்'', ''மாமியார் கொடுமை'', ''கணவனின் அடக்குமுறை'', ''சமுகத்தின் விதிமுறைகள்'' போன்ற வாசகங்கள் விரவி இருக்கும்படி பார்த்துக் கொண்டேன்.

தாழ்ந்திருந்த பகுதியில் ஓர் பெண்ணரசியை வரைந்து...

பின்னர் அவள் கையில் ஓர் முறம். அதில் ''தன்னம்பிக்கை'', ''பெண் உரிமை'' ''படிப்பறிவு'', ''பெண் சுதந்திரம்'' ஆகியவற்றை விரவி...

அந்த முறம்... உயர்ந்திருந்த பகுதியை நோக்கி அடிப்பது போல் மேலும் சில மாற்றம் செய்து முடித்த போது, மனம் ஓரளவு நிம்மதி பெற்றிருந்தது.

சரியாக ஐந்து ஐம்பத்தைந்துக்கு (இந்தம்மா... ஐந்து மணிக்கு வருகிற ஆளாம்!) என் அறைக்கதவைத் தட்டிய கார்த்தி, ''ரெண்டுமே சூப்பரா இருக்கு! ரெண்டையும் எடுத்துக்கிறேன்!'' என்றதோடு ஓடிவிட்டாள்.

மாலையிலும், ''என் பிரண்ட்ஸ் எல்லாரும்... வாயால சொல்ற மெசேஜ் விட... என்னோட படம் நிறைய விஷயம் சொல்லுதுன்னு சொன்னாங்க'' என்று பெருமை பீத்தியதோடு முடித்துவிட்டாள்.

அதுதான், அவர்கள் தோழியர் வந்துவிட்டார்களே... இருவருமாய் சேர்ந்து பக்கத்திலிருக்கும் நூலகத்திற்குப் பறந்து விட்டார்கள்.

படிப்பார்களோ என்னவோ... நூலகம் நடத்தும் ஆசிரியர் பாவம்!

நான் வரைந்த படத்திற்கு, பெண்களிடம் என்ன வர வேற்பு இருந்தது என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் இருந்த என்னை... அதை மறக்கடிக்கவே செய்து விட்டிருந்தன பல வேலைகள்.

ஆனால்... என்னை மறக்கவிடாது செய்ய, வந்து சேர்ந்தது ''அகல்யா''வின் கடிதம்!

''அகல்யா''விற்கும், நான் வரைந்த ''படத்திற்கும்'' என்ன சம்பந்தம் என்று தானே கேட்கிறீர்கள்?

இருக்கிறதே!

ஓர் ''கள்ளி'' பற்றிய விவரத்தை நீங்கி அறிய வேண் டாமோ? வருகிறேன்... வருகிறேன்.

# 16

நான் கார்த்திக்காக வரைந்து கொடுத்த ஓவிய களைப் பற்றி ஞாபகம் இருக்கிறதல்லவா?

உங்களுக்கும் எனக்கும் நினைவிருந்து என்ன பயன் என் தங்கைக்கு அதைப் பற்றி நினைவே இல்லையே

அவளும், படத்தைப் பற்றி ஏதாவது சொல்லுவா என்று எதிர்பார்த்துக் காத்திருந்த நான் அந்த ஓவிய களை மறந்து போகும் அளவிற்குத் தள்ளப்பட்டே நான் என்ன சொல்ல வரேன்னா, கார்த்தி அதைப் பற் பேசவே இல்லை என்கிறேன்.

அவளும் மறந்து, நானும் மறந்து, பிற வேலைகளி எங்கள் கவனம் முழுதாய் திரும்பியபோது, நான் எழுதி



வார இதழிலிருந்து விமர்சனக் கடிதங்கள் அடங்கிய உறை வந்து சேர்ந்தது.

ஹ்ம்ம். போன மாதம் வந்த உறையில் ''அகல்யா'' வின் கடிதங்கள் இருக்கவில்லை என்று உங்களிடம் சொன்னேனா? ஆம். எனது சூடான பதில் பறந்ததும் ''அகல்யா'' எனும் அகல் விளக்கு அடங்கிவிட்டது போலும். சுடர் விட்டு என்னை எரித்துக் கொண்டிருந்த ''அகலில்'' பலமான காற்றாக என் மனக் குமுறல்கள் வீச, இருண்டு அரண்டுவிட்டாள் போலும்!

அவளது கடிதங்கள்! கவிதைகள் வராததில், நெஞ்சின் மேற்பகுதி நிம்மதியடைந்தாலும், உள் மனமோ ''இவ் வளவு தான் இவளது வீரமா?'' என்று ஏளனம் பேசியபடி எங்கவே செய்தது. உண்மையை ஒப்புக் கொள்வது என்றுமே நல்லதல்லவா?

மேற்பகுதியும் உட்பகுதியும் ஒன்றோடு முரண்பட் டுப் போதும், மனம் ஒருமித்து, இன்று வந்த கடித உறையினுள் அகல்யாவின் கடிதங்கள் இருக்கிறதா என்று பார்க்கத் துவங்கினேன்.

என் ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய, ''அகல்யா''வின் கடிதங்கள் ஒன்றாய் அல்லாமல் மூன்றாய் வந்து சேர்ந் திருந்தன.

தேதி பார்த்து, முதலில் வந்த கடிதத்தை வேகமாய் பிரித்த எனக்கு, அதில் இருந்த செய்தி இதுதான்!

''அன்புள்ள ஈசன் அவர்களே, உங்கள் கடிதத்தை நீங்களே இன்னொருமொரு முறை படித்துப் பாருங்கள். நீங்கள் நினைக்கும் ''உங்கள்'' குறையினால் எத்தனை பிழைகள் நிரம்பியிருக்கின்றன என்பது புரியும்!''

கடிதத்திலிருந்த மூன்றே வரிகள் இவை மட்டுமே, கூடவே, நான் அனுப்பிய கடிதம் எனக்கே திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

என் எழுத்தையே மீண்டும் படிப்பதை சற்று ஒத்தி வைத்துவிட்டு, அவளது அடுத்த கடிதத்தை எடுத்தேன்.

''உன் உலகில் ஈசனாய் இருக்கும் நீ

பிறர் உலகில் மும்மூர்த்தியாய் திகழ்வதை அறிவாயோ!''

''படைக்கும் தொழிலாமீ எழுத்து

காக்கும் தொழிலாம் வணிகம்

அழிக்கும் தொழிலாம் கணினி'' இதில் ''அழிப்பதை'' மட்டுமே எடுத்துக் கொண்டாய் போலும்.

உன் போக்கிலே வந்தாலும், பிறரது ''அறியாமையை'' அழிக்க நீ ஏன் முன்வரக் கூடாது?

முடங்கியிருப்போரின் அறியாமையை அழித்து அவர்களின் தன்னம்பிக்கையை வாடவிடாமல் காத்து ஓர் புது சரித்திரம் படைத்திட வா!

என்றிருந்தது அவளது அடுத்த கடிதம்.

''ஷ் அப்பா! இவள் அடங்கவே மாட்டாளா?'' என்று வாய் விட்டே சலித்துக் கொண்டு, அடுத்து கடிதத்தை எடுத்த நான் ஸ்தம்பித்துப் போனேன்.

அடிப்பாவி, என்னை எப்படி ஏமாற்றி இருக்கிறாள்! யாரோ போல்... என்னை என்ன பாடுபடுத்திவிட்டாள்!

யாரா? நம்ம தீபஜோதி மேடம் தான்!

ஆஹா... உன் மூளையில் பல்பு இப்போது தான் எரி ததா? எங்களுக்கெல்லாம் அப்போதே தெரியும் என்று



நீங்கள் சொல்வதைக் கேட்க முடியாமல், தலையும் தாழ்ந்து, சிரிப்பும் முகமெங்கும் படர்ந்தது.

இத்தனை நாள் எரியாத பல்பு எப்படி எரிந்தது என்று தானே கேட்கிறீர்கள்?

''பரோட்டா மாதிரியே உங்க படங்களும் 'A' கிளாஸ்!

''அதுவும் - அந்த தராசு படம் - எனக்கு புலி முகத்தில் உங்க திருமுகம் தெரியுற மாதிரி ஒரு ஃபீலிங்.

அதே மாதிரி - மரத்தி முகம் என் முகமா இருக்கோ? என்ன நான் சொல்றது?'' இந்தக் கடிதத்தைப் படித்தப் பிறகும், இது ''தீபஜோதி'' என்ற கள்ளி தான் என்று அடையாளம் காணாமல் இருந்தால், என்னிடம் கதை கேட்கும் உங்களுக்கே என்னைப் பார்த்து சிரிப்பாய் வந்திருக்கும்.

நீங்கள் அனைவரும் ஒரே குரலில் ''அட மடையா!'' எனக் கூவுவது கேட்ட நிலையிலும், என்னால் அசடு வழிய சிரிக்க மட்டுமே முடியும்!

சரி... சரி... போதும், ஒரு சின்னப் பையனை இத்தனை கேலிக்கு ஆளாக்கி சிரிப்பது மேன்மக்களுக்கு அழகல்ல!

என்னை இப்படிப்பட்ட நிலைக்குத் தள்ளிய தீப ஜோதியை எள்ளி நகையாடுவதை விட்டுவிட்டு என்னிடம் என்ன வீர வசனம்? கேலி கிண்டல்?

வாருங்கள், 'அகல்யா' என்ற 'தீபஜோதியிடம்' செல்வோம்.

மாலையில் அவள் வரவிற்காக காத்திருந்த நான், ஏனோ 'அகல்யா'வின் ரகசியத்தைப் பற்றி அப்பாவிடமோ பிரதீப்பிடமோ சொல்லவில்லை.

அப்படி சொல்லவேண்டுமெனில், ஆதி தொட்டு வந்த 'அகல்யா'வின் கடிதங்களைப் பற்றி சொல்லியாக வேண்டுமே! அதுதான்!

''ஏன் அவர்களிடம் முன்னரே சொல்லவில்லை?'' என்று தானே கேட்கிறீர்கள்.

ஹ்ம்ம் அகல்யாவின்... இன்னுமென்ன அகல்யா... தீபஜோதியின் கடிதங்கள் என்னை வெளியுலகிற்கு இட்டுச் செல்லுமாறு இருந்தன அல்லவா? ஏற்கனவே, எனது தாழ்வு மனப்பான்மையை எண்ணி கவலை கொண்டிருக்கும் அவர்கட்கு, இவளது பேச்சில் பொதி திருக்கும் அர்த்தம் மேலும் வேதனையை அல்லவா கொடுக்கும்? நான் என்னுள்ளே புதைந்திருப்பதும், எனக்கென்று ஓர் வட்டமமைத்து அதிலேயே சுழன்று வருவதும் அவர்களுக்குமே கவலை எனும்போது, வெளி மனுஷி ஒருத்தியின் வார்த்தைகளிலும் அ வெளியாவது அவர்களை வருத்தாது? எனக்காக... எ முன்னேற்றத்திற்காக... என் மகிழ்விற்காக என்று பார்த்துப் பார்த்து செய்தவர்களுக்கு இன்னுமின்னும் மனக்கஷ்டத்தைக் கொடுக்க நான் விரும்பவில்லை ஆதலால் சொல்லவில்லை.

அவர்களிடம் சொல்வது இப்போது முக்கியமில் லையே? தீபஜோதி என்ற கள்ளியை கையும் களவுமா பிடிப்பது தானே இப்போதைய முக்கிய வேலை.

அவளிடமிருந்து வந்த கடிதங்கள் யாவற்றையு சேகரித்துக் கொண்டு, அவளின் வருகைக்காக கூடத்தி அமர்ந்திருந்தேன்.

வாசலையே பார்த்துக்கொண்டு நான் அமர்ந்திரு பதைக் கண்ட அம்மாவிற்கு ஒரே ஆச்சரியம் போலு



என் முகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, சமையலறைக்குள் செல்வதும், அங்கே இருக்க முடியாமல் மீண்டும் வந்து என் முகத்தைப் பார்ப்பதும் - அவரைப் பார்க்க எனக்கு சுவாரஸ்யமாக இருந்தது.

புதிதாய் பார்ப்பவர்களிடம் பேசத் தயங்கும் குழந்தை போல், அம்மாவைப் பார்க்க ''சிறு பிள்ளையாய்'' தெரிந்தது!

ஐந்து முறைக்கும் மேலாக, அவர் சமையலறைக்கும் கூடத்திற்கும் நடை பயின்றதில் என் கால்களை வலித்து விட, ''என்னமா? என்கிட்ட... என்ன கேட்கணும்?'' என்றேன் மறையாத சிரிப்புடன்.

''இல்லை... இந்த நேரத்தில், இப்படி வெளியே உட்கார்ந்திருக்க மாட்டியேன்னு... அதான்...'' என இழுத்த அம்மாவின் முகத்தில் எல்லை அடங்கா ஆர்வம்!

''சும்மா தான்மா... கம்ப்யூட்டரே பார்த்திட்டு இருந்தா... கண் வலிக்குது'' என்றேன் நான் குறையாது வளர்ந்த சிரிப்புடன்.

''அப்படியா? கண் எரியுதா? நைட்-ல வேற ரொம்ப நேரத்துக்கு கண்ணு முழிக்கிற இல்லையா... அதான்! இன்னைக்கு நைட், கண்ணுல வெள்ளரிக்காய் வச்சு விடுறேன். கண்ணு குளிர்ச்சியா இருக்குமாம்... நேத்து கார்த்தி முகத்தில எதையோ போட்டுட்டு... இதையும் வச்சுக்கிட்டா... இன்னைக்கு அவளையே வச்சு விடச் சொல்றேன்'' என நான் சொன்னதை நம்பிய அம்மா உள்ளே சென்றிருந்தார்.

இந்த இடத்தில், கார்த்திகா இருந்திருந்தால் ''டேய் அண்ணா! என்கிட்டேவா?'' என்று கண்ணை உருட்டி

யிருப்பாள். கூடவே, கேள்வி மேல் கேள்வி கேட்டு என்னிடமிருந்து விஷயத்தையும் வாங்கியிருப்பாள்.

பிரதீப் இருந்திருந்தால், அவளது கேள்வி ''யாருக்காக வெயிட் பண்றே?'' என்று நேரடி தாக்குதலாய் என்னை நிலைகுலைய செய்திருக்கும்.

அப்பா என்றால் வெறும் பார்வை தான்! அதிலேயே, நாங்கள் இருவரும் ஓராயிரம் வார்த்தைகளுக்கு ஈடாய் விஷயம் பரிமாறியிருப்போம்!

இவர்கள் அனைவரும் என்னை எப்படி கணித் திருப்பார்கள் என்றெண்ணிய நான், தீபஜோதியிடம் வர, என் எண்ணத்தைப்போல் அவளும் அழையா விருந் தாளியாய் வந்து சேர்ந்தாள்.

குறுகுறுவென்று இருந்த என் பார்வையில் கண்டு கொண்டாளோ அல்லது என் கையிலிருந்த காகிதக் கற்றையை வைத்துக் கணித்து வந்தாளோ அல்லது எப்போதும் கணினிக்குள் தலையை விட்டிருக்கும் நான் வழக்கத்தை மீறி கூடத்தில் அமர்ந்திருப்பதை வைத்து ஊகித்தாளோ, உள்ளே வந்த தீபஜோதி கூறிய முதல் வார்த்தை ''ஹஹ்ஹா! ஒரு வழியா... பல்பு எரிஞ் சிடுச்சா?'' என்பதுதான்.

அத்துடன் நிறுத்தாமல், என்னைச் சுற்றி சுற்றி வந்து ''பரவாயில்லை... லேட்டா எரிஞ்சாலும் லேட்டஸ்ட்டா எரிஞ்சிருக்குப் போல? பயங்கரமா கண்ணு கூசுது!'' என்றாள் வாய் கொள்ளாத சிரிப்புடன்.

அவளது பேச்சிலும் பாவனையிலும் என் கட்டுப் பாட்டையும் மீறி சிரிப்பு வந்துவிட, அதை அடக்கி வைத்து தான், என் ஹீரோ இமேஜை தக்கவைத்துக்



கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லாததால் முகம் மலர்ந்து சிரித்தேன்.

என்னுடன் கூட சேர்ந்து சிரித்தவள், என் எதிரே இருந்த நாற்காலியில் சம்மனிட்டு அமர்ந்து கொண் டாள். கூடவே கைகளை மார்பிற்கு குறுக்காக கட்டி, சற்றே முன் குனிந்து அமர்ந்தாள், கதை கேட்க ரெடி ஆவார்களே... அதுபோல!

என் கையிலிருந்த கடிதங்களை எங்கள் முன்னிருந்த சிறு மேசையின் மீது, பரப்பி வைத்துவிட்டு அவளைக் கேள்வியாய் நோக்கினேன்.

''என்ன பரோட்டா மாஸ்டர்? பரோட்டா போடற பழக்கம் உங்களைவிட்டு லேசில போகாது போல... இந்த டேபிள் ஒண்ணும் தோசைக் கல்லும் இல்லை... இந்த லெட்டர் எல்லாம் பரோட்டாவும் இல்லை. எதுக்கு... இப் படி எல்லா லெட்டரையும் பரப்பி வச்சிருக்கீங்க? இதெல்லாம்... பொக்கிஷங்கள் சார். நீங்க தான் பாதுகாக் கணுமே ஒழிய... இப்படி கடையைப் போட்டு காசு பார்க்கக் கூடாது!'' என என் கேள்விக்குப் பதில் கூறிய வளை என்ன செய்வது? நீங்களே சொல்லுங்கள்!

''பரோட்டாவது நாலு ரூபாய்க்குப் போகும்... உன் னோட லெட்டருக்கு நயா பைசா கூட கிடைக்காது'' என நான் கூற,

''கண்டிப்பா யாராலும் கொடுக்கமுடியாது! ஏன்னா... நயா பைசாவே வரதில்லையே?'' என்ற அவளது கடியை கேட்கையில் காதில் ரத்தம் வழிந்தது எனக்கு.

நான் காதைத் தேய்த்துவிட்டுக் கொண்டதும், ''சரி... சரி, விஷயத்துக்கு வாங்க! ஆனாலும்... நீங்க இவ்வளவு

புத்திசாலியா இருக்கக் கூடாது?'' என்று மீண்டும் சிரித் தாள், அந்தக் கள்ளி.

அதற்குள், தோட்டத்திலிருந்து வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்த அம்மா ''வாம்மா... தீபா! இன்னைக்கு கிளாஸ் எல்லாம் முடிஞ்சதா? பசில இருப்பியே... கொஞ் சம் பக்கோடா எடுத்துக்கோ. டீ போடறேன்...'' என்றார் கனிவுடன்.

அவரது வார்த்தையில் அவள் மனம் குளிர்ந்ததை வெளிப்படையாக காட்டி, ''இன்னைக்கு என் வாழ்க் கையில் ஒரு முக்கியமான திருப்பம் நடக்கப் போகுது... அதான் சீக்கிரம் வந்துட்டேன்'' என்றாள் கண் சிமிட்ட லுடன்.

அப்போது அம்மா ஏதோ கேட்க வர, ''திருப்பம்... லெப்ட்-ல திருப்புமா இல்லை ரைட்-ல திருப்புமான்னு மொக்கைத் தனமா கேள்வி கேட்கக் கூடாது! வேற எதுனாலும் கேளுங்க'' என்றாள் தீபஜோதி அவனை முந்திக் கொண்டு.

''உன்கிட்ட அதைக் கேட்டுட்டு... அடுத்த ரெண்டு மணி நேரத்திற்கு இதுக்கு மட்டுமே நீ பதில் சொல் றதைக் கேட்டுட்டு இருக்க... நான் என்ன கார்த்திகாவா? அவளோட அம்மாவாக்கும்!'' என்று அம்மா டைமிங்கில் அவளது காலை வார, எனக்கு சுவாரஸ்யமாய் இருந்தது கூடவே, அம்மாவா இது என்றும்!

''இருங்க... இருங்க... கார்த்தி கிட்டப் போட்டுக் கொடுக்கிறேன்!'' என்று ஒரு விரல் நீட்டி மிரட்டிய தீபாவிற்கும் சிரிப்பை அடக்குவது பெரும்பாடாய் இருந்தது.



''இங்கேயும் போகாம இங்க தான் இருக்கப் போறேன். நீயும் உன் பிரண்டும் என்ன தான் பண்றீங்கன்னு நானும் பார்க்கத்தானே போறேன்'' என்று மேலும் பதிலுக்குப் பதில் பேசினார் அம்மா.

நான் இருவரையும் மாறி மாறி வாய் பார்த்துக் கொண் டிருக்க, ''பரணி... கண்ணா! உனக்கும் சேர்த்து டீ போடவா?'' என்றார் அம்மா என்னிடம்.

இருவரது சம்பாஷணையும் எப்போது முடிந்தது என்று நான் திகைக்க நேரமில்லாமல், அம்மாவோ ''என்ன ராஜா?'' என்று மீண்டும் கேட்டுவிட்டார்.

''என்ன ஆன்ட்டி இது? அவர்ட்டப் போய்... 'டீ' வேணுமான்னு கேட்டுட்டு... அவரொரு பெண்ணிய வாதி ஆன்ட்டி! பானத்தில் கூட... பெண்ணை அவமதிக் கிற சொல்லைக் குடிக்க மாட்டார்'' என்று எனக்காய் பேசியவள் தீபாவே தான்.

''நீ... என்கிட்டே அடி வாங்கப் போறே!'' என நான் கையை உயர்த்தி மிரட்ட, தீபா உதட்டைச் சுளித்துச் சிரிக்க, அம்மாவுக்கோ பெரும் ஆவல்!

''என்ன பரணி? என்ன விஷயம்? தீபா... நீயாவது சொல்லுமா...'' என மாறி மாறி இருவரிடமும் தாவினார் அம்மா. அவருக்கு நான் குடும்ப உறுப்பினர்கள் தவிர வேறு யாரிடமும் இப்படி அமர்ந்து பேசியதில்லையே என்ற ஆர்வம் போலும் - தீபாவை குடும்பத்தில் ஒருத்தி யாய் ஏற்றுக் கொண்ட போதும் அவளிடம் நான் அதிகம் பேசியதில்லை என்பதாலும் அவரிடம் ஆச்சரியம் சூழ்ந்து கொண்டது என்று நானே யூகித்தேன். இவையெல் லாம்... என் யூகங்களே! அம்மாவின் மனதில்

வேறென்ன இருந்தது என்று அவரால் மட்டுமே சொல்ல முடியும்!

''ஒண்ணுமில்லை ஆன்ட்டி! அன்னைக்கு... உங்க பையன் கார்த்திக்கு ரெண்டு சார்ட்-ல படம் வரைஞ்சு கொடுத்தாங்களே?''

''ம்ம்... எதும்மா? ஞாபகம் இல்லையே?''

''ஒன்றா... இரண்டா ஆசைகள் ரேஞ்சு-ல உங்க பையன் ஒரு வேலை செஞ்சா பரவாயில்லை. சும்மா பறந்து பறந்து வேலை செஞ்சா இப்படித்தான்... உங் களுக்கே ஞாபகம் இல்லாம போய்டும்'' - அப்பட்டமான ஐஸ்! எனக்கா? அம்மாவுக்கா? என்று தான் எனக்குப் புரியவில்லை.

அம்மாவோ பெருமிதத்தில் பூரித்து, ''பரணி எப்ப வுமே அப்படித்தான்... ஒரு நிமிஷம் கூட சும்மா இருக்க மாட்டான். அதே மாதிரி அவனுக்குத் தெரியாததுன்னு எதுவுமே கிடையாது'' அம்மா என் புகழிற்கு கொள்கை பரப்புச் செயலாளர் ஆகியிருந்தார்.

அவர் மேலும் பேசி, தீபாவிற்குத் தீனி போடும் முன்னர் 'ஷ். அம்மா!' என அவரை அடக்கி,

''டீ எடுத்திட்டு வாங்க...'' என்றேன் நான்.

''டீ குடிக்கமாட்டேன்னு தீபா சொன்

''நீ தான்... 'டீ' குடிக்கமாட்டேன்னு தீபா சொன் னாளே?'' என அம்மா சொல்ல, தீபா வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க, 'அம்மா... நான் சொல்றேன். 'டீ' எடுத்திட்டு வாங்க'' என்றேன்.

அம்மா சமையலறை பக்கம் நகர்ந்ததும், ''ஆன்ட்டி... உங்களைப் பத்தி இவ்வளவு பெருமையா பேசறாங்க.



ம்ம்ம்... ஒருவேளை... உங்களோட 'பல்பு' ஃபூஸ் போனதை கேட்டா... மாறிடுவாங்க போல?'' என்றாள் தீபா சிரிப்புடன்.

''அவங்க மாறுவது இருக்கட்டும். நீ.. என்கிட்டே எதை மாற்ற ட்ரை பண்றே?'' என்றபோது, என் கண் ணில் கூடுதல் கூர்மை.

''தெரிஞ்சுகிட்டே... தெரியாத மாதிரி கேட்கிறீங் களே?'' என அப்போதும் அவள் சிரிக்க, எனக்கு லேசாய் கோபம் கூடியது.

''சரி... எனக்குத் தெரிஞ்சதுன்னே வச்சுப்போம். ஆனா, எதுக்கு 'அகல்யா' என்ற புனைப் பெயர்? முகத் துக்கு நேரா... சொல்ல வேண்டியது தானே?'' என்றேன் நான்.

இதை சொல்லி முடித்தபோது, நான் பேசுவது அவ ளுக்குப் புரிகிறதா என்ற சந்தேகம் வந்துவிட்டது எனக்கு. அந்த சந்தேகம் வந்ததும், சட்டென கையிலிருந்த பேப்பரில் நான் கூறியதை எழுதத் துவங்கினேன்.

என் வாக்கியம் மூன்றாம் எழுத்தைக் கடக்கும் போதே, ''எனக்கு... நீங்க சொன்னது புரிஞ்சது'' என்றாள் தீபா; அந்தக் குரலில் என்ன இருந்தது என்று என்னால் இனம் காண முடியவில்லை. கண்டிப்பாக, சிரிப்போ கேலியோ இருக்கவில்லை என்பதை மட்டும் கண் டறிந்து கொண்டு, அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

''நீங்க மட்டும் தான் 'ஈசன்'ங்கிற புனைப் பெயர்-ல எழுதுவீங்களா? நாங்கெல்லாம் எழுதக்கூடாதா?'' இப்போதும் சிரிப்பு.

அந்த சிரிப்பு எரிச்சலை மூட்ட, இவளிடம் பேசி புண் ணியமில்லை என்ற எண்ணம் வலுத்தது. அதன் தொடர் பாக, சட்டென என் அறைக்குள் எழுந்து சென்றுவிட் டேன், நான்.

# 17

அவளது கடிதங்களை வீசியெறிந்து விட்டு, படுக்கையில் விழுந்த எனக்கு எனது கோபம் மட்டுப்பட பல நிமிடங்கள் பிடித்தது.

கோபம் லேசாய் தனிந்ததும், இருவரும் பேசிக் கொண் டிருக்கும் போது எதிராளியை அவமதிப்பது போல் எழுந்துவந்துவிட்டோமே என்று நெஞ்சம் குறுகுறுத்தது. ஆனாலும்... நான் எங்கே பேசினேன்... நான் சைகையில் தானே... என்ற எண்ணத்தில் வேதனை மண்ட, அவளிடம் மன்னிப்பு கேட்கத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு படுக்கையிலேயே கிடந்தேன் - அம்மா தேநீருடன் வரும் வரை.

அவரிடம் தேநீர் கோப்பையை வாங்கிக் கொண்டு "தீபாவிற்கு?" எனக் கேள்வி கேட்டேன்.

"கொடுத்துட்டேன், கண்ணா! தோட்டத்தில் உட் கார்ந்து குடிச்சிட்டு இருக்கா..." என்றார் அம்மா கூடுதல் தகவலுடன்.

சூடான பானம் உள்ளே இறங்க இறங்க, அவளிடம் "மன்னிப்பு" கேட்பதே முறையன்று தோன்றிவிட, வெளியே சென்றேன்.



ஊதா வண்ணத்தில் சங்கு போல் மலர்ந்திருக்கும் 'சங்குப்பூவின்' பட்டிதழ்களை வருடிக் கொண்டு அமர்ந் திருந்தவளின் முன்னே சென்று, நான் வந்ததைக் காட்டிக் கொண்ட நான்,

அதன் அடையாளமாய் அவள் நிமிர்ந்து ஓர் புன்னகை பூத்ததும், "சாரி" என்றேன்.

"அடப் பரவாயில்லை, பரனி சார்! இதுக்கு... எதுக்கு சாரி? உங்களைக் கோபப்படுத்துற மாதிரி நான் இன்னும் நிறைய செய்யப் போறேன். அதனால, அப்போ சொல்ற 'சாரி'யோட இதைக் கழிச்சுக்கலாம்" என்றாள் அவள்.

"உனக்கு என்ன தான் வேண்டும்? என் நிலையைக் கடிதத்தில் விளக்கி எழுதியும்... உனக்குப் புரியவில் லையா?" என்று ஆதங்கம் மிகவுற நான் கேட்கவும்,

"எனக்கு ஒரே ஒரு கேள்வி மட்டும் தான்! இவ்வளவு தூரம்... பல தொழிலிலும் புகுந்து விளையாடுற நீங்க... உங்களையே ஏன் மறைச்சு வச்சுக்கிறீங்க?"

அவளது பேச்சில் பொறுமை இழந்து, "அதுக்கான காரணத்தை நான் ஏற்கனவே சொல்லிட்டேன். நீ சரியா படிக்கலைன்னா... இன்னொரு தடவை சொல்றேன்... என்னோட குறையை பிறருக்கு விளம்பரப்படுத்தி அதிலிருந்து வர பரிதாபத்தில் நான் வாழ விரும்பலை" என்றேன் நான் தன்னிலை விளக்கமாக. நான் சொன்ன விதத்தில், என் கரங்களில் அதிக நடுக்கம் தென்பட்டதை என்னால் உணர முடிந்தது. நான் பேசுவது கரங்களால் என்பது உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக் கிறேன்.

''உங்களுக்கு இருக்கிறது ஒரு குறையே இல்லை... அது ஒரு வரம்! சரி... அதை விடுங்க!''

''இன்னைக்கு 'அவள் விகடன்'ல ஒரு சின்ன கதை படிச்சேன். அதை உங்ககிட்ட சொல்லணும் போல இருக்கு. கவனமா கேட்கணும் ஓகே-வா?''

''ஒரு குருவி பயங்கர ஸ்பீட்ல பறந்து வந்துச்சு. அப்ப, எதிர்ல வந்த கார் மேல மோதிடுச்சு. உடனே டிரைவர் அதுக்கு ட்ரீட்மென்ட் கொடுத்து, தண்ணி, சாப்பாடு வச்சு கூண்டுல அடைச்சார்.

''மயக்கம் தெளிஞ்சு முழிச்சுப் பாத்த - குருவி என்ன சொல்லுச்சு தெரியுமா?''

''அய்யயோ, நான் ஜெயில்ல இருக்கேன்... அப்போ கார்காரன் செத்துட்டானா?''

என்னால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. ஆனாலும், இந்தக் குருவிக்கு ஓவர் கான்ஃபிடன்ஸ். அதான்... ஓவர் கான்ஃபிடன்ஸ் உடம்புக்கு ஆகாதுன்னு சொல்றாங்க. சரியான அடாவடிக் குருவி... தீபா மாதிரியே!

தீபா மேலும் பேசினாள். ''இத்தூனூண்டு இருக்கற குருவிக்கே... தன் மேல... தன்னோட பலத்தின் மேல அசாத்திய நம்பிக்கை இருக்கும் போது... உங்களுக்கு ஏன் இல்லை?''

''உங்க பலம் நீங்க குறையா நினைக்கிறீங்களே, அந்த நிறை தான்! அதை மறைக்காம பிற உலகத்துக்குக் காட்டும் போது, உங்களைப் பார்த்து பல பேர் தன்னம்பிக்கையோட உருவாகலாம். அதைத்தான் சொல்ல வரேன்'' என்றாள் தீபஜோதி மிகுந்த அழுத்தத்துடன்.



''என்னைப் பார்த்து'' அப்படியென்றால் என்ன அர்த்தம்? ஏதும் ஆதரவற்றோர் பள்ளிக்குச் சென்று என்னை உரையாற்ற சொல்கிறாளா இல்லை... என்னைப் போல் இருப்பவர்களுக்கு ஏதேனும் உதவி செய்யச் சொல்கிறாளா என்பது எனக்குப் புரியவில்லை.

அதையும் அவள் வாயாலேயே கேட்டுவிட எண்ணி, நான் பேசத் துவங்கும் முன்னர் பிரதீப் தோட்டத்திற்குள் இறங்கி நடப்பது தெரிந்தது.

அவளைத் தாண்டிக் கொண்டு சென்ற என் பார்வையை, தீபஜோதியும் தொடர, ''ஹாய்!'' என்ற உற்சாகக் குரலுடன் வந்தான் நண்பன்.

''ஏய்... பரணி! ஒரு குட் நியூஸ்... நம்ம ஒரு பெரிய கம்பெனிக்கு ப்ரோபோசல் அனுப்பினோமே? அதை அக்செப்ட் பண்ணிட்டாங்க. நம்மளோட இன்னும் ரெண்டு பேரை செலக்ட் பண்ணியிருப்பாங்க போல. ஒரு ப்ரெசென்டேஷனோ இல்லை லைவ் டெமோவோ காட்டி, நம்ம திறமையை அவங்க ஆபீஸ்ல வந்து நிரூபித்துக் காட்டச் சொல்லி ஈமெயில் வந்திருக்கு. அதில... அவங்களோட தேவைகளை யாரோட anti-virus சாப்ட்வேர் பூர்த்தி பண்ணுதோ... அவங்களுக்கு இந்த காண்ட்ராக்ட் கிடைக்கும்'' தன்னிடமிருந்த நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டே எங்களை நோக்கி நடந்தான், அவன்.

நான் வாழ்த்தைக் கைகொண்டு மொழிய, தீபஜோதியோ ''உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!'' என்றாள் புன்னகையுடன்.

அதை ஓர் புன்னகையுடன் ஏற்றுக் கொண்ட பிரதீப், என்னிடம் திரும்பி, ''அந்த ப்ரெசென்ட்டேஷன்-ல

ஏதாவது வித்தியாசமா செய்து தாடா... அதுமேல, நம்ம ளோட பண விவகாரமெல்லாம் அங்க அங்க கோர்த்து விட்டு... ஒரு மாதிரி ரெடி பண்ணிடுவேன். ஒரு டிராஃப்ட் பண்ணிக் கொடேன்... அதைச் சொல்லத் தான் வந்தேன்...'' என்றான் தான் வந்த வேலையைக் குறிப்பிட்டு.

''சரிடா. இன்னைக்கு நைட் பார்ப்போம். ஏற்கனவே ஒரு அஞ்சு ஸ்லைட் இருக்கு... இன்னும் கொஞ்சம் மாத்திட்டுப் பார்க்கலாம்'' என்றபோது, என் எண்ணங்கள் யாவும் எங்களை முன்னிறுத்தப் போகும் ''பறையேற்றத் திடம்'' சென்றுவிட்டிருந்தது.

எங்கள் இருவர் பேச்சையும் கேட்டிருந்த தீபஜோதி, ''ஹோ... இந்த ப்ரெசென்ட்டேஷனை... பிரதீப் சார் தான் செய்வாரா?'' என்றாள் இடைப்புகுந்து.

''ஹ்ம்ம். ஆமா! நான் தான் செய்வேன்'' என்றான் நண்பன்.

''வேற யாரும் வர மாட்டாங்களா?''

எதற்கு இந்த விவரமெல்லாம் கேட்கிறாள்? இருவரையும் கவனமாய் ஆராய்ந்தேன் ''ம்ம். ரெண்டு சிஸ்டம் எஞ்சினியர் வருவாங்க... சாப்ட்வேர் இன்ஸ்டால் பண்ணி, ரன் பண்ணிக் காட்டுறதுக்கு'' என்றான் என் தோழன்.

''ஹோ... பரணி சார் உங்க பார்ட்னர் தானே? அவரை கூட்டிப் போக மாட்டீங்களா?''

தீபாவின் இந்தக் கேள்வி வந்ததும், அவளை ஒரு விசித்திர ஜந்துவைப் பார்ப்பது போல் பார்த்தான் பிரதீப்.



''பரணியையா?'' சொல்ல முடியாமல் தடுமாறிய பிரதீப், ''அவன்... இதில ஈடுபட்டுக் கொள்றதில்லை. மார்க்கெட்டிங்... என்னோட வேலைங்கிறதால நானே பார்த்துக்கிறது'' என்றான் முடிவாக.

''ஹோ. சரி!'' என்றவள், ''நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க... நான் இதோ வரேன்'' என்றுவிட்டு உள்ளே விரைந்தாள்.

அவள் சென்ற திசையைப் பார்த்திருந்துவிட்டு ''லூசாடா இவ...'' என்றான் பிரதீப், ஒரு மாதிரி கோணிய முகத்துடன்.

அந்தப் பாவனையில் நான் சிரித்துவிட, ''ஹே... அவ பேசினதில உனக்கு ஏதும் கோபமில்லையா? நீ... பாட்டுக்கு சிரிக்கிறே?'' என்று எனது வெளிப்பாட்டில் வியந்தான்.

''அவ... என்ன புதுசாவா பேசுறா? மூணு மாசமா.... இதே மாதிரி தான் என் கழுத்தை அறுக்கிறா'' என்றேன் நான், அப்போதும் சிரிப்புடன்.

''என்ன சார்... என்ன நடக்குது இங்க? எனக்குத் தெரியாம... பலதும் நடக்குது போலவே? இது கொஞ்சம் கூட சரியில்லை... இரு...இரு... வந்து கவனிச்சுக்கிறேன்'' என்ற நண்பன், என் இடத் தோளில் அடிக்க,

''இதை... என் தங்கைகிட்ட சொன்னாலாவது ஒரு புண்ணியமுண்டு. என்னைக் கவனிச்சு என்ன சாதிக்கப் போறே?'' என நானும் கிண்டலில் இறங்க,

''நீ... பேசுறது ஒரு தினுசா இருக்கே?'' என்றவாறே என்னை ஏற இறங்கப் பார்த்தான் அவன்.

அதற்குள் அவனது கைப்பேசி அழைத்துவிட, அதை எடுத்துப் பேசிவிட்டு என்னிடம் திரும்பியவன் ''அந்த கம்பெனி-ல இருந்து தான் கால். ஹ்ம்ம்... நீ என்ன பரணி சொல்ற?'' சரின்னு ''சொல்லிடலாம் தானே?'' என்றான் சட்டென வேலை விஷயத்திற்குத் தாவி.

''ப்ரெசென்ட்டேஷனுக்கு டேட் கேட்டு... ஈமெயில் பண்ணிடு. பிரதீப்! நமக்கு... இந்த காண்ட்ராக்ட் கண டிப்பா கிடைக்கும்'' என்றேன் நான் உறுதியாக.

''ஓகே... டா! நான் போய்... ஈமெயில் பண்ணிட்டு... கீழ வரேன். வந்து கவனிக்கிறேன்'' என்றுவிட்டு நண்பன், நகர, நானும் உள்ளே செல்ல எத்தனித்தேன்.

தீபஜோதியையும் காணவில்லை... கார்த்திகா வந் திருப்பாள் போலும்... இரண்டு பேரும் அரட்டையில் குதித்திருப்பார்கள் என்ற எண்ணத்தில் நான் உள்ளே செல்ல,

''ஹலோ... ஹலோ! நில்லுங்க! எங்க... நீங்க பாட் டுக்கு 'எஸ்' ஆகப் பாக்குறீங்க?'' என்று என் முன்னே வந்து நின்றார்கள் தீபஜோதி அம்மையார்.

எனக்கும் அவளிடம் கேட்க வேண்டியது நினைவு வர, சற்றே பின் தங்கினேன்.

''நீங்க... ஏன் இந்த ப்ரெசென்ட்டேஷனுக்குப் போகக் கூடாது?'' என்று அவள் தொடங்கியதைக் காதில் வாங்காதவன் போல்.

''ஆமா... இவ்வளவு தூரம் வாய் கிழிய பேசறியே? எதுக்கு... பேரை மாத்தி... ஊரை மாத்தி... யாரோ மாதிரி லெட்டர் போட்டே? நேர்-ல வந்து பேசவேண்டியது



தானே? இதுக்கு ஒழுங்கான பதில் சொல்லு!'' என்றேன் சவால் போல்.

இவள் என்ன எந்த நேரம் பார்த்தாலும் என்னைக் கேள்வி கேட்பது என்ற தன்மானம் தலை தூக்கிவிட் டிருந்தது எனக்கு. நான் கேட்கும் கேள்விக்கு இவள் பதில் சொல்லட்டும்... அப்புறம் பார்ப்போம் என்று என் கேள்வியை அவள் புறம் வீசினேன்.

''ஹையே... என்னை என்ன கேனைன்னு நினைச் சீங்களா? நேர்-ல உங்ககிட்ட வாய் பேசி... யாரு வாங்கிக் கட்டிக்கிறது? ஏற்கனவே ஒரு தடவை... இப்படி வாய் பேசித்தான் வாய் மேலேயே சூடு வைச்சாங்க! திரும்ப டரை பண்ண நான் என்ன... லூசா?'' என்றவள்,

அவள் ஏன் கடிதத்தில் தொடர்பு கொண்டாள் என்று அறிந்து கொள்வதை விட, அவளுக்கு ஏற்பட்ட காயத்தின் மூலத்தைத் தெரிந்து கொள்ளவே மனம் ஏங்கியது.

என் எதிர்பார்ப்பின் திசை புரியாமல், ''எனக்கு... கார்த்தி உங்களைப் பத்தி சொன்னதும் ஒரு பெரிய இமேஜ் இருந்தது. ஒரு தன்னம்பிக்கை நட்சத்திரம் மாதிரி... ஆனா... நேர்ல பார்த்தா...நீங்க அப்படியில்லை. உங்ககிட்ட இருக்க திறமையில ஒரு சதவீத தன்னம் பிக்கை கூட இல்லை. இதை... நான் உங்கிட்ட சுத்தமா எதிர்பார்க்கலை!'' என்று பேசிக் கொண்டே போனாள் அவள்.

வேறென்ன எதிர்பார்த்தாளாம்? ''நான் ஊமை. ஆனாலும் இத்தனை வேலை செய்கிறேன்'' என்ற தம்பட்டத்தையா?

''அதை... உங்களுக்கு எப்படி சொல்றதுன்னு தெரியலை. பழகின... முதல் நாளே உங்களைக் குறை சொல்ற மாதிரி பேச ஒரு மாதிரி இருந்ததும் ஒரு காரணம்'' இவளுக்குப் பேச ஒரு மாதிரி இருந்ததாம். இது அல்லவோ காலக் கொடுமை!

''அதான்... உங்க கட்டுரைகளுக்கு வாசகியா மாறி... உங்களை விமர்சனம் பண்ற மாதிரி... உங்க பலத்தை உங்களுக்கு உணர்த்தலாம்ன்னு...''

நன்றாக தான் உணர்த்தினாள்... ஆனாலும்...

''கார்த்திகாவின் தோழியா உங்ககிட்ட பேசுறதைவிட, ஒரு வாசகியா உங்ககிட்ட பேசினா அதோட தாக்கம் கண்டிப்பா அதிகமா இருக்கும்ன்னு எனக்குத் தோணுச்சு'' ஒருவாறாய் பேச்சில் இடைவெளி விட்டாள்.

ஹப்பாடா, முடித்துவிட்டாள்!

''சரி...நீ சொல்ற காரணம் எல்லாம் கரெக்ட்ன்னே வச்சுப்போம். இப்போ எதுக்கு... நீ தான் 'அகல்யா'ங்கிற விஷயத்தை அம்பலப்படுத்தினே?'' என்றேன் நான், கைகளை மார்பிற்கு குறுக்காய் கட்டிக் கொண்டு.

''ஹ்ம்ம்... இதுக்கு என்ன ரீசன் சொல்றது? உங்களோட படங்கள் தான் காரணம்ன்னு வச்சுக்கோங்களேன்...''

''என்னோட படமா?''

''ஹ்ம்ம்... ஆமா! உங்களோட 'தராசு' படத்தை வச்சே... உங்களை மடக்கணும்ன்னு தோணுச்சு. அப்படி செய்யணும்ன்னா... என்னோட அடையாளத்தை நான் வெளிக்காட்டித்தான் ஆகணும். அதான்!''



''பெண் வலிமை பத்தி வரைஞ்ச படத்துக்கு... எனக்கும் என்ன சம்பந்தம்?''

என் கேள்வியில் லேசாய் குழம்பி ''என்னோட கடைசி லெட்டர் - அதாங்க உங்களை பரோட்டா மாஸ்டர்ன்னு சொல்லியிருந்தேனே ஒரு லெட்டர் -அதில இன்னொரு பேப்பர் இருந்ததே பார்த்தீங்களா?'' என்றாள் தீபா, எதிர்கேள்வியுடன்.

''ஹ்ம்ம். முதல்ல அதைப் பாருங்க! அப்புறம் பேசலாம்!'' என்றுவிட்டு, உள்ளே ஓடிவிட்டாள்.

அவள் சொன்னதும், ஒரு மெல்லிய 'உம்' உடன் நான் நகர்ந்துவிட,

''நான் இங்கேயே வெயிட் பண்றேன். எடுத்திட்டு சீக்கிரம் வாங்க... என்ன திட்றதுன்னாலும் என் முகத்துக்கு நேராவே திட்டுங்க... லெட்டர் படிக்கிற பொறுமையெல்லாம் எனக்குப் போய்டுச்சு... என்னை மாதிரி ஒரு வரி... ரெண்டு வரி எழுதினா பரவாயில்லை. நீங்க பாட்டுக்கு... பத்து பக்கத்துக்கு எழுதித் தள்ளியிருக்கீங்க... அதைப் படிக்கிறதுக்குள்ள... நான் மூணு தடவை தூங்கிப் போய்ட்டேன்...''

அப்பா... இவள் பேசுவதைக் கேட்பதற்கு, விட்டுப்போன கடிதத்தைப் படித்துவிடலாம் என்று ஒரே ஓட்டமாய் ஓடி, அவளது கடைசிக் கடிதத்தை எடுத்தேன்.

அதில் அவள் சொன்னது போல், காகிதம் எதுமில்லாமல் போக, அறையில் வலை வீசியதில், கட்டிலுக்கு அடியில் தென்பட்டது ஓர் சிறிய பேப்பர்.

# 18

வேகமாய் அதை எடுத்துப் பார்த்தால்,நான் வரைந்த அதே தராசு, நான் புலி வரைந்திருந்த பக்கத்தில்... தீபா என் முகத்தை வரைந்திருந்தாள் - அதில் தன்னம்பிக்கையின்மை, தாழ்வு மனப்பான்மை, அச்சம், கர்வம், வேண்டாத சுயகவுரவம், கோபம், பிறரை அண்டி வாழ்வது - சாட்டாத குற்றங்கள் வேறில்லை.

நான் மரத்தியை வரைந்திருந்த பக்கத்தில் இப்போதும் ஒரு மரத்தியே... ஆனால் அவளது முறத்தில் ''அன்பு, பாசம், தோழமை, தொழில், மனவலிமை, தன்னம்பிக்கை, பொதுநலம், சமூக அக்கறை, மனிதாபிமானம்'' எனப் பல்வகை தூண்டுதல்கள்.

அதை எடுத்துக் கொண்டு வெளியே வந்த என் மனம், ''ஹய்யோ... கார்த்தி வந்திருக்க வேண்டுமே! அவள் வந்துவிட்டால்... தீபாவிடமிருந்து தப்பிவிடலாமே'' என்று குருட்டுக் கணக்குப் போட்டது.

கணக்கு தப்பாய் போனதன் விளைவாக, கார்த்தி வராதிருக்க, தீபா ஆர்வம் மிகுந்த முகத்துடன் காத்திருந்தாள்.

''என்ன நான் வரைஞ்சது... சரியா?'' என என்னை நோக்கி ஒரு விரல் நீட்டி எச்சரித்தாள்.

''ம்ம். சரி மாதிரி தான் இருக்கு... ஆமா... அதென்ன கர்வம்... சுயகவுரவம்... அப்படி இப்படின்னு கண்ட மேனிக்கு எழுதியிருக்கே?'' என்றேன் நான் சற்று கோபமாகவே.



''ஆமா, உங்ககிட்ட கண்டிப்பா 'கர்வம்' இருக்கு. இது... நீங்க எனக்கு எழுதினீங்களே ஒரு பத்து பக்க லெட்டர் அதைப் படிச்சாலே தெரியும். வரிக்கு நாலுன்னு கணக்கு வச்சு... எங்க பார்த்தாலும் 'என் குறை...' 'என்னால்...' 'என் வேதனை...' 'என் அவமானம்...' எல்லாம் ஒரே 'என்' மயம் தான்!''

''தற்பெருமை பேசறவங்களை மண்டக்கனம் பிடிச்சவங்கன்னு தான் நாங்க சொல்லுவோம்'' என் கோபத்திற்கு அவள் கொடுத்த விளக்கம் எரிச்சலை மூட்டியது.

எரிச்சலை மறையாது காட்டி ''ஆமா... இது கார்த்திக்குத் தெரியுமா? ரெண்டு பேரும்... கூட்டுக் களவாணித் தனம் பண்ணணீங்களா?'' என்றேன் நான்.

என் தங்கையின் மீதும் எனக்கு சந்தேகமே! என்னைப் பற்றிய... எல்லா விவரமும் தீபா அறிந்திருக்கிறாள் என்றால் அதற்கு ஒரே காரணம் - கார்த்தியின் ஓட்டை வாய் தான்! ஆதலால், துணிந்தே சந்தேகப்பட்டேன்!

என் மனதைப் படித்தவள் போல், 'சே... சே! அந்த ஓட்டை வாய்க்கிட்டயா? வேலையைக் கெடுத்தீங்க போங்க... என்னோட முதல் லெட்டர் உங்களுக்கு வரதுக்கு முன்னாடியே... இந்த நியூஸ் கோயம்புத்தூர் லோக்கல் சேனல்-ல ஒளிபரப்பாகியிருக்கும்'' என்ற கிண்டலில் தன் தோழியின் காலைப் பலமாய் வாரினார்கள், தீபஜோதி அம்மையார்.

அவள் குரலில் கொடுத்த ஏற்ற இறக்கங்களிலும், கார்த்தியைப் பற்றிய அவளது சரியான கணிப்பிலும் விரியத் தொடங்கிய என் உதடுகளை இழுத்துப் பிடித்து, என் கோபத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் போது

''ஆனாலும், டாபிக் மாத்துறீங்க பாத்தீங்களா? உங்களுக்கு... உங்க மண்டையில இருக்க திறமைக்கு சரிசமமா கர்வமும் இருக்கு... ஒத்துக்கிறீங்களா?'' தீபாவே பேசி, கோபத்தை மேலும் ஏற்றினாள்.

''சரி... எனக்கு கர்வம் தலைக்கேறி இருக்குன்னு ஒத்துக்கிறேன். இப்போ என்ன செய்யணும்?'' என்றேன் நான், அந்த நாளில் மூன்றாவது முறையாக... இப்போ தாவது ஒழுங்கான பதிலைச் சொல்வாளா என்ற ஆதங்கம் எனக்கு.

''பெருசா ஒண்ணும் வேண்டாம், பிரதீப்... ஏதோ ப்ரெசென்ட்டேஷன் இருக்குன்னு சொன்னாரே? நீங்க ஏன்... அவரோட போகக் கூடாது? அது ஒரு நல்ல ஆரம்பமா இருக்குமே?'' என்றாள் அவள், சாதாரணமாய்.

பதிலேதும் சொல்லாமல், நான் நகர, ''என்ன பரணி சார்... மௌனம் சம்மதம்ன்னு வச்சுக்கலாமா?'' என்றாள் தலையைச் சரித்து.

''அப்படிப் பார்த்தா... நான் எந்நேரமும் மௌனத்தில் தான் இருப்பேன். அதுக்காக, எல்லாத்தையும்...உனக்கு சாதகமாய் எடுத்துப்பியா?'' என் பதிலில் அப்பட்டமான குத்தலை வெளிக் கொணர்ந்தேன், நான்.

''மௌனம் என்பது ஒரு அழகான மொழி! அதை முதல... புரிஞ்சுக்கோங்க சார்!'' என்றவள், அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை. இப்போதும், அவள் குரலில் என்ன இருந்தது என்பதை என்னால் உணர முடியவில்லை.

அதற்குத் தோதாய் கார்த்தியும் வந்துவிட, அவர்கள் ஓர் தனி உலகிற்குச் சென்று விட்டிருந்தனர்.

தீபஜோதியின் வேண்டுகோளின்படி... ஒரு வேளை கட்டளை என்று சொல்லவேண்டுமோ... எதுவாக



இருந்தாலும் அவளது பேச்சின்படி, பிரதீப்புடன் அந்த கம்பெனிக்குச் செல்வதா என்ற யோசனை பாதியும், பறையேற்றத்திற்கான யோசனை மீதியுமாக நான் மாலையைக் கழிக்க, இரவும் இனிதே வந்து சேர்ந்தது.

உணவு நேரத்திற்கு முன்னர் வந்த பிரதீப், ''என் னடா... என்ன விஷயம்? எனக்குத் தெரியாம... நடந்த அத்தனை விஷயத்தையும் ஒண்ணுவிடாம சொல்லுப் பாப்போம்'' என்றவாறே நாற்காலியை இழுக்க, அதற் காகவே காத்திருந்தவள் போல் கார்த்திகாவும் அவன் பின்னே வந்து நின்று கொண்டாள்.

இவர்கள் தான் ஒருவருக்கு ஒருவர் பேசி வைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பார்த்தால், அப் பாவும், கூடவே அம்மாவும் வேறு!

''ஹே... என்ன இது? ஏதோ... புலன் விசாரணை பண்ற மாதிரி!'' என நான் திகைக்க,

''கிட்டத்தட்ட அப்படித்தான்! இன்னைக்கு... என்ன தீபாவோட அவ்வளவு நேரம் பேசிட்டு இருந்தே?'' இது பிரதீப்பின் நேரடி தாக்குதல்.

''அவ வரதுக்காக காத்திட்டு வேற இருந்தியாம்? அதுவும்... மூணு மணியில இருந்து?'' இது என் தங்கை யின் குறுக்கு விசாரணை.

''அந்தப் பொண்ணோட சண்டை போட்டியாமே?'' இப்போது பேசியது அப்பா.

இவர்களது விசாரணைக்கு உரம் போட்ட அம்மாவோ பேசாமல் நிற்க, என் கைகளை மார்பிற்கு குறுக்கே கட்டிக் கொண்டு அனைவரையும் வேடிக்கைப் பார்த்தேன்.

''என்னடா லுக்கு? ஏதோ லெட்டர் வந்திருக்காமே? அதைப் பத்தி கேட்டா... உங்க அண்ணா எல்லா விவரமும் சொல்லிடுவாருன்னு அவ... வேற புதிர் போடறா? என்ன லெட்டர்? எப்போ வந்தது?'' என்று பிரதீப்பின் கேள்வியில் கூர்மையும், பிறாது முகத்தில் கவலையும் ஒருங்கே கூடியது.

ஏற்கனவே, நான் எழுதிய ஓர் கடிதத்தால் நான் எடுத்த முடிவை அறிந்தவர்கள் அல்லவா? அதனால் பதறிவிட்டார்கள்!

அவர்களின் உணர்ச்சி புரிய, ''அகல்யா'' என்ற பெயரில் ''தீபஜோதி'' எழுதிய கடிதங்கள் பற்றிய முழு விவரமும் சொல்லி முடித்தேன் நான்.

''சூப்பர்! கலக்கிட்ட-டா தீப்ஸ்!'' கூவியது கார்த்தியே தான்.

''உன்னோட மனநிலையை நினைச்சு... நாங்க ஒத்திப் போட்டிருந்த விஷயத்தை ரொம்ப அழகா எடுத்துச் சொல்லியிருக்கா!'' - அடுத்து வந்த வார்த்தைகள் அப்பாவினது.

''நம்ம... கார்த்தி வயசு தான். ஆனா... எவ்வளவு பொறுப்பு!'' இதைக் கூறுவது அம்மா.

''அவ சொல்றது சரி தான்,, பரணி! ஒரு வகையில்... அவ உன் மேல சாற்றியிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு நாங்களும் ஒரு காரணம்! உன்னை... ரொம்பவும் பொத்தி பொத்தி வச்சுட்டோம்போல...'' என்று சுய அலசல் நடத்தியவன், பிரதீப்.

இந்த விஷயத்தைச் சொல்வதினால், இவர்களுள் ஒருவருக்காவது தீபாவின் மீது கோபம் வரும் என்று



நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால், என் நிலையை எண்ணி யாரும் வருந்தக் கூடாதே என்று நான் தவித்திருந்தால்... ஹ்ம்ம்... இவர்களில் ஒருவர்கூட வருந்தவில்லை. சொல்லப் போனால், மகிழ்ச்சியில் மிதக்கின்றனர் போலவே!

என் பார்வையில் தப்பாய் இருக்கும் ஓர் கருத்து,பிறர் பார்வையில் சரியாக மிளிர்கிறதே?

ஹ்ம்ம்... இது தான் உலகமோ? நமக்கு நல்லதென்று படுவது பிறருக்குக் கேடு விளைவிக்கலாம். பிறருக்கு சரி என்று படுவது நமக்கு முற்றிலும் கோணலாய் தெரியலாம்.

ஆனால்... என் வீட்டினர் பேசிக் கொண்டே செல்கின்றனரே! அவர்கள் பேசுவதைக் கேட்போம்!

''அந்தப் பொண்ணு +2 வரைக்கும் தானே கார்த்தி... படிச்சிருக்கா? ஆனா... கவிதையெல்லாம் பிரமாதமா எழுதியிருக்காளே?'' அப்பாவின் கேள்வியிலிருந்து தொடங்குவோம்.

''நிறைய புக்ஸ் படிப்பா அப்பா. லைப்ரரி போனா... அவளை இழுத்திட்டு வரது ரொம்பக் கஷ்டம். நிறைய படிப்பா... நிறைய நோட்ஸ் எடுத்துப்பா...'' பெருமிதத்துடன் பதில் சொன்னாள் தீபாவின் தோழி.

''அவ பட்டிருக்க கஷ்டத்திற்கு வாழ்க்கையை எவ்வளவு இலகுவா எடுத்துக்கிறா தெரியுமா? யாரைப் பத்தியும்... ஒரு குறை இல்லை... குற்றமில்லை... ரொம்ப நல்ல பொண்ணு! அவளுக்கு... இப்படியொரு அனாதரவற்ற வாழ்க்கை அமைஞ்சிருக்க வேண்டாம்...'' அம்மாவின் குரலில் கரிசனம்.

அவரவர் பேசிக் கொண்டிருக்க, பிரதீப்போ "அவ... ஏதாவது ஆசிரமத்தில் சேவை மாதிரி செய்றாளா... கார்த்தி?" என்றான் யோசனையுடன்.

இதுதான் பிரதீப்! என் எண்ண ஓட்டத்திற்கு ஈடாய் வந்து விட்டிருப்பான்.

"என்னை வெளிக்கொணர்வதால் அவளுக்கு என்ன புண்ணியம்" என்று நான் யோசித்த அதே விஷயத்தை, அவனும் சிந்தித்திருக்கிறான்.

"எனக்குத் தெரிஞ்சு... எதுவுமில்லையே? ஹ்ம்ம்... கேட்டுப் பார்க்கிறேன்" என்று கார்த்தி நகர, அன்றைய உணவு நேரம் முழுதும் தீபாவைப் பற்றியே பேச்சு ஓடிக் கொண்டிருந்தது.

முடிவில் "நீயும்... அந்த ப்ரெசென்ட்டேஷனுக்கு வா... பரணி! லெட்ஸ் ஃபேஸ் தீ வேர்ல்ட்" என்றான் பிரதீப்.

"ஆமா ராஜா! நம்மளோட திறமைக்கான அங்கீகாரத்தை, நமக்கு அறிமுகமில்லாத ஒருத்தர் நம் முகத்திற்கு நேரா சொல்லும்போது ஒரு சந்தோஷம் வரும். அதை நீ அனுபவிக்கணும். கூடவே, அவங்க முகம் சுளிக்கிற மாதிரி ஏதாவது சொன்னாலும்... அதைத் தாங்கிக்கிற பக்குவம் உனக்கு வர வேண்டாமா?" வார்த்தைகளில் நம்பிக்கை ஊட்டினார் அப்பா.

"எத்தனை நாள் தான்... எங்க நாலு பேரு முகத்தை மட்டும் பார்த்திட்டே இருப்பே? போயிட்டு வாண்ணா..." என்றாள் தங்கை.

அம்மாவோ, என் தலைமுடியை வருடிவிட்டு எழுந்து கொண்டார்.



வீட்டில் அனைவருமே இந்தப் பேச்சில் திளைத்திருந்த படியால், தீபாவின் வருகை அருகே எதிர்பார்ப்பிற்கு உரியதாய் இருந்தது.

ஆனால், எங்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் தீபஜோதியின் வருகை நிகழவே இல்லை! கிட்டத்தட்ட ஒரு வாரமாக!

கார்த்திகாவிற்கும் விவரம் தெரியவில்லை. அவளிடம் கைப்பேசி இருக்கவில்லை என்பதால், கார்த்திகாவை அழைத்துக் கொண்டு அவளது 'டிரைவிங் ஸ்கூல்' வரை சென்று வந்தார் அப்பா.

ஆனால், அங்கே 'டிரைவிங் ஸ்கூல்'லையே காணவில்லையாம்! அதை மூடி, ஒரு வாரம் ஆகிவிட்டது என்ற தகவலுடன் வீடு வந்து சேர்ந்தனர் இருவரும்!

## 19

தீபஜோதியின் வருகை நிகழாமல் போய் சரியாக ஒருவாரம் கூட ஆகவில்லை என்றபோது, பல யுகங்களாய் அவளைக் காணாதது போல் என் நெஞ்சம் அடித்துக் கொண்டதை, ஒத்துக் கொண்டே ஆகவேண்டும்!

உங்களிடம் ஒத்துக் கொண்ட போதும், என் மூளையிடம் என் மனதின் தவிப்பு செல்லுபடியாகவில்லை.

"அவளைத்தான் உனக்குப் பிடிக்கவில்லையே? அப்புறம் எதற்காக அவளைத் தேடுகிறாய்?" மூளை கேட்டது.

''பிடிக்கலைன்னு யாரு சொன்னா? அவள் எழுதிய வார்த்தைகளில் கொஞ்சம் கோபம் அவ்வளவுதான்'' மனது முணுமுணுத்தது.

''ஹ்ம்ம்... அது... அந்தக் கோபம் இருக்கில்லையா? அவள் பேசினது உனக்குள்ள கோபத்தை உண்டு பண்ணும்போது... அவளை எதற்காக எதிர்பார்க்கிறே?'' - மூளை மனதின் வழியிலேயே சென்று எதிர் கேள்வி கேட்டது.

''ஹான்... அது...அது... கோபமில்லை. வருத்தம்! என் நிலைமையைப் புரிந்துகொள்ளாமல் அவள் பிடிவி லேயே நிற்கிறாளே என்ற சின்ன வருத்தம்! எனக்கு... எப்பவுமே அளவுக்கு அதிகமா கோபம் வராதுன்னு உனக்குத் தெரியாதா?'' - உலகமகா அந்தர் பல்டி அடித்து, கோபத்திலிருந்து வருத்தத்திற்கு வந்த மனது சமாளிப்புத் திலகம் பட்டத்தை எளிதாக வென்றது.

''சரி. கோபமில்லை... ஆனா கொஞ்சம் வருத்தம் இருக்கில்லையா? வாழ்க்கையில் நாம என்ன எதிர்பார்க் கிறோம் - எதிலும் ஒரு சந்தோஷத்தைத் தானே? அப்படி இருக்கும் போது, உன்னை வருந்தவைக்கும் தீபஜோதி வந்தால் என்ன வராவிட்டால் உனக்கென்ன?'' - மூளை யும் விடாது அடாது சண்டையிட்டது.

''ஹ்ம்ம். அவ பேசுறதில் எனக்குத் தானே வருத்தம்! மற்றவர்கள் எல்லோரும்... அவளது செயலிலும் பேச் சிலும் மகிழ்ந்து தானே போயிருக்கிறார்கள்? என் ஒரு வனின் வருத்தத்திற்காக பார்த்தால் போதுமா? மற்ற வர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டாமா?'' மனது தீபாவிற்கு சாதகமான பதில்களைத் தேடித் தேடிக் கண்டு பிடித்தது.



''இது... எப்போதிலிருந்து? அதான்பா... மற்றவர் களின் சந்தோஷத்திற்காக உன் வருத்தத்தை மறைப் பதைத்தான் சொல்கிறேன்! எப்போதுமே, மற்றவர்கள் தானே உன் சந்தோஷத்திற்காக தங்களை மாற்றிக் கொண்டிருக்கின்றனர்!'' - கேள்வியால் குத்தியது மூளை.

''நீயும்... அவளை மாதிரியே பேசாதே! இது நாள் வரை, எப்படியோ இருந்திருக்கலாம். ஆனால், இப்போது தான் நானும் அவள் சொல்லை ஒத்துக் கொண்டு, பிறரின் வாழ்விற்காக என் வேதனையை மறைத்துக் கொண்டு வெளியுலகம் வர சம்மதித்திருக்கிறேனே?'' தானே அறியாத உண்மையை மனம் வெளிப்படையாக ஒப்புக் கொண்டது.

''அடடா! அப்போ, அந்த ப்ரெசென்ட்டேஷனுக்குப் போகப் போறேன்னு சொல்லு! என்னைக்கு வந்தது இந்த ஞானோதயம்?'' - குறுகுறுப்புடன் வினவியது என் மூளை.

''என்னைக்கு வந்ததுன்னா... ஹ்ம்ம் தெரியலையே? ஒரு வேளை... தீபா சொன்ன ''குருவி'' கதையைக் கேட்டதும் வந்திருக்குமோ? ஆனாலும் அந்தக் குரு விக்கு ஓவர் கான்ஃபிடன்ஸ் இல்லையா?'' என் மனம் இப்போதும் அந்தக் கதையை எண்ணிப் பார்த்து சிரித்துக் கொண்டது.

''இந்தப் பேச்சை மாத்துற வேலை எல்லாம் வேண் டாம்! அப்போ... நீ அவ சொல்ற ''கர்வம்'', ''கோபம்'', ''சுய கவுரவம்'' இதெல்லாத்தையும் ஒத்துக்கிற!

அப்படித்தானே?'' மூளை சரியான கேள்வியைத் தப்பான நேரத்தில் சரியாக கேட்டது.

''அவ சொல்ற எல்லாத்தையும் ஒத்துக்கலை... ஆனா... ஹ்ம்ம்... எப்படிச் சொல்றது? எனக்குமே வெளியுலகத்தை சந்தித்தால் என்ன என்ற கேள்வி வந்துவிட்டது தான் காரணம்!'' மனம், ஏனோ அவள் சொல்லினால் மாறினேன் என்பதை ஒப்புக் கொள்ள மறுத்தது.

''இதெல்லாம் டபாய்க்கிற வேலை! இவருக்கா வெளியுலகத்தை சந்திக்கிற தைரியம் வந்திடுச்சாம். யாகிட்ட? அதுவும் உன்னை முழுதாய் அறிந்த என்கிட்டயே... இதைச் சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?'' - மூளை என் மனதைப் பார்த்து கைகொட்டிச் சிரிப்பது போன்ற பிரம்மை எனக்கு.

''சரி. இப்போ என்னங்கிற? காது வலிக்கிற அளவுக்கு அவ பேசினதில தான் மாறிட்டேன்!'' - இப்போது தெனாவட்டாய் சரணாகதி அடைந்தது மனம்.

''அப்படி வா... வழிக்கு! இருந்தாலும்... உன்னை 'ஊமை'ன்னு யாராவது முகத்துக்கு நேரா சொல்லிட்டா... என்ன செய்வ பரணி? அதுக்கு அப்புறம்... வெளியவே போகாம இன்னுமின்னும் உள்ளே போறதுக்கு... இப்படியே இருக்கலாம் இல்லையா?'' மூளை வேறு வகையில் சிந்தித்தது.

''ஹ்ம்ம்... அது ஒண்ணு இருக்கு!'' - மெல்ல யோசித்த மனம்.

''வராத பூதத்தை நினைச்சு, எதுக்கு நம்ம மனசை சாத்தான் ரேஞ்சுக்கு யோசிக்க வைக்கணும். வரும் போது பார்த்துக்கலாம்!'' என்று முடிவாய் சொன்னது.



''இருந்தாலும்... ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிச்சுக்கோ, பரணி? இந்த விஷப் பரீட்சை நமக்குத் தேவையா?'' - மூளை மேலும் மேலும் குடைந்தது.

''ஹம்ம்... அவசியம் தான்! வாழ்க்கையில் பட்ட அடிகளை எல்லாம் ஒரு சின்னப் புன்னகையோட எதிர்கொள்ளும் தீபாவைப் பார்த்ததிலிருந்து எனக்கு ஒரு நம்பிக்கை வந்திருக்கு! தராசில என்னை விட தரம் உயர்ந்திருந்த அவளுக்கு நிகரா நானும் உயர்ந்து நிற்கணும்ன்னா, நான் என் கூட்டிலிருந்து வெளி வந்தே ஆக வேண்டும். இந்த உலகத்தின் முதல்படியாய் இந்த ப்ரெசென்ட்டேஷன் இருக்கட்டும்!'' தீர்மானமாய் சொன்னது மனம்.

''இது தான் உன் முடிவா?'' - இது மூளையின் குரல்.

''ஆமா!'' இது மனதின் எதிரொலி.

''அடடே, நாம பேசிட்டு இருந்த விஷயத்தை விட்டு விலகி வந்துட்டோம் போலவே? நீ... எதுக்கு தீபாவைத் தேடுறே?''

''அவளோட தூண்டுதலின் காரணமாய் தானே, இந்தப் ப்ரெசென்டேஷனுக்கு என்னைத் தயார்படுத்தி இருக்கிறேன். அதுக்கு அவளுக்கு ஒரு சின்ன நன்றி கூட சொல்லவேண்டாமா? உனக்கே இது... நன்றி கெட்டத் தனமா படலை?'' மனதிற்கு கோபம் போலும்!

''ஹாஹாஹா! பேசுவது நீயா? இல்லை பேசுவது நீயே தானா? சற்று முன்னே நீ பேசிய அனைத்தையும் மீண்டும் ஒரு முறை படித்துப் பார், மகனே!'' என்று எள்ளி நகையாடியது மூளை.

அதற்கு மனதிடமிருந்து சூடான பதில் வரும் முன்னர், "நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பதற்கு இணங்க என் கேள்விகள் உன்னை நல்லவழியில் தான் திசை திருப்பி இருக்கின்றன! வாழ்க வளமுடன்!'' என்ற வாழ்த்தோடு விடை பெற்றது மூளை.

மனதும் மூளையும் நடத்திய போரில் களைத்துப் போன நான், படுக்கையை விட்டெழுந்து மெல்ல வெளியே வந்தேன்.

# 20

வீட்டில் ஓர் அசாத்திய அமைதி! பிறகு, நடு ராத்திரி இரண்டு மணிக்கு... குக்கர் சத்தமும், டி.வி. சத்தமும், வாகன இரைச்சலுமா கேட்கும்? கடிகாரத்தின் 'டிக்-டிக்' ஓசை தவிர, காற்றில் சலசலத்த திரைச்சீலைகளின் ரீங்காரம் மட்டுமே மெல்லியதாய் கேட்டது!

நடு இரவில் முழிப்பது எனக்கொன்றும் புதிதில்லை என்ற போதும், இப்போது முழித்ததற்கு வலுவான காரணமாய் எதுவும் இருக்கவில்லை - தீபஜோதியைத் தவிர!

"எங்கே சென்றுவிட்டாள்? எங்கே சென்றுவிட்டாள்?'' என்று மனம் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்க, விடை சொல்லத் தான் யாரும் இருக்கவில்லை.

மெல்ல தோட்டத்திற்குள் இறங்கி நடந்தேன்.



நிலா வெளிச்சத்தில் எங்களது மலர் தோட்டம் மகரந்தமாய் மணந்தபோதும், அதில் நான் தேடிக் களைத்த மணம் மட்டும் மிஸ் ஆனது போலிருந்தது.

நானும் அவளும் முதல் மற்றும் கடைசி தடவையாக நடத்திய உரையாடல் நிகழ்ந்த இடத்தில், என் கால்கள் தாமாய் நின்றன.

மாதுளை மரத்தின் அடியில், மரகதப் பாவையாய் அவள் அமர்ந்திருந்த இடம் இப்போது அழகில்லாது போனது போலிருந்தது.

அவளது சிரிப்பு, அவளது பேச்சு, அவளது சிந்தனை, அவளது நிமிர்வு, அவளது நகைச்சுவை - எல்லாம் அவள் மயமாய் இருக்க, என்னால் அதை விட்டு வெளியே வர முடியவில்லை.

ஏற்கனவே தாயும் இல்லை. தந்தை இருந்தும் இல்லை. உறவிருந்தும் உதவியில்லை என்றிருக்கும் பெண்ணிற்கு இன்னும் என்ன சோதனை வந்ததோ?

எப்படி சமாளித்தாளோ?

முன் வந்த துன்பங்களைத் தன் இன் முகம் கொண்டு துடைத்து எறிந்தவள், இப்போது வந்த இன்னலையும் இன்முகமாய் எதிர் கொண்டிருப்பாளா?

ஒருவேளை... ஒருவேளை... தனியாக கார் ஓட்டிச் செல்லும் போது ஏதும் நடந்திருக்குமோ? இல்லை இல்லை, இருக்காது!

என்ன தான் விளையாட்டுத் தனம் இருந்தாலும், அம்மா சொல்வது போல் அவளுக்குப் பொறுப்பு அதிகம்! அதுவும், அவளுக்குச் சொந்தமில்லாத வண்டியை... அதுவும் வேண்டாத அத்தை வீட்டு வண்டியை எடுத்துச்

செல்லும்போது, தனக்கு கெட்டப் பெயர் வரும் அள விற்கு நடந்து கொள்ள மாட்டாள்! மாட்டவே மாட்டாள்!

ஹ்ம்ம். அப்புறம் என்னவாகிருக்கும்?

ஒருவேளை...நம் வீட்டிலிருந்து அவள் வீட்டிற்கு நடந்து செல்லும் வழியில் ஏதும் அசம்பாவிதம் நடந் திருக்குமோ?

ஹ்ம்ம். பாதி நேரம் இருட்டத் தொடங்கிய பிறகல் லவா கார்த்தியும் தீபாவும் பேச்சை முடிப்பார்கள். அதன் பிறகு, ஒத்தாளாய் நடந்துசென்றது தான் வினையாகி விட்டதோ?

அப்படி என்ன தான் பேச்சு வேண்டிக் கிடக்கிறது? என்னவோ, அடுத்த நாள் என்று ஒன்று இல்லாதது போல... ஓயாத பேச்சு! என்ன தான் பேசுவார்களோ?

ஹய்யோ! அடுத்த நாள் என்று ஒன்று வராமல் போய்விடும் என்று தான் தீபா அன்று என்னிடம் பேசி னாளோ?

அவளது உள்ளுணர்வுக்கு அப்போதே தெரிந்திருக் குமோ? கடவுளே!

சை... இந்தப் பேச்சைக் குறைத்து, நேரத்திற்கு வீடு சென்றிருந்தால் இந்த வேதனைக்கு இடமில்லாமல் போயிருக்குமே?

ம்ஹூம், கெட்டதை நினைத்து மனதைப் பாழ் பண் ணிக் கொள்ளக் கூடாது!

தீபாவிற்கு ஒன்றும் ஆகியிருக்காது!

தீபாவிற்கு ஒன்றும் ஆகியிருக்காது!



தீபாவிற்கு ஒன்றும் ஆகியிருக்காது!

ஒருநூறு முறைக்கு மேலாக எனக்கே நான் சொல்லிக் கொண்டேன்! நெஞ்சத்தில் அத்தனை பயம்!

அவள் இல்லாது போனால் என்ற நினைப்பே என்னை உறங்கவிடாமல் செய்ய, இதற்கு என்ன பொருள் என்று நெஞ்சம் ஓலமிட்டது!

''காதல் தானடா, மடையா!'' என மூளை பதில் சொல்ல,

''காதலா? மீண்டுமா? என் வாழ்வில் ஒரு மதுமிதா போதும்!'' என்று மனம் துடுக்காய் பதில் சொல்லும் போதே,

மதுமிதா என் காதலை நிராகரித்தபோது, அவளுக்காக அழுததை விட என் வீட்டினருக்கு ஓர் அவமானம் என் னால் நிகழ்ந்துவிட்டதே, இதனால் என் நற்பெயர் பாழாய் போனதே என்ற வருத்தம் தான் என்னுள் அதிக மாய் வேர்விட்டிருந்தது என்பதை என் மனமும் சரி, மூளையும் சரி ஒருங்கே ஒத்துக் கொண்டன.

இப்போது, பிறருக்காக என்று யோசிக்காமல், அவளுக் காக மட்டும் யோசிக்கும் மனதைப் பார்த்து எள்ளி நகையாடியது மூளை.

''இவளும்... மதுமிதாவைப்போல் உன் குறையை முன்னிறுத்தி, உன்னை ஒதுக்கிவிட்டால்?'' காதல் விஷயத்தில் மூளை எப்போதுமே எதிராளி தான்!

''ஹாஹாஹா! இதுதான் உலகத்திலேயே பெரிய ஜோக்! தீபா என்னை நிராகரிப்பதா? என் குறையை குறை என்று சொல்லும் அவளா? கண்டிப்பாக

மாட்டாள்!'' இப்போது எள்ளி நகையாடுவது மனதின் முறையானது.

''அது வெறும் தூண்டுதலாய்... சமூக அக்கறையாய்... சமனித முன்னேற்றமாய் இருக்கலாம். அதுவே, காதலுக்கும் பொருந்தும் என்று எப்படி எண்ணினாய்? காதல், கல்யாணம் என்பது வாழ்வில் இறுதி வரை வரவேண்டியது... அந்த விஷயத்தில் பெண்கள் எப்போதுமே நிறைவைத்தான் எதிர்பார்ப்பார்கள்! தீபா வித்தியாசமானவள் என்றபோதும் அவளும் ஒரு பெண்ணல்லவா? மனதின் காதலைக்கூட வாய்விட்டுச் சொல்ல முடியாத உன்னை... எப்படி திருமணம் செய்து கொள்வாள்? சாத்தியமே இல்லை!'' மூளை சரியான பாதையில் சிந்தித்தது போலிருந்தது எனக்கும்.

அதன்படி, மனமும் 'ஆம், சாத்தியமே இல்லை!' என்ற முடிவுக்கு வந்துவிட, ஒரு விதக் கனத்த மனதுடன் படுக்கையில் விழுந்தேன்.

காதலா என்றும் தெரியவில்லை!

காதல் என்றால் அவள் ஏற்றுக் கொள்வாளா என்றும் தெரியவில்லை!

அப்படியே அவள் ஏற்றுக் கொண்டாலும், இருவருக்கும் வாழ்வு இனிக்குமா என்று தெரியவில்லை!

எல்லாவற்றுக்கும் மேலாக, அவள் எங்கிருக்கிறாள் என்றும் தெரியவில்லை! நெஞ்சம் பல 'தெரியவில்லை'களின் இடையே தொலைந்திருந்த தூக்கத்தைத் தேடியது!

இதுவே, அடுத்த இரு நாட்களும் தொடர, வீடே களையிழந்து போனது போலிருந்தது.



தீபா வராதது ஒரு காரணம் என்றால், கார்த்தியின் முகம் மிகுந்த வருத்தத்தில் வாடி இருந்தது.

''என்னாச்சுன்னு தெரியலையே அண்ணா! ஒரு போன் கூட பண்ணலையே... எங்க இருக்காளோ! எனக்கு ரொம்பப் பயமா இருக்குண்ணா'' என்று என்னிடம் மட்டுமில்லாமல், வீட்டில் அனைவரிடமும் புலம்பித் தள்ளிவிட்டாள்.

அவ்வளது புலம்பல் தாங்க முடியாமல், பிரதீப் ஒரு முறை தீபாவின் வீடு இருக்கும் இடத்திற்குச் சென்று விசாரித்துவிட்டு வந்தான்.

''திடீர்னு ஒரு நாள் வீட்டைக் காலி பண்ணிட்டுப் போறதா சொன்னாங்க. சென்னை போறாங்களாம். கூட, அந்தத் தீபா பொண்ணைக் காணலையே!'' என்ற விவரம் தான் வந்து சேர்ந்ததே ஒழிய, வேறொன்றும் புதிதாய் கிடைக்கவில்லை.

இதன் நடுவே எங்களது பறையேற்றத்திற்கான வேலைகளும் தடையின்றி சுமூகமாய் நடந்தேறின. ஆனால், இதற்கு மூலக் காரணமாய் இருந்த தீபா...

''அகல்யா'' என்ற அடையாளத்தை அவள் கிழித்தெறிந்த நாளிலிருந்து பத்தாவது நாள் - ஓர் சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு- தீபா எங்கள் வீட்டிற்கு வந்தாள்! கையில் ஸ்வீட் டப்பாவுடன்!

''ஏய், எங்கடி போனே? ஒரு போன் பண்ணி விவரம் சொல்லக் கூடாதா? லூசு லூசு!'' என்று கார்த்திகாவும்,

''உன்னைக் காணாம வீடே களையிழந்து போச்சும்மா! எங்கம்மா போனே?'' என்று அம்மாவும்,

''எப்படி இருக்கேமா?'' என்று அப்பாவும்,

''என்னங்க இது? சொல்லாம கொள்ளாம அப்ஸ்காண்ட் ஆகிட்டீங்க? கார்த்தியோட அறுவையைக் கேட்க காதில்லாம ரொம்பவே வாடிப் போய்ட்டா'' என்று அப்போது தான் உள்ளே வந்த பிரதீப்பும் பேச,

நான் என் அரை வாயிலில் நின்று அவள் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

''அது ஒரு பெரிய கதை... அதை விலாவாரியா சொல்றதுக்கு முன்னாடி, ஒரு சந்தோஷமான விஷயத்தைச் சொல்லிடுறேன்! ஸ்வீட் எடுத்துட்டே கேளுங்க!'' என்று அனைவரிடமும் ஸ்வீட் பெட்டியை நீட்டிக் கொண்டே வந்தாள், தீபா.

# 21

''எனக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கு!'' என்ற வசனம் வந்துவிடுமோ என்ற பயத்தில் நானிருக்க, ஸ்வீட்டை எடுத்த என் கைகள் லேசாய் நடுங்கியது.

அதை யாரும் கவனிக்கும் முன்னர், வேகமாய் ஓர் துண்டு இனிப்பை எடுத்துக் கொண்டேன் நான்.

ஆனால், எடுத்தத்தை உண்ணத் தான் முடியவில்லை! அவள் விஷயம் சொல்லும் வரை, என் எச்சில் கூட எனக்கு கசந்தது!

''எனக்கு வேலை கிடைச்சிருக்கு! பெரிய கம்ப்யூட்டர் கம்பெனில சூப்பர் வேலை!'' என்று ஒரு வழியாக நெஞ்சில் பாலை வார்த்தாள் மகராசி!



''ஹே... கங்க்ராட்ஸ்! ஆனா... டிரைவிங் ஸ்கூல்?'' கார்த்திகா கூவ,

''அதை மூடிட்டதா சொன்னாங்களே?'' அப்பா குழம்ப, அவள் தொடர்ந்தாள்.

''ஆமா, அங்கிள் ''குரு டிரைவிங் ஸ்கூல்''லை மூடியாச்சு!'' இப்போது அவள் குரலில் லேசாய் வருத்தம் இருந்ததோ என்று நானும் தேடித்தான் பார்த்தேன்! வருத்தத்திற்கான அறிகுறி எதுவுமில்லாமல் சாதாரணமாய் இருந்தது குரல்.

''என்னாச்சு தீபா?'' - கூர்மையாய் இடைமிட்டான் பிரதீப்.

''ஒன்னும் பெருசா இல்லை. எங்க அத்தை பையன் சென்னை-ல இருக்கான் இல்லையா? அவன் புதுசா ஒரு வீடு வாங்கியிருந்தான். அங்க வரச் சொல்லி... எங்க அத்தையையும் மாமாவையும் கூப்பிட்டுட்டே இருந்தான் போல... இவங்க இந்த டிரைவிங் ஸ்கூலை நினைச்சு வரலைன்னு சொல்லிட்டே இருந்திருப்பாங்க போல...''

''இப்போ... எங்க அத்தை பொண்ணும் பெங்களூர்-ல இருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்துட்டா. அதை காரணம் காட்டி, பிள்ளைங்க ரெண்டு பேரும் அப்பா, அம்மாவை சென்னைக்கு வரச் சொல்லியிருக்காங்க! பாசக்காரப் பசங்க!''

''இங்கேயும், டிரைவிங் ஸ்கூல்ல அவ்வளவா வருமானம் இல்லையா... கூடவே, சம்பளம் என்ற பேர்ல வெட்டிச் செலவு தான் நடந்திட்டு இருந்தது. இன்னொரு புதமா... ஏறிட்டே போற பெட்ரோல், டீசல் விலை

வேற... அதனால், டப்பு டிப்புன்னு எல்லாத்தையும் மூட்டை கட்டிட்டு ஊரைப் பாத்து போய்ட்டாங்க.''

''ஹ்ம்ம். டப்பு... டிப்புன்னு சொல்லமுடியாது.

டப்ப்ப்ப்ப்ப்ப்ப்ப்.... டிப்ப்ப்ப்ப்ப்ப்ப்ப்ப்ப்புன்னு வேணும்னா சொல்லலாம், ஏன்னா, இது ரொம்ப நாளா பிளான்-ல இருந்த ஆபரேஷன் தான் போல'' குறையாத சிரிப்புடன் அவள் சொல்லி முடிக்க, கேட்டிருந்த எனக்கு ராட்டினத்தில் சுற்றியே உணர்வு.

மற்றவர்கள் முகத்திலும் திகைப்பே இருக்க, அதை முதலில் களைத்தவள் கார்த்தி தான்.

''உன்னை அவங்க கூட்டிட்டுப் போகலையா?''

''என்னய்யா? அவங்க என்ன லூசா? அவங்க சென்னை போறதுக்கு... நானும் ஒரு காரணமா இருக்கும் போது என்னை எப்படி கூட்டிட்டுப் போவாங்க?'' இப்போதும் சிரித்தாள். இதற்கு எதுக்கு சிரிக்க வேண்டும் என்று எனக்குத்தான் எரிச்சலாக வந்தது!

''என்னடி சொல்றே? உங்க அத்தையுமா?''

''ம்ம்... அத்தைக்கு... கொஞ்சம் சங்கடமா தான் இருந்தது. ஆனா, என் பசங்களா? என் தம்பி மகளா?ன்னு வரும்போது, எப்பவும் போல் ''என்'' ஜெயிடுச்சுடுச்சு!''

''அதுக்காக என்னை அனாதையா ரோட்-ல விட்டுட் டாங்கன்னு நினைக்காதீங்க. ஒரு ஹாஸ்டல் சேர்த்து விட்டாங்க... அட்வான்ஸ்கூட அவங்களே கொடுத்துட் டாங்க. அப்புறம் என் அத்தை மகன் அதிமதுரம் வேலை பார்க்கிறானே ஒரு கம்பெனி, அவங்களோட கோயம் புத்தூர் ஆபீஸ்ல எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத் தாங்க... இது போதாதா? தங்க ஒரு பாதுகாப்பான இடம், பசிக்கு ஒரு நல்ல வேலை, அத்தை ஸ்தானத்தில் வார்டன், அதுக்கும் மேலா இந்தக் குடும்பம்... இது போதும்! நான் சந்தோஷமா இருக்கேன்!'' விரிந்த சிரிப்பில் விறு விரிசல்கூட இல்லை.



கேட்டிருந்த யாருமே சற்று நேரம் பேசவில்லை.

சிறு அமைதிக்குப் பின்னர், ''ஹாஸ்டல் பேர் என் னம்மா?'' என்றார் அப்பா, லேசாய் செருமிய குரலில்.

''மங்கை லேடீஸ் ஹாஸ்டல் அங்கிள். ஆபீஸ் பக்கத் திலேயே இருக்கு...''

''ஆபீஸ் எங்கம்மா இருக்கு?'' அம்மா தொடர்ந்தார்.

''சரவணம்பட்டி... ஆன்ட்டி.''

''இவ்வளவு நடந்திருக்கு... நீ என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லலை... ஒரு வாரமா ஆளையும் காணோம்? என்ன நினைச்சிட்டு இருக்கே... நீ?'' - கார்த்தியின் குரலில் கோபம் பறந்தது. எனக்குமே கார்த்தியின் அளவு கோபமிருந்தது.

வாழ்வின் திசையே மாறியிருக்கிறது. அதை எங் களிடம் உடனே சொல்லாமல்... இவளுக்குத் தோதான நாளில் வந்து சொல்கிறாளே என்று எரிச்சலாய் வந்தது.

''ஏய் லூசு! முதல் ரெண்டு நாள்... அத்தைக்கு மூட்டை கட்டுற வேலையிருந்தது. அப்புறம்... தினம் ஆபீஸ்... காலையில் ஏழரையில இருந்து சாயங்காலம் ஏழரை வரை வேலை பெண்டு நிமிர்ந்துடுச்சு போன் பண்ணலாம்ன்னுதான் பார்த்தேன்... ஆனா, இந்த சந்தோஷத்தை ஸ்வீட்டோட சொல்லணும்ன்னு தோணுச்சு... அதான்!'' என்றாள் தீபா, புன்னகையுடன்.

''பெரிய இவ... போடி... என் கூட பேசாதே! அப்படியே... உன் ஹாஸ்டல்ல போய் உட்கார்ந்துக்கோ'' என்று சுத்திவிட்டு, கார்த்தி தோட்டத்தின் பக்கம் போய்விட்டாள்.

''ஏய்... கார்த்தி... நில்லு...'' எனக் கூவியவள், ''அவளுக்குக் கொஞ்சம் மஸ்கா போட்டுட்டு வரேன்'' என அவள் பின்னே ஓடினாள்.

அவள் கண்ணை விட்டு மறைந்த பின்னரும், என்னால் நகர முடியவில்லை.

''இருந்த ஓர் உறவும் போய்விட்டதே என்ற வருத்தம் சிறிதுமில்லாமல் வந்த வாழ்வை வரமாக நினைக்கிறாளே'' என்ற எனது மலைப்பு அடங்கவேயில்லை.

அதைக் கலைக்கவென, என்னருகே வந்த பிரதீப் ''இவளுக்கு எப்படிடா கம்ப்யூட்டர் கம்பெனில வேலை கொடுத்தாங்க... ஏதாவது ரேடியோ சேனல், பத்திரிகை ஆபீஸ்ன்னு போயிருந்தாலாவது இவளோட வாயால ஏதாவது புண்ணியமுண்டு'' என்றான் யோசனையுடன்.

கூடவே, ''இவளே... எனக்கு கம்ப்யூட்டர்ல அறிவே இல்லைன்னு சொல்லியிருக்கா... அப்படியிருக்கும் போது எப்படிடா?'' என்று மண்டையை உடைத்துக் கொண்டான்.

அவனிக்கிருந்த கவலைகளை விட அதிகமான தாய் - அழுத்தமானதாய் எனக்கு வேறு கவலை இருந்தது.

புது இடம் எப்படி இருக்கிறதோ? தனியாக இருப்பதற்கு ஒரு மாதிரியாக இருக்குமோ? ஹாஸ்டலில் சாப்பாடு எப்படி இருக்குமோ? வேளா வேளைக்கு உணவு கொடுப்பார்களா?



காலை ஏழரையிலிருந்து மாலை ஏழரை வரை என்றாளே? வேலை மிகவும் கடினமானதாக இருக்குமோ?

யாருமற்றவள் என்று தெரிந்து கொண்டு... கம்பெனியில் யாராவது வாலாட்டினால் என்ன செய்வது?

என் கவலையில் நானிருக்க, என் நண்பனோ அவன் கவலையில் இருந்தான் போலும், தோழிகள் இருவரும் சமாதானப் புறாவைப் பறக்கவிட்டுக் கொண்டு வந்த நிமிடம், ''தீபா... நீ வேலை பார்க்கிற கம்பெனி பேர் என்ன?'' என்றான்.

அவள் புகழ் பெற்ற ஓர் மென்பொருள் நிறுவனத்தைக் கூறியதும், ''ஹே! நமக்கு... காண்ட்ராக்ட் ஆஃபர் பண்ணியிருக்க கம்பெனிடா'' என்றான் பிரதீப், சந்தோஷத்துடன்.

''அடடே! எங்க கம்பெனி தான்...உங்களுக்கு காண்ட்ராக்ட் கொடுக்கப் போகுதா... சூப்பர்! சூப்பர்! என்னை... நல்லா கவனிச்சுக்கோங்க... அப்போ தான் இந்த காண்ட்ராக்ட் உங்களுக்குக் கிடைக்கிறதுக்கு என்னாலான சிபாரிசு பண்ணுவேன்! என்ன சரியா?'' என அவள் கெத்தாக பதில் சொல்ல,

''யாருக்கு வேணும் உன் சிபாரிசு? நாங்கெல்லாம்... எங்க திறமையை வச்சே முன்னுக்கு வருவோமாக்கும்'' என்றான் பிரதீப்பும் அதே தெனாவட்டுடன்.

''அப்படிங்களா சார்! நீங்க வேணும்னா பாருங்க... எங்க கம்பெனிக்குள்ள கால் எடுத்து வைக்கிறதுக்கே என்

பெர்மிஷன் வேணும்... இதில... என்னை மீறி... காண்ட்ராக்ட்... ஹ்ம்ம்... பார்ப்போம்! பார்ப்போம்!'' என்று மார் தட்டிக் கொண்டு சிரித்தாள், தீபா.

அந்த ப்ரெசென்ட்டேஷனுக்கு நான் வருகிறேனா என்று அவள் கேட்பாள் என்று நான் நினைத்திருக்க, அதன் பின்னர் தீபா எதையும் கேட்கவுமில்லை, பேசவு மில்லை.

பத்து நாள் கதையைப் பேசவென்று தோழிகள் இருவரும் சென்றுவிட்டிருந்தனர்.

நெஞ்சில் சூழ்ந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல், அறையினுள் பிரவேசித்த எனக்கு இருப்பே கொள்ள வில்லை.

இதுநாள் வரை இருந்த தவிப்பு மறைந்ததில் ஏற்பட்ட சந்தோஷத்தை, என்னிடம் தீபா பேசாத வருத்தம் நிரப்பிவிட, சோர்ந்து அமர்ந்தேன் நான்.

என் மேஜையிலிருந்த அவளது கடித உறைகள் பறக்க, மெல்ல அவளது வரைபடத்திடம் சென்றன என் கரங்கள்.

அவள் என் மேல் சாட்டியிருந்த குற்றங்களையும், மரத்தியாய் அவள் வைத்திருந்த முறத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த நான்,

''ஹலோ, பரோட்டா மாஸ்டர்! என்ன ப்ரெசென்ட்டேஷன் ரெடியா? எங்க எனக்கு ஒரு தடவை ட்ரையல் ஓட்டிக்காட்டுங்க...நான் சரின்னு சொன்னா தான் எங்க கம்பெனில இதை ஒத்துப்பாங்க... ஆமா'' என்ற குரலில் தூக்கிவாரிப்போட நிமிர்ந்தேன்.



நான் ப்ரெசென்ட்டேஷனுக்கு செல்வது இவளுக்கு எப்படி தெரியும்? கார்த்தி சொல்லி இருப்பாளோ? நான் யோசிக்கும் போதே,

''என்ன சார்? மந்திருச்சு விட்ட கோழி மாதிரி இருக் கீங்க?'' மீண்டும் தீபாவே பேசினாள்.

''இன்னும் முழுசா முடியல. முடிஞ்சதும் உன்கிட்ட காட்டுறேன். எப்படினாலும்... உங்க கம்பெனிக்கு வரும் போது நீயும் இருப்பே தானே?'' என்ற நான், என் கண் களில் தெரிந்த பலவித உணர்ச்சிகளை மட்டுப்படுத்த முனைந்தேன்.

''ஹ்ம்ம்... சரி! நீங்க ப்ரெசென்ட்டேஷன் பண்ற அன்னைக்கு நான் 'பிஸி'யா இல்லைன்னா கண்டிப்பா வரேன்'' எனப் பெரிய மனிதத் தோரணையில் சொல்லி விட்டு அறை வாயிலுக்குச் சென்றவள்,

சட்டென திரும்பி ''என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!'' என்றாள்.

''தேங்க்ஸ்!'' என்றேன் நான் அவளது சிரிப்பைக் கடன்வாங்கிக் கொண்டு.

அவள் ஒரு சிரிப்புடன் வெளியே செல்ல, கதவை வேகமாய் ஒரு தட்டுத் தட்டி அவளது கவனத்தை என்னிடம் திருப்பிக் கொண்டேன்.

அவளது கண்களிலிருந்த கேள்விக்கு என் கைகள் thanks for everything என்றன. கூடவே கண்களும், அதே செய்தியை பிரதிபலிக்க, அதற்கும் அவளது பதில் ஓர் புன்னகையாய் மட்டுமே இருந்தது.

அதன் பின்னர், நாட்கள் காற்றின் வேகத்தில் பறக்க, நாங்கள் (பிரதீப்பும் நானும்) ப்ரெசென்ட்டேஷனுக்கு செல்ல வேண்டிய நாளும் இனிதே விடிந்தது.

இந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருந்ததால், மிக மெதுவாய் அதே சமயம் அதிவேகமாய் சென்றது போலவும் எனக்குத் தோன்றியது.

முதன்முறையாக, வெளியுலகம் பார்க்கும்படி, நான் ஒரு வேலை செய்யப் போகிறேன் என்பதொரு புறம் இருந்தாலும், நாங்கள் செல்லப் போகும் கம்பெனியில் தீபா வேலை செய்கிறாள் என்பது மிகுந்த நிம்மதியைக் கொடுத்தது.

என் கண்ணால் அவளது வேலை இடத்தைப் பார்க் கலாம் என்பதுடன், தினம் நிகழ்ந்த அவளது வருகை புதிய வேலையின் காரணமாக வாரம் ஒரு முறைக்கு மாறியிருந்தமையால் அவளைப் பார்க்க முடியாமல் போனதும் சேர்ந்து கொள்ள, அவளைப் பார்க்க என் மனம் துடித்தது!

காலையில் நானும் பிரதீப்பும் கோட்-சூட்-டில் தயா ராக, பெற்றோர் மற்றும் கடவுளின் ஆசியுடன் எங்களது முதல் ஏணிப்படிக்கு அடிக்கல் நாட்டினோம்.

''யார் என்ன சொன்னாலும்...'' போற்றலும் தூற்றலும் அந்தக் கண்ணனுக்கே'ன்னு விட்டுடணும், ராஜா!!'' என்று அப்பாவின் அறிவுரையுடன் நான் வண்டியில் ஏற, பிரதீப்பின் கரங்களில் எங்களது ''பென்ஸ்'' கார் சரவணம் பட்டி நோக்கிப் பறந்தது.

ஒன்பது மணிக்கு குறிக்கப்பட்டிருந்த மீட்டிங்-கிற்கு ஏதுவாக, நாங்கள் எட்டரைக்கே அங்கே இருந்தோம்.

வண்டியை பார்க் பண்ணிவிட்டு, நாங்கள் கம்பெனி வளாகத்தினுள் நடக்க, அங்கே எங்களை நிறுத்தினர் அந்த நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரிகள்.



''Visitor Pass'' கொடுப்பதற்காக என்று நான் எண்ணி யிருக்க, அது நடந்த அதே சமயம்,

''தீபா! இவங்க பாஸ் செக் பண்ணுமா'' என்றார் ஓர் மூத்த அதிகாரி.

''தீபா'' என்ற அழைப்பிலேயே நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்க, அங்கே வந்தவளைப் பார்த்து நாங்கள் ஸ்தம்பித்து நின்றுவிட்டோம்.

அவளோ, அதிர்ச்சி என்ற உணர்ச்சியை முற்றிலும் மறந்தவள் போல் ''ஹாய்! வெல்கம்! உங்கள் வரவு நல் வரவாகுக'' என்றாள் அவளுக்கே உரிய புன்னகையுடன்.

''நீ பேசினதை வச்சு.... நான் கூட.... நீ எம்.டிக்கு அடுத்த போஸ்ட்-ல இருப்பேன்னு நினைச்சேன். நீ என்னடான்னா...'' என பிரதீப் கிண்டலாக.

''நான் சொன்னேனா எம்.டிக்கு அடுத்த போஸ்ட்ன்னு! நீங்களா ஏதாவது கற்பனை பண்ணிக்கிட்டா.... நானா பொறுப்பு?''

''ஹம்ம்.. அது சரி தான்!'' - மெல்ல சிரித்தான் பிரதீப்.

இப்போது எனக்கு அவள் சொன்ன வாக்கியங்களுக் கெல்லாம் அர்த்தம் ' தெளிவாக' புரிந்தது!

கண்கள் அவளைப் பார்த்து சிரித்தப்போதும், காலை முதல் மாலை வரை இப்படி நின்று கொண்டே வேலை செய்ய வேண்டுமா? ஹய்யோ பாவம்! என்று மனம் வருந்தியது.

அதற்குள், பாதுகாப்பு அதிகாரி எங்கள் பெயர் மற்றும் முகவரியைக் கேட்க, பிரதீப் பதில் சொல்லத் தொடங் கினான்.

பாதுகாப்பு சோதனைகள் முடிந்து நாங்கள் உள்ளே சென்றபோது ''ஆல் தி பெஸ்ட்!'' என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டி விடை கொடுத்தாள், தீபஜோதி.

அந்த செய்கையில், எனக்கு மட்டும் தனியாக ஏதோ சேதி இருப்பது போல் இருக்க, என் உள் மனம் சந்தோஷத்தில் திக்குமுக்காடியதை என்னால் உண முடிந்தது.

''கண்டிப்பாக இந்தக் கம்பெனியின் காண்ட்ராக்ட் நமக்குத்தான் கிடைக்கும்'' என்ற நம்பிக்கை மிகவுற, இருவரும் நிமிர்ந்த நடையுடன் உள்ளே சென்றோம்!

# 22

முதல் முறையாக வெளி அரங்கம்; சந்தித்திராத புதுமுகங்கள்; கூடவே செய்ய வேண்டிய வேலை என்று என் மனம் மின்னலை அதன் வேகத்திற்குத் துரத்திக் கொண்டிருந்தது.

கீழ் தளத்திலேயே எங்களை வரவேற்ற அந்த நிறுவனத்தின் வரவேற்பாளர், மூன்றாம் தளத்திலிருந்த கலந்தாய்வு அறைக்கு இட்டுச் சென்றார்.

இன்முகமாக எங்களை உபசரித்து அங்கே அமர வைத்துவிட்டு, நிர்வாக அதிகாரிகளை அழைத்து வருவதாகக் கூறிச் சென்றார்.

அதற்குள், எங்களது கணினியை எடுத்து, அதற்கு உயிர் கொடுக்கும் வேலையைக் கவனித்தான் பிரதீப்.



கீழே குனிந்து, மின்விசையைத் தேடிக் கொண்டிருந்த பிரதீப்பை யோசனையுடன் பார்த்தேன்.

என்னை வெளிக் கொணர்கிறேன் என்ற ஆசையில், பிரதீப் சம்பாரித்து வைத்திருக்கும் நற்பெயரையும், அவன் ஆவலுடன் எதிர்பார்க்கும் மற்றுமொரு படிக் கட்டையும் உடைத்து விடக்கூடாது என்ற உறுதி நெஞ்சில் புகுந்தது.

நான் அவனையே பார்த்துக் கொண்டிருந்ததன் பலனாக, சட்டென திரும்பிப் பார்த்த பிரதீப் ''என்னடா? நெர்வஸ்சா இருக்கா? உன்னால முடிஞ்சளவுக்கு நல்லா பண்ணு. எல்லாம் நல்லா... நடக்கும், பரணி!'' என்றான் வெற்றியை என்னுள் புகட்டிவிடும் புன்னகையுடன்.

அதற்கு பதிலாக அழுத்தமாய் அசைந்தது என் தலை!

அதற்குள், கணினியும் தனக்கான உணவாய் மின் சாரத்தைப் பாவித்து, வீறு கொண்டு முழித்தது.

ஓர் அழகான மெல்லிசையை ஈட்டியவாறே விழித்த கணினியின் கையான கீபோர்ட்-டில், ஓர் தட்டுத் தட்டவும் ''வெல்கம் ஈசன்'' என்ற ஒளிபரப்புடன் பரபரப்பாய் தன் இயக்கத்தைத் துவக்கியது.

பளீரென்ற ஒளியும், மனதை வருடும் ஸ்டார்ட் அப் இசையும் சேர நானும் தயாரானேன்.

இது நாள் வரை, பிரதீப்பின் பேச்சு மொழியால் அரங்கேற்றப்பட்ட எங்களது மென்பொருள் இப்போது என் மௌன மொழியால் அரங்கேறப் போகும் நேரமும் இனிதே வந்து சேர்ந்தது.

ஆமாம், அந்த நிறுவனத்தின் நிர்வாக அதிகாரிகள் மூன்று பேர் எங்களை இன்முகத்துடன் வரவேற்றவாறே உள்ளே வந்தனர்.

பரஸ்பர அறிமுகத்தின் நிமித்தம், பிரதீப் தன்னை முதலில் அறிமுகப்படுத்திக் கொள்ள, அவர்களும் தங்களை எங்களுக்கு அடையாளம் காட்டினர்.

பின்னர், என் பக்கம் திரும்பிய பிரதீப், அவனது வாய் மொழியாக, என்னை அவர்கட்கு அறிமுகம் செய்து வைத்தான்.

எனக்குப் பதிலாக பிரதீப் பேசியதில் அவர்களின் புருவங்கள் லேசாய் வளைய "அவனது பேச்சுத் திறனை எடுத்துக் கொண்டபோதும், மௌனத்தில் மிளிரக் கூடிய அசாத்திய திறமையை அவனுக்குக் கடவுள் கொடுத் திருக்கிறார். அவனது இந்த மௌனத்தை ஓர் மொழி யாய் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்" என்றான் பிரதீப், ஆங்கிலத்தில்.

அவனது வார்த்தைகளில் உள்ளம் நிமிர, எதிரே நின்றிருந்த பெரிய மனிதர்களிடம் திடமான புன்னகை ஒன்றை உதிர்த்தேன்.

மூவருள் பெரியவராய் இருந்த ஒருவர் முதலில் சுதாரித்துக் கொண்டார் என்பதற்கு அறிகுறியாக, "ஆல் தி பெஸ்ட், மிஸ்டர். பரணி! உங்களது உரையைக் கேட்கக் காத்திருக்கிறோம்!" என்றார்.

அவரது வாழ்த்தை மெல்லிய தலையசைப்புடன் ஏற்றுக் கொண்டு, என் கணினியிலிருந்த காட்சியளிப்பு கோப்பை திறந்தேன்.



அவர்கள் மூவரும், அங்கிருந்த பெரிய மேஜையின் இடது புறம் அமர, பிரதீப் வலது புறத்தில் கணினியின் அருகே அமர்ந்து கொண்டான்.

கூடுதலாய் எரிந்த விளக்குகளை அணைத்துவிட்டு, காட்சியளிப்பை உயிர்ப்பித்த என் கண் முன்னே காட்சி யளிப்பின் முதல் ஏடு ஓடுவதற்கு முன்பாக... அப்பா வின் முகம் வந்து போனது!

அடுத்ததாய்.... அம்மா... பிரதீப்... கார்த்திகா.... அவர்களின் வாழ்த்துக்கள், பிரார்த்தனைகள், கவலைகள் என எல்லாமும்.

முடிவில்.... தீபாவும்... அவளது சுபாவமும்!

படபடத்த இதயத்திற்கு உரம் சேர்க்கப்பட்டதில், தெளிவான முகத்துடன் முதல் ஏட்டை ஓட்டினேன்.

"As an innovator, I have transformed my voice to this presentation! It will speak for me!" என்று மிளிர்ந்த வார்த்தைகளின் ஊடே, துவங்கியது அரங்கேற்றம்.

அடுத்தடுத்த ஏடுகளில் எங்கள் மென்பொருளின் ஆதி மூலத்தை மட்டுமல்லாது அதன் செயல்பாட்டையும் விளக்கியது எனக்காய் பேசிய ப்ரெசென்ட்டேஷன்!

இது நாள் வரை, கணினி திரையில் ஓடிக் கொண் டிருந்த வார்த்தைகளுக்கு மொழி கொடுக்கும் வண்ணம் ஓர் விரிவுரையாளரையே பார்த்திருந்த அதிகாரிகளுக்கு, கணினியே பேசி தன்னுள் ஓடிக் கொண்டிருக்கும் வார்த் தைகளுக்கு மொழி கொடுத்ததைப் பார்க்க சுவாரஸ்ய மாய் இருந்தது போலும்!

அதிலும், பதிவு செய்யப்பட்ட குரல் போல் ஒரே சீராய் வராமல், போதிய இடைவெளி விட்டு ஏற்ற இறக் கங்களுடன் வெளிவந்த குரல் அவர்களை ஈர்த்திருக் கிறது என்பதை அவர்களின் முகம் தெளிவுற காட்டியது!

அனைவரது முகத்திலும் எதிர்பார்ப்பின் உச்சக் கட்டம்!

எனக்குமே, அடுத்து வரும் செய்தி பரிமாற்றத்தில் அவர்களின் எதிர்பார்ப்பு பூர்த்தியாவதைக் காண வேண்டிய எதிர்பார்ப்பு!

அதற்கேற்ப, அடுத்த ஏடு ஒளி பெற, பின்னணியில் ஒலியும் சேர்ந்தே வந்தது.

கணினியின் செயல்பாட்டைப் பாதிக்கும் வைரஸ்கள் - எங்கிருந்து எல்லாம் வர முடியும் என்று ஓர் அட்ட வணை போட்டுக் காட்டிவிட்டு, எங்கிருந்து வந்த போதும் அதை துவம்சம் செய்யும் சக்தி கொண்ட எங்கள் மென்பொருளின் செயல்பாட்டை அடுத்து வரும் ஏடுகளில் காணலாம் என்றது என் குரல் - ஆம், என் குரல் தான் - நான் தானே கணினியினுள் புகுத்தி இருக் கிறேன்! என் படைப்பின் காப்புரிமை எனக்கு மட்டுமே சொந்தம்!

யாரும் இதுவரை செய்யாத ஒரு விஷயத்தை அடுத்த ஏடுகளில் நான் புகுத்தியிருந்ததால், அவற்றை மிகுந்த எதிர்பார்ப்புடன் பார்த்திருந்தேன்.

முதல் வடிவமாக, மின்னஞ்சல் மூலமாக வரும் வைரஸ்களைப் பற்றிய விவரம்.

தொடர்ந்து, நான் ஓர் எண்ணை கணினியின் கீபோர்ட் டில் தட்ட, வேகமாய் ஓர் வைரஸ் அந்தக் கணினியினுள் புகுத்தப்பட்டது!



பார்த்திருந்த அனைவரது கண்களும் விரிய, அடுத்த எண்ணை நான் தட்டியதும், எங்கள் மென்பொருள் அக்கணினியினுள் புகுத்தப்பட்டது.

இரண்டே வினாடியில் புகுத்தப்பட்ட மென் பொருளை அவர்கள் ஆச்சரியமாய் பார்க்கும் போதே, "Trojan virus detected. "Delete" action taken and computer is clean!" You are risk free என்ற வார்த்தைகள் வினாடிக்குள் பிரவேசித்தது.

அடுத்து நான் ஓர் எண்ணை அழுத்த, எங்கள் மென் பொருள் அக்கணினியிலிருந்து தூக்கி எறியப்பட்டது (uninstall செய்யப்பட்டது). கூடவே அடுத்த ஸ்லைடும் வந்து சேர்ந்தது.

அதில், pen drive (external hardware) மூலமாக வரும் வைரஸ்களின் விவரமிருக்க, அடுத்த எண் தட்டலில் அந்த வைரஸ் அதி வேகமாய் அக்கணினியில் வந்து அமர்ந்து கொண்டது.

முன்னர் போலவே, நான் இன்னுமொரு எண்ணைத் தட்ட, மென்பொருள் புகுத்தப்பட்டு, அடுத்த எண்ணின் தட்டலில் அந்த நச்சுக்கிருமியும் இருந்த இடம் தெரி யாமல் மறைந்து போனது!

அடுத்து வந்த பத்து ஸ்லைட்களிலும், விதவிதமான வைரஸ்கள் உட்புகுவதும், "Be protective" அதை துவம்சம் செய்வதும் என" ஈசனின்" பணி செவ்வனே நடந்தேறியது.

ஒரோர் ஸ்லைட் ஓடும்போதும், நெஞ்சினுள் ஓர் சதவீத வெற்றி உட்புகுவதை என்னால் உணர முடிந்தது!

கை கூடி வரும் வெற்றியை எங்கள் கைகளுள் நிரந்தரமாய் வைக்கும் வண்ணம் - காட்சியளிப்பின் முக்கிய ஸ்லைட் வந்து சேர்ந்தது.

ஓர் கணினியின் இதயம் என்று சொல்லப்படும் Master boot record பகுதியைப் பாதிக்கும் முக்கிய வைரஸ் ஒன்று இறக்குமதியாகி, ''Be protective'' எனும் சிங்கம் அதை அடித்து வீழ்த்தியதில் சற்றே களைத்துப் போயிருந்தபோதும், தன் செயல் திறனைப் பிறருக்குக் காட்டிவிட்டத் திருப்தியில் அட்டகாசமாய் சிரித்தது போலிருந்தது என் பிரமைக்கு!

எனக்குமே, அதன் தன்னம்பிக்கை தொற்றிக் கொள்ள, காட்சியளிப்பை முடிவுக்குக் கொண்டு வரும் வண்ணம், கடைசி ஸ்லைடை ஓட்டினேன்.

"How much time should the virus stay on your system? minutes or seconds? The Lesser you choose, greater you would lean towards "Be Protective!" - இது வரை பேசிய குரல் இல்லாமல் போக, வெறும் வார்த்தைகள் மட்டும் திரையில் மின்னியது!

இதுவரை எனக்காய் பேசிய கணினி இப்போது உதிர்த்த மௌனம், அங்கே பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது போல் தோன்றியது எனக்கு!

ஆம், குண்டூசி விழுந்தால் கூட கணீரென கேட்கும் அளவிற்கு, அங்கே நிசப்தம்!

வினாடிகள் குறைவென்றும், நிமிஷங்கள் நிறைவென்றும் ஓடிய காலம் நிறைவுற, ''நன்றி, வணக்கம்'' என்றேன் நான், அனைவரையும் பார்த்து.



இப்போது பேசியது கணினி அல்ல! நானே தான்!

என் ''நன்றி'' நிறைவு பெறக் காத்திருந்தவர்கள் போல், அந்நிறுவனத்தின் அதிகாரிகள் மூவரும் எழுந்தனர்.

அவர்களின் பேச்சுக்காக நான் காத்திருக்க, அவர்களோ வாயால் பேசாமல் என்னைப் போல் கையால் பேசினர்!

அதாங்க, ஓங்கி ஒலித்த அவர்களது கைத்தட்டல் கோடானு கோடி வார்த்தைகளுக்கு ஈடானது!!

கண்ணில் வெற்றியின் நீர் துளிர்க்க, என்னை இறுக அணைத்துக் கொண்டான் நண்பன்!

அந்த அணைப்பில் வெளிப்பட்ட உணர்வுகளுக்கு என்னால் வார்த்தை வடிவம் கொடுக்க முடியவில்லை! அத்தனை இறுக்கமாய், அழுத்தமாய், ஆதரவாய், பெருமையாய், பூரிப்பாய்... ம்ம்ம்... மிக அழகாக இருந்தது!

நான் சுவைத்தது ''வெற்றி'' தான் என்று பறை சாற்றும் வண்ணம், என்னை மனதாரப் பாராட்டிய அந் நிறுவன அதிகாரிகள், எங்களுக்கே அந்த காண்ட்ராக்டை கொடுக்க சம்மதித்தனர்.

அதற்கு அவர்கள் கூறிய காரணம் - படைப்பாளன் என்ற முறையில் மட்டுமின்றி கலைஞன் என்ற முறையிலும் என்னை நிமிர வைத்தது!

அப்படி என்ன கூறினார்கள் என்று தானே கேட்கிறீர்கள்?''உங்கள் மென்பொருளின் செயல்பாட்டைக் கண்டு வியந்ததை விட, அதை நீங்கள் எங்களுக்கு எடுத்துக் காட்டிய விதத்தில் எங்களை அதிகமாய் கவர்ந்துவிட்டீர்கள். உங்கள் படைப்பாற்றலுக்கு சான்

றாய் விளங்கிய ப்ரெசென்ட்டேஷனை அடிப்படையாய் கொண்டு, உங்களுடனான ஒப்பந்தத்திற்கு உட்படு கிறோம்'' என்றனர்!

கேட்கவே நன்றாக இருக்கிறதல்லவா?

முற்றிலும் புதிய மனிதர்களிடமிருந்து கிடைத்த இந்தப் பாராட்டை.... எண்ணி எண்ணி மனம் மகிழ்ந்தது!

அதிலும், அந்த மூவர் குழுவில் மூத்தவராய் இருந்த ஓர் உயர் அதிகாரி, நாங்கள் கிளம்பும் நேரத்தில் ''உங்களைப் பார்த்தா எனக்கு பிரமிப்பா இருக்கு. மிஸ்டர். பரணி! உங்களுக்கு இருக்கக் குறைபாடை தூசி போல தட்டிவிட்டு, என்ன மாதிரி ஒரு உயரத்திற்கு வந்திருக்கீங்க!? கிரேட்! உங்களைப் பார்க்கும் போது, எனக்கு கூட கடவுள் எதையாவது குறையா கொடுத் திருக்கக் கூடாதா? நானும்... அந்தக் குறையைத் தூக்கி எறியுறதுக்காகவாவது நான் இன்னும் நல்லா உழைச் சிருப்பேனேன்னு தோணுது!! admire you. Mr.Barani!'' என்றார் என் கைகளைக் குலுக்கியவாறே.

அவரது ஒரோர் வார்த்தையிலும் என் முகம் விரிந்த போதும், ஒரோர் வார்த்தைக்கும் பிரதிபலிப்பாய் என் மனம் தீபாவிற்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தது!

அவள் இல்லை என்றால்.... இந்த மேடை இல்லை... இந்த அரங்கேற்றம் இல்லை.... இந்த காண்ட்ராக்ட் இல்லை... இந்த பாராட்டு இல்லை... இந்த அதீத புகழ்ச்சி இல்லை... நெஞ்சம் நன்றியில் நிரம்பி வழிந்தது!!

கைபற்றிய அரை கோடி காண்ட்ராக்ட்டுடனும், கைகொள்ளா பாராட்டுக்களுடனும் வெளியே வந்த



எங்களை, ''தொழில் முறையில் அல்லாமல் நண்பன் என்ற முறையில் தன்னைப் பாவித்து, தங்கள் வீட்டிற்கு வர வேண்டும்'' என்று அன்பு வேண்டுகோள் விடுத்து அனுப்பும் அளவிற்கு அவருக்கு எங்களைப் பிடித்து விட்டது.

அந்நிறுவனத்தின் வரவேற்பறையை விட்டுக் காலடி எடுத்து வைத்த நொடி, ''கலக்கிட்டேடா, பரணி! என்கிட்ட... அந்த ப்ரெசென்ட்டேஷன் காட்டும் போது... வாய்ஸ் எல்லாம் இல்லையே? இட் வாஸ் ரியல்லி சூப்பர்ப்! நான் பேசியிருந்தா கூட.... நமக்கு இந்த காண்ட் ராக்ட் கிடைக்கிறது சந்தேகம் தான்! You were awesome!'' என மனதார பாராட்டியவன்,

கூடவே, ''இதுக்கு.... தீபாக்குத் தான் முதல தேங்க்ஸ் சொல்லணும்! அவளோட லெட்டர்ஸ் இல்லைன்னா.... நீ இந்த ப்ரெசென்ட்டேஷனுக்கு வரதுங்கிறது நடந்தே இருக்காதே'' என்று தீபாவையும் புகழ்ந்தான்!

எனக்குமே, அவளிடம் இந்த வெற்றியை உடனடியாக பகிர்ந்து கொள்ள வேண்டும் போல் கால்கள் பரபரத்தன.

''Think of the devil. here it is'' என்று சொல்வார்களே, அது போல் என் நினைவுகளின் நாயகியே எங்கள் முன்னே வந்தாள்.

''என்னாச்சு பரணி சார்? வெற்றியா?'' என்ற கேள்வியில் தொடங்கிய அவளது பேச்சு,

''நீங்க வாய் விட்டு சொல்லவே வேண்டாம்.... உங்க ரெண்டு பேரு முகமும் அநியாயத்துக்கு பளபளன்னு

இருக்கிறதை வச்சு நானே சொல்றேன். காண்ட்ராக்ட் கிடைச்சிருக்கு! என்ன சரியா?'' என்ற பதிலில் தான் நின்றது.

''ம்ம். எஸ்! எங்களுக்கு காண்ட்ராக்ட் தாதா சொல்லிட்டாங்க. அது மட்டும்... எங்க பளபள முகத்துக்குக் காரணமில்லை! நம்ம பரணி சாரைப் பார்த்து.... உங்க கம்பெனி ஆளுங்க எல்லாரும் அசந்து போய்ட்டாங்க! நம்ம... ஆளு, அவங்களை அசத்தோ அசத்துன்னு அசத்தினதில், அவங்களோட சிஸ்டர் கன்சர்ன்கிட்டயும் சிபாரிசு பண்றதா சொல்லியிருக்காங்க்...'' என்றான் பிரதீப், கூடுதல் தகவலாய்.

''ஹே சூப்பர்!சூப்பர்!! கங்க்ராட்ஸ் பரணி சார்! கங்க்ராட்ஸ் பிரதீப் சார்!'' - சிறு பிள்ளை போல் மகிழ்ந்தாள். இதற்கு விதையிட்டவள்.

''உன்னோட தூண்டுதல் இல்லைன்னா இது சாத்தியமே இல்லை!'' என்று நான் சொன்னதை ஒரு சிரிப்புடன் மறுத்தாள் தீபா.

''என்னோட பேச்சு.... குட்டையில இருக்க தண்ணிக்குக் குதிரையை இழுத்திட்டுப் போற வேலை மாதிரி தான். காட்டின தண்ணீரைக் குடிக்கிறதும், குடிக்காம முறைச்சுக்கிட்டு அலுச்சாட்டியம் பண்றதும் குதிரையோட விருப்பமில்லையா? உங்களோட திறமையால தான்... உங்களுக்கு இந்த வெற்றி கிடைச்சிருக்கு! இது மேலும் மேலும் வளர என்னோட மனமார்ந்த வாழ்த்துக்கள்'' - மெல்லிசையாய் இழையோடிய புன்னகையுடன் வந்தது அவளது வாழ்த்து.



அவளது பேச்சின் அர்த்தம் புரிந்து சிரித்தப் போதும், ''சந்தடி சாக்கில.... என்னை ''குதிரை''ன்னு சொல்லிட்டே இல்லை?'' என்றேன் நான்.

''அடடா, கண்டுபிடிச்சுட்டீங்களே? சரியான கள்ளன்னய்யா நீ!'' என அவள் கவிஞர் பாணியில் பேசவும், மேலும் அங்கே சிரிப்பு பொங்கியது.

''சரி . நீங்க கிளம்புங்க! எனக்கு லஞ்ச்க்கு நேரமாச்சு'' என்ற தீபா நகர முற்பட,

''என்ன சாப்பாடு?'' என்றேன் நான். இது போன்ற உரையாடல்களை நான் வெளியாட்களிடம் வைத்துக் கொள்வதே இல்லை என்பதால், பிரதீப்பின் விநோதப் பார்வை ஒன்று என் மேல் விழத்தான் செய்தது.

இருந்தாலும், எனக்கு அவனின் குறுகுறு பார்வையை விட, தீபாவின் உணவைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியதாய் இருந்ததே! அவளுக்கு நல்ல ஆகாரம் கொடுக்கப்படுகிறதா? என்ற என் கேள்விக்கு விடை தேடியே அக்கேள்வியைக் கேட்டேன்.

பாய்சனே என்றாலும் பாயசம் ரேஞ்சுக்குப் புகழும் அந்த தெய்வப் பிறவியும் ''இட்லி-மிளகாய் பொடி! இட்லின்னா இட்லி.. எப்படி இருக்கும் தெரியுமா? சும்மா... பூ மாதிரி... அப்படியொரு டேஸ்ட்!'' என்று ஆனந்த மயமாய் பதில் சொன்னது.

அவளிடம் ஏற்பட்ட முந்தைய அனுபவங்களை எண்ணுகையில், அவளது பேச்சை நம்பாதேடா பரணி என்று கூக்குரலிட்டது என் மூளை!!

''டிபன் டப்பாவை திறந்து காட்டச் சொல்லு!'' - மூளை உத்தரவிட, அதை கைகள் தங்கள் அபிநயத்தால்

வெளியிடும் முன்னர், ''இது உனக்குத் தேவையான விஷயமா?'' என்ற முட்டுக்கட்டையுடன் லாவகமாய் தடுத்துவிட்டார் மனமெனும் வில்லனார்.

அதனால், நான் சிறு தலையசைப்புடன் நிறுத்திக் கொள்ள, ''நல்லா சாப்பிட்டு, தெம்பா வேலை பாரு! நாங்க கிளம்புறோம்!'' என்று விடை பெற்றான், பிரதீப்.

கடமையின் திரு உருவாய், எங்கள் பைகளை சோதனையிட்ட பின்னரே எங்களை வெளியே அனுப்பிய தீபாவிடம் ''வர சண்டே... இந்த காண்ட்ராக்ட் கிடைச்சதுக்காக எல்லாருக்கும் ட்ரீட்! ஞாபகமா வந்திடு!'' என்ற அழைப்பை வைத்துவிட்டே வந்தோம்.

வீட்டிற்கு வந்தால்.... அங்கே மகிழ்ச்சிக்கு அளவில்லாமல் இருந்தது!

அப்பா - அம்மா முகத்தில் என்றுமே இல்லாத மலர்ச்சி!

என் வணிகம் பணத்தின் உச்சத்தை எய்திய போது வராத மலர்ச்சி!

என் மென்பொருள், இணையதளத்தில் அதிக பட்ச விற்பனையைக் குவித்தபோது ஏற்படாத மலர்ச்சி!

என் எழுத்து ஆயிரம் வாசகர்களை வசீகரித்தபோது வராத மலர்ச்சி!

இப்போது வந்திருக்கிறது என்றால் - அரை கோடிக்கு நாங்கள் வென்ற காண்ட்ராக்ட் அல்ல! பிறரது பாராட்டில் என் தாழ்வு மனப்பான்மை தகர்த்தெறியப்பட்டதில் உண்டான அகம் கொள்ளா மலர்ச்சி, முகத்தில் மின்னியது!



அவர்களுக்கு சற்றும் குறையாமல், கார்த்தியும் பிரதீப்பும் ஆனந்தக் கூத்தாடினர்.

# 23

இதே மகிழ்ச்சி, அன்று மாலை தீபா வந்தபோதும் தொடர, அந்த வார ஞாயிற்றுக்கிழமையும் கோலாகலமாய் விடிந்தது!

தீபா எங்கள் வீட்டினுள் நுழையும்போது, நாங்கள் ஐந்து பேரும் காலை உணவை உண்டு கொண்டிருந்தோம்.

அவளையும் உணவுண்ணச் சொல்ல, அதிக பிகு இல்லாமல் கார்த்தியின் பக்கத்தில் அமர்ந்தவள், ஐந்தே நிமிடத்தில் ஐந்து இட்லிகளை உள்ளே தள்ளியதைப் பார்க்க சற்றே சிரிப்பாய் இருந்தது.

மேலும் இரண்டு இட்லிகள் உள்ளே சென்றதும், ''இட்லி.... செம சாஃப்ட் ஆன்ட்டி! மல்லிகைப் பூ கூட... இதை விட சாஃப்ட் கம்மி தான்'' என்றாள் தீபா, கடைசி வாய் இட்லியை உள்ளே தள்ளியதும்.

அம்மா சிறிது புன்னகையுடன் எதிர்கொள்ள, '' உங்க ஹாஸ்டல் இட்லியை விடவா....நல்லா இருக்கு?'' என்றேன் நான், சிறு சந்தேகத்துடன், எனக்கு - அவளது உணவைப் பற்றிய கவலை மறையும் படியாய் இல்லை! எந்த விதத்திலாவது அவளது நலனை அறிந்து கொண்டு விட வேண்டும் என்று மனம் கிடந்து தவித்தது!

என் தவிப்பு சரியே என்று சொல்வது போல், "அது வும் பூ மாதிரி தான் இருக்கும்... என்ன ஒரு வித்தியாசம்... ஆன்ட்டி செய்ற இட்லி மல்லிகைப் பூ மாதிரி இருக் கும்.... ஹாஸ்டல் இட்லி வாழைப்பூ மாதிரி இருக்கும். என்ன இருந்தாலும்... பூ ....பூ தானே?" என்று தத்துவம் பேசியது, பிரதீப்பின் அகராதியில் "ஐந்து" என்றழைக் கப்படும் அதிசயப்பிறவி!

"எதில் தான் விளையாட்டு என்றில்லை...." என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும் போதே,

"வேணும்னா.... இன்னும் ரெண்டு இட்லி கேட்டு வாங்கிச் சாப்பிடு! அதை விட்டுட்டு.... எதுக்கு இந்த பிட்டு?" - கார்த்தி சிரிக்க,

"இவ்வளவு நேரம்.... கேட்டுத்தானே வாங்கிச் சாப் பிட்டேன்.... என்னமோ, நீ என்னை விழுந்து விழுந்து கவனிச்ச மாதிரி.... பேச்சைப் பாரு பேச்சை...." என்று தீபாவும் சீண்டினாள்.

"அதெல்லாம்... ஆன்ட்டீஸ் தான் கேட்கணும்... நானெல்லாம் யூத்மா....." காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டது கார்த்திகா அல்லாமல் வேறே யார்?

"கல்யாணம் நிச்சயமான நீயே யூத்-ன்னா... அப்போ நானு?" என்று இழுத்த தீபாவை, இரண்டு அடி தான் வைக்க முடிந்தது கார்த்தியால்.

எதிர்ப்பேச்சு பேச முடியாமல் போன வருத்தத்தை "இன்னொரு இட்லி.... சே சே மல்லிகைப் பூவுக்குத் தங் கச்சி வேணுமா? இந்தா... வச்சுக்கோ..." என்ற உப சரிப்பில் ஈடு செய்து கொண்டாள் என் கெட்டிக்காரத் தங்கச்சி!



கேலியும் கிண்டலுமாய் அந்த நாள் கழிய, எங்கள் குடும்பத்தாருடன் தீபாவும் நட்சத்திர ஹோட்டல் விருந்தில் கலந்து கொள்ள நேரம் பறந்தது.

உணவு முடிந்து திரும்பும் வழியில், "உன்னை ஹாஸ்டல்லேயே விட்டுடுறேன், தீபா! நைட்ல நீ தனியா வரவேண்டாம்.... என்ன சரியா?" என்ற பிரதீப்புடன் அனைவரும் இசைய, எங்கள் வண்டி சரவணம்பட்டி நோக்கி விரைந்தது.

அவள் "வழி" சொன்ன அழகில், வண்டி ஓட்டாத என்னை மட்டுமல்லாது வண்டி ஓட்டிய பிரதீப்பையும் திணற வைத்தாள், தீபா!

லெப்ட்.... ரைட்... நேரா.... லெப்ட் எடுத்து உடனே ரைட்.....- என்று போய்க் கொண்டே இருந்த பாதை, முடிவில் ஓர் "நிக்குமோ நிக்காதோ" டைப் கட்டிடத்தின் முன்னே நின்றது.

"இதுவா ஹாஸ்டல்?" என்று கார்த்தி கூவ,

"ஆமாடி... அங்க பாரு..." மங்கை லேடீஸ் ஹாஸ்டல்"ன்னு போர்டு கூட போட்டிருக்கே?" என்று அவளை ஓர் இடி இடித்தாள், தீபா!

அவள் காட்டிய திசையில் கண்ணை அலைய விட்ட என்னைப் பார்த்து... ஓர் துருப்பிடித்த இரும்புப் பலகை யும், அதில் முக்கால் பாகத்திற்கும் மேலாய் அழிந்துப் போன எழுத்துக்களும் பல் இளிக்க, என் மனம் கோபத் தின் உச்சத்திற்குச் சென்றது!

அரண்மனையில் இருப்பது போல் இவள் பேசிய பேச்சென்ன?

இப்போது... இருக்கும் அழகென்ன?

எங்களிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், நல்ல இடமாக பார்த்துச் சேர்த்து விட்டிருப்போமே?

ஏன் வெளியிடத்திற்குச் செல்ல வேண்டும்? எங்கள் வீட்டிலேயே இருக்க வைத்திருப்போமே?

எங்கள் வீட்டிலா.... ஹ்ம்ம் முடியுமா? சொந்தம் என்ற முறை இல்லாமல் நட்பு என்ற பழக்கத்தில், ஒரு பெண்ணை வீட்டில் வைத்திருக்க முடியுமா?

ஏன் பிரதீப் இல்லை? அவனும் இன்னும் எங்களுக்கு உறவாகவில்லையே? நட்பு என்ற ஸ்ரீமறயில் தானே, எங்கள் வீட்டில் வசிக்கிறான். அது போல, தீபாவும்.........

ஆனால், பிரதீப் இந்த வீட்டின் வருங்கால மருமகன்! தீபா?

வருங்கால மருமகளாக இருந்தால் தங்க வைக்க லாம்... இந்த எண்ணம் வந்ததும் திடுக்கிட்டு நின்றேன் நான்!

அன்று உணர்ந்த என் காதல் மீண்டும் கிளம்பி யிருக்கிறது போலவே?

ஹ்ம்ம் சரியில்லையே?! என்னதான்... என் மௌனத் திற்கு உரிய அங்கீகாரம் கிடைத்தாலும்.... அது தொழில் வாழ்க்கைக்கு சரியானதே ஒழிய, சொந்த வாழ்க்கைக்கு ஏற்றது அல்லவே!!

முகம் இறுகிவிட, அவள் விடுதியினுள் செல்வ தையே வெறித்திருந்தன என் கண்கள்!

இதன் நடுவே, எனக்கு தீபாவின் கன்னத்திலிருக்கும் குட்டிற்கான மூலக்காரணம் வேறு தெரிய வந்தது!



இருக்கும் வேதனை போதாது என்று... அது வேறு மனதை அறுத்தது!

தீபாவின் அத்தை மகள் ரத்தினத்தை அவளது மாமியார் வரதட்சணைக் கேட்டு கொடுமை செய்திருப் பார் போலும். பஞ்சாயத்து செய்வதற்காக, அனைவரும் தீபாவின் அத்தை வீட்டிற்கு வந்திருந்தபோது, இன்னும் ஐந்து பவுன் நகை வேண்டும், ஸ்கூட்டர் வேண்டும் என்று பட்டியல் போட்ட அந்தப் பெண்மணியை எல் லார் முன்னிலையிலும் ''ஏன் இப்படி பணம்... பணம்... ன்னு அலையுறீங்க? சாகும்போது..... ஸ்கூட்டர்-லேயா பரலோகம் போகப் போறீங்க?'' என்று தீபா அம்மையார் சரமாரியாய் திட்டிவிட்டாராம்.

அதில் கொதித்துப் போன அந்தப் பெண்மணியோ, ''உங்கள் பெண்ணும் வேண்டாம்.... உங்கள் பணமும் வேண்டாம்'' என்று நடந்துவிட, தீபாவுடைய அத்தை யின் கோபம் தீபாவை வாட்டிவிட்டது.

''என் பொண்ணோட வாழ்க்கையை அழிச்ச இந்த வாயை என்ன பண்றேன் பாரு'' என்று பழுக்கக் காய்ச்சிய கரண்டியில் வாயிலேயே இழுத்துவிட்டாராம். பாவம், நாக்கில் சுடுபட்டுவிடுமோ என்ற பயத்தில் முகத்தை அப்படியும் இப்படியுமாய் திருப்பியதில் கன்னத்தில் விழுந்துவிட்டது! ப்ச்... என்னமாய் வலித்திருக்கும்!

அந்த வலியோடு, அத்தை மகளின் புகுந்த வீட் டிற்குச் சென்று அப்பெண்மணியின் காலில் விழுந்து மன்னிப்பு வேறு கேட்டிருக்கிறாள்! உடலின் வலியை விட... மனதின் அவமானம் எவ்வளவு வலித்திருக்கும்!?

ஆனாலும், ''நான் பண்ணின காரியத்துக்கு விட்டை விட்டுத் தூரத்தாம இருந்தாங்களே'' என்று அதையும் நல்லவிதமாய் எடுத்துக் கொண்டிருக்கிறாளே இந்தப் பெண்! என்ன பிறவியோ!

இந்த விளையாட்டு - மூளைக்கும் மனதிற்கும் நடக்கும் விளையாட்டைத் தான் சொல்கிறேன் - தொடர்ந்து வந்த நாட்களிலும் ஆனந்தமாய் அரங்கேறியது!

இந்தப் போராட்டத்தில் நான் தொலைந்து விடாமல் இருக்க, பிரதீப்பும் தீபாவும் அவர்களாலான முயற்சிகளை செவ்வனே செய்தனர்.

''கிடைச்ச பாராட்டோட சுவை குறையிறதுக்கு முன்னாடியே இன்னொரு பாராட்டை வாங்குற வழியைப் பாருங்க... சார்!'' என தீபா சொல்லால் தூண்டினாள் என்றால் பிரதீப், எங்களுக்குக் கிடைத்த காண்ட்ராக்டை முன்னிலைப்படுத்தி, வேறு சில நிறுவனங்களுக்கும் எங்களது ப்ரோபோசலை அனுப்பினான்.

மூன்றே மாதத்தில் சின்னதாய் இரண்டும், நடுநிலையாய் ஒன்றுமென எங்களுக்கு வாடிக்கைகள் பெருகத் துவங்க, எனது முதல் வெளியுலக அனுபவம் நிகழ்ந்த நிறுவனத்திலிருந்து ஓர் அழைப்பு!

அவர்களது பணியாளர்களுக்கு personality development (சுயமுன்னேற்றம்) கோர்ஸ் ஒன்றை நடத்த முடியுமா என்று அந்த மூத்த நிர்வாக அதிகாரி கேட்டிருந்தார்.

நானா? நல்ல நல்ல ட்ரைனிங் சென்டர்கள் இருக்கும்போது, வகுப்பெடுப்பதில் முன் அனுபவமில்லாத என்னை எதற்காக அழைக்க வேண்டும் என்ற எனது உள்ளத்தின் கேள்வியை நான் தெளிவுற கேட்டே விட்டேன்.



அது மட்டுமில்லாமல், வாய் திறந்து பேச முடியாமல் கைகளின் அசைவால் ஒருவன் வகுப்பெடுத்தால் மாணவர்களிடம் ஓர் மெத்தனப் போக்கும்... இவன் சொல்வதை என்ன கேட்பது என்ற ஏளனமும் வர வாய்ப்புள்ளது என்பதையும் அவரிடம் சொன்னேன்.

ஆனால், அவரோ ''ஏட்டுக் கல்வியை மட்டுமே நம்பி பாடம் எடுக்கும் ட்ரைனர்களை விட, வாழ்க்கை கல்வியுடன் திகழும் நான் தான் சரியான ஆசிரியராய் இருக்க முடியும்'' என்றார் அதே பிடியில் நின்று, என்னை அவர்களது அலுவலகத்திற்கு வரவைத்தும் விட்டார்.

முதலில் மிகவும் தயங்கிய நான், அவன் என் மேல் வைத்திருந்த நம்பிக்கைக்காக ஒரு முறை வகுப்பெடுத்து விட்டு வந்து விடலாம் என்ற எண்ணத்துடன் தான் ''தீபா''வின் நிறுவனத்திற்குச் சென்றேன்.

இந்த முறையும், பிரதீப் என்னுடன் வர, எங்களது பைகளை சோதனை செய்தவாறே ''ஆமா... பரணி சார்.... எங்களுக்கு ஒரு ரெண்டு... ரெண்டரை வயசிருக்குமா? இல்ல... எங்க போனாலும் ஒரு துணையோடவே போறீங்களே? எங்கேயும் தொலைஞ்சு போய்டுவோம்ங்கிற பயமா? இங்க.... பூச்சாண்டி யாரும் கிடையாது சார்.... தனியாவே வரலாம்!'' என்றாள் மிகவும் தீவிரமான முகத்துடன்.

அதைக் கேட்டிருந்த பிரதீப்., ஏதோ சொல்ல வாயெடுக்கவும் ''என்ன பிரதீப் சார்.... பரணி சாருக்கு ஃபீடிங் பாட்டில், தண்ணி, பிஸ்கட் எல்லாம் எடுத்துக்

கிட்டு வந்துட்டீங்களா? புள்ள... பத்திரம் சார்.... பார்த்து கூட்டிட்டுப் போங்க...'' என்றாள் தீபாவே.

''அடுத்த தடவையில இருந்து... நான் பரணியோட வரலை. போதுமா தாயே?'' என்று அவன் கை கூப்ப, ''சரி பக்தனே!'' என்று அருள் பாலித்தாள் தீபாஜோதி தாயார்.

''திமிரிலும் திமிரு...'' என நான் உள்ளுக்குள் கறுவிய போதும் அவளது வாழ்த்திற்காக மனம் ஏங்கியது! என் ஏக்கத்தை உணர்ந்தவள் போல், அடுத்த வினாடியே என்னை வாழ்த்தி அனுப்பினாள், அவள்.

அன்று நடந்த personality development வகுப்பு மிக பிரம்மாண்ட வரவேற்பைப் பெற்றது!

என் குரலுக்குப் பதிலாய் கனினியின் குரல் ஒலித்தது மாணவர்களைக் கவர்ந்தபோதும், அன்று தீபா சொன்ன ''குருவி'' கதையை சொன்னதில் பலரும் கவரப்பட்டனர் என்பதை என்னால் உணர முடிந்தது!

அந்த வகுப்பிற்காக நான் தயாரித்திருந்த கோப்பு முழுதாய் ஓடி முடித்ததும், ''இந்த ஊமையன் வேறெப்படி வகுப்பெடுக்க முடியும்?'' என்ற அலட்சியத்துடன் சில மாணவர்கள் எழுந்து சென்றபோதும், மீதமிருந்த பணியாளர்களின் ஆர்வத்தை மனதில் வைத்து, அவர்களுக்கு சிற்சில விளையாட்டுக்களை நடத்தினேன்.

நான் எழுதிக் காட்டியதை வைத்தும், என் கைகள் சொன்ன ஜாடையை வைத்தும் நான் சொன்னதை சரியாக புரிந்து கொண்டு பலரும் உற்சாகமாய் கலந்து



கொண்டது என்னுள் மிகுந்த சந்தோசத்தை உண்டு பண்ணியது!!

அந்த சந்தோஷம் - வகுப்பு முடிந்து வெளியே வரும் வரை மட்டுமே இருந்தது!

குறிப்பிட்டுச் சொல்லப் போனால் - கார் பார்க்கிங் அருகே இருந்த ஓர் மரத்தடியில் அமர்ந்திருந்த தீபா, தன் கையிலிருந்த டிபன் பாக்ஸ் உணவை முகர்ந்து பார்த்து விட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டதைப் பார்க்கும் வரையிலும்!

இதுநாள் வரை, அவளது முகத்தில் வெறுப்பு என்ற உணர்ச்சியையே பார்த்திராத எனக்கு, அவளது இன்றைய முகம் பெரும் பாதிப்பை உண்டு பண்ணியது!

இப்போது தான் பாதிப்பு ஏற்பட்டதா? முன்னாடி இல்லையா? ''காதல்... கத்திரிக்காய்'' என்று பினாத்திக் கொண்டிருந்தாயே... அதெல்லாம் பொய்யா? என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது.

''தன் நெஞ்சறிய பொய்யற்க'' என்பதற்கு இணங்க, எனக்கு அவள் மேல் காதல் இருக்கிறது; கண்டிப்பாக!

ஆனால்... அந்தக் காதல் அவளுக்கு உகந்ததில்லை... அவளுக்கு நான் வேண்டாமே... குணத்தால் உயர்ந்திருக்கும் அவளுக்கு குறையில்லாத ஓர் உன்னத கணவன் கிடைக்கட்டும்... காதலைக் கூட வாய்விட்டுச் சொல்ல முடியாத நான் வேண்டாம்.... வேண்டவே வேண்டாம்....

இந்த எண்ணம் தான்., ''தீபாவை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திருவோம்'' என்ற என் எண்ணத்தை அப்பா-அம்மாவிடம் வெளியிட விடாமல் தடுக்கிறது.

தீபா படும் வேதனைகளைக் காணும் நேரங்களில், அப்பாவிடம் சொல்லிவிடலாம் என்ற எண்ணத்துடன் அவரிடம் செல்லும் நான், இந்த விஷயத்தைத் தவிர்த்து வேறு விஷயங்களைப் பேசிவிட்டு வருவதற்கும் இதுவே காரணம்!

இப்போதும் ''என் குறை''யை காரணம் காட்டி, அப்பா-அம்மாவிடம் பேசுவதைத் தள்ளிப் போட்டேன் நான்.

ஆனால்... முந்தைய தடவைகளைப் போல் இந்த முறை மனதை அடக்க முடியவில்லை. நெஞ்சம் தீபாவையும், அளவுக்கு மீறிய அவளது மெலிவையும், போன முறை சென்றபோது யாருக்கும் தெரியாமல் காலைப் பிடித்துவிட்டுக் கொண்ட அவளது வலியையும், மதிய உணவை முகர்ந்து பார்க்கக் கூட முடியாத அவளது நிலையையும், சுற்றி சுற்றி வந்தது.

என் எண்ணத்திலேயே உழன்று கொண்டிருந்த தாலோ என்னவோ - வீட்டில் நடக்கும் விஷயங்கள் என் கண்ணில் பட்டும் கருத்தில் பதியவில்லை போலும்.

''நாளைக்கு ஆறு மணிக்கு... கோனியம்மன் கோவிலுக்குப் போகணும், பரணி!ரெடி ஆகிடு!'' என்ற அப்பாவிடம், ''ஏன் எதற்கு'' என்று கேள்வியே கேட்கவில்லை, நான்.



அடுத்த நாள் விடிகாலை நான்கு மணிக்கே என்னை எழுப்பிவிட்ட அம்மா, ''இந்தப் பட்டு வேஷ்டியைக் கட்டிக்கோ, ராஜா!'' என்றபோதும், எனக்கும் ஏதும் வித்தியாசமாய் தெரியவில்லை. ஏனென்றால், கோவிலுக்குச் செல்லும்போது வேஷ்டி அணிந்து வருவதையே அப்பா விரும்புவார் என்பது நான் அறிந்ததே. இன்று, ஏதும் அபிஷேகத்திற்கு கொடுத்திருப்பார்கள் அதனால் 'பட்டு' வேஷ்டி என்று நானே சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

குளித்து முடித்து நான் வரவும், அப்பாவும் பிரதீப்பும் எனக்காக வரவேற்பறையில் காத்திருந்தனர்.

''ரெடியா... பரணி? போகலாமா?'' என்ற பிரதீப், பூட்டு - சாவி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

''அம்மாவையும் கார்த்தியையும் காணோமே?'' என்று நான் குழம்ப,

''அவங்க ரெண்டு பேரும்.... முன்னாடியே போய்ட்டாங்க. நீ வா...'' என்ற அப்பா முன்னே நடந்தார்.

அதன் பின்னர் அதிகப் பேச்சின்றி கழிந்தது பயணம் - ''இன்னைக்கு கோவில்-ல என்ன விசேஷம்பா?'' என்று நான் கேட்கும் வரை!

பிரதீப் ஏதோ சொல்லத் தொடங்கியது போல் எனக்குத் தோன்றியதை ஒதுக்கும்படி, ''இன்னைக்கு... பிரதீப் - கார்த்தி கல்யாணத்திற்கு நாள் குறிச்சுத் தரதா நம்ம ஜோசியர் சொல்லியிருக்கார். அவர் கோவிலுக்கு வரச் சொன்னதால... அங்க போறோம். சரி போறது போறோமே... நல்ல காரியத்திற்கு நாள் குறிக்கும் போது ஒரு

அபிஷேகமும் பண்ணிடலாம்ன்னு பார்த்தேன்'' - நீளமாய் நடந்தேறியது அப்பாவின் விளக்கம்.

தங்கையின் திருமணத்தை எண்ணி மனம் சந்தோஷம் கொள்ள, எனக்கு மிகவும் பிடித்த இருவரும் வாழப் போகும் வாழ்க்கை இனிமையானதாய் இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை, கோவிலுக்குப் போகும் முன்னரே நெஞ்சில் புகுந்து கொண்டது!

இனிய கற்பனைகளுள் நான் வியாபித்திருந்ததன் விளைவாக, பிரதீப்பின் கைகளிருந்த இரண்டுமாலைகளை ''மூலவருக்கு ஒன்று, உற்சவருக்கு ஒன்று'' என்று கணக்குப் போட்டது என் மனம்!

கோவிலில் நுழைந்ததும், அம்மாவையும் கார்த்தியையும் தேடிக் கண்கள் அலைய, அவர்கள் நின்ற இடத்தில் என் கண்கள் நிலை குத்திப் போயின.

அடர் பச்சை வண்ணப் புடவையில் அழகாய் மிளிர்ந்த கார்த்திகாவை தூக்கிச் சாப்பிடுவது போல், தளிர் ரோஜா வண்ணத்தில் அடர் பச்சை வண்ணக் கரை டாலடிக்க மணமகள் கோலத்தில் நின்றிருந்தாள் தீபஜோதி!!

ஆஹா, தீபாவிற்கு கல்யாணம் போலவே?

ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே?

தீபாவை மணக்கவிருக்கும் மாப்பிள்ளை யாராக இருக்கும்?

தீபாவின் திருமணத்திற்குத் தான் வருகிறோம் என்று அப்பா கூட என்னிடம் சொல்லவில்லை பாருங்களேன்...

எதற்காக என்னிடம் மறைத்தார்கள்?



# 24

கேள்விகளின் மத்தியில் நீங்களும் நானும் திணறிக் கொண்டிருக்கும் போதே, ''அண்ணா... வா.... வா'' என்று என் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள், என் தங்கை.

அம்மாவின் அருகே நின்று என்னை நேர் பார்வைப் பார்த்துக் கொண்டிருந்த தீபாவின் கண்களுடன் என் கண்கள் ஓர் மௌன யுத்தம் நடத்தின.

''இங்க... என்ன நடக்குது, கார்த்தி?'' என்று நான் வினவ,

''இனிமே தான் நடக்கப் போகுது. வா... வந்து ஹோமத்துக்கு முன்னாடி உட்காரு'' என்றார் அப்பா.

''ஹோமமா? நானா? என்னப்பா?'' - மெல்ல பின்னடைந்த என்னை, முதுகு புறமிருந்து தள்ளிவிட்டான் பிரதீப்.

''ஹே....சும்மா உட்காருடா... ஓவர் நடிப்பு உடம்புக்கு ஆகாது'' என அவன் சீண்ட,

''என்னடா? தீபாக்கும் எனக்கும் கல்யாண ஏற்பாடு பண்ணியிருக்கீங்களா?'' என என் கைகள் பிரதீப்பிடம் பேசியபோதும், கண்கள் தீபாவிடமே நிலைத்திருந்தன.

கல்யாணப் பெண் போலவா இருக்கிறாள்? பெண் புலி போல.... கண்ணையும் முழியையும் உருட்டிக் கொண்டு ! பிசாசு!

''அடேங்கப்பா! ரொம்ப சீக்கிரம் கண்டுபிடிச்சுட்டீங்களே சார்! உங்களது அரிய பெரிய கண்டுபிடிப்புக்கு.... இந்தாங்க ஒரு முத்தம் பரிசு'' என்று என் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்ட கார்த்திகா,

''வாண்ணா! நேரமாகுது....'' என்று என்னை இழுத்து அமர வைத்தாள்.

ஆனால், இந்த முறை இளையவளின் பிடிவாதத்திற்கு அரண் இட்டது என் பிடிவாதம்!

தீபாவின் அனாதரவற்ற நிலையை ஆயுதமாய் எடுத்துக் கொண்டு, அவளை இத்திருமணத்திற்கு சம்மதிக்க வைத்துவிட்டனரோ என்ற எண்ணம் நெஞ்சை அறுத்தது!

என் மேலிருக்கும் அன்பில் அவள் மீது இத்திருமணத்தைத் திணித்துவிட்டன்ரோ என்ற கேள்வி மண்டையைக் குடைந்து கொண்டிருக்கும் வேளையில் என்னால் மனையில் அமர முடியவில்லை.

பிரதீப்பின் பிடியிலிருந்து திமிறி வெளியே வந்த நான், ''நான் தீபாவிடம் பேசணும்'' என்றேன் இறுக்கமான முகத்துடன்.

''அதான்.... இனி வாழ்க்கை பூராவும் பேசிட்டு இருக்கப் போறியே... இப்போ என்ன....'' கார்த்திகா மறுக்கும்போது,

''நீ பேசிட்டு வா, பரணி'' என்று என்னை அனுப்பி வைத்தார் அப்பா. கூடவே ''உண்ணா... அர்ச்சனைக்கு வேண்டிதெல்லாம் இந்த தாம்பூலத்தில் எடுத்து வைம்மா'' என்று தீபாவின் அருகிலிருந்த அம்மாவையும் அழைத்துக் கொண்டார்.



தனித்து நின்றிருந்த தீபாவின் அருகே சென்ற நான், ''எங்க வீட்டில இருக்கிறவங்களோட கட்டாயத்திற்காக... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டாம்'' என்றேன். என்ன ஒன்று... அவளது கண்களைத் தான் நேராக சந்திக்க முடியவில்லை! எங்கே அவளது பார்வையைச் சந்தித்தால், அவளை இழக்கப் போகும் வலியை என் கண்கள் அவளுக்கு உணர்த்திவிடுமோ என்ற பயம் எனக்கு... அதனால்... தொலை தூரப் பார்வையாய் வெறித்திருந்தது பார்வை.

என்னைப் போல் வேறெங்கும் பாராமல் என்னையே... அதிலும் என் கண்களையே பார்த்துப் பேசிய தீபா, வேறு பேசினாள்.

''நான் ஏன்...'' அகல்யா''ங்கிற பெயரை என்னோட புனைப் பெயரா தேர்ந்தெடுத்தேன், தெரியுமா?'' - நான் கேட்டதற்கு முற்றிலும் வேறுபட்டதாய் இருந்த அவளது கேள்வியில் திகைத்துப் போனேன்!

''என்ன.... தெரியுமா?'' - மீண்டும் உந்தினாள்.

என் தலை இடவலமாக அசைந்தது! என் பார்வையும் அவளது விழிகளும் நேர் கோட்டில் மோதிக் கொண்டன!

''பரணி தீபத்தை ஏந்தி நிற்கிற அகல் விளக்கா இருக்கணும்ங்கிற காரணத்தால தான்!''

வாவ் இதை விடவும் அழகாய் ஒரு பெண்ணால் தன் காதலைச் சொல்ல முடியுமா?!

ஏற்கனவே அவளிடம் மயங்கியிருந்த என் நெஞ்சம், அந்த ஒரு வார்த்தையில் முழு சரணாகதி அடைந்தது.

''தேங்க்ஸ்'' என்று நான் உதட்டை அசைக்க, ''வெல்கம்'' என்று தீபா கையில் அபிநயம் பிடித்தாள்!

உள்ளம் விம்ம, அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு மணமேடை நோக்கி நடந்தேன் நான்!

சிரிப்பும் சந்தோஷமுமாய் நின்றிருந்த என் நல விரும்பிகள் அனைவருக்கும் கண்களாலேயே நன்றி சொன்னேன்!

''நல்ல நேரம் முடியறதுக்குள்ள.. மனையில உட்காரு பரணி!'' என்ற அப்பா, என் கை பிடித்து மனையில் இருத்தி வைத்தார்.

அதன் பின்னர், வினாடிகள் நிமிடங்களாய் கடக்க, என் கரங்கள் தீபாவின் கழுத்தில் திருமாங்கல்யத்தைப் பூட்டியதும், நிமிடங்கள் வினாடியாய் கழிந்தன!

திருமணம் முடிந்ததும், அப்பா - அம்மாவின் பாதங்களைப் பணிந்தோம் நாங்கள்.

''நிறைஞ்ச மனசோட நீடுழி வாழணும்!'' - பூத் தூவி வாழ்த்தியது பெற்ற மனம் இரண்டும்!

அவர்கள் கண்களில் நிறைந்திருந்த கண்ணீரில் அவர்கள் மனதின் பாசம் அருவியாய் வழிந்தோட, நெகிழ்வுடன் கழிந்தன நொடிகள்.

''ஹலோ ஆன்ட்டி.... நான்''பூத்து'' இப்போ ஒத்துக்கிறீங்களா ஆன்ட்டி? என்ன ஆன்ட்டி? சொல்லுங்க ஆன்ட்டி?'' என்ற கார்த்தியின் கிண்டலும்,

''அண்ணன் - அண்ணி காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குங்க... ஹ்ம்ம் தீபா விழு.... பரணி... என் காலில் விழுடா... உனக்கு மச்சினன்டா நான்... விழுகிறேன்'' என்ற பிரதீப்பின் போலி அதிகாரமும் கூடுதல் அழகு சேர்த்தன.



கோவையை ஆளும் கோனியம்மன் முன்னே, தம்பதி சமேதராய் வணங்கி எழுந்தபோது, என் மனம் கொண்ட திருப்திக்கு அளவே இல்லை.

ஓர் அரிய பொக்கிஷத்தை என்னவள் ஆக்கிக் கொண்டதில், அகமும் முகமும் ஒரு சேர மலர்ந்தது!

திருமணம், கார்த்திகா - பிரதீப் திருமண நாள் குறிப்பு, அபிஷேகம், அர்ச்சனை - ஆகியவை முடிந்து, கோவில் பிரகாரத்தில் அமர்ந்திருந்த போது, இந்தத் திடீர் திருமண ஏற்பாட்டைப் பற்றிய விசாரணையை அப்பாவிடமிருந்து துவங்கினேன்.

''திடீர் திருமணமா? உனக்குத் தான் இது திடீர் திருமணம்.., எங்களுக்கெல்லாம் ஒரு மாசம் முன்னாடியே இன்னைக்குத்தான் கல்யாணம்ன்னு தெரியும்!'' - பெருமை பீத்தினாள் தங்கை.

''ஒரு மாசம் முன்னாடியா? எப்படி? என்னை யாருமே கேட்கவே இல்லையே?!''

''உன்னை... என்னத்த கேட்கிறது? அதான்... உன் மூஞ்சியே உன்னோட விருப்பத்தை விம் / சபீனா எல்லாம் போட்டு விளக்கோ விளக்குன்னு விளக்கிடுச்சே!'' - பெருமையை கைவிட்டு கேலியில் பதில் சொன்னாள் கார்த்திகா.

புரியாத ஓர் பார்வையை என் முகம் தாங்கி நிற்க,

''சின்ன வயசில இருந்து... உன் கண்ணைப் பார்த்தே உன்னோட தேவையைப் பூர்த்தி செஞ்சவன்டா, நான் அப்படியிருக்கும்போது, உன் கண்ணு மட்டுமில்லாம எல்லா உறுப்பும் தீபாவை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு

வரதுக்கு துடிச்சதை உணராமலா போய்டுவேன்'' - அப்பா அதிரடியாய் தாக்கினார்.

''தீபாவைப் பத்தி பேச வந்திட்டு... அதைப் பேசாம, வேற ஏதேதோ மழுப்பிட்டு எழுந்து போவியே... அப் போவே எங்களுக்கு உன் மனசு தெரிஞ்சிடுச்சு'' - இது அம்மா.

''உனக்குத் தீபாவைப் பிடிச்சிருக்குன்னு எங்களுக்கு முன் கூட்டியே தெரிஞ்சிடுச்சு... ஆனா, நீ எதுக்காக தயங் குறேன் தெரியல... ஒருவேளை உன்னோட குறையை நினைச்சு, அவளுக்கு நீ சரியான ஜோடி இல்லைன்னு நினைச்சுத் தயங்கறதா எனக்குப் பட்டது! அதான்... தீபாவையே நேரா போய் பெண் கேட்டோம்!'' - பிரதீப் விஷயத்திற்கு வந்தான்.

ஆஹா! தீபா என்ன சொல்லி இருப்பாள்?

ஆச்சரியப்பட்டிருப்பாளோ? அதிர்ச்சியில் உறைந் திருப்பாளோ? ஆனந்தத்தில் திக்கு முக்காடி போயிருப் பாளோ? எப்போது திருமணம் என்று கேட்டிருப்பாளோ? இல்லை யோசித்து சொல்கிறேன் என்று சொல்லி யிருப்பாளோ? - என் மனம் எல்லா உணர்ச்சிகளிலும் தீபாவைக் கற்பனை செய்து பார்த்ததில், பரபரத்தது!

அவளது பதிலை அறிந்து கொள்ள என் மனம் துடித்ததை முகம் பிரதிபலித்து விட்டது போலும், பிரதீப் ஓர் கேலி புன்னகையை உதிர்த்தான்.

என்னை அலைக்கழிக்கும் வண்ணம் ''அதுக்கு... தீபா சொன்ன பதில் இருக்கே?! நாங்க... அப்படியே ஷாக் ஆகிட்டோம்!'' - வடிவேல் பாணியில் அவன் தொடர,



''அந்த ஷாக் நியூசை இன்றைய தலைப்புச் செய்தி யாய் உருமாற்றி, தீபா அம்மையார் பரணி டி.வி.யில் ஒளிபரப்புவார். அதுவரை காத்திருங்கள், வாசகப் பெருமக்களே!'' என்று கார்த்திகா நடுவில் புகுந்து ஓர் அறிவிப்பு விட்டாள்.

அதன் பின்னர், நான் என்ன கெஞ்சியும் யாரும் விவரம் சொல்லுவதாய் இல்லை. கார்த்தியும் பிரதீப்பும் கேலியில் கொன்றனர் என்றால் அப்பா - அம்மாவும் ''தீபா சொன்னா தான் நல்லா இருக்கும். நீ அவகிட்டயே கேட்டுக்கோ!'' என்றனர் ஒத்த மனம் கொண்டவர் களாய்.

சரி... தீபாவிடம் முயன்று பார்ப்போம் என்று நான் அவளிடம் திரும்ப, அவளோ கர்ம சிரத்தையாக மாலை யில் மாட்டிக் கொண்டிருந்த தாலிச் சங்கிலியை சரி செய்து கொண்டிருந்தாள்.

எங்கே போய்விடப் போகிறாள்? மெதுவாகக் கேட் டுக் கொள்ளலாம்.

அதற்குள், ''ராகு காலம் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி, வீட்டுக்குப் போய்டணும். கிளம்புங்க'' என்ற அம் மாவைத் தொடர்ந்து எல்லாரும் கிளம்பினோம்.

கோவிலை விட்டு வெளியே வந்ததும், ''ஏறு பரணி!'' என்ற பிரதீப், எங்களது ''பென்ஸ்''-ஐ மிஞ்சும் பளபளப் புடன் நின்றிருந்த புத்தம் புதிய ஸ்விப்ட் வண்டியின் கதவைத் திறந்து விட்டான்.

அதில் ஏறாமல் ''யாரோட கார்டா? புதுசா இருக்கே?'' என்றேன் நான், சிறு யோசனையுடன்.

''உன்னோட கார் தான்டா! உன் கல்யாணத்துக்கு இந்த பிரண்டோட கிப்ட்! ஏறு... அட... ஏறுடா... தீபாவைக் கூட்டிட்டு... நீ முன்னாடி போ!'' என்றான் நண்பன்.

நான் சொன்ன ''நன்றி''யை ஓர் தலையசைப்புடன் ஏற்றுக் கொண்டவன், பின்னாடி நின்ற ''பென்ஸ்'' நோக்கி நடந்தான்.

''ஏய்... நீ அந்த வண்டி-ல வரியா? அப்போ... இது? அப்பா - அம்மா எங்கடா? எங்களோட வரலையா?'' என்று நான் பேசியதைப் பார்த்தும் பார்க்காதது போல், அப்பா - அம்மா - கார்த்தி - பிரதீப் நால்வரும் ''பென்ஸ்'' சில் ஏறிவிட்டனர்.

''டிரைவிங் கலையின் வித்தகியே உன் கூட வரும்போது... என்னடா பயம்'' என்று பிரதீப் சிரிக்க,

''போனாப்போகுதே... கல்யாணம் ஆனா முதல் நாளில பொண்டாட்டியோட தனியா வரட்டுமேன்னு உன்னைத் தனியா வரச் சொன்னா... ரொம்பத்தான் பிகு பண்ணிக்கிறே! ''பார்த்த முதல் நாளே'' பாட்டை பாக்கிரௌண்ட்-ல போட்டுவிட்டு... அண்ணியோட டூயட் பாடிட்டே வருவியா... அதை விட்டுட்டு... சும்மா வாண்ணா'' - கார்த்தியின் வார்த்தைகள் காற்றோடு கரையும் வண்ணம், எங்கள் வீட்டு ''பென்ஸ்'' சாலையில் ஐக்கியமானது.

நான் இடுப்பில் கை வைத்து முழித்துக் கொண்டிருக்கும்போதே, ''வண்டியை எடுங்க, பரணி!'' என்றாள் தீபா மெல்லிய குரலில்.



நானா? திருமணத்தன்று எதற்கு இந்த விஷப் பரீட்சை? என்று நான் தயங்கியது ஒரே வினாடி தான்.

தீபாவுடன் தனித்து செல்லும் முதல் பயணம் என்பது நினைவில் உறைக்க, வண்டியை எடுத்தேன்.

''மெதுவாவே ஓட்டுங்க. ரோட்-ல கவனம் இருக்கட்டும். ஃபோர்த் கியர் போக வேண்டாம்...'' என்று தன் டிரைவிங் இன்ஸ்ட்ரக்டர் வேலையை செவ்வனே செய்தவள், அதற்கு மாறாய் என் தோளில் சாய்ந்து கொண்டாள்.

இப்படி சாய்ந்து கொண்டால்... ரோட்டில் எங்கே கவனத்தை வைப்பது?

வார்த்தைகளின்றி பயணம் மௌனமாய் தொடர்ந்தது!

## 25

இதுநாள் வரை, பேச்சினால் என்னைத் திணறடித்துக் கொண்டிருந்த தீபாவின் இன்றைய மௌனம் பெரும் வியப்பைக் கொடுக்க, பிடித்திருந்த அவளது கையை மெல்ல அழுத்தினேன்.

சட்டென தலை உயர்த்தி அவள் என் கண்ணோடு கலக்க, ''என்னாச்சு? பேச்சே காணோம்?'' என்பதை என் கண்கள் அபிநயம் பிடித்தன.

''ஒன்றுமில்லை'' என்பதுபோல் தலை அசைத்து விட்டு, என் தோளில் வாகாய் சாய்ந்து கொண்டாள், என்

மனைவி! இப்போது, அவளது கைகள் என் கரங்களை மிக மிக இறுக்கமாய் பற்றிக் கொண்டன!

'மனைவி' என்ற சொல்லை சொல்லும்போதே நெஞ்சம் பூரிக்கிறதே!

மதுமிதாவின் நிராகரிப்புக்குப் பின்னர் ''காதல்'', ''திருமணம்'', ''குழந்தை'' என்று எதுவுமே என் வாழ் வினுள் வலம் வர வாய்ப்பில்லை என்ற எனது எண் ணத்தை நினைக்கையில் இப்போது சிரிப்பு வந்தது!

''தீபா'' எனும் முத்துச் சிப்பி கிடைப்பதற்காகத்தான், ''மதுமிதா'' எனும் வெண்முத்து காணாமல் போயிருக் கிறது போலும்! இறைவனின் ஒவ்வோர் அசைவுக்கும் ஓர் அர்த்தமிருக்கிறதே!

என் மௌனத்தின் முடிவாய் தீபா வந்து சேர்ந்தது போல், எங்கள் பயணத்தின் முடிவாய் வீடு வந்து சேர்ந்தது.

ஆலம் சுற்றி வீட்டு மருமகளை உள்ளே அழைத்துக் கொண்ட அம்மா, எங்களை அமர வைத்து ''பாலும் பழமும்'' கொடுத்தார்.

அதன் பின்னர், அனைவருக்கும் நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது போலும்... எல்லாருமே பரபரப்பை அவர்கள் தாக்கிக் கொண்டிருந்தனர் - தீபா உட்பட.

என்னிடம் பேசியே இராதவள் போல், அம்மா பின் னாடியே நின்றிருந்தாள். அதுவும் பாதி நேரம்... சமைய லறையில்.

ஆனால், எனக்குத் தான் நேரம் ஆமை வேகத்தில் சென்றது.



தீபாவிடம் பேச வேண்டிய விஷயங்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்ல, நேரமும் நீண்டு கொண்டே சென்றது.

மதியம் தடபுடலாய் நடந்தேறிய உணவின் பின்னே, அடுத்த வாரம் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பிற்கு டிரஸ் எடுக்கவென்று, கார்த்தியும் பிரதீப்பும் எங்கள் இருவரையும் அழைத்தனர்.

''இன்னைக்கா? காலையில சீக்கிரம் எழுந்தது... தீபாவுக்கு டையர்டா இருக்கும்...'' என நான் இழுக் கும்போதே,

''தினமும் எழுந்துக்கிற நேரத்திற்குத் தான் இன் னைக்கும் எழுந்துக்கிட்டேன். டையர்டா ஒண்ணும் இல்லை... வாங்க போகலாம்...'' என்று என்னை இழுக் காத குறையாக அழைத்துச் சென்று விட்டாள் தர்ம பத்தினி.

கடையிலும்... வேகமாகவா துணி எடுத்தார்கள்? தீபா - கார்த்திகா - அம்மா என்று மூவருக்கும் எடுக்க வேண்டிய மூன்று சேலைகளை மூன்றரை மணி நேரம் எடுத்தனர்.

ஹப்பாடா... ஒரு வழியாக முடித்து விட்டனர் என்று நான் மூச்சு விடும்போதே, தீபாவிற்கு வேறு உடைகள் வாங்கவென, கார்த்தியும் தீபாவும் மற்ற புடவைகள் இருக்கும் இடத்திற்குப் பறந்திருந்தனர்.

இவர்கள் அட்டூழியம் தான் தாங்க முடியவில்லை என்றால் பிரதீப்பின் அலுச்சாட்டியம் எல்லை கடந்து சென்று கொண்டிருந்தது.

எனக்கு எடுக்க வேண்டிய குட்டை நான் பார்த்ததை விட, அவன் ஆயிரம் முறை பார்த்திருப்பான் போலும். இதை பாரு... அதை பாரு... இது நல்லா இருக்கு... என்று எடுக்க வேண்டிய ஒவ்வொரு துணிக்கும் என்னைத் தொண்ணூற்றி எட்டு முறை அலைக்கழித்து விட்டான்.

ஒருவாறாக, எங்களது ஷாப்பிங் படலம் முடிவு பெற்று வீட்டிற்கு வந்தபோது, மணி எட்டாகி இருந்தது.

அடுத்து, தீபா என் அறைக்குள் வந்து சேர மணி பத்தாகி இருந்தது.

* * *

தீபாவின் காலடி என் அறையினுள் பட்டதும், ஜன்னல் கதவின் மீது சாய்ந்து நின்றிருந்த என்னுள் ஓர் பரவசம் ஓடி மறைந்தது.

அவளது ஒரோர் அடியிலும் இதயம் அடிக்கொரு முறை துடிக்க, கையிலிருந்த பாலை மேசை மேல் வைத்துவிட்டு அவள் என்னை நெருங்கியபோது இதயம் தம்பட்டத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து, முழங்கிக் கொண்டிருந்தது.

தென்றலென அன்ன நடையிட்டு வந்தவள், புலியின் தாக்கம் கொண்டு, என் வலத் தோள்பட்டையில் ஓங்கி ஓர் அடி வைத்தாள்.

அதில் திகைத்து, நான் ''ஏன்'' என்று வினவும் முன்னரே, அடிகளின் மழை சாரமாரியாய் பொழியத் தொடங்கியது!

ஓர் கட்டத்தில் பொறுக்க முடியாமல், அடித்துக் கொண்டிருந்த அவளது கரங்களைப் பற்றி அவளிடமிருந்து



தப்பியவன், ''என்னமா... அடிக்கிறே?'' என்றேன் பரிதாபமாக.

''அப்புறம்... உங்களைக் கொஞ்சுவாங்களா? நான் உங்களுக்கு ''அகல்யா''ன்னு லெட்டர் போட்டு... எத்தனை நாளாச்சு?''

''சரியான... தத்தி... மடச்சாம்பிராணி... அறிவுகெட்ட எருமைமாடு...''

''எத்தனை வாட்டி... எத்தனை விதமா என்னோட மனசை உங்களுக்கு சொன்னேன்... எதுவுமே இந்த மரமண்டையில ஏறலை இல்லையா...''

''சரியான லூசு...''

''நான் நடுல ஒரு வாரம் வராம இருந்தப்பவே உங்களுக்குள்ள என் மேல விருப்பம் வந்திருச்சுன்னு எனக்குத் தெரிஞ்சிடுச்சு...''

''ஆனா... எவ்வளவு நாள்... ஒரு நாள் இல்லை... இரண்டு நாள் இல்லை... மொத்தமா மூணு மாசம் இருபது நாள் ஆகியிருக்கு...''

''அப்பவும் நீங்களா வந்து சொல்லலை... உங்களுக்கு அசிஸ்டென்ட் வேலை பார்க்க மொத்த குடும்பமே வந்திருக்கு...''

''உங்களையெல்லாம்'' - தீபாவின் பற்கள் நறநறவென கடி பட்டன.

அவளது கோபத்தில் ஏனோ எனக்கு சிரிப்பே பிரதானமாய் வந்தது! அக்கோபம் - என் மேல் அவள் வைத்திருந்த காதலை முழக்கமிட்டதாலோ? நெஞ்சத்தின் நுனி முதல் அடி வரை தேனினும் இனிதாய் தித்தித்தது!

''இதுக்குத் தான் கோபமா? சரி... விடு... இப்போ கோபம் போயிடுச்சா? கொஞ்சம் பேசுவோமா?'' - என்றேன் நான், சமாதானக் கொடியை இடவலமாக ஆட்டி.

''முடியாது! எனக்கு இன்னும் கோபம் மீதமிருக்கு!'' என்ற தீபா, கட்டிலின் நுனியில் சென்று அமர்ந்து கொண்டாள்.

சற்று நேரம் அவளையே சுவாரஸ்யமாய் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மெல்ல அவள் அருகே சென்றேன்.

தோளில் வைத்த என் கையை வேகமாய் தட்டிவிட்ட தீபாவின் தலை அடுத்த சில நொடிகளில் என் தோளில் புதைந்து போனது.

அவளை மெல்ல அணைத்த என் கரங்களின் அணைப்பை மேலும் இறுக்கவென தீபாவின் தலை ஆழ ஆழ புதைந்தது.

மங்கையவளின் மதி முகம் நிமிர்த்தி, முன்காலை பனி மலராய் ஜில்லிட்டிருந்த ரோஜா கன்னத்தில் மெல்ல முத்தமிட்டேன்.

முத்தத்தின் முடிவில் அடுத்த முத்தம் மூச்செடுக்க, அங்கே எறும்புகளின் அணிவகுப்பாய் முத்தங்கள் அணி வகுத்தன.

எதற்கும் ஓர் முடிவு உண்டு என்பதற்கு இணங்க, முத்தங்கள் நிறைவுற்று மௌனங்கள் கலைந்தன.

''என்னம்மா... ஏன் இவ்வளவு கோபம்?''



''நீ சொல்றதை வச்சுப் பார்த்தா... என்னைப் பார்க்கிறதுக்கு முன்னாடியே என் மேல காதல் வந்திடுச்சா? இல்லை... ''அகல்யா''ன்னு பேர் வச்சிட்டு அதுக்கான காரணத்தைத் தேடினியா?'' - இந்தக் கேள்வியை நான் கேட்டது தான் தாமதம், முத்தங்களின் தொடர்கதையாய் இருந்த எங்கள் ஸ்பரிசம் அடிகளின் தொடர்கதையாய் மாறிப்போகும் என்று நான் எண்ணியிருக்க,

தீபாவோ ''ஒரு வகையில... அதுவும் ''கரெக்ட் தான்'' என்று ஆமோதித்தாள்.

''கார்த்திகிட்ட பேசினதை வச்சு... உங்க மேல ஒரு ஈர்ப்பு வந்தது. ஆனாலும், உங்களோட அந்த ஒதுக்கம் எனக்கு சுத்தமா பிடிக்கலை... அதான் யாரோ மாதிரி உங்களுக்கு லெட்டர் போட்டேன்... அப்போ எனக்கு நான் வச்சப் புனைப்பெயர் ''சுடரொளி'' தான்... அதை நீங்க ஈஸியா கண்டுபிடிச்சுடுவீங்கன்னு நினைச்சு வேற பேரு தேடினேன்...''

''ஆனா... நீங்க ஒரு வடிகட்டின முட்டாள்... மக்கு பிளாஸ்திரின்னு எனக்குத் தெரியாம போய்டுச்சு...'' - சந்தடி சாக்கில் என்னைத் தாக்கிவிட்டு மேலும் தொடர்ந்தாள்.

''உள் மனசுதான்... ''அகல்யா''ன்னு கூவி கும்மாளம் போட்டுட்டு இருந்ததா... அதனால தான் ''அகல்யா''ன்னு எழுதினேன்...''

''அடுத்த ரெண்டு நாளில... உங்களைப் பார்த்ததும் அப்படியே ஃப்ளாட்... அந்த நிமிஷம் ''தீபத்தைத் தாங்கி நிற்கிற அகல் விளக்கு மாதிரி, பரணி ஜோதியைத் தாங்குற அகல்யா'' நான்தான்னு முடிவே பண்ணிட்டேனாக்கும்'' என்றாள் தீபா, கண்ணில் காதலுடன்.

''உங்களையும் மேலா... அம்மாவை எனக்கு ரொம்பப் பிடிச்சது... அப்புறம் உங்களுக்கும் பிரதீப் அண்ணாவுக்கும் இருக்கிற நட்பு... கார்த்தியோட அழகான அன்பு... அப்பாவோட ஆதரவு... எல்லாமே எனக்குப் புதுசா இருந்தது...''

''அன்பான பேச்சுக்கே இடமில்லாம இருந்த என் வாழ்க்கையில... நீங்க வந்தது எனக்கு அப்படியே ஒரு பூந்தோட்டத்துக்குள்ள போன மாதிரி இருந்தது...'' - இந்த இடத்தில், தீபாவின் கண்கள் கசிந்திருந்தன.

மெல்ல, நான் அவள் தலையை வருடிக் கொடுத்ததும் ஒரே மூச்சில் அவள் தாய் இறந்தபோது அவள் அடைந்த வேதனையைச் சொல்லி முடித்தாள்; கூடவே அவளது அப்பாவின் உதாசீனமும் சேர்ந்து கொள்ள, தீபாவின் கண்கள் கண்ணீரில் முக்குளித்தன.

''என்னடா இது? நீ... பயங்கர ஸ்போட்டிவ்ன்னு நினைச்சிருந்தேனே...'' - நான் சமாதானம் சொல்ல,

''அதுக்காக... எல்லாத்தையும் ஸ்போர்ட்டிவ்வா எடுத்துக்க முடியுமா? சில பேர்கிட்ட தான்... மனசில இருக்கற வேதனையை அப்படியே... எந்த அலங்காரமும் இல்லாம பகிர்ந்துக்க முடியும்... அந்த சில பேர்ல... உங்களுக்குத்தான் முதல் இடம்'' - என்றபோது, அவளது கண்ணீரையும் மீறி எனக்கு அவளது காதல் புரிந்தது.

தீபாவின் வார்த்தைகள் மௌனித்ததில், எங்களிடையே ஓர் ரம்மியமான மௌனம் நிலவியது!

அதன் பின்னர் தீபாவே அதைக் களைத்தாள் - ''உங்களோடன்னு இல்லை... இந்தக் குடும்பத்தோட இருக்கிற



நேரத்தில்... நான் எவ்வளவு சந்தோஷமா இருப்பேன் தெரியுமா?'' என்று ரசித்துச் சொன்னவள், மேலும் பேசினாள்.

''இங்க இருந்திட்டு... அத்தை வீட்டுக்குப் போனதும்... லைஃப் அப்படியே களையிழந்து போன மாதிரி இருக்கும்...'' என்றாள் தீபா, உதட்டை இடது பக்கமாய் சுளித்து.

அதை ரசித்து ''அப்படியா மேடம்? என்கிட்ட... ஒரு வார்த்தை கூட சொல்லவே இல்லையே?'' என நான் அவள் கைப்பிடித்து என்னிடம் இழுத்துக் கொள்ள,

''சொல்லவே இல்லையா?'' என அதற்கும் ஓர் அடி வைத்தவள்,

''எத்தனை தடவை... ஜாடை மாடையா சொல்லியிருப்பேன்... புரிஞ்சா தானே? லாடம் கட்டின குதிரை மாதிரி... எப்போ பார்த்தாலும் இந்த கம்ப்யூட்டரையே கட்டிட்டு இசிக்க வேண்டியது...'' - அடுத்தும் ஓர் அடி.

''சரி... கொஞ்ச நாள் பார்க்காம இருந்தாலாவது உங்களுக்கு உறைக்கும்ன்னு நினைச்சு... அத்தை கிளம்பிப் போன டைம்-ல இங்க வராமலே இருந்து கூடப் பார்த்தேன்...''

அவளது பேச்சில் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன் நான்.

''அடிப்பாவி, வேண்டுமென்றே தான் வராமல் இருந்தியா?'' என்ற கேள்வியை என் முகம் தாங்கியிருக்க,

''ஆமா... ரெண்டு நாளிலேயே ஹாஸ்டல் எல்லாம் செட் ஆகிடுச்சு... ஆனா... என்னோட பிரிவு உங்களுக்கு என்னோட காதலை உணர்த்தட்டுங்கிற நப்பாசையில வைராக்கியமா இருந்தேன்...''

''உங்களுக்கு ''காதல்'' உறைச்சதோ இல்லையோ... என்னால உங்களைப் பார்க்காம இருக்க முடியல... வெட்கத்தை விட்டு... வைராக்கியத்தை உடைச்சுக்கிட்டு வீட்டுக்கு வந்தா... பல்பு எரிஞ்ச மாதிரி உங்க மூஞ்சி-ல செமயா காதல் வழிஞ்சது...''

''இருந்தாலும்... ஒத்துக்கலையே! சரியான கல்லுளி மங்கன்!''

''ஒரு வகையில சந்தோஷமா இருந்தாலும்... இன்னொரு பக்கம் இந்த கார்த்தியோட அடில வலி தாங்க முடியலை...''

''முட்டையும் மீனுமா தின்னு... உடம்பை சும்மா கன் மாதிரி வச்சிருக்கா... எப்படி வலிச்சது தெரியுமா?'' - எங்கிருந்து எங்கோ தாவி இருந்தாள் என் ஆருயிர் மனைவி.

அன்று வாங்கிய அவளது அடிக்க, இன்று மருந்து போடும் வண்ணம், என் உதடுகள் அவளது கைகளை மெல்ல வருடிக் கொடுத்தன.

''அய்யே... போதுமே!'' என வெடுக்கென கையை இழுத்துக் கொண்டவள், அடுத்த நிமிடமே என் கழுத்தை வளைத்திருந்தாள்.

என் மார்பில் குழந்தையென துவண்டிருந்த பெண்ணரசியின் காதில் மெல்லிய முத்தமொன்றை பதித்தேன் நான்.



சிலிர்த்து அவள் விலக, ''அதான்... என் மூஞ்சில டன் - டன்னாக் காதல் வழிஞ்சதுன்னு சொன்னியே... அப்போவே சொல்லியிருக்கலாம் இல்லையா? இவ்வளவு நாள்... காத்திருக்க வேண்டாமே?'' - கெஞ்சின என் மௌன வார்த்தைகள்.

''ஏன்... நீங்க சொல்லறது தானே? நீங்க ஏன் சொல்லலை?'' - சரியான பாயிண்ட்டை பிடித்து விட்டாள்; கெட்டிக்கார காதலி தான்!

''அது... அது... எல்லா விதத்திலும் உயர்ந்திருக்க உனக்கு... குறையுள்ள... நான்...'' - இழுபட்டன என் உதட்டின் அசைவுகள்.

சத்தம் வராத போதும், அதை அடிப்பிசகாமல் பிடித்துக் கொண்ட தீபா ''நான்... ஏற்கனவே சொல்லியிருக்கேன். உங்களுக்கு இருக்கிறது ''குறையே'' இல்லை... அது ஒரு வரம்ன்னு... இனி ஒரு தரம் இப்படிப் பேசினீங்க... நான் பத்திரகாளி ஆகிடுவேன்'' என்ற போது, கண்ணும் குரலும் கனலைக் கக்கியது.

''அது மட்டும் காரணமில்லை - நமக்கு பிறக்கப் போற குழந்தைகளும்... என்னை மாதிரி...'' - ஆழ் மனதில் புதைந்திருந்த என் காயத்தை மெல்ல வெளிப்படுத்தினேன்.

தீர்க்கமாய் என்னைப் பார்த்த தீபா ''உங்கப்பா - அம்மா ரெண்டு பேரும்... நல்லா தானே பேசுறாங்க?'' என்றாள் உச்சி மேடு வரை உயர்ந்த புருவத்துடன்.

அவள் சொல்ல வருவது புரிந்தபோதும், ''இருந்தாலும்...'' என்ற ''க்''ன்னா என் மனதில் இருக்கவே செய்தது.

அதையும் துடைத்தெறியும் பொருட்டு, ''உங்களைப் படைக்கும்போது, கடவுள் காதில யாராவது பலமா கத்தியிருப்பாங்க. அந்த சத்தத்தில் அரண்டு போய்... என்னோட இந்த குழந்தையாவது பிறரின் செவிப் பறையை கிழிக்காமல் இருக்கட்டும்ன்னு விட்டிருப் பார்... இதுவே... முப்பது வருஷம் கழிச்சு நடக்குமா என்ன? கண்டிப்பா நடக்காது! எனக்கு நம்பிக்கை இருக்கு! அப்படியே... நூத்தில ஒரு சதவீதமா நடந் தாலும்... அப்பா உங்களை எப்படி பார்த்துகிட்டாங்களோ அதே மாதிரி நானும் என் பிள்ளையைப் பார்த்துப்பேன். போதுமா?'' - உறுதி மின்னப் பேசிய தீபாவின் நம் பிக்கை என்னுள் விதையைத் துவங்கியது! ஓர் ஆரோக் கியமான சந்ததிக்கு, ஆரோக்கியமான மனநிலையும் முக்கியமல்லவா?! அது இப்போதே வந்துவிட்டபோது, எங்கள் குழந்தையின் ''அப்பா'' என்ற அழைப்பு என் காதில் இப்போதே ரீங்காரம் இட ஆரம்பித்திருந்தது!

சற்று நேரம் அமைதிக்குப் பின்னர், விட்ட இடத் திலிருந்து நானே மீண்டும் துவங்கினேன்.

''எங்க வீட்டில வந்து ''கல்யாணத்துக்கு'' கேட் டப்போ... ஏன் உடனே சரி சொல்லலை...'' என நான் கேட்டதும்,

''அவங்க வந்து கேட்ட உடனேயே, கல்யாணத்துக்கு ''சரி''ன்னு சொல்லிட்டனே... நானே எப்படா கேட்பாங்கன்னு இருந்தேன்... அப்படியிருக்கும்போது, நானே பிகு பண்ணுவேனா என்ன? கல்யாணத்தைத் தான் கொஞ்சம் தள்ளி வச்சுக்கலாம்ன்னு சொன்னேன்'' - தான் உடனே சம்மதம் சொன்னதை சொல்லிவிட்டு,



மீண்டும் ஓர் கொக்கி போட்டாள், என் இல்லத்தின் அரசி!

''அதான்... ஏன்?''

''நீங்க... அப்போ தான் உங்க தாழ்வு மனப் பான்மையை கொஞ்சம் கொஞ்சமா உடைச்சு எறிஞ் சிட்டு வந்திட்டு இருந்தீங்க... நீங்க முழுசா வெளிய வரணும்... நீங்களா - அதாவது தனி மனுஷனா வெளி யுலகத்தைப் பார்க்கணும்ன்னு விரும்பினேன்... அதுக்கு ஏத்த மாதிரி... அந்த பெர்சனாலிட்டி டெவலப்மென்ட் கோர்ஸ் வந்தது... அதை நீங்க வெற்றிகரமா முடிச்சதும் கல்யாணத்தை வச்சுக்கலாம்ன்னு சொன்னேன்'' என்றாள் தீபா, உறுதி மிக்க புன்னகையுடன்.

இதற்கு மேல், எனக்கு வாழ்வில் என்ன வேண்டும்?

அன்பான குடும்பம்!

அருமையான நட்பு!

பேருக்கு புகழும் ஈட்டுத் தரும் தொழில்கள்!

சமுதாயத்தில் ஓர் தனியிடம்!

காதலின் உச்சமாய் மனையாள்!

குறையை நிறையாய் மாற்றிய உறவுகள்!

இதன் நடுவே, என் குறையே எனக்கு மறந்துவிட்டது! உங்களுக்கும் மறந்து விட்டதல்லவா?! அதுதான் எனக்கு வேண்டும்!

இதுநாள் வரை, என்னுடன் பயணித்த உங்களை இதற்கு மேலும் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. சென்று வாருங்கள்!

நானும்... என் மனைவியுடனான வாழ்வை இனிமையாய் துவக்க ஆயத்தமாகிறேன்!

''அதானே...'' என்னடா சோழியன் குடுமி சும்மா ஆடுதே''ன்னு பார்த்தேன்... உன் காரியம் ஆகணும்ன்னு எங்களைத் துரத்துற... சரி... சரி... நடத்து!'' என்று நீங்கள் உதிர்க்கும் நமட்டுச் சிரிப்பு என்னைத் தொடர்ந்த போதும், தீபா மட்டுமே இப்போது கண், மனம், சுவாசம், உதிரம், உடல் என எல்லா இடத்திலும் வியாபித்திருக்கும் போது உங்களிடம் எப்படி பேசுவது? உங்களுக்குப் புரிகிறதல்லவா? போய் வாருங்கள்!

இப்படிக்கு,

அபரிமிதமான அன்புடன்,

உங்கள் ஈசன்